
# உறுபசி



எஸ். ராமகிருஷ்ணன்

# உறுபசி

எஸ். ராமகிருஷ்ணன்

மின்னூலாக்கம் : செல்லா

உயிர்மை
பதிப்பகம்

மின்னூலாக்கம்
செல்லா

www.minnoolakam.blogspot.com

விலை: ரூ. 110

உயிர்மை பதிப்பக வெளியீடு : 71

உறுபசி ✔ நாவல் ✔ ஆசிரியர் : எஸ். ராமகிருஷ்ணன் ✔ © எஸ். ராமகிருஷ்ணன் ✔ முதல் பதிப்பு : டிசம்பர் 2005 ✔ இரண்டாம் பதிப்பு: செப்டம்பர் 2008 ✔ மூன்றாம் பதிப்பு: செப்டம்பர் 2012 ✔ வெளியீடு : உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை –600 018, தொலைபேசி : 91 – 44 – 24993448, மின்னஞ்சல் : uyirmmai @gmail.com, இணையதளம்: www.uyirmmai.com ✔ அச்சாக்கம் : மணி ஆஃப் செட், சென்னை 600 005

Urupasi ✔ Novel ✔ Author: S. Ramakrishnan ✔ © S. Ramakrishnan ✔ Language: Tamil ✔ First Edition : December 2005 ✔ Second Edition: Sep.2008 ✔ Third Edition: Sep.2012 ✔ Demy 1x8 ✔ Paper : 18.6 kg maplitho ✔ Pages : 136 ✔ Published by : Uyirmmai Pathippagam, 11/29 Subramaniam Street, Abiramapuram, Chennai - 600 018, India. Tele/Fax : 91-44 -24993448, e-mail : uyirmmai @gmail.com, Website: www.uyirmmai.com ✔ Printed at Mani Offset, Chennai 600 005 ✔ Price : Rs. 110

**ISBN : 81-88641-70-7**

# முன்னுரை

புகை காற்றில் கரைந்துபோவது போலப் பார்த்துக்கொண்டிருந்தபோதே காலத்தில் பல நண்பர்கள் தங்களது சுய அடையாளங்களை இழந்து கரைந்துபோய்விட்டார்கள். இவர்களைப் போல நான் ஏன் யோசிப்ப தில்லை என்ற பொறாமையுடனும் ஆச்சரியத்துடனும் நான் பார்த்த சிலர் இன்று வாழ்வின் நெருக்கடியில் அடையாளமில்லாமல் போய்விட்டிருக்கிறார்கள்.

ஒரு சுழிக்காற்றைப் போல அன்று ஆவேசத்துடனும் எதைஎதையோ இழுத்துக்கொண்டும் திரிந்த போது உடலும் மனதும் ஆவேசம் கொண்டிருந்தது. ஆனால் இன்று ஈரத்தில் நனைந்த காகிதத்தைப் போல மனது தன் இயல்பை இழந்துவிட்டிருக்கிறது. கண்ணுக்குத் தெரியாமல் காலம் நம் மீது எழுதிக் கொண்டிருக்கும் வயதின் சித்திரங்கள் உலகியல் காட்சிகளை மாற்றிப் பார்ப்பதற்குப் பழக்கிவிட்டிருக்கிறது.

என்னோடு கல்வி கற்றவர்களில் ஒரு சிலர் அரசுப் பணிகளுக்குப் போயிருக்கிறார்கள். ஒரு சிலர் சுயதொழில் செய்யப் போய்விட்டார்கள். பெரும்பான்மையினர் என்ன செய்வது என்று தெரியாத குழப்பத்தில் மத்திய வயதில் வந்து நிற்கிறார்கள். அவர்களுக்குக் குடும்பம் இருக்கிறது. குழந்தைகள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கசப்பேறிய மனதோடு வெளிப்படுத்தப்பட முடியாத கோபமும் ஆதங்கமும் நிராசையுமாக வாழ்வைக் கடத்திக்கொண்டிருக்கிறார்கள். இது ஒரு பொது நிஜம். படிப்பு வாழ்வின் மீது நம்பிக்கை கொள்வதற்குப் பதிலாக வாழ்வு குறித்த அவநம்பிக்கைகளையும், குழப்பங்களையுமே பெரும்பான்மையோருக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

எறும்புகள் ஊர்ந்து செல்வதைப் போல நினைவுகள் தன் இஷ்டம் போல ஊர்ந்து அலைகின்றன. ஒரு பாறையைப் பற்களால் கடித்துத் தின்ன ஆசைப்பட்டதைப் போல வாழ்வு பிரயாசை தருவதாகவே இருக்கிறது.

ஆனாலும் குழந்தைகளும், உழைப்பின் மீது அசராத நம்பிக்கை கொண்ட எளிய மனிதர்களும் வாழ்வின் மீதான பிடிப்பை

பற்றியிருந்திக்கொண்டேயிருக்கிறார்கள். சாத்தியங்களின் பகடைக் காய்களை உருட்டி விளையாடுவதற்கு ஒருபோதும் அலுப்பு ஏற்படவே யில்லை. உலகம் தீர்க்க முடியாத பெரும் புதிராக இருக்கிறது. அதனால் தான் வசீகரமாகவும் இருக்கிறது. பயமாகவும் இருக்கிறது.

எப்போதாவது சாலையின் நடுவில் அடிபட்டுக் கிடக்கும் பறவை யின் நசுங்கிய முகமும் ஒடிந்து கிடந்த ரெக்கைகளையும் பார்க்கும்போது நெருங்கிய சில நண்பர்கள் நினைவுக்கு வருகிறார்கள். பல நேரங்கள் அந்தப் பறவை என்னையும் நினைவுபடுத்துவதாகவே இருக்கிறது. அடைய விரும்பியதும் சாத்தியமானத்திற்கும் இடையில் எப்போதும் ஒரு ஊஞ்சல் யாரும் ஏற முடியாதபடி தானே அசைந்து போய்க் கொண்டுதானிருக்கிறது

இந்த நூலை வெளியிடுவதற்கு முன்வந்த உயிர்மை பதிப்பகத்திற் கும், இதை எழுதும் நாட்களில் முற்றிலுமான தனிமையை சாத்தியப் படுத்திய என் குடும்பத்திற்கும், ஏதே நகரங்களில் வசிக்கும் என் நண்பர்களுக்கும் நன்றியும் அன்பும் நிறைந்தது.

மிக்க அன்புடன்

எஸ். ராமகிருஷ்ணன்.

அன்பிற்குரிய மணிசெந்திலுக்கு

சம்பத் இறந்துபோன இரண்டு நாட்களுக்குப் பிறகு நாங்கள் மூவரும் எங்காவது பரிச்சயமே இல்லாத ஒரு இடத்திற்குப் போய்விடலாம் என்று கானல் காட்டின் பெரும்பாதையில் வந்து இறங்கியிருந்தோம். நாங்கள் போக வேண்டிய இடம் தோணி மலையிலிருந்து இரண்டு மணி நேரப்பயணத்தில் இருந்தது. மனலவாழைகளும், மிளகுக் கொடிகளும், நாவல் மரங்களும் அடர்ந்திருந்த பாதைகளின் வழியே நாங்கள் நடந்தபோது எங்கிருந்தோ கேட்கும் பறவையின் குரலைத் தவிர வேறு சப்தங்களேயில்லை. பருத்த வேர்கள் முண்டிக் கிடந்த சரிவிற்குள்ளாக நடந்தபோது எவரும் எவருடனும் பேசிக்கொள்ள வில்லை. வெளிச்சம் மரங்களை ஊடுருவித் தரையிறங்க முடியாமல் கிளைகளுக்குள்ளாகவே சிக்கிக்கொண்டிருந்தது. மக்கிப்போன இலைகளின் வாசனையும், குதிரைச் சாணத்தின் மணத்தைப் போல ஒரு கந்தமும் பாதையெங்கும் கசிந்து வந்தபடியிருந்தது.

ராமதுரை வழியில் எதிர்ப்படும் ஒவ்வொரு செடியிலிருந்தும் ஒரு இலையைக் கிள்ளுவதும் அதை முகர்ந்து பார்த்துவிட்டுத் தூர எறிந்துவிடுவதுமாக நடந்து வந்துகொண்டிருந்தான். அவன் சம்பத் இறந்ததிற்கு அழவேயில்லை. நேற்று முழுவதும் அவனுக்கு நிறைய வேலைகள் இருந்தன. மின்சார சுடுகாட்டில் சம்பத்தை எரிப்பதற்காக முன்கூட்டிப் பதிவு செய்து ரசீது வாங்குவதற்காகக் காலையில் இருந்தே அலைந்து கொண்டிருந்தான். இப்போது அவனது சட்டைப் பையைத் துழாவினால்கூட இறுதிச் சடங்கிற்காக வாங்கிய பொருட்களின் பட்டியலும், நகராட்சிக்குச் செலுத்திய பணத்தின் ரசீதுகளுமாகச் சுருட்டிக் கிடக்கும்.

அவன் சம்பத் இறந்துவிடுவான் என்று நீண்ட நாட்களாகவே எதிர்பார்த்துக் கொண்டிருந்ததைப் போலவே நடந்துகொள்வது எரிச்சல் ஊட்டுவதாகயிருந்தது. ஆனால் நீண்ட நாட்களுக்குப் பிறகு சம்பத்தின் மரணத்திற்காக உவரியிலிருந்து வந்து சேர்ந்திருந்த மாரியப்பன் இடைவிடாமல் அழுதுகொண்டிருந்தான். அவன் சம்பத்தின் மரணத்திற்காகத்தான் அழுகிறானா இல்லை தானும் அதுபோல இறந்து போய்விடுவோம் என்று நினைத்துக்கொண்டு அழுகிறானா என்று தெரியாதபடிக்கு அவன் அழுவதும் திடீரென நிறுத்திக்கொள்வதும் பிறகு பீறிடுவதுமாகவே இருந்தான்.

நான் இதுவரை இத்தனை அருகாமையில் எவரது மரணத்தையும் கண்டதேயில்லை. ஒன்றிரண்டு சாவு வீடுகளுக்குப் போயிருந்த

போதும்கூட சாவை என் கைகளால் தொட்டு உணர்ந்ததேயில்லை. சாவு வீட்டை விடவும் அந்த வீட்டிலிருந்து கசிந்து வரும் ரோஜாப் பூக்களின் வாசனை வயிற்றைக் குமட்டத் துவங்கி மெல்ல அது அடிவயிற்றிலிருந்து ஒரு பயத்தை உருவாக்கிவிடும். சிறுவயதில் ரோட்டில் பிணத்தைத் தூக்கிக்கொண்டு போகும்போது தூக்கி எறியப்படும் செவ்வந்திப் பூக்களில் ஒன்று என் தலையில் வந்து விழுந்தபோது நான் அடைந்த பயமும் வேதனையும் சொல்லவே முடியாது.

பள்ளிக்குப் போகாமல் அப்படியே வீட்டிற்கு ஓடிப் போய்த் தண்ணீர்த் தொட்டியிலிருந்து செம்பில் வாரி வாரிக் குளித்தேன். சமைத்துக்கொண்டிருந்த அம்மா என்னடா ஆச்சு என்று கேட்ட போது என்னால் பதில் பேச முடியவில்லை. அழுகை முட்டிக் கொண்டு வந்தது. நான் செத்துப் போகப் போறேன்மா என்று கதறி அழுதேன். அம்மாவிற்கு என்ன நடந்தது என்று புரியவில்லை. ஆனாலும் அவள் என்னை அருகாமையில் இழுத்து கட்டிக் கொண்டு, சாமி கும்பிட்டு திருநீறு பூசிக்கோ ஒண்ணும் ஆகாது என்றாள். திருநீறு பூசிக்கொண்டால் சாவிலிருந்து தப்பிவிட முடியும் என்பது சற்றே ஆறுதல் தருவதாகயிருந்தது. அதற்காக நெற்றி நிறைய திருநீறு பூசிக்கொண்டேன். அன்றிலிருந்து எங்காவது சாவு ஊர்வலம் வருவதாகத் தெரிந்தாலே ஒளிந்துகொண்டு விடுவேன்.

ஆனால் இறந்துபோன சம்பத்தின் உடலோடு மருத்துவமனை யில் ஆறு மணி நேரம் காத்திருந்தபோது அது சாவைப் பற்றிய பயத்தை ஏற்படுத்தவில்லை. மாறாக வாழ்வது எவ்வளவு பெரிய சாமர்த்தியம் என்பது பற்றியே யோசிக்க வைத்துக் கொண்டிருந்தது. சம்பத்தின் மரணம் எனக்கும் உடனடியாக அழுகையை வரவழைக்க வில்லை. ஆனால் சம்பத் அணிந்திருந்த சட்டைக் காலரிலிருந்து கழுத்தை நோக்கி ஒரு சிவப்பு எறும்பு ஊர்ந்து போய்க் கொண்டிருந்தது. அதை அவன் மனைவி கவனித்தபோது இனி தட்டிவிடத் தேவையில்லை என்று நினைத்தவளைப் போல அந்த எறும்பு எங்கே செல்கிறது என்று வெறுமனே பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

அப்போது குபுக் என்று அழுகை கண்ணில் முட்டியது. இரண்டு நிமிடங்கள் அழுதிருப்பேன். அதற்குள் சம்பத்தின் மனைவி படுக்கை யின் அடியில் குனிந்து தூக்குவாளிக்குள் சிறிய டம்ளர்கள் இரண்டைப் போட்டு மூடிக்கொண்டிருந்தாள். மூடி சரியாகப் பொருந்த மறுத்ததால் அவள் தன்னுடைய பலம் முழுவதையும் காட்டி அதை மூடிக்கொண்டிருந்தாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நான் மருத்துவமனை வாசலில் வந்து நின்றுகொண்டேன். அநேகமாக வெளியே நிற்கும் எல்லா முகங்களிலும் வேதனை படிந்துதானிருக்கிறது. அழுது கலைந்திருந்த என் முகத்தை எவரும்

நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை.

மருத்துவமனை வளாகத்தினுள் இருந்த டீக்கடையை நோக்கி நடந்தேன். அதன் அடியில் உட்கார்ந்தபடியே டீயை ஆற்றிக் கொண்டிருந்த ஒரு நாற்பது வயதுப் பெண் மாத்திரையைக் கையில் வைத்துக்கொண்டு விழுங்குவதற்காகக் கண்களை மூடிக் கொண்டிருந்தாள். அவளது பனிரெண்டு வயது மகள் கையில் ஒரு கமலா ஆரஞ்சுப் பழத்தை வைத்து உருட்டிக்கொண்டு அம்மாவின் கசப்பேறி கழித்த முகத்தைப் பார்த்து ஆரஞ்சு மணத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தாள்.

நான் ஒரு சிகரெட் வாங்கிக்கொண்டு ஓரத்தில் தொங்கிக் கொண்டிருந்த கயிற்றில் பற்றவைத்துக்கொண்டேன். இந்தக் கயிறு கொஞ்சம் கொஞ்சமாக எரிந்து கொண்டிருக்கிறது. நேற்று நிச்சயம் இதை விடவும் சற்றே நீளமானதாக இருந்திருக்கக் கூடும். அந்தக் கயிறைப் போலத்தான் நாமும் கொஞ்சம் கொஞ்சமாக எரிந்து கொண்டிருக்கிறோமா? பூரான் ஊர்வதைப் போல மனதில் மெல்லிய பயம் நெளியத் துவங்கியது.

சம்பத்திற்கு ஒரு விசித்திரமான பழக்கமிருந்தது. அவன் எப்போது தீப்பெட்டி வாங்கினாலும் அதை முகர்ந்து பார்ப்பான். அதுபோலவே தீப்பெட்டியை எவருக்கும் ஓசி தர மாட்டான். அவன் பையில் இப்போதும்கூட ஒரு தீப்பெட்டி கிடக்கக் கூடும். அவனது தீப்பெட்டியில் பெரும்பான்மை நேரங்கள் குச்சியிருக்காது ஆனால் காலி தீப்பெட்டிக்குள் ஒரு எட்டணாவோ, நாலணாவோ போட்டு வைத்திருப்பான். சில நேரங்களில் அந்தப் பெட்டிக்குள் ஆண் உறையை வைத்திருப்பதைக்கூட நான் கண்டிருக்கிறேன்.

டெல்லிக்கு அவன் வந்திருந்தபோது கனாட் பார்க் அருகில் உள்ள ஒரு கடையில் வெட்டும் புலி தீப்பெட்டியைப் பார்த்துவிட்டு மிக ஆசையாகப்பத்து வாங்கிக் கொண்டான். டெல்லி வரைக்கும் நம்ம ஊர் தீப்பெட்டி வந்திருச்சிடா.. என்று ஆங்கிலத்தில் பொடி எழுத்தில் அச்சிடப்பட்டிருந்த அவனது ஊரின் பெயரான வலையங் குளம் என்ற பெயரைக் காட்டினான். நான் தீப்பெட்டிகள் வாங்கு வதை விட்டு பத்து வருடத்திற்கும் மேலாகிவிட்டது. என்னிட மிருப்பது ஜெர்மானிய சிகரெட் லைட்டர்கள். அதுவும் விதவித மான வடிவங்களில், நேர்த்திகளில் கிடைக்கக் கூடியவை.

சம்பத் ஒரு நாள் என் லைட்டரை வாங்கிப் பற்றவைத்துவிட்டு 'சிகரெட் லைட்டர்களில் எரியும் நெருப்பு தீக்குச்சியைப் போல நெருக்கம் தருவதாகயில்லை. உலகில் உள்ள எல்லா தீக்குச்சிகளும் எரியும்போது மிகப் பதட்டமாகவே எரிகின்றன. நுனி வரை எந்தத் தீக்குச்சியும் எரிந்து நான் பார்த்ததே கிடையாது' என்றான். இப்படி அவன் பேசத் துவங்கிவிட்டால் அன்றைக்கு முழுவதும் அவன் தீப்பெட்டியைப் பற்றியே யோசிக்கத் துவங்கிவிடுவான் என்று அர்த்தம். எனக்கு டெல்லியில் இருந்த வேலைப்பளுவிற்குள்

அவனது சிந்தனா அவஸ்தைகளைப் பகிர்ந்துகொள்ள நேரம் கிடைக்கவேயில்லை.

ஆனால் நான் என் மனைவிக்காக சென்னைக்கு மாறுதல் வாங்கிக்கொண்டு வந்து சேர்ந்த பிறகு சம்பத் எங்களைச் சந்திப்பதை அநேகமாகத் தவிர்த்துக்கொண்டே வரத் துவங்கினான். சில வேளைகளில் ராமதுரையுடன் என்னைச் சந்திப்பது நடந்தாலும் என்னோடு தனித்துப் பேசுவதற்கு விருப்பமற்றவனாகயிருந்தான். இதைப் பற்றி துரையிடம் கேட்டதற்கு ஒரே ஊரில் எல்லா நண்பர் களும் இருந்துவிடுவது துரதிருஷ்டவசமானது என்று சம்பத் சொன்னதாகச் சொன்னான். எனக்கு அவனது பிரச்சினை புரிந்தது. நானும் அதைப் பல வேளைகளில் உணர்ந்திருக்கிறேன். ஆனால் எனக்குச் சம்பத்தை பார்த்துப் பேச வேண்டும் என்று சில நேரங் களில் மிக ஆசையாக இருக்கும். இதற்காக ஏதாவது ஒரு காரணத்தை நானே உருவாக்கிக்கொண்டு துரையிடம் அவனைச் சந்திப்பதைப் பற்றிப் பேசுவேன்.

சம்பத்திற்குத் தொலைபேசியில்லை. அவனது வீட்டு முகவரி கூட யாருக்கும் தெரியாது. அவனாக விரும்பி எவரையாவது தொடர்பு கொண்டால் மட்டுமே உண்டு. ராமதுரையும் அவனும் அடிக்கடி சந்தித்துக்கொள்கிறார்கள் என்பது துரை பேசுவதில் இருந்து என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் துரைக்கு சம்பத்தைப் பற்றிய எண்ணிக்கையற்ற புகார்கள் மட்டுமே எஞ்சி யிருந்தன. நான் தொலைபேசியில் பேசும் போதுகூட என்னைத் திட்டுவான். அவனை நீ சந்தித்து ஒரு பயனும் கிடையாது, பேசாமல் பொண்டாட்டியை கூட்டிக்கொண்டு படத்திற்குப் போய்விட்டு வா என்று சொல்வான். எனக்கு துரையை மீறிக்கொண்டு சம்பத்தைச் சந்திக்க வேண்டும் என்று ஆசையாக இருக்கும். ஆனால் நான் துரை சொன்னபடி என் மனைவியை அழைத்துக்கொண்டு ஏதாவது ஆங்கிலப் படத்திற்குச் சென்றுவிடுவேன்.

அப்படியொரு நாள் தற்செயலாக சம்பத்தை ஒரு திரையரங் கத்தின் வாசலில் பார்த்தேன். சம்பத் ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு நின்றிருந்தான். அந்தப் பெண் தன் உடலுக்குப் பொருந்தாதபடி இறுக்கமான ரோஸ் நிற சுடிதார் அணிந்திருந்தாள். அவளது தலைமயிர் செம்பட்டை நிறத்தில் காற்றில் பறந்து கொண்டிருந்தது. நான் அவனைக் கவனித்தபோதும் உடனடியாக நெருங்கிப் போய் பார்க்காமல் நின்றுகொண்டேயிருந்தேன்.

அவன் என்னைப் பார்த்திருக்கக்கூடும். தன்னோடு இருந்த பெண்ணை அழைத்துக் கொண்டு வந்து, இவள் பெயர் சரளா, வாழ்க்கையில் முதல் தடவையாக ஆங்கிலப் படம் பார்ப்பதற்காக வந்திருக்கிறாள் என்றான். என் மனைவி அந்தப் பெண்ணைப் பார்த்து முகம் சுழிப்பதைக் கவனித்ததைப் போல, இவ ரோட்சைடு பிராத்தல்... ஆனா பிளஸ் டூ படிச்சவ... என்னைய லவ் பண்றா

என்று அவளிடமும் அறிமுகப்படுத்தினான். நான் அவனிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் நின்றுகொண்டேயிருந்தேன்.

சம்பத் என் காதருகே வந்து, உன் ஒய்ப் கர்ப்பத்தை பண்ணி யிருக்காளா என்று கேட்டான். நான் பதில் சொல்லாமல் நின்று கொண்டேயிருந்தேன். அவனாகவே இடுப்பு பெருத்திருக்கிற தில்லையா என்று சொல்லி சிரித்தான். எனக்கு அப்போது ஆத்திர மாக வந்தது. அவன் அதைப் பொருட்படுத்தவேயில்லை. இதைப் பற்றி சரளாவிடம் பேசி சிரித்துக்கொண்டிருந்தான். பிறகு அவன் என்னையும் மனைவியையும் டீ சாப்பிடுவதற்காக அருகாமையில் உள்ள கடைக்கு அழைத்தான். நான் மறுத்துவிட்டு வெளியேறும் போது என் முகத்தில் இருந்த கோபத்தை ரசித்தபடியே அந்தப் பெண்ணுக்குத் தியேட்டரின் முன் இருந்த ஒவ்வொரு போஸ்டராகக் காட்டிக் கொண்டிருந்தான் சம்பத்.

நான் சம்பத்தை இனிமேல் காணவே கூடாது என்று நினைத் தேன். இரவில் ராமதுரைக்குக்கூட போன் பண்ணி பேசினேன். இனிமேல் நீ அவனைப் பார்த்தாலும் விலகிப் போய்விடு என்று துரையும் அறிவுரை சொன்னான். ஆனால் இது நடந்து இரண்டு இரவுகளுக்குப் பிறகு தற்செயலாக நான் யோசிக்கும்போது சம்பத் தவறாக எதையும் பேசவில்லை. அவன் தனது அவதானிப்பைத் தானே சொல்லியிருக்கான் என்று புரிந்தது.

எத்தனையோ முறை டெல்லியில் நடந்த பார்ட்டிகளில் இது போல எத்தனை 'பேர் வெளிப்படையாக ஒருவர் மனைவியைப் பற்றி மற்றவர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். அப்போது ஏன் கோபம் ஏற்படவில்லை என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். ஆனாலும் என் மனைவியைப் பற்றி ஒருவன் கேலி செய்வது எனக்கு ஏற்றுக்கொள்ளச் சற்றே சிரமமானதாகவே இருந்தது.

இது நடந்து ஒரு வாரத்தின் பிறகு சம்பத் ஒரு நாள் இரவு என் வீட்டிற்குத் தேடி வந்து ராமதுரை இதைப் பற்றி மிகவும் வருத்தப் பட்டுப் பேசியதாகவும் உடனே தான் மன்னிப்பு கேட்பதற்காக வந்திருப்பதாகவும் சொன்னான். நான் அதெல்லாம் தேவையில்லை என்றேன். அவன் தன்னோடு கொஞ்ச தூரம் நடந்து வர முடியுமா என்று கேட்டான். நானும் அவனும் என் வீடிருந்த கடற்கரைச் சாலையில் நடக்கத் துவங்கினோம். அவன் ஏதாவது பேசக்கூடும் என்று யோசித்தபடியே நடந்து வந்தேன். ஆனால் அவன் வழியில் எதுவும் பேசவேயில்லை.

சாலையில் கிடந்த ஒரு கல்லை எத்தி விட்டான். அது தூரப் போய் விழுந்தது. வேகவேகமாக அந்தக் கல் விழுந்த இடத்திற்கு ஓடிப் போய் திரும்பும் எத்தி விட்டான். கல் இப்போது ஒரு வீட்டின் சுவரில் பட்டு விழுந்தது. மிக சந்தோஷமான ஒரு காரியத்தில் ஈடுபடுகின்றவனை போல அவன் அந்தக் கல்லைக்

கடற்கரை மணல் அருகே வரை எத்திக்கொண்டே வந்தான். பிறகு அக்கல்லைக் குனிந்து எடுத்து கடலை நோக்கி வீசினான். கடலில் போய் கல் விழுந்ததும் குழந்தையைப் போலப் பரவசத்துடன் கையை அசைத்துக்கொண்டு தானே சிரித்துக்கொண்டான். இருவரும் சிறார்கள் விளையாடுவதற்காக அமைக்கப்பட்டிருந்த விளையாட்டு சறுக்குகளின் அருகில் உட்கார்ந்துகொண்டோம். அவன் என்னிடம் எதுவும் பேசவில்லை.

அன்றைக்கு வானில் நட்சத்திரங்கள் பெருகியிருந்தன. கடல் அலையின் சப்தம் சீராகக் கேட்டுக்கொண்டிருந்தது. மணலை அள்ளி விரல்களின் வழியாக நான் ஒழுக விட்டபடியிருந்தேன். இரவு ரோந்து வரும் காவல் வாகனங்கள் சப்தம் எழுப்பாமல் கடந்து போய்க்கொண்டிருந்தன. சம்பத் தனியே நடந்து போய் கடலில் காலை நனைத்துக்கொண்டு திரும்பி வந்து போகலாமா என்று கேட்டான். என்னை வெளியே அழைத்து வந்துவிட்டு எதுவும் பேசாமல் போகலாமா என்று கேட்கிறானே என்று ஆத்திரமாக வந்தது. அவன் மௌனமாக ஒரு சிகரெட்டை எடுத்துப்பற்ற வைத்துக்கொண்டான். என்னோடு வீடு வரை வந்தவன் நான் வீட்டை நெருங்கியதும் திரும்பவும் கடற்கரையைப் பார்த்து நடக்கத் துவங்கினான்.

அன்றைய பின்னிரவில் நான் கடற்கரைக்கு வந்தபோது சம்பத் கடற்கரை மணலில் உறங்கிக் கிடந்தான். யாருமற்ற மணல் பொன்னிறத்தில் மினுங்க, சோடியம் விளக்குகள் தனியே எரிந்து கொண்டிருந்தன. சம்பத்தின் தலைமயிர் முழுவதும் மணல் அப்பியிருந்தது. விடிகாலையின் குளிரைத் தாங்க முடியாமல் அவன் சுருண்டு கிடப்பது தெரிந்தது. ஏனோ அன்று அவனைப் பார்ப்பதற்கு எனக்கு மிகவும் துக்கமாகயிருந்தது. நான் வீடு திரும்பி விடியும்வரை லைட்டைக்கூட போட்டுக் கொள்ளாமல் பால்கனி யில் உட்கார்ந்திருந்தேன். விடிகாலையில் சம்பத் என் வீட்டின் வழியாகத் தான் நடந்து போனான். ஆனால் அவன் என் வீட்டை நிமிர்ந்து பார்க்கவேயில்லை.

ஒரு குதிரை தனியே பாதையில் வந்துகொண்டிருந்தது. அதன் முதுகில் இரண்டு சுமைகள் ஏற்றப்பட்டிருந்தன. மிகக் குறுகலான மண்பாதையில் குதிரை ஒரே சீராக நடந்து வந்துகொண்டிருந்தது. குதிரை வருவதைக் கண்டதும் ராமதுரை சீட்டியடித்தான். அவன் குரல் கேட்டு குதிரை முகத்தை அசைத்து திரும்பிப் பார்த்துக் கொண்டது. குதிரையோடு ஆட்கள் யாரும் கீழே வரக் காணோம். குதிரைக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றுகொண்டோம். தினமும் இதே பாதையில் வந்து பழக்கப்பட்ட குதிரையாக இருக்கக்கூடும். அது

பாறைச் சிதைவுகளில் சரியாகக் காலை வைத்துக் கடந்து போனது. குதிரை பாதையை விட்டு மறையும்வரை ராமதுரை நின்று பார்த்துக் கொண்டேயிருந்தான்.

நானும் மாரியப்பனும் வேகவேகமாக நடக்கத் துவங்கினோம். மாரியப்பனுக்கு மூச்சிரைத்தது. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கைகளை உயர்த்தி மடக்கி சோம்பல் முறிப்பது போல காற்றை உள்ளிழுத்துக்கொண்டான். இப்போது நாங்கள் நின்றிருந்த இடத்தைச் சுற்றிலும் தைல மரங்கள் அடர்ந்திருந்தன. மக்கிப்போன இலைகளும் ஒடிந்து கிடந்த சுள்ளிகளும் தவிர வேறு கண்ணில் படவேயில்லை. இன்னும் எவ்வளவு தூரம் நடக்க வேண்டும் என்று தெரியவில்லை. எங்களைச் சுற்றிலும் மலை படர்ந்திருந்தது. பசுமையின் கோப்பைக்குள் விழுந்து கிடப்பதைப் போல நாங்கள் நின்றிருந்தோம். மாரியப்பன் இப்போது என்னை விட்டுத் தனியே நடந்து போகத் துவங்கினான். சிறிய பாறைகளில் அவன் ஏறும்போது மிகுந்த சிரமத்துடன் நடப்பது தெரிந்தது. நான் மெதுவாக நடக்கத் துவங்கினேன்.

மரக்கிளையில் இருந்து ஒரு அணில் தாவி இன்னொரு மரத்திற்குப் போய்க்கொண்டிருந்தது. எங்கிருந்தோ பேச்சுச் சப்தம் கேட்டது. யாரோ நடந்து வருகிறார்கள் என்பதும் அவர்களில் ஒரு பெண்ணிருக்கிறாள் என்பதும் தெளிவாகக் கேட்டது. நான் மரத்தின் வேர்கள் ஓடிக் கிடந்த பாதையில் வேகமாக ஏறி ஒரு சிறிய பாறை மீது நின்றபோது மேட்டிலிருந்து ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களும் கீழே இறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தலையிலும் சுமைகளிருந்தன. அருகில் வந்தபோது அவர்களாகவே சிரித்தபடி கானல் காட்டுக்குத்தானே போறீங்க. மேட்டுப்பாதை நடக்க சிரமமாதானிருக்கும். ஆனா கிழக்கே போயிட்டா பாதை சமமாகிரும் என்றார்கள். அந்தப் பெண் ஒரு குத்துச்செடியைக் காட்டி அதன் இலையைக் கிள்ளி கடித்துக் கொண்டே போனால் தாகமிருக்காது என்று விரலைக் காட்டினாள். நான் தலையாட்டிக் கொண்டேன். அவர்கள் கீழே போய்க்கொண்டிருந்தார்கள். வெயில் மூடிக்கொண்டு விட்டது போல வெளிச்சம் மட்டுப்படத் துவங்கியது.

யாரோ சப்தமாக எங்கள் பெயரைச் சொல்லி அழைப்பது கேட்டது. ராமதுரையின் குரல்தானா அது என்று கூர்ந்து கேட்டேன். அவனேதான். எங்கோ பாதை மாறிப் போயிருக்கிறான். நான் பதில் குரல் தராமல் அமைதியாகக் கேட்டுக் கொண்டேயிருந்தேன். ஏதோ ஒரு பறவையின் பதில் குரல் மட்டும் கேட்டு அடங்கியது. மேடேறிச் செல்லும் பாதையில் விடுவிடுவென ஏறத் துவங்கினேன். பத்து நிமிடம் நடந்த தூரத்திற்குப் பிறகு ஒரு நீர் வழியும் பாறையின் அருகில் உட்கார்ந்துகொண்டு மாரியப்பன் அழுதுகொண்டிருப்பதைக்கண்டேன். அவனது அழுகை துக்கத்தால்

ஏற்பட்டதுதானா இல்லை பயண வலியா? நான் கேட்டுக்கொள்ள வில்லை. அவன் என்னை நிமிர்ந்து பார்க்கவுமில்லை. ஆனால் ராமதுரை வந்து சேரட்டும் என்று நான் அவன் உட்கார்ந்திருந்த இடத்தின் அருகில் அமர்ந்துகொண்டேன்.

மாரியப்பன் விசும்பி விசும்பி அழுதுகொண்டிருந்தான். பிறகு தன் கண்ணை தானே துடைத்துக்கொண்டு ஒருமுறை தான் சம்பத்தைப் பார்ப்பதற்காக அவனது கிராமத்து வீட்டிற்குச் சென்றதைப் பற்றிச் சொன்னான்.

மாரியப்பன் போனபோது சம்பத் ஒரு ஜன்னல் அற்ற அறையில் எதையோ படித்துக்கொண்டிருந்தான். அந்த அறையில் நாற்பது வாட்ஸ் பல்ப் எரிந்து கொண்டிருந்தது. சுவர் முழுவதும் விந்துக் கறை படிந்து உலர்ந்துபோயிருந்தது. அன்றைக்கு சம்பத் எங்கோ ஒரு ஓடைக்குள் கூட்டிக்கொண்டு போய் நாட்டுச் சாராயம் வாங்கிக் கொடுத்தான். பின்பு இருவரும் ஒரு வேப்ப மரத்தின் நிழலடியில் படுத்துக்கொண்டார்கள்.

சம்பத் மிக வேதனையுடன், பொம்பளைப் பிள்ளைகளை வயதுக்கு வந்ததும் கட்டிக் கொடுத்துவிடுவது போல நம்மையும் நடத்தினால் நன்றாகயிருக்குமில்லையா, இப்படி காமம் ஒரு கரையானைப் போல மெல்ல அரித்துத் தின்பதிலிருந்து தப்பி விடலாமே என்று கேட்டான். மாரியப்பன் பதில் பேசவேயில்லை. ஒரு ஆள் வேலை கிடைத்து சம்பாத்தியம் செய்தால் மட்டுமே ஒரு பெண்ணோடு உறவு கொள்ள முடியும் என்பது மடத்தன மானது என்று சம்பத் புலம்பிக்கொண்டேயிருந்தான். பிறகு அவனை சாலைச் சந்திப்பு வரை கூட்டி வந்து இரவிலே ஊருக்குப் புறப்படும்படி அனுப்பி வைத்துவிட்டான்.

சம்பத் ரொம்ப நல்லவன் என்று மனதிற்குப் பட்டது. மாரியப்பன் தன்னை அறியாமல் திரும்பவும் பீறிட்டு அழத் துவங்கி யிருந்தான். நான் அவன் அழுவதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

என் மனம் பின்னோக்கி தன் தறியை நெய்யத் துவங்கியிருந்தது. மனதில் சம்பத்தின் சாவைத் தவிர வேறு எண்ணங்கள் ஏதாவது எழுவதும், அது வளர்வதற்குள் அடித்துச் செல்லப்பட்டு திரும்புவம் சம்பத்தின் சாவிலிருந்து துவங்கி அந்த நாள் மட்டுமே புகை போலச் சுழன்றுகொண்டிருப்பதாகவுமே இருந்தது.

மருத்துவமனையில் இறந்துபோன சம்பத்தின் உடலைப் பார்த்துக்கொண்டிருந்த போதெல்லாம் ஏற்படாத துக்கமும் வலியும் அவனைக் கடைசியாகக் குளிப்பாட்டும் போது கசிந்து பீறிடத் துவங்கியது. அவனது தலையில் நான் தண்ணீரை ஊற்றிக் கொண்டிருந்தபோது என் வாழ்நாளில் அதன் முன்பாக அது போன்றதொரு அனுபவத்தைப் பற்றி நினைத்துப் பார்த்திருந்தது கூட கிடையாது. சம்பிரதாயத்திற்காகவோ எதற்கோ தெரிய வில்லை; அருகாமை வீட்டிலிருந்த ஒரு கிழவி எங்கிருந்தோ மாவு சலிக்கும் ஒரு சல்லடையைக் கொண்டுவந்து சல்லடை வழியாகத் தண்ணீரை ஊற்றச் சொன்னாள்.

தண்ணீரை ஊற்றும்போது எனது கைகள் நடுங்கத் துவங்கின. சம்பத்தின் முகபாவம் குளித்துக்கொண்டிருப்பதை மறந்து ஏதோ தீவிரமான யோசனையுடன் இருப்பதைப் போலிருந்தது. அவனது உடலில் தண்ணீர் ஓடி தரையில் இறங்கிப் போகிறது. கால் விரல்களில் செம்மண் புழுதி படிந்திருக்கிறது என்று காலில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றச் சொன்னார்கள். அவனது உள்ளங் கால்களைத் தூக்கி மரப்பலகை ஒன்றில் வைக்கும்படி அந்தப் பெண் சொல்லிக்கொண்டிருந்தாள்.

அந்தப் பாதங்களை வாழ்நாளில் முதன் முறையாகத் தொட்டுப் பார்த்தேன். அது பெண்களின் பாதங்களைப் போலப் பித்தவெடிப் பேறிப்போயிருந்தது. நகங்கள் வெட்டப்படாமல் அழுக்குப் படிந்து போயிருந்தது. வலது பாதத்தை விடவும் இடது பாதம் சற்றே பெரியதாக இருப்பது போலத் தோன்றியது. அவன் விரல்களில் தண்ணீர் ஊற்றி ஒரு குழந்தையைச் சுத்தம் செய்வதைப் போல துடைத்துக்கொண்டிருந்தேன். அந்தப் பெண் ஒரு குடம் தண்ணீரை அப்படியே அள்ளி சம்பத்தின் தலையில் ஊற்றிக்கொண்டிருந்தாள். செம்பட்டை படிந்த மயிர்களோடு சம்பத்தின் ஆண் குறி தளர்ந்து போயிருந்தது. தண்ணீர் பாறையிலிருந்து வழிந்து போவது போல அத்தனை வேகமாகவும் லாவகமாகவும் அவன் உடலில் இருந்து வடிந்து வெளியேறிப் போய்க்கொண்டிருந்தது.

இது நடப்பதற்கு இரண்டு மணி நேரத்தின் முன்பாக சம்பத்தின் உடலைக் குளிப்பாட்டுவதற்காக நீர்மாலை எடுத்து வருவதற்காகச் செல்ல வேண்டும் என்பதைக் கூட அவன் குடியிருந்த வீட்டின் உரிமையாளரான பெண்மணிதான் நினைவுபடுத்தினாள். நீர்மாலை எடுத்து வருவதைப் பற்றி சம்பத்தின் மனைவி ஏதோ கொஞ்சம் அறிந்திருக்கக்கூடும் போலிருந்தது. அவள் தனது அழுகை படிந்த முகத்தோடு வீட்டிலிருந்த சிவப்பு பிளாஸ்டிக் குடத்தை எடுத்துக் கொண்டு எங்கே தண்ணீர் பிடிக்கப் போவது என்று தெரியாத வளைப் போல நின்றுகொண்டிருந்தாள். வீட்டுக்காரப் பெண்மணி பிளாஸ்டிக் குடத்தைக் கொண்டுபோகக் கூடாது என்று சொன்ன தால் தன்னிடம் அதைத் தவிர வேறு எவர்சில்வர் குடங்கள் எதுவும்

கிடையாது என்று சம்பத்தின் மனைவி சொன்னாள். வீட்டுக்காரப் பெண் தன் வீட்டிலிருந்த சில்வர் குடம் ஒன்றை எடுத்துக்கொண்டு போகும்படியாகச் சொன்னாள்.

சம்பத்தின் மனைவியும் அவளுக்குத் துணையாக இன்னொரு சிறுமியும் நீர்மாலை எடுத்து வருவதற்காக ஆளுக்கொரு எவர்சில்வர் குடங்களுடன் நின்றிருந்தார்கள். சம்பத்தின் மனைவியை அழைத்துக்கொண்டு அந்தச் சிறுமி தெரு முனையில் இருந்த அடிகுழாயை நோக்கி நடந்துகொண்டிருந்தாள். அவளோடு யாராவது ஆண்கள் துணைக்குப் போக வேண்டும் என்று வீட்டுக்காரப் பெண் என்னை அனுப்பி வைத்தாள்.

தெரு முனைக்குப் போனபோது அடிகுழாயில் நாலைந்து பெண்கள் தண்ணீர் அடித்துக்கொண்டிருந்தார்கள். சம்பத் மனைவியை கூட்டிப் போன சிறுமி அந்தப் பெண்களிடம் 'யக்கா நீர்மாலை எடுக்க வந்திருக்காங்க' என்று சொன்னபோது அங்கிருந்த பெண்களில் ஒருத்தியும் அதைப் பற்றிச் சட்டை செய்யவேயில்லை. ஒரேயொரு வயதான பெண் மட்டும் அக்கறையாக எப்படி இறந்து போனான் என்று விசாரித்துக் கொண்டிருந்தாள். இரண்டு பெண்களுக்கு அப்புறம் சம்பத்தின் மனைவி தனது குடத்தை வைத்துக் கொண்டு தண்ணீர் அடிக்கத் துவங்கினாள். சாணிக் கலரில் தண்ணீர் வந்தது. சம்பத்தின் மனைவி குனிந்து குடத்தை நன்றாகக் கழுவிக்கொண்டு எக்கி எக்கித் தண்ணீர் அடித்தாள். சிறுமி தனது குடத்தை தானே அடித்துக்கொள்வதாகச் சொன்னதும் சம்பத்தின் மனைவி தனது புடவையால் முகத்தைத் துடைத்துக்கொண்டே தெருவைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

தெருவில் ஒரு மீன் விற்பவன் நின்று கத்திக்கொண்டிருந்தான். குப்பை வண்டிக்காரனின் மனைவியும் இன்னொரு பெண்ணும் டீக்கடையில் நின்று டீ குடித்துக்கொண்டிருந்தார்கள். காலை வெயில் தெருவில் ஊர்ந்துகொண்டிருந்தது. சிறுமி அடிபைப்பில் தாவிக் குதித்து அடித்துக்கொண்டிருந்தாள். அவள் அடித்து முடிக்கும்போது சம்பத்தின் மனைவியைப் பார்த்து நீலநிறச் சேலை கட்டிய ஒரு பெண், இந்தா செத்தது உன் புருசன்தானே... என்னமோ... திருவிழாக்குப் போற மாதிரி நைலக்ஸ் சேலை கட்டிக்கிட்டு வந்து நிக்குறே ... இதுல எப்படி குடம் தூக்குவே ... ஏய் பாப்பா ... செத்துப்போன மனுசனுக்கு செய்யுற காரியம், சுத்தபத்தமா செய்யி என்றாள். சிறுமிக்கு இப்போது என்ன செய்வது என்று தெரியவில்லை. அறிவுரை சொன்ன பெண்ணே சம்பத்தின் மனைவியை குடத்தைத் தூக்கிக் கொண்டு போகச் சொன்னாள். இடுப்பில் நிற்காமல் தண்ணீர் குடத்திலிருந்து அலம்பி அவளை நனைத்தது. குழாயின் அருகில் உட்கார்ந்து ஒரு சிறுவன் குளித்துக் கொண்டிருந்தான். அவனது தலையில் ஒரு குடம் தண்ணீரை ஊற்றினாள் ஒரு பெண். அது தலை வழியாக ஊர்ந்து முதுகில்

இறங்குவது என் கண்ணில் தெரிந்தது.

தண்ணீர் ஊற்றிக்கொண்டிருப்பவள் சிறுமியிடம் அந்த ஆளு யாரு என்று என்னைக் காட்டிக் கேட்டாள். அவங்க அண்ணன் என்று சிறுமி சொன்னதும் அந்த பெண்ணே இப்போது ஒரு குடம் தண்ணீர் அடித்துக் கொடுத்து சிறுமியைத் தூக்கிக்கொண்டு போகச் சொன்னாள். இரண்டு பெண்களும் குடத்தோடு எழுந்து கொண்டபோது அவனைப் பார்த்து, அண்ணாத்தே நீ முன்னாடி மெதுவா நடந்து போ என்று அந்தப் பெண் அடுத்த அறிவுரையைச் சொன்னாள். மூவரும் மிக மெதுவாகத் தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்தோம். சம்பத் மனைவியின் இடுப்பிலிருந்து எவர் சில்வர் குடம் நழுவிக்கொண்டே இருந்தது. அவள் கீழே விழுந்து விடுமோ என்ற பயத்திலே மெதுவாக நடந்து வந்துகொண்டிருந் தாள். தெருவில் வந்து கொண்டிருந்த ஸ்கூட்டர்காரன் எங்களை ஓரமாக நடந்து போகும்படி திட்டிவிட்டுக் கடந்து போனான். சம்பத்தின் வீட்டின் முன்னால் நின்றுகொண்டிருந்த ஒன்றிரண்டு ஆண்கள் ஜெயந்தியின் ஈரக்கோலத்தை மிக நிதானமாகப் பார்த்த படியே இருந்தனர். சம்பத் மனைவியிடமிருந்து குடத்தை வாங்கிக் கொண்டு சம்பத்தைக் குளிப்பாட்டுவதற்காக வெளியிலிருந்து இரண்டு ஆம்பளைகளை எழுந்து வரச் சொன்னாள் வீட்டுக்காரப் பெண்.

சம்பத்தின் மனைவி ஈரப் புடவையுடன் அறைக்குள் சென்று சம்பத் உடலின் முன்பாக உட்கார்ந்துகொண்டாள். அடுத்த வீட்டில் இருந்து ஒரு டேபிள் பேன் கொண்டுவரப்பட்டு சிறிய பந்தலில் வைத்து சுற்ற விடப்பட்டிருந்தது. சம்பத் உடலின் மீது யாரோ ஒரு ரோஜா மாலை போட்டிருந்தார்கள். சம்பத் மனைவி அருகில் எரிந்துகொண்டிருந்த விளக்கில் எண்ணெய் போதுமான அளவு இருக்கிறதா என்று எட்டிப் பார்த்தாள். இரண்டு பெண்கள் வீட்டின் உள்ளே எட்டிப் பார்த்துவிட்டு அவளிடம் சாயா குடிப்பதற்கு ஏதாவது காசு தரும்படியாகக் கேட்டார்கள். அவள் முன்னாடி இருப்பவர்களிடம் கேட்கச் சொன்னாள். ஈர உடையை மாற்றிக்கொள்வதா வேண்டாமா என்று அவளுக்குத் தெரிய வில்லை. ஒருவேளை உடையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றால்கூட இந்த ஒரு அறையைத் தவிர வேறு இடமில்லை. வீட்டுக்காரப் பெண்ணிடம் கேட்கலாமா என்று நினைத்தாள். ஆனால் அவள் சம்பத்தின் உடலைக் குளிப்பாட்டுவதற்கான ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். சம்பத் மனைவிக்குப் பசிக்கத் துவங்கியிருந்தது. அவள் அதை வெளிக்காட்டிக் கொள்ளா மல் சம்பத் உடல் அருகே உட்கார்ந்துகொண்டு அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

சம்பத்தின் மனைவி எந்த ஊரைச் சேர்ந்தவள் என்று எங்கள் யாருக்கும் தெரியாது. அவர்கள் திருமணம் நடந்து ஒரு வருடத்திற்கு மேலாக ஆகியிருந்தபோதும் சம்பத் எவரையும் அவனது வீட்டிற்கு அழைத்ததேயில்லை. அவன் எங்கே குடியிருக்கிறான் என்பதைப் பற்றிப் பேசுவதைக் கூட அவன் விரும்பியதேயில்லை. எப்போதாவது அதைப் பற்றி துரை கேலி செய்யும்போதுகூட சம்பத் எரிச்சல்படுவான். ஆமாண்டா நாற்பத்திரெண்டு வயசிலே நானே தேடிக்கிட்ட பொண்டாட்டி அவ. கல்யாணம் பண்ணிக்கிடாமலே செத்துப் போயிரப் போறேனோனு பயமாகி அவளைப் பிடிச்சிட்டு வந்து கட்டிக்கிட்டேன். உங்களை மாதிரி லவ் பண்ணி எல்லாம் அவளைக் கல்யாணம் பண்ணிக்கிடலே. அவளைப் பாத்து நீங்க என்ன செய்யப்போறீங்க. வேலை மசிரைப் பாத்துகிட்டு போங்கடா என்பான். சம்பத் கடந்த இரண்டு வருடங்களாகவே கோபத்துடன் தானிருந்தான். அதுவும் காமாலை கண்டு படுத்து எழுந்ததில் இருந்து அவனது முகத்தில் ரௌத்திரமும் கோபமும் எரிந்து கொண்டேயிருந்தது.

சம்பத் மனைவியின் பெயர் ஜெயந்தி என்பதை இரண்டு நாட்களுக்கு முன்பாக அவள் போன் செய்யும்போது நான் தெரிந்து கொண்டேன். காலை ஏழு மணியிருக்கும். அவள் போன் செய்து, தான் சம்பத்தின் மனைவி என்றும் அவர் ஒரு மாதமாகவே தாம்பரம் சானடோரியம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் நேற்றிரவு அவருக்கு சுயநினைவு இழந்துபோய்விட்டதால் அவரை இனிமேல் மருத்துவமனையில் வைத்திருக்க முடியாது என்று தூக்கிக்கொண்டு போகும்படி சொல்கிறார்கள், தனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை என்றும் சொன்னாள். கடைசியாக சம்பத்தைப் பார்த்து மூன்று மாதங்களுக்கும் மேலிருக்கும் என்பது அப்போதுதான் நினைவில் வந்தது. ராமதுரையுடன் மருத்துவமனைக்கு வருவதாகச் சொல்லிவிட்டு அவனுக்குப் போன் செய்தேன். அவன் தனக்கு சம்பத் மருத்துவமனையில் இருக்கும் விபரம் தெரியும் என்றும், சென்ற வாரம் போய்ப் பார்த்துவிட்டு வந்ததாகவும், இனி அவன் பிழைக்க மாட்டான் என்றும் உணர்ச்சியே இல்லாமல் சொன்னான். எனக்கு ஆத்திரமாக வந்தது.

சம்பத்தின் மனைவி மருத்துவமனையில் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருக்கிறாள் என்று திரும்ப சொன்னதும் துரை தனக்கு தெரிந்த சூப்ரண்டெண்ட் ஒருவர் அங்கே வேலை பார்ப்பதாகவும் அவரை வீட்டில் போய் பார்த்தால் ஏதாவது ஆலோசனை சொல்லக்கூடும் என்றும் சொன்னான். அழகர் சற்றே எரிச்சலுடன் உடனே மருத்துவமனைக்குப் போவ

தாகச் சொல்லியபடி போனைத் துண்டித்துக் கொண்டான். அன்றைக்கு சானடோரியம் மருத்துவமனைக்குப் போனபோது சம்பத்தின் மனைவியை இரண்டாவது முறையாகப் பார்த்தேன். அவள் சம்பத் படுத்திருந்த கட்டிலின் கீழே உட்கார்ந்துகொண்டு தரையில் தினசரி பேப்பரை விரித்து படித்துக் கொண்டிருந்தாள்

மூன்று மாதங்களுக்கு முன்பு மிகப் பெரிய பிளாஸ்டிக் வாளி ஒன்றும், ஒரு நீண்ட துடைப்பமும், நாலைந்து விதமான பிளாஸ்டிக் பூக்களும் வாங்கிக்கொண்டு சம்பத்தும் அவனது மனைவியும் பாண்டி பஜாரின் சாலையோரமாக நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அன்றைக்கு சம்பத் மிகவும் சந்தோஷமாகயிருந்திருக்க வேண்டும். நான் காரை நிறுத்திவிட்டு கீழே இறங்கி வருவதை கவனித்ததைப் போலக் கையசைத்து கூப்பிட்டான்.

சாலையைக் கடந்து அந்தப் பக்கம் வருவதற்குள் அவனாகத் தன் மனைவியை இழுத்துக் கொண்டு நான் நின்றிருந்த பக்கம் வந்து சேர்ந்தான். ஒரு ஆள் இறங்கி உட்கார்ந்து கொள்ளுமளவுள்ள பெரிய பிளாஸ்டிக் வாளியை பார்ப்பதே வேடிக்கையாக இருந்தது. சம்பத் கார்ப்பரேஷன் தண்ணீர் வாரத்திற்கு ஒரு நாள் மட்டுமே வருவதால் அதைப் பிடித்து வைத்துக்கொள்வதற்காக வாங்கியிருப்பதாகச் சொன்னான். அப்போது தான் நான் சம்பத்தின் மனைவியை முதன் முறையாகப் பார்த்தேன். அவள் கையிலும் நிறைய பிளாஸ்டிக் சாமான்களிருந்தன.

சம்பத், கரும்பு ஜூஸ் குடிக்காலாமா என்று அவன் மனைவியிடம் கேட்டான். அவள் தலையசைத்தாள். மூவரும் கரும்பு ஜூஸ் கடை முன்பாகப் போய் நின்று கொண்டோம். சம்பத் முழு மூடி எலுமிச்சம்பழம் பிழியும்படியாகக் கேட்டுக்கொண்டு விட்டு கீழே விழுந்து கிடந்த கரும்புச் சக்கையைக் கையில் எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். ஏதோ யோசனைக்குப் பிறகு கரும்பு ஜூஸ் விற்பவனிடம் இந்த மிஷின் என்ன விலையாகிறது என்று விசாரித்தான். கடைக்காரன் அதற்குப் பதில் சொல்லாமல் எலுமிச்சம் பழங்களை வெட்டிய கரும்பிற்குள் சொருகி இரும்புச் சக்கரங்களுக்குள் திணித்துக்கொண்டிருந்தான்.

சம்பத், தன் மனைவியிடம் நாமும் இது போல ஒரு கரும்பு ஜூஸ் கடை போட்டால் கூட போதும், நிறைய வருமானம் வருமில்லையா என்று கேட்டான். அதற்கும் அவள் தலையாட்டினாள். கரும்பு ஜூஸ் கடை போடுவதால் ஒரு நாளைக்கு எவ்வளவு வருமானம் வரும் என்று என்னிடம் கேட்டான். தெரியவில்லை என்றதும் சம்பத் அவனாக ஒரு கணக்கு போட்டுப் பார்த்துவிட்டு, எப்படியும் ஒரு நாளைக்கு ஐநூறு ரூபாய் கிடைக்கும் என்றான்.

கண்ணாடி டம்ளர் நிறைய கரும்பு ஜூஸ் வந்தது. அதை ஒரு வாய் குடித்தபடியே உனக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு சம்பளம் என்று என்னிடம் கேட்டான். மாதச்சம்பளம் முப்பத்தைந்து ஆயிரம் ரூபாய் என்று சொன்னேன். அவன் தலையாட்டிக்கொண்டு கரும்பு ஜூஸ் பிழியும் இயந்திரம் வங்கியில் லோனிற்குத் தருவார்களா என்று கேட்டான். அதற்கு நிறைய அத்தாட்சிகள் தேவைப்படும் என்றேன்.

மிக நிதானமாக அவன் கரும்பு ஜூஸைக் குடித்து முடித்துவிட்டு தன் மனைவியிடம் இன்னொரு ஜூஸ் வேண்டுமா என்று கேட்டான். அவள் குடிக்கலாம் என்பது போல தலையாட்டினாள். எனக்கு வேண்டாம் என்றதும் சம்பத் தன் மனைவியிடம், கரும்பு ஜூஸ் இயந்திரத்தை நாம் வாங்கி நடத்தத் துவங்கினால் ஒரு நாளைக்கு ஐநூறு ரூபாய் கிடைப்பதோடு அடுத்தவர்கள் மேல் உள்ள அத்தனை ஆத்திரத்தையும் கரும்பைச் சக்கையாகப் பிழியும் போது காட்டினால் மனதும் சாந்தமாகிவிடும் இல்லையா என்றான். இதற்கு அவன் மனைவி சிரித்தாள்.

இன்னொரு கிளாஸ் கரும்பு ஜூஸ் வந்தது. அதை வாங்கிக் குடித்துவிட்டு தண்ணீர் கலந்துவிட்டான் என்று குற்றம் சாட்டினான் சம்பத். பிறகு கரும்பு ஜூஸ் விற்பவனிடம் பேசி ஏதோ ஒரு முகவரியை வாங்கிக்கொண்டான். அத்தோடு அந்த இயந்திரத்தின் பெயரையும் கவனமாகப் பேப்பரில் குறித்துக்கொண் டான். இத்தனை பிளாஸ்டிக் பொருட்களை வைத்துக்கொண்டு அவர்கள் எப்படி வீட்டிற்குப் போவார்கள், காரில் கொண்டுபோய் விடட்டுமா என்று நான் கேட்டதும் சம்பத் அவர்கள் இருவரும் கிருஷ்ணவேணியில் மதியக் காட்சி நீர்க்குமிழி பார்க்கப் போவதாகவும் அந்தப் படத்தை முன்பு பார்க்காமல் விட்டுவிட்ட தாகவும் சொன்னான். ஆள் உயர பிளாஸ்டிக் வாளியுடன் சம்பத் பரபரப்பான சாலையைக் கடந்து போவது வேடிக்கையாக இருந்தது.

மருத்துவமனையில் நான் அவளை இரண்டாவது முறையாகப் பார்த்தபோது அவள் மிகவும் மெலிந்துபோயிருப்பது போலிருந்தது. உறக்கமற்றுப்போன கண்கள், உலர்ந்து வெடித்த உதடுகளுடனிருந் தாள். அந்த வேதனையான மனநிலையில்கூட அவளது மார்பு விலகி இருப்பதை அவனது கண்கள் தானாகப் பார்த்துக் கொண்டேயிருந்தன. சம்பத் சுத்தம் செய்யப்படாமல் ரத்தக் கறை படிந்த ஒரு போர்வையில் சுருண்டு கிடந்தான். அவனது படுக்கை யின் அருகில் ராணி வார இதழ் பாதி படித்தபடியிருந்தது. அதை அவன் கவனிப்பதை அறிந்துகொண்டவளைப் போல சம்பத்தின்

மனைவி அதை எடுத்துப் போய் அடுத்த பெட்டில் இருந்த ஒரு பெண்ணிடம் கொடுத்துவிட்டு வந்தாள்.

சம்பத்தின் தலைமயிர் கொட்டிப்போயிருந்தது. அவன் கன்னங்கள்கூட ஊதிப் போயிருப்பது போலிருந்தது. அழுக்கேறிப் போயிருந்த ஒரு வேஷ்டியை அவன் இடுப்பைச் சுற்றி அந்தப் பெண் சுற்றி விட்டிருக்கிறாள் என்பது தெரிந்தது. சம்பத் சாப்பிட வேண்டிய மாத்திரைகள், அவனது எக்ஸ்ரே ரிப்போர்ட் அத்தனையும் அவன் படுக்கையை ஒட்டிய ஜன்னலில் கிடந்தன. சம்பத் சுயநினைவில்லாமல் கிடந்தான். ஜன்னலுக்கு வெளியே மருத்துவமனையின் பின்புறம் வாயில் எச்சில் ஒழுக ஒரு நாய் குப்பையிலிருந்து எதையோ இழுத்துத் தின்றுகொண்டிருந்தது. சம்பத்தின் மனைவி அவன் தலையணையைத் தூக்கி அதன் அடியில் வைத்திருந்த தனது பர்சை எடுத்துக்கொண்டு டீ வாங்கிக்கொண்டு வரட்டுமா என்று கேட்டாள். வேண்டாம் என்று மறுத்தபடியே துரையும் வருவதாகச் சொன்னேன். அவள் இரண்டு நாட்களுக்கு முன்னதாக துரை வந்திருந்ததாகவும் ஐநூறு ரூபாய் பணம் தந்து விட்டுப் போனதாகவும் சொன்னாள். என்னிடம் அவன் சொல்லவேயில்லை என்று சொன்னதை அவள் கேட்டுக்கொள்ளவேயில்லை.

துரை வந்திருந்த அன்று சம்பத்திற்கு நினைவு இருந்தது என்றும் ஆனால் அவன் யாரையும் பார்க்கவேயில்லை, தன்னுடைய கை விரல்களையே நாள் முழுவதும் பார்த்துக்கொண்டே இருந்தான், சில நேரம் துரை ஆத்திரமாகி சம்பத்தின் கையை மடக்கி விட்டால் கூட அடுத்த சில நிமிசத்திலே தன் இரண்டு கைகளையும் விரிப்பதும் மடிப்பதுமாக பார்த்துக்கொண்டேயிருந்தான் என்றாள்.

மருத்துவமனைக்குள் பருத்த நீல நிற உடையணிந்த ஒரு கிறிஸ்துவ கன்யா ஸ்திரி போல ஒருத்தியும் அவளோடு குள்ளமான ஒருவரும் ஒவ்வொரு படுக்கையாக வந்து நோயாளிகள் நலமடைவதற்காக பிரார்த்தனை செய்துகொண்டிருந்தார்கள். அந்த கன்யா ஸ்திரி ஏதோ ஒரு பாடலை இரண்டு இரண்டு வரியாக பாடிய படியே நோயாளிகளின் படுக்கையை தாண்டி வந்து கொண்டிருந்தாள். அவளோடு வந்த நபர் தன் கையில் இருந்த துண்டு பிரசுரம் ஒன்றை நோயாளிகளின் துணைக்கு இருப்பவர்களிடம் கையில் தந்தபடியே காற்றில் ஆசிர்வாதம் செய்துகொண்டிருந்தார். சம்பத் படுக்கையின் அருகில் வந்ததும் அந்த கன்யாஸ்திரி நின்னை இவ்வுலகிற்கு தந்த என் நாதரே என்ற பாடலை பாடினாள். சம்பத்தின் மனைவி அவள் முன்னால் மண்டியிட்டு தலை குனிந்திருந்தாள்.

எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அந்த கன்யா ஸ்திரி தன் பாடலை முடித்துவிட்டு கண்களை மூடிக் கொண்டு ஜெபம் செய்தாள் பிறகு ஜெயாவின் நெற்றியில் தன் விரல்களை வைத்து ஒருசிலுவை செய்தாள். ஜெயா எழுந்து கொண்டு கன்யா

ஸ்திரியோடு ரகசியம் போல ஏதோ பேசிக்கொண்டிருந்தாள்.

அருகாமையில் இருந்த நோயாளியின் உறவினர்களுடன் பேசிக் கொண்டிருந்த குள்ளமானவர் வேகவேகமாக சம்பத்தின் படுக்கை அருகே வந்து நின்று அதே துண்டுப் பிரசுரத்தை தந்தார். அவள் என்னிடம் தருமாறு கையை காட்டியதும் அந்த நபர் சிரித்த முகத் தோடு அவனை நோக்கித் தன் கைகளை நீட்டினார். அவன் கை களை நீட்டாமல் நின்றுகொண்டிருந்தான். அவர் கைப்பையிலிருந்து சிறிய சிவப்பு நிற வேதாகமப்புத்தகம் ஒன்றை எடுத்து துண்டுப் பிரசுரத்தோடு அதையும் சேர்த்துத் தந்து உங்கள் சகோதரர் சுகமடைவதற்கு ஆண்டவன் எப்போதும் துணை நிற்பார் என்று சொல்லியபடி அடுத்த படுக்கைக்கு போனார். அந்த கவிசேசத்தை எங்கே வைப்பது என்று தெரியாமல் நின்றுகொண்டிருந்தான். ஜெயா அதை வாங்கிக் கொண்டவளாக வாராவாரம் அவர்கள் வருவார்கள் என்று சொல்லியபடியே கணவனை இழந்த பெண் களுக்கு அவர்கள் நடத்தும் தையல் பள்ளியில் இலவசமாக வகுப்பு கள் நடத்துகிறார்கள் என்றும் அந்த சேவா மையம் எங்கோ முகலிவாக்கத்தில் இருக்கிறது என்றாள்.

நான் சம்பத்தின் கைகளைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். நாற்பத்திரெண்டு வயதிற்குள் வயோதிகத்தின் சுருக்கம் படிந்து விட்டிருந்தது. சம்பத்தின் அப்பா அம்மாவிற்கு சொல்லி அனுப்ப வேண்டுமா என்று நான் கேட்டதும் அவனது அம்மா இறந்து போய் மூன்று வருடங்களாகிவிட்டது என்றும் ஒரு முறை அவள் ஒரு கடிதம் போட்டதற்குக் கூட யாரும் பார்க்க வரவில்லை என்று சொன்னாள்.

ராமதுரை வருவதற்காகக் காத்துக்கொண்டிருந்தேன். அவளா கவே நேற்று இரவில் வந்து பார்த்த மருத்துவர் சம்பத் இனி பிழைக்க மாட்டான், இப்போதே வீட்டிற்குக் கொண்டு போகா விட்டால் நிறைய செலவு ஆகிவிடும் என்று சொல்லியதாகவும் அவளிடம் எழுபது ரூபாய் மட்டுமே இருப்பதாகவும் சொன்னாள்.

அருகாமையில் இருந்த ஒரு நோயாளியைக் காண்பதற்காக ஒரு குடும்பமே வந்திருந்தது. அவர்கள் ஒரு டிபன் கேரியரில் கோழிக்கறி சமைத்து எடுத்துக்கொண்டு வந்திருந்தார்கள் போலும். அதைத் திரும்பத் திரும்ப ஒரு பெண் சொல்லிக்கொண்டே இருந்தாள். அந்தக் குடும்பத்திலிருந்த ஒரு சிறுவன் ஒவ்வொரு நோயாளியாக எண்ணிக்கொண்டே அந்த ஹாலின் கடைசி வரை நடந்து சென்று கொண்டிருந்தான். நானும் சம்பத்தின் மனைவியும் அந்தக் குடும்பத்தைப் பார்த்துக்கொண்டிருந்தோம். அவர்கள் தரையில் ஒரு பேப்பரை விரித்து உட்கார்ந்துகொண்டார்கள். நோயாளி சாப்பிடுவதற்காக வைத்திருந்த குளுகோஸ் டப்பாவில் இருந்து கொஞ்சம் கையில் தட்டி அந்தக் குடும்பத்திலிருந்த ஒரு வயதான வர் தன் வாயில் போட்டுக்கொண்டார். பிறகு அவர்கள் தங்கள்

குடும்பப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசத் துவங்கினார்கள்.

நோயாளிகளை எண்ணி முடித்துத் திரும்பியிருந்த சிறுவன் தன் அம்மாவிடம் மொத்தம் நாற்பத்தியேழு நோயாளிகள் இருப்பதாகச் சொன்னான். அந்த பெண் கேட்டுக்கொண்டதாகவேயில்லை. சிறுவனுக்கு அடுத்து என்ன செய்வது என்று தெரியாத நிலையில் டிபன் கேரியரை அவிழ்த்து சாப்பிடலாம் என்று சொல்லத் துவங்கினான். பையனின் அம்மா அதை கேட்டுக்கொள்ளவேயில்லை. சிறுவன் தானாக டிபன் கேரியரை அவிழ்க்கத் துவங்கவே, ஆத்திரத்தோடு அவனது அம்மா முதுகில் ஒரு அறை கொடுத்தாள். சிறுவன் உச்ச ஸ்தாயியில் அழத் துவங்கினான். பாதி திறந்திருந்த டிபன் கேரியரைத் திரும்பவும் அந்தப் பெண் மூடும்போது சிறுவனின் அழுகை இன்னமும் அதிகமாகியது. படுக்கையை விட்டு எழுந்து மூத்திரம் பெய்வதற்காகப் போயிருந்த இன்னொரு நோயாளி சிறுவனின் அழுனகச் சப்தம் கேட்டு கானத மூடிக் கொண்டு தரையை உரசி உரசி நடந்து வந்துகொண்டிருந்தான்.

சிறுவனை சமாதானப்படுத்துவதற்காக அவர்கள் டிபன் கேரியரைப் பிரித்து கோழிக்கறியை வெளியே எடுத்து வைத்துக் கொண்டிருந்தார்கள். அதன் மணம் அந்த அறை முழுவதும் பரவியது. சிறுவன் அம்மாவின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டான். அவர்கள் யாவரும் பேச்சை ஒதுக்கிவைத்துவிட்டு சாப்பிடத் துவங்கினார்கள். சம்பத் மனைவியிடம் அவள் சாப்பிடுவதற்காக ஏதாவது வாங்கி வரட்டுமா என்று கேட்டேன். அவள் தலையாட்டினாள். நான் மருத்துவமனைனய விட்டு வெளியே வந்து நின்றேன். அவள் சாப்பிடுவதற்காக என்ன வாங்குவது என்று தெரியவில்னல. சானலயைக் கடந்து எதிர் திசையில் இருந்த ஹோட்டலுக்குள் நுழைந்தேன். எதனாலோ குமட்டிக்கொண்டு வந்தது. வாஷ் பேஷின் அருகில் சென்று வாந்தியெடுத்தேன். பித்தக் கசப்பேறியதாகயிருந்தது. முகத்தைக் கழுவிக் கொண்டு நானும் எதையாவது சாப்பிடலாம் என்று நினைத்தேன்.

சர்வர் சாப்பிடுபவர்களின் முகத்தைப் பார்க்கக்கூட விருப்பமற்றவனாக என்ன வேண்டும் என்ற கேட்டபடியே நடந்து போய்க் கொண்டிருந்தான். வீட்டில் என் மனைவி சமைத்து வைத்துவிட்டுப் போயிருக்கக்கூடும். அனத இரவில் சூடு செய்து சாப்பிட்டுக் கொள்ளலாம். சர்வர் திரும்பி வருவதற்குள் என்ன சாப்பிட வேண்டும் என்று முடிவு செய்வது மிக சிரமமாகயிருந்தது. சர்வர் என்னை நெருங்கி வந்து ஒரு நிமிஷம் நின்றான். பிறகு தயக்கமான குரலில் நான் ஒரு தயிர் சாதம் என்றேன் அவன் அதைக் கேட்டுக்கொண்டதற்கான அறிகுறியே இன்றி அடுத்த மேஜைக்குக் கடந்து போய் விட்டான்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு ஒரு தட்டில் பாதி இலை போட்டு அதில் தயிர் சாதத்தை அள்ளி வைத்துக்கொண்டு வந்திருந்தான்.

ஊறுகாயின் சாறு ஓடிக் கொண்டிருந்தது. சாதத்தை ஒரு வாய் சாப்பிடுவதற்குள் புளிப்பு தாங்க முடியாமலிருந்தது. சர்வர் திரும்பி வந்து வேறு ஏதாவது வேண்டுமா என்று கேட்டான். இந்த ஹோட்டலில் சம்பத்தின் மனைவிக்கு எதுவும் வாங்கக் கூடாது என்று தோணியது. பில்லைக் கொண்டுவரும்படியாகச் சொல்லி விட்டு சாப்பிடாமல் உட்கார்ந்திருந்தேன்.

ஹோட்டல் கல்லாவில் உட்கார்ந்திருந்தவன் இப்போதுதான் குளித்துவிட்டு வந்து உட்கார்திருக்க வேண்டும். அவன் நெற்றியில் குங்குமமும் திருநீறும் கலையாமலிருந்தது. அவன் காசை வாங்கிப் போடுவதற்குள் அங்கிருந்த எல்லா தெய்வங்களையும் மிகுந்த பக்தியோடு ஒரு முறை வணங்கிக் கொண்டு என்னிடமிருந்து பணத்தை வாங்கிக்கொண்டான். நோயாளியான ஒரு பெண்ணை ஆட்டோவிலிருந்து கைத்தாங்கலாக இறக்கி பிடித்துக்கொண்டு அந்த ஹோட்டலுக்குள் இரண்டு பேர் நடந்து போய்க்கொண்டிருந் தார்கள். நடந்து கொஞ்ச தூரம் வந்தபோது பேக்கரி தென்பட்டது. அவளுக்கு ஏதாவது பிரெட் வாங்கித் தரலாமா என்று யோசனை செய்தேன். காரை எடுத்துக்கொண்டு போய் எங்காவது சாப்பாடு வாங்கி வரலாம் என்றுகூட தோணியது.

திரும்பவும் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தேன். அவளிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்று உள்ளே நடந்தபோது சம்பத்தின் மனைவி தரையில் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தாள். ராம துரை அவள் படித்துப் போட்டிருந்த மாதநாவலை கவனசிரத்தை யாகப் படித்துக்கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும் ஜெயந்தி நீங்களும் சாப்பாடு வாங்கிட்டு வந்திருக்கீங்களா என்று கேட்டாள். இல்லை என்றதும் ராமதுரை, இங்கே சாப்பாடு நல்லா இருக்காது, அதான் மவுண்ட்ல வாங்கிட்டு வந்தேன் என்றான். சம்பத் இப்போது புரண்டு படுத்திருப்பது போலிருந்தது. அருகில் சென்று சம்பத்தின் முகத்தைக் குனிந்து பார்த்தேன். கண்கள் லேசாக அசைவது போலிருந்தது. ராமதுரை தான் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டு அலுப்போடு சொன்னான், டாக்டர் இப்போகூட வந்து பாத்தாரு... அவ்வளவு தான்... மிஞ்சிப் போனா ரெண்டு மணி நேரமிருக்குமாம்... அவன் சம்பத்தை பார்த்துக்கொண்டேயிருந்தான். பயமாகவும் நடுக்கமாகவுமிருந்தது.

ராமதுரை என்னிடம் எவ்வளவு பணமிருக்கிறது என்று கேட்டான். நான் வங்கியிலிருந்து ஐந்தாயிரம் எடுத்து வந்திருப்ப தாகச் சொன்னேன். உடனே ராமதுரை, அதை எங்கிட்டே குடுத் திரு. நான் மூவாயிரம் வச்சிருக்கேன். சரியா வரும்னு நினைக் கிறேன். உன் காரிலே இவனைக் கொண்டுபோக வேண்டாம். டாக்சி வச்சிக்கிடலாம். அதுக்கு பேசிட்டேன். நீ உன் வீட்ல போயி சொல்லிட்டு வந்திருய்யா என்றான். தேவையில்லை என்றபடி அங்கேயே இருந்தேன். ராமதுரை தனது செல்போனில்

யாருடனோ பேசினான். பிறகு மருத்துவமனையின் சூப்ரெண்ட் டெண்ட் ஒருவரைப் பார்த்து வருவதற்காகப் போகலாம் என்று என்னையும் உடன் அழைத்துக் கொண்டான். இருவரும் மருத்துவ மனையின் வேறு வேறு வார்டுகளுக்குள் நடந்து கொண்டிருந்தோம்.

நோயாளிகள். நோயாளிகள். வெவ்வேறு வயதில் வெவ்வேறு உபாதைகளுடன் நோயாளிகள். வேதனை படிந்த முகங்கள். ரத்தக் கறை படிந்த தரைகள். கழிவுப் பஞ்சுகள். அடிவயிற்றைப் புரட்டும் மருந்து வாசனை. துருப்பிடித்த ஜன்னல் கம்பிகள். வெளிச்சம் வராது பகலிலும் விளக்குகள் எரியும் நீண்ட அறைகள். அடி வயிற்றைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் கசியும் கண்களுடன் மார்பை அடைத்துக்கொண்டிருக்கும் கோழையை எக்கி உமிழ்ந்து விடப் பார்க்கும் வயசாளியின் நடுங்கும் குதிங்கால்கள். படிக் கட்டுகள் ஏறுமிடங்களில் ஒரு இரும்பு வாளியில் காலி குளுகோஸ் புட்டிகள் அடுக்கப்பட்டுள்ளன. சுவரில் ஒருபோதும் நோயாளிகள் ஏறிட்டுப் பார்க்காத, சிரிக்கும் மகாத்மா காந்தியின் படம். ஒரு பறவைகூட வராத புழுதி படிந்த மரங்கள். நோய்மையின் தாழ் வாரத்திற்குள் நடந்து போய்க்கொண்டிருந்தோம். மண்டையில் பெரிய கட்டு போட்ட ஒரு நாலு வயதுச் சிறுமி கையில் ஒரு குச்சி மிட்டாயை ஆசையாகச் சுவைத்துக்கொண்டிருந்தாள். ஆள் அற்ற மருத்துவர்களின் அறைகளில் சுற்றிக்கொண்டிருந்தன மின்சார விசிறிகள். மரப் பெஞ்சுகளில் உட்கார்ந்தபடி வலியை வெளிக்காட் டாமல் காத்துக்கொண்டிருக்கும் புறநோயாளிகள். அவர்கள் கண் களில் ஒளிந்துள்ள பயம். ராமதுரை எதையும் கவனிக்காதவன் போல இயல்பாக நடந்து மருத்துவமனையின் சூப்ரெண் டெண்ட்டைப் பார்ப்பதற்காகப் போய்க்கொண்டிருந்தான்.

அவரது அறை மூடிக் கிடந்தது. அருகில் இருந்தவரிடம் விசாரித் தான். ஒருவேளை ஸ்டாக் ரூமில் இருக்கக்கூடும் என்றான். ராம துரையும் நானும் ஸ்டாக் ரூமை நோக்கிப் போகும்போது வழியில் தென்பட்ட ஒரு மருத்துவரிடம் ராமதுரை எதையோ விசாரித்துக் கொண்டான். ஸ்டாக் ரூம் மாடியிலிருந்தது. அந்த சூப்ரெண் டெண்ட்டிற்கு ஐம்பது வயதிருக்கும். அவர் ஒரு தர்பூசணிப் பழத்தைக் கையில் வைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். ராம துரையைப் பார்த்ததும் சிரித்துக்கொண்டே தர்பூஸ் சாப்பிடு கிறானா என்று கேட்டான். ராமதுரை என்னை அறிமுகப்படுத்தி வைத்து, இவன் பெயர் அழகர், கொரியன் கம்பெனியில் வேலை செய்கிறான் என்றான். அந்த நபர் என் கையைப் பற்றிக் குலுக்கிக் கொண்டபடி வாயிலிருந்த தர்பூஸ் பழத்தின் விதைகளை வெளியே துப்பினார். பிறகு தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து ஒரு விசிட்டிங் கார்டை வெளியே எடுத்து நீட்டியபடியே, வீடு எங்கே சார் இருக்கு என்று கேட்டார். நான் விசிட்டிங் கார்டு எடுத்துக் கொண்டு வரவில்லை என்றேன். பிறகு ராமதுரையும் அவரும் ஒரு ஓரமாக நடந்து போய் தனியே ஏதோ பேசிக்கொண்டார்கள்.

அந்த அறையில் மூன்று பெண்கள் வேலை செய்து கொண்டிருப்பதை அப்போது தான் கவனித்தேன். அவர்கள் முன்னிருந்த கலிக்கோ பைண்டு செய்யப்பட்ட மிக அகலமான, பெரிய கணக்குப் பதிவேடு போன்ற ஒன்றை அதற்கு முன்பு நான் பார்த்ததேயில்லை. அந்த மூன்று பெண்களில் ஒருத்தி கர்ப்பிணி என்பது எழுந்து பாத்ரூமை நோக்கி நடந்து போகும்போது தெரிந்தது. நான் அங்கிருந்த மரபெஞ்சில் உட்கார்ந்தபடியே சுவரிலிருந்த கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அது ஓடாமல் நின்றுபோயிருந்தது. அதை நான் கவனிப்பதைக் கண்டது போல ஒரு பெண், அது நின்னு போச்சு சார். புதுசு வாங்கணும். இந்த அக்கவுண்ட் இயர்ல பண்ட் இல்லேனு சொல்லிட்டாங்க என்றாள். நான் தலையாட்டிக் கொண்டேன். பிறகு அந்தப் பெண் ஒரு டைப்ரைட்டிங் மிஷினைத் தூக்கி வந்து தன் மேஜை மீது வைத்துக்கொண்டு அடிக்கத் துவங்கினாள். வெளியே பேசிக்கொண்டிருந்த ராமதுரையையும் அவரையும் இப்போது காணவில்லை. எனக்கு என்ன செய்வது என்று தெரியாமல் நின்றுகொண்டேயிருந்தேன்.

திடீரென என் மனதில் விசித்திரமான எண்ணங்கள் பீறிடத் துவங்கின. சம்பத் இறந்த பிறகு அவன் மனைவி என்ன செய்வாள்? ஒருவேளை வேறு யாரையாவது திருமணம் செய்துகொள்வாளா? அல்லது ராமதுரைக்கும் அவளுக்கும் இப்போதே ஒரு ரகசியத் தொடர்பு இருக்கக் கூடுமோ? அவன் போன வாரம்கூட மருத்துவமனைக்கு வந்து போனதாகச் சொன்னானே. இன்றுகூட சரியாக அவளுக்கு சாப்பாடு வாங்கி வந்திருக்கிறானே. அப்படியானால் அவர்கள் இருவரும் சம்பத்தின் மரணத்தின் பிறகு சேர்ந்து வாழத் துவங்கிவிடுவார்களா? இல்லை சம்பத்தின் மனைவி வேறு யாரையாவது ரகசியமாகக் காதலித்துக்கொண்டிருப்பாளா? இந்த யோசனை தன் இஷ்டம் போல வளர்ந்து சென்றுகொண்டிருந்தது.

ஒரு நேரம் ராமதுரையின் மனைவியுடன் நானே கள்ளத் தொடர்பு வைத்துக்கொண்டிருப்பது போலவும் அது தெரிந்து என் மனைவி சண்டையிட்டுக் கூப்பாடு போடுவது போலவும்கூட தோணியது. டீ கொண்டுவரும் சிறுவன் ஒருவன் என் முன்னால் ஒரு பிளாஸ்டிக் கோப்பையில் டீயை வைத்துவிட்டு உங்களுக்கும் குடுக்கச் சொன்னாங்க சார் என்றபோது எனது அந்தக் கற்பனை கலைந்துபோனது. என்னை யாரும் கவனித்திருக்கக்கூடுமோ என்ற நினைப்புடன் அவசரமாக டீயை எடுத்து குடித்துக்கொண்டேன்.

ராமதுரையும் அந்த சூப்ரெண்ட்டெண்டும் திரும்பி வந்து சேர்ந்தார்கள். ராமதுரை கையில் ஒரு பேப்பரைச் சுருட்டி வைத்திருந்தான். வெளியே வந்த பிறகு, இனி பிரச்சினையில்லை, சம்பத்தை வீட்டிற்குக் கொண்டுபோய்விடலாம் என்றான். இருவரும் கீழே இறங்கி வந்து மருத்துவமனையின் பின்பக்க வழியாக நடந்து சம்பத் இருந்த வார்டிற்கு வந்து சேர்ந்தோம். சம்பத்தின்

மனைவி அவன் அரை மணி நேரத்தின் முன்பாக இறந்துபோய் விட்டதாகச் சொன்னாள். அவளிடம் யார் சொன்னார்கள் என்று ராமதுரை கேட்டான். ஒரு பயிற்சி மருத்துவர் வந்து சோதித்துப் பார்த்ததாகவும் அப்போதே சம்பத் இறந்துபோயிருந்ததாகவும் சொன்னாள்.

ராமதுரை தன் கையில் வைத்திருந்த பேப்பரைப் பார்த்துக் கொண்டே சற்றே பதட்டத்துடன், யாராவது வந்து இறந்து போனதைப் பற்றிய தகவல்களை எழுதிக் கொண்டு போனார்களா என்று கேட்டான். அவள் ஆமாம் என்று தலையாட்டினாள். ராமதுரை வேகமாக மருத்துவர்களின் அறையிருந்த பக்கம் நடந்து கொண்டிருந்தான்.

சம்பத்தின் மனைவி நான் உட்காருவதற்காக ஒரு பழைய இரும்பு நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டாள். நான் மறுத்தபடியே படுக்கை அருகிலே நின்று கொண்டேன். சம்பத்தின் மனைவி அதுவரை அழுதுகொண்டிருந்திருக்க வேண்டும். இப்போது மௌன மாக இறந்த உடலைப் பார்த்துக்கொண்டிருந்தாள். இரண்டு படுக்கைகள் தள்ளியிருந்த ஒரு நோயாளியின் தாய் அருகில் வந்து, உன் புருஷனாம்மா என்று விசாரித்துக்கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணின் கேள்விகளுக்கு சம்பத்தின் மனைவி விரிவாக பதில் சொல்லிக்கொண்டிருப்பது தெரிந்தது. நான் வெளியே போவதா அல்லது அங்கேயே உட்கார்ந்திருப்பதா என்று தெரியாமல் நின்றிருந்தேன்.

ராமதுரை திரும்பவும் வந்து, நிறைய சம்பிரதாயங்கள் இருப்ப தால் சம்பத்தின் உடலைக் கொண்டுபோவதற்கு இரவாகிவிடும் என்று சொல்லிவிட்டு சம்பத் மனைவியைத் தன்னோடு அழைத்துக் கொண்டு மருத்துவர்களின் அறைப் பக்கம் நடந்து சென்றான்.

இப்போது நானும் சம்பத்தும் மட்டுமே இருந்தோம். சம்பத் எப்போதும் போன்றே அதே இறுக்கமான முகத்துடன் ஆழ்ந்த உறக்கத்திலிருப்பவன் போல தோன்றினான். நான் அமைதியாக அவனைப் பார்த்துக்கொண்டிருந்தேன். இப்படி எத்தனையோ நாட்கள் சம்பத் விடுதியில் இருந்த எனது அறையில் உறங்கிக் கிடந்திருக்கிறான். அப்போது எழுப்பினால்கூட அவன் எளிதில் எழுந்துகொள்ள மாட்டான். அவனுக்குப் பகலில் உறங்குவது எப்போதுமே மிகப் பிடித்தமானது. இதற்காகவே காலை முதல் வகுப்பு துவங்கியதுமே மெதுவாக விடுதி சாவியை வாங்கிக் கொண்டு புறப்பட்டுப் போய்விடுவான். இப்போதும் அவனது முகத்தில் பகலுறக்கத்தின் சாடையே அப்பிக் கிடந்தது.

நான், சம்பத், ராமதுரை, மாரியப்பன் நால்வரும் அப்போது இளங்கலை தமிழ் இலக்கியம் படித்துக்கொண்டிருந்தோம். நால்வரில் சம்பத் மட்டும் விடுதியில் தங்கியிருக்காமல் தனது கிராமத்திலிருந்து இரண்டு டவுன் பஸ் மாறி வந்து படித்துக்கொண்டிருந்தான். தமிழ் இளங்கலை இலக்கிய வகுப்பில் ஒரு பெண்கூட சேரவேயில்லை. தமிழ்நாட்டில் எந்தப் பெண்ணிற்கும் தமிழ் கற்கும் ஆர்வமேயில்லை, நாம் மட்டும் எதற்காகத் தமிழ் கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒரு நாள் சம்பத் கூச்சலிட்டான்.

எங்கள் வகுப்பில் இருபத்தியெட்டு மாணவர்கள் இருந்தோம். அதில் இருவர் பார்வையற்றவர்கள். அவர்கள் இருவரும் ஏதோ ஒரு தன்னார்வ நிறுவனத்தின் உதவியால் கல்லூரியில் படிப்பதற்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். இருவரில் ஒருவருக்கு முப்பது வயதைக் கடந்திருக்கக்கூடும். அவர் சிறப்பு அனுமதி பெற்று வகுப்பில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர்களும்கூட வகுப்பில் பெண்கள் இல்லாத குறையைப் பற்றி நாங்கள் பேசும்போது, நீங்களாவது கல்லூரி வளாகத்தில் கடந்து செல்லும் பெண்களைப் பார்க்க முடியும், நாங்கள் பெண்களை வெறும் வாசனையாக மட்டுமே உணர்கிறோம் என்றார்கள்.

கல்லூரியில் கணிப்பொறியியல் வகுப்பிலும், விஞ்ஞானப் பிரிவிலும் மாணவிகள் நிறைய இருந்தார்கள். ஏன், ஆங்கில இலக்கிய வகுப்பில் இடம் கிடைக்காமல் போன பெண்கள் எத்தனையோ பேர் தாவரவியலோ, விலங்கியலோ எடுத்துக்கொண்டது கூட நடந்திருக்கிறது. ஆனால் தமிழ் இலக்கியம் கற்றுக்கொள்ள எந்தப் பெண்ணும் முன்வராமலிருந்தது ஆசிரியர்கள் வரை ஒட்டுமொத்த வேதனையாகவே இருந்தது.

கல்லூரி வளாகத்திலும் தமிழ் இலக்கிய வகுப்பிற்கு என்று விஞ்ஞானப் பரிசோதனை சாலையை ஒட்டிய வகுப்பறைகளைத் தந்திருந்தார்கள். பரிசோதனைசாலையில் உள்ள சோதனை எலிகளைப் போலத்தான் நாங்களும் கல்லூரியால் நடத்தப்பட்டோம். இவ்வளவு ஏன் கல்லூரியில் எல்லா துறைகளிலும் ஒன்றிரண்டு ஆசிரியைகளாவது இருந்தார்கள். தமிழ்த்துறையில் அந்த வாய்ப்புமில்லை. எங்களது துறைத்தலைவர் வெள்ளைவாரணரிடம் தமிழ் கற்றவர். அந்த ஒரு தகுதிக்காக அவரது அலுப்பூட்டும் வகுப்புகளை சகித்துக்கொள்ள முடியுமா என்ன? மரியாதைக்குரிய எங்கள் தமிழ் ஆசான்களில் சிலரே தங்களது பிள்ளைகளை விஞ்ஞான வகுப்புகளுக்கு கணிப்பொறியியல் கற்றுக்கொள்ளவும் அனுப்பியிருந்தார்கள்.

அதிலும் தொல்காப்பியம் எடுக்கும் சிவகடாட்சம் எங்கள் கல்லூரியிலே பயிலும் தனது மகள் சுமலதா வகுப்பறையில் வந்து தன்னை சந்திப்பதைக்கூட தவிர்த்து வைத்திருந்தார். அதையும் மீறி ஒன்றிரண்டு முறை சுமலதா ஆசிரியர்கள் அறைக்கு வந்து போவதை

நாங்கள் பேரதிசயத்துடன் பார்த்துக்கொண்டிருப்போம். அவள் ரத்தசோகை படிந்தவள் போல் எப்போதும் ஒரே ஊதா நிற சுடிதாரை அணிந்து கொண்டு வருவாள். அவளைப் பார்க்கும் போது இயல்பாகவே மாணவர்கள் மனதில் ஒரு அனுதாபமும் துக்கமும் ஏற்பட்டுவிடும். அவள் எல்லா நாட்களிலும் கையில் குடை வைத்திருப்பாள். என்றாவது பலமான காற்று வீசினால் குடையோடு சிவகடாட்சத்தின் மகளும் காற்றோடு போய்விடுவாள் என்று நாங்கள் பயந்து கொண்டிருந்தோம்.

பழுத்து உதிரும் இலைகளைப் போல எங்களது ஆசைகள் யாருமறியாமல் கல்லூரிக்குள் உதிர்ந்துகொண்டேயிருந்தன. கல்லூரியில் மொத்தம் இருநூற்றுப் பதினெட்டு பெண்கள் படிக்கிறார்கள். ஆனால் அதில் ஒருத்திகூட தமிழ்ப் பற்றில்லாமலும் தமிழ் கற்கும் மாணவனைக் காதலிக்க விருப்பமற்றுமிருக்கிறாள். உலகம் தன் அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதற்கு இதை விடவும் வேறு என்ன சாட்சியம் வேண்டியிருக்கிறது என்று நாங்கள் பல நாட்கள் மைதானத்தின் காய்ந்த புற்களுக்கு நடுவில் உட்கார்ந்து கொண்டு மாலை நேரங்களில் பேசிக் கொண்டிருப்போம். அந்த வயதில் இலவம் பஞ்சு காற்றில் மிதந்து போவது போல பெண்கள் எங்களைச் சுற்றிலும் கடந்து போய்க்கொண்டிருந்தார்கள். ஆனால் எந்தப் பெண்ணும் கைவசப்படவேயில்லை.

சம்பத் மற்றவர்களைப் போலின்றி தமிழ் இலக்கியம் படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு வந்து சேர்ந்திருந்தான். நான் எனது வீடு ஒரு திராவிட இயக்கத்தைச் சார்ந்த குடும்பம் என்பதால் வேறு வழியின்றி தமிழ் இலக்கியம் கற்றுக்கொள்வதற்கு அனுப்பப்பட்டிருந்தேன். மாரியப்பனும், ராமதுரையும் வேறு பாடங்களில் இடம் கிடைக்காமல் தமிழ் வகுப்பிற்கு அனுப்பப்பட்டிருந்தார்கள்.

தமிழ் கற்றுக்கொள்ளும் மாணவர்கள் ஆசிரியர்களை அய்யா என்று அழைக்க வேண்டும் என்ற கட்டாயம் அப்போது கல்லூரியில் இருந்தது. அதனால் பிற துறையைச் சேர்ந்த மாணவர்களும், ஏன் ஒன்றிரண்டு மாணவிகளும்கூட எங்களைக் கண்டதும் அய்யா என்று சப்தமாக அழைப்பார்கள். நாங்கள் தலை கவிழ்ந்தபடியே தமிழ் படிப்பது என்பது தண்டனைக்குரிய குற்றங்களில் ஒன்று என்பது போல அவர்களைக் கடந்து போவோம். எங்களது இரண்டாம் வருடத்தின்போது காரைக்குடியிலிருந்து 'ஒரு பெண் தன் அப்பா மாறுதல் ஆனதின் விளைவாக எங்கள் வகுப்பறைக்கு வந்து சேர்ந்தாள். அவளது பெயர் யாழினி. அவளது அப்பா மயில்வாகனன் நெடுஞ்சாலைத் துறையில் பொறியாளராக இருந்தார். முதல் வருடத்தின்போது இருந்த வெறுமை இரண்டாம் வருடத்தில் அவளால் தீர்ந்துபோகத் துவங்கியது.

அவள் பிரமாதமான அழகியில்லை. சராசரியான பெண்களை விடவும் சற்றே உயரமான பெண். மஞ்சள் நிற உடைகளில்

அவளுக்குத் தனியான விருப்பமிருந்தது போல. நாலைந்து விதமான மஞ்சள் சுடிதார் வைத்திருந்தாள். அவளுக்குத் தலைமயிர் மிகக் குறைவாகயிருந்தது. அது வெளியே தெரிந்துவிடாமலிருக்க நிறைய பூக்களைத் தலையில் வைத்துக்கொண்டு வருவாள். அவளுக்கு சினிமா பாடல்களில் ரொம்பவும் விருப்பமிருந்தது. தனது பொய்த் தொண்டையில் ஜானகியின் பாடல்களை அவள் முணுமுணுத்துக் கொண்டிருப்பாள். அதற்கும் நிறைய ரசிகர்கள் உருவாகினார்கள் என்பது வேறு விஷயம். ஆனால் மற்ற பெண்களைப் போல அவள் திருநீறு இட்டுக் கொள்வதோ கோவிலுக்குச் செல்வதோ கிடையாது என்பதை அவள் வகுப்பில் சொல்லியபோதுதான் நாங்கள் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தோம். அவளது அப்பா மயில்வாகனன் கடவுள் மறுப்புக் கொள்கையில் தீவிர நாட்டம் உள்ளவர் என்றும் சிறுவயதிலிருந்து அவர்கள் சாமி கும்பிடுவதை விட்டுவிட்டதாகவும் சொன்னாள். இப்படி கொள்கைப் பிடிப்போடு உள்ள ஒரு பெண்ணைக் காதலிப்பது பெருமைக்குரிய விஷயம் என்று மாலையில் சில மாணவர்கள் பேசிக்கொண்டிருப்பதை நாங்கள் காதுபடக் கேட்டோம்.

யாழினியின் வருகையால் எங்களது தமிழ்த் துறையின் வெறுமையைக் கலைக்க முடியவில்லை. அது ஆண்கள் மட்டுமே அடைக்கப்பட்ட சிறைச்சாலையைப் போல நெடுங்காலமாக தனிமையும் தாபத்தின் கறையும் படிந்ததாகயிருந்தது. பேரழகிகளில் பத்து பேராவது அதைக் கலைப்பதற்கு முயற்சித்தால் ஒன்றிரண்டு வருடங்களில் அந்தத் தனிமை பாழ்பட்டுப் போகும் என்று ஒரு நாள் சம்பத் சொன்னான். மாரியப்பனுக்கு அதைக் கேட்டதும் மிக வருத்தமாகயிருந்தது. மாரியப்பன் அன்றிரவு மெஸ்ஸில் சாப்பிட்டுவிட்டுத் திரும்பும்போது யாழினி ஒரு மெழுகுவர்த்தி இருட்டில் தனியே ஒளிர்ந்துகொண்டிருப்பது போல நம் வகுப்பறையை ஒளிவிடச் செய்து கொண்டிருக்கிறாள். அந்த வெளிச்சத்தில் கரைந்துபோக நாம் முன்வரவேயில்லை என்றான்.

அவனது கவித்துவமான வர்ணனையை நான் ஆச்சரியத்துடன் பாராட்டியபடி மாரியப்பன் கவிதைகள் எழுதிக்கொண்டிருக் கிறானா என்று கேட்டேன். அவன் இரண்டு மாதங்களாக வெண்பா பயிற்சி எடுத்து இப்போது வெண்பா நன்றாக எழுதக் கற்றுக் கொண்டுவிட்டதாகவும், தன் வாழ்நாளில் கலித்தொகையின் கடைதிறப்புக்கு நிகரான நூறு பாடல்கள் எழுத முடிந்தால் அதுவே போதுமானது என்று ஆசைப்படுவதாகவும் சொன்னான். பிறகு தணிவான குரலில் யாழினியின் அழகை ரசித்து பத்து வெண்பா எழுதியுள்ளதாகவும், அறைக்குச் சென்றதும் எடுத்து வருவதாகவும் சொன்னான்.

ஆனால் யாழினி ஒரு நாள் சம்பத்தைக் காதலிப்பதாக நாங்கள் அறிந்தோம். அதைப் பற்றி சம்பத் எதுவும் சொல்லவில்லை.

.ஆனால் அவனும் யாழினியும் ஒன்றாக மாநில அளவில் நடந்த பேச்சுப் போட்டிக்குப் போய் பரிசு வாங்கிக்கொண்டு வந்த நாளில் இருந்து அந்தக் காதல் துவங்கியிருக்கக்கூடும் என்ற சந்தேகமிருந்தது. ஆனால் சம்பத்திடம் அதைப் பற்றி விசாரித்தபோது அவன் யாழினியிடம் தான் இருநூறு ரூபாய் கடன் வாங்கியிருப்பதாகவும், அவளோடு பேருந்தில் வந்தபோது அவள் வழி முழுவதும் ரீடர்ஸ் டைஜஸ்ட் படித்துக்கொண்டு வந்ததாகவும் சொல்லி மிகவும் வருத்தப்பட்டான். ஆனால் உண்மையில் அப்படி நடந்திருக்க முடியாது என்று நாங்கள் அனைவரும் நம்பினோம்.

இதை நிரூபிப்பது போன்று ஒரு நாள் யாழினியின் அப்பா மயில்வாகனனும் சம்பத்தும் ஒன்றாக பைக்கில் மேம்பாலத்தில் போய்க்கொண்டிருப்பதை மாரியப்பன் பார்த்திருக்கிறான். மறுநாள் அதைப் பற்றி சம்பத்திடம் கேட்டுவிட வேண்டியதுதான் என்று நாங்கள் அறையில் காத்திருந்தோம். சம்பத் அறைக்கு வந்ததும் பகத் சிங் எழுதிய நான் ஏன் நாத்திகன் ஆனேன் என்ற புத்தகத்தைப் படிக்கத் துவங்கியிருந்தான். அவனை மயில்வாகனனுடன் பார்த்த தாக மாரியப்பன் நேரிடையாகவே கேட்டதும் இருவரும் சாவடித் தெருவில் நடந்த ஒரு கடவுள் மறுப்பு கூட்டத்தில் பேசுவதற்காக ஒன்றாகப் போயிருந்ததாகச் சொன்னான்.

நான் சம்பத்திடம் அவனுக்கும் கடவுள் மீது நம்பிக்கை யில்லையா என்று கேட்டேன். சம்பத் கடவுளை நம்புகின்றவன் காட்டுமிராண்டி என்றான். மாரியப்பனுக்கு அந்தப் பதில் போது மானதாகயில்லை. கடவுள் மறுப்பு என்பது தனிநபர் சம்பந்தபட்ட விஷயம், அதை ஏன் ஒரு சமூகப் பிரச்சினையாக மாற்ற முயற்சிக் கிறாய் என்று ராமதுரை கேட்டதும் சம்பத்திற்குக் கோபம் பொத் துக்கொண்டு வந்தது. கடவுள் தனிநபர் சம்பந்தப்பட்ட விஷய மில்லை. அது ஒரு சமூகம் உண்டாக்கிய சதி. கடவுளைக் கும்பிட வேண்டும் என்று நீயாகவா முடிவு செய்தாய்? இல்லையே. சாமி கும்பிடாவிட்டால் நம் பாபம் தீராது என்று யாரோ சொல்லித் தந்ததால் வந்த பழக்கம்தானே சாமி கும்பிடுவது. ஆறு முகங்கள், பத்து கைகள் உள்ள எந்தக் கடவுளுக்கும் இரண்டு காலுக்கு மேல் இருப்பதில்லையே, நீ எங்காவது மூன்று கால் உள்ள கடவுள் எதையாவது கண்டிருக்கிறாயா என்று கேட்டான். ராமதுரை இது விதண்டாவாதம் என்று சொல்லிவிட்டு பேச்சை நிறுத்திக் கொண்டான்.

மாரியப்பன் பேச்சை முடிக்காமல், சாவடித் தெருவில் நடக்கும் கூட்டத்திற்கு யார் வந்திருந்தார்கள் என்று கேட்டுக்கொண்டிருந் தான். சம்பத் திரும்பவும் உற்சாகமானவன் போல அந்தக் கூட்டம் தமிழ்ஞாயிறு வீட்டில் நடந்ததாகவும், அவர்கள் வீட்டில் யாவரும் கறுப்புச் சட்டை அணிந்துகொண்டிருப்பதைக் காணும் போது பெருமையாக இருக்கிறது என்றும், அவர்கள் வீட்டு மாடியில்

நூலகம் நடத்துவதாகவும் சொன்னான். ராமதுரை தயக்கத்துடன் யாழினியும் வந்திருந்தாளா என்று கேட்டான். சம்பத் சிரித்துக் கொண்டே, நாங்கள் இருவரும் மாவட்ட அளவில் இளைஞர்களுக் கான விழிப்புணர்வுப் பிரச்சாரத்திற்குப் பொறுப்பு கொடுக்கப்பட்டி ருக்கிறோம், யாழினி ஒரு சிறந்த தோழி என்றான்.

அதன் முன்பு வரை நாங்கள் ஒரு பெண்ணைத் தோழி என்று எவரும் அழைத்து கேட்டதேயில்லை. சம்பத்தும்கூட அன்றுதான் அந்த வார்த்தையை முதன் முறையாகப் பிரயோகிக்கிறான் என்பது தெரிந்தது. தான் அதைச் சரியான இடத்தில்தான் பிரயோகித் தோம் என்பதில் அவனுக்கு மிகச் சந்தோஷமாக இருந்திருக்கக் கூடும். சம்பத் தன் கட்டிலுக்குக் கீழிருந்து நாலைந்து புத்தகங்களை எடுத்து நீட்டினான். இந்தப் புத்தகங்கள் யாவும் நாத்திகப் பிரச்சாரப் புத்தகங்கள், ரெண்டு நாட்களுக்குள் படித்து முடிக்க வேண்டும். ஞாயிற்றுக்கிழமையிலிருந்து கிராமம் கிராமமாகப் பிரச்சாரம் புறப்படப்போகிறோம் என்றான். சம்பத் இதையெல்லாம் விளை யாட்டிற்குச் சொல்கிறான் என்றுதான் அப்போது நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் பின்னாட்களில் அவன் வகுப்பிற்கு வராமலும் பகலில் தூங்காமலும் அந்தப் புத்தகங்களைத் தீவிர மாகப் படித்துக்கொண்டிருந்தான்.

ஒரு நாளின் மதியத்தில் அவன் கறுப்புச் சட்டையும் வேஷ்டியும் அணிந்துகொண்டு வகுப்பறைக்கு வந்து சேர்ந்தான். அவனைப் பார்த்து மற்ற மாணவர்கள் சிரித்தார்கள். அவன் மிகக் கம்பீரமாக நடந்து வந்து தன் இருக்கையில் உட்கார்ந்துகொண்டான். அன்று வகுப்பு எடுக்க வந்த பேராசிரியர் அகரம் கிருஷ்ணமாச்சாரி அவனி டம் யாராவது உறவினர்கள் இறந்துபோய்விட்டார்களா என்று கேட்டார். அவன் இல்லை என்றதும் பிறகு எதற்காகக் கறுப்பு உடை அணிந்து வந்திருக்கிறான் என்று திரும்பவும் கேட்டார். உடை என்பது ஒரு அடையாளம், இது எதிர்ப்பின் நிறம் என்று சம்பத் சொன்னான். கிருஷ்ணமாச்சாரி சற்றே கடுமையான குரலில் உன் எதிர்ப்பை என்னிடம் காட்ட வேண்டாம். என் கண்ணில் படாமல் பின்வரிசையில் சென்று உட்கார் என்றார். சம்பத் அதை மறுத்து விட்டதோடு அவருக்கு வகுப்பு எடுக்க விருப்பமில்லாவிட்டால் வெளியேறிப் போகலாம் என்றான். அவர் மௌனமாகத் தன் கையில் இருந்த சீவகசிந்தாமணியை நடத்தத் துவங்கினார்.

மாரியப்பன் யாழினியைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். அவளது முகத்தில் மிகுந்த சந்தோஷம் வழிந்தோடிக்கொண் டிருந்தது. கிருஷ்ணமாச்சாரி இருபது நிமிடங்கள் தனக்குத் தானே பேசிக்கொள்வது போன்று வகுப்பு எடுத்துவிட்டு அவசரமாகக் கிளம்பி வெளியே போனார். உடனே யாழினியும் சம்பத்தும் வகுப்பை விட்டு வெளியே நடந்து போனார்கள். அன்று மாலை நாங்கள் அவர்கள் இருவரையும் ஒன்றாகப் பேருந்தில் பார்த்தோம்.

சம்பத் அதன் பிறகு நான்கு நாட்கள் வகுப்பிற்கு வரவில்லை. யாழினியும் வரவில்லை. திரும்ப வந்தபோது சம்பத் தான் சென்னையில் நடைபெற்ற ஒரு சிந்தனையாளர் முகாமிற்குச் சென்று வந்ததாகவும், அந்த முகாம் அவனது அறிவைக் கூர்தீட்டியுள்ளதாகவும் சொன்னான்.

முகாம் எதைப் பற்றியது என்று நாங்கள் கேட்டுக்கொள்ளவில்லை. மாறாக அவன் தான் புதிதாக வாங்கிக்கொண்டு வந்திருந்த ஒரு லெதர் பையிலிருந்து நிறைய புத்தகங்களை வெளியே எடுத்து வைத்தான். அந்தப் புத்தகங்கள் யாவையும் கிராமங்களில் கொண்டு போய் விற்று மாநில மையத்திற்குப் பணம் கட்ட வேண்டும் என்றும், புதிய இளைஞர் அமைப்புகளைக் கட்டுவதற்குத் தான் முன்நிற்கப் போவதாகவும் சொன்னான். எங்களில் எவருக்கும் அதுபோன்ற புத்தகங்களை வாங்கிக்கொள்ள விருப்பமில்லை. ஆனால் அதைப் பற்றி எதுவும் கேட்டுக்கொள்ளாமல் சம்பத் ஆளுக்கு ஒரு செட் புத்தங்கள் கொடுத்து எண்பது ரூபாய் பணம் வேண்டும் என்று பெற்றுக்கொண்டான்.

சம்பத் அப்போதிலிருந்து வேஷ்டி கட்டிக்கொண்டுதான் வகுப்பிற்கு வரத் துவங்கினான். அநேகமாக ஆசிரியர்களில் சிலரிடம்கூட அவன் புத்தகங்களை விற்றிருக்கக்கூடும் என்று தோணியது. அதுவும் இயற்பியல் துறையில் வேலை செய்யும் பேராசிரியர் குமாரராமன் அவனுக்குப் புதிய நண்பராகியிருந்தார். அவனும் குமார ராமனும் ஒன்றாக டீ அருந்தவும் பைக்கில் போவதையும் நாங்கள் பார்த்துக் கொண்டேயிருந்தோம், காற்றில் அடித்துச் செல்லப்படும் இறகைப் போல சம்பத் ஏதேதோ திசைகளில் சுற்றியலைந்துகொண்டிருந்தான்.

அந்த ஆண்டு கல்லூரியின் தமிழ் இலக்கிய விழாவின் சிறப்புப் பேச்சாளராகப் பிள்ளையார் சிலை உடைப்புப் போராட்டத்தில் கலந்துகொண்ட பவணந்தியை அழைத்துப் பேச வைக்க சம்பத் விரும்பினான். துறை முதல்வர் அதற்கு அனுமதி தர மறுத்ததோடு இதுபோன்ற வம்புகளை அவன் உருவாக்குவதாக இருந்தால் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். வேறு யாரைப் பேச்சாளராகக் கூப்பிட்டாலும் விழா நடக்காது என்பதோடு துறை முதல்வரின் அராஜகப் போக்கைக் கண்டித்து அவனும் யாழினியும் நாளை வகுப்பறையின் வெளியே மாணவர்களை ஒன்றுதிரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிவித்தான். அவனது போராட்டத்தின் பின்புலத்தில் குமாரராமனும் இன்னுமொரு பொருளாதாரப் பேராசிரியரும் இருந்தார்கள் என்பதை அன்றிரவு நாங்கள் தெரிந்துகொண்டோம்.

ஆர்ப்பாட்டம் நடப்பதாக இருந்த நாளின் காலையில் சம்பத்தோடு நாங்கள் ஆறு பேர் எட்டு மணிக்கு வகுப்பறைக்கு வந்து சேர்ந்திருந்தோம். ஆனால் வகுப்பறை திறக்கப்படவில்லை

என்பதோடு யாழினியும் சம்பத்தும் ஒரு வார காலம் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக முதல்வர் கையொப்பத்துடன் அறிவிப்பு வெளியாகி இருந்தது. யாழினி அன்றைக்குக் கல்லூரிக்கு வரவேயில்லை. சம்பத்தின் ஆர்ப்பாட்டத்திற்கும் மாணவர்கள் எவரும் முன்வரவேயில்லை. வழக்கம் போல அன்றும் வகுப்புகள் நடந்தன. சம்பத்தை மட்டும் முதல்வர் அறையில் அழைத்து விசாரணை நடந்துகொண்டிருந்தது.

நானும் ராமதுரையும் முதல் வகுப்புக்குப் போக முடியாமல் இரண்டாவது வகுப்பில் சென்று கலந்துகொண்டுவிட்டோம். இரண்டாம் வகுப்பு எடுக்க வந்த பேராசிரியர் தியாகராஜன், யாழினியும் சம்பத்தும் காதல் பண்ணுவதாகவும் அவளிடம் நல்ல பெயர் வாங்குவதற்காக சம்பத் முயன்று இன்று மாட்டிக்கொண்டு விட்டதாகவும் சொல்லிச்சிரித்தார். மாணவர்கள் எவரும் இதைக் கேட்டு சிரிக்கவேயில்லை. தியாகராஜன் என்னையும் மாரியப்பனையும் எழுந்து நிற்கச் சொல்லி, உங்களுக்கும் கடவுள் மீது நம்பிக்கையில்லையா என்று கேட்டார். நான் பதில் சொல்லவில்லை. மாரியப்பன் தான் வருடம்தோறும் சபரிமலைக்கு மாலை போட்டுப் போவதாகச் சொன்னான். இதற்கு வகுப்பில் பலத்த சிரிப்பொலி எழுந்தது. அன்றைய அவரது வகுப்பு முழுவதும் அறிவுரையாகவேயிருந்தது.

மாலையில் நானும் சம்பத்தும் யாழினியின் வீட்டிற்குச் சென்றிருந்தோம். அவளது அப்பா நாலைந்து பேருடன் பேசிக்கொண்டிருந்தார். எங்களைக் கண்டதும் உள்ளிருந்து யாழினியைக் கூப்பிட்டார். அவள் தனது அம்மாவிற்குத் திடீரென ஒற்றைத் தலைவலி அதிகமாகிவிட்டதால் தன்னால் வகுப்பிற்கு வர இயலவில்லை. நமக்காகக் குரல் கொடுப்பதற்கு தமிழகத்தில் பத்து லட்சம் அறிவுஜீவிகள் இருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் இது நாளை எதிரொலிக்கும் என்றாள். அறிவுஜீவி என்ற சொல்லை நான் அப்போதுதான் முதன்முதலாகக் கேட்டேன். அந்தச் சொல் மிக வசீகரமாகவும் எங்காவது உடனே பயன்படுத்த வேண்டும் என்பது போன்ற ஆசையைத் தூண்டுவதாகவுமிருந்தது.

சம்பத் நடந்த விஷயங்களை ஒரு ரிப்போர்ட்டாக எழுதி மாநிலத் தலைமைக்கு அனுப்ப வேண்டும் என்று காகிதமும் பேடும் கொண்டுவந்து தந்தாள் யாழினி. சம்பத் எழுதிக்கொண்டிருந்த போது நான் படிப்பதற்காக அவள் இப்போது படித்து முடித்ததாக ஜூலியஸ் பூசிக்கின் தூக்குமேடைக் குறிப்புகள் என்ற புத்தகத்தை எடுத்து வந்து தந்தாள். அதுபோன்ற புத்தகம் எதையும் நான் கண்ணால் பார்த்தது கூட கிடையாது. வழவழப்பான காகிதங்களைப் புரட்டிக்கொண்டேயிருந்தேன். என் வீட்டிலோ, தெரிந்த வகையிலோ பெண்கள் எவரும் ஜூலியஸ் பூசிக் படித்து நான் பார்த்ததேயில்லை.

எங்கள் வீடு ஒரு அரசியல் குடும்பமாக இருந்தபோதும் பெண்களில் எவரும் பேப்பர் படித்துகூட நான் கண்டதில்லை. எனது சித்திகளில் ஒருத்தி மட்டும் ஜெயகாந்தனின் ரசிகை. அவள் ஆங்கில இலக்கியம் படித்தவள் என்பது ஒரு காரணமாக இருக்கக்கூடும். அவளும் திருமணமாகி சங்கரன்கோவிலுக்குப்போன பிறகு படிப்பதை நிறுத்திக்கொண்டுவிட்டாள். ஒரு முறை அவள் வீட்டிற்குப் போயிருந்தபோது டி.ஹெச். லாரன்சின் லேடி சாட்டர்லீவ்ஸ் லவ்வர் என்ற நாவல் எங்காவது கிடைத்தால் வாங்கிக் கொண்டு வா... சித்தப்பாவுக்குத் தெரியக் கூடாது என்றாள். ஊர் வந்த பிறகு புத்தகத்தின் பெயர் மறந்துபோய்விட்டதால் அதைத் தேடக் கூட இல்லை. சம்பத் தான் எழுதி முடித்த அறிக்கையை யாழினிக்கு வாசித்துக்காட்டிக்கொண்டிருந்தான். அவள் சிறு சிறு திருத்தங்கள் சொன்னாள். பிறகு அதை அப்பாவிடம் படித்துக் காட்டும்படி சொல்லிவிட்டு அங்கிருந்த ஈஸி சேரில் படுத்துக்கொண்டு சக்கரவர்த்தி பீட்டர் என்ற அலெக்சி தால்ஸ்தாயின் ஆயிரம் பக்க நாவலைப் படிக்கத் துவங்கியிருந்தாள்.

மயில்வாகனனைச் சந்திக்க வந்தவர்கள் கிளம்பிப் போயிருந்தார்கள். அவர் கல்லூரியின் மீது வழக்கு தொடரப்போவதாகவும் தன் மகளைத் தற்காலிக நீக்கம் செய்தது மாபெரும் தவறு என்றும் பேசிக்கொண்டேயிருந்தார். சம்பத் பதிலே பேசவில்லை. பிறகு அவர் சம்பத் வாங்கிச் சென்ற புத்தகங்கள் யாவும் விற்றுத் தீர்ந்திருந்தால் இன்னும் சில புதிய புத்தகங்கள் வந்திருப்பதாகவும் அதை விற்பனைக்கு எடுத்துச் செல்லலாம் என்றார். சம்பத் தன்னிடம் இன்னும் இருபது புத்தகங்கள் பாக்கியிருப்பதாகச் சொன்னான். அவர் அதைப் பற்றி கவலையின்றி ஒரு கட்டுப் புத்தகங்களைக் கொண்டு வந்து கொடுத்து, பொது இடங்களில்கூட நமது விற்பனையை மேற்கொள்ளலாம். யாழினிக்கு உடல்நலமடைந்ததும் நீங்கள் இருவரும் கோவில் வாசலில் ஒரு நாள் நின்று விற்பனை செய்து பாருங்கள். அதுதான் நாம் நடத்தும் மாபெரும் எதிர்ப்புப் போராட்டமாகயிருக்கும் என்றார். பிறகு ஆறுதல் சொல்பவரைப் போல, நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம். தினமும் காலையில் தமிழ்ஞாயிறு படிப்பகத்திற்கு வந்துவிடுங்கள். அங்கே உள்ள நூல்களுக்கு ஒரு நூற்பட்டியல் தயாரிக்கும் வேலையை ஒரு வாரத்தில் முடித்துவிடலாம் என்று சொன்னார்..

நானும் சம்பத்தும் அன்றிரவு அவரது வீட்டில் தோசை சாப்பிட்டோம். ஆளுக்கு இரண்டு தோசை கொடுத்தார்கள். சம்பத் இரண்டைச் சாப்பிட்டுவிட்டு காத்துக் கொண்டேயிருந்தான். அதற்குள் ஒரு சிறிய டம்ளரில் டீ கொண்டுவந்து வைத்துவிட்டு யாழினியின் அம்மா உள்ளே போய்விட்டாள். சம்பத் டீயை ஒரே மடக்கில் குடித்துவிட்டு வெளியே வந்தான். அன்றிரவு நானும் சம்பத்தும் இரண்டாம் ஆட்டம் சினிமா பார்த்தோம். படம் முடிந்து வெளியே வந்த பிறகு சம்பத் அதிகக் குழப்பமானவன் போல இருந்தான்.

அவனது கிராமத்திற்குச் செல்லும் பேருந்து அதிகாலை ஐந்து மணிக்குத்தானிருக்கிறது என்று சொல்லிவிட்டு என்னை விடுதிக்குப் புறப்படச் சொன்னான். விடுதியின் பின்வாசலைக்கூட இந்நேரம் மூடியிருப்பார்கள் என்று சொன்னேன்.

மீளாத உறக்கத்தில் மிதந்து கொண்டிருந்த நகரில் சுற்றுவது என்று இருவரும் தீர்மானித்தோம். தெருவில் பசுக்கள் தன் இஷ்டம் போல அலைந்துகொண்டிருந்தன. பழக்கூடைகள் ஏற்றி வந்த லாரிகள் வரிசையாக நின்றுகொண்டிருக்க ஒன்றிரண்டு, கூலிகள் பழக்கூடைகளை இறக்கி வைத்துக்கொண்டிருந்தார்கள். மாதாகோவில் வாசலில் ஒரே வேஷ்டியைப் போர்த்திக்கொண்டு அதற்குள் மூன்று பேர் சுருண்டு படுத்துக் கிடந்தார்கள். சாலைகள் அழுக்கேறியிருந்தன. நகரமே நூற்றாண்டுப் பழமையேறியதுதானே. டீக்கடைகள் கூட சாத்தப்பட்டிருந்தன. தூக்கத்தின் நாவுகள் யாவற்றையும் சுருட்டி விழுங்கியிருந்தது. மாடர்ன் லாட்ஜில் மட்டும் ஏதாவது ஒரு அறையில் விளக்கு எரிவது தெரிந்துகொண்டிருந்தது. சம்பத் சாலையில் வேகமாக நடந்து கொண்டிருந்தான். பாதி அறுத்துப் போட்டிருந்த வாழை மரம் ஒன்று சாலையின் குறுக்காகக் கிடந்தது. அதிலிருந்து ஒரு பட்டையை உரித்து தரையில் அடித்தபடியே நடந்தான் சம்பத். சந்துசந்தாக இருவரும் சுற்றியலைந்தோம்.

மெல்லிய குளிரும் ஈரமும் படர்ந்த தரைகளும், இரும்பு ஷட்டர்களும், மூடிய ஜன்னல்களும் கடந்து கிளாஸ்காரத் தெருவிற்குள் வந்தபோது சிமெண்ட் மூடைகளை இறக்கிக்கொண்டிருந்தார்கள். சிமெண்ட் தூசி தெரு முழுவதும் உயர்ந்து எழுந்து கொண்டிருந்தது. சம்பத் ஒரு சந்து வழியாகக் கடந்து தரைப்பாலமிருக்கும் பிரதான சாலைக்கு வந்து சேர்ந்தான். போக்குவரத்து விளக்குகள் அணைந்திருந்தன. அந்த சாலையில் ஒரேயொரு கழுதை இருளுக்குள் நின்றுகொண்டிருந்தது. நாலு சாலைகள் பிரியும் பிரதான இடத்தில் நின்றபடியே சர்வ சுதந்திரமாக சம்பத் மூத்திரம் பெய்தான். அது அவனது கால்களில் தெறித்தபடியே வழிந்து பின்னால் ஓடிக்கொண்டிருந்தது. எங்கெங்கோ சுற்றியலைந்துவிட்டு மூடிக் கிடந்த இரும்புக் கடை ஒன்றின் படிக்கட்டில் வந்து படுத்துக்கொண்டான் சம்பத். நான் புத்தகக் கட்டுடன் எதிர்க்கடையில் உட்கார்ந்துகொண்டேன். கூர்க்கா ஒருவன் தலை கவிழ்ந்தபடியே சைக்கிளில் சப்தமில்லாமல் தெருவைக் கடந்து போய்க்கொண்டிருந்தான்.

திடீரென சம்பத் எழுந்துகொண்டு, என்னிடம் எவ்வளவு பணமிருக்கிறது என்று கேட்டான். இருநூறு ரூபாய் இருக்கும் என்றேன். என் தோளில் கையைப் போட்டுக் கொண்டு பேருந்து நிலையத்தை நோக்கி விடுவிடுவென நடந்து போகத் துவங்கினான். அவன் என்னை எங்கே கூட்டிக்கொண்டு போகிறான் என புரியாமல் கூடவே நடந்தேன். பேருந்து நிலையத்தில் ஆட்கள் உறங்கி வழிந்துகொண்டிருந்தார்கள். டீக்கடைக்காரன் கொதிக்கும் பாலை

உயரத்தூக்கி ஆற்றிக்கொண்டிருந்தான். கன்யாகுமரி செல்லும் திருவள்ளுவர் பேருந்து ஒன்று வந்து நின்றது. சம்பத் என்னை அதில் ஏறச் சொல்லிவிட்டுத் தானும் ஏறிக்கொண்டான். பஸ்ஸில் பத்து பேர் கூடயில்லை. ஜன்னல் ஓரமாக ஒரு சீட்டில் உட்கார்ந்து கொண்டு சம்பத் கண்ணை மூடிக்கொண்டுவிட்டான். எங்கே போவது என்று கேட்டேன். அவன் தனக்கு நன்றாக உறங்க வேண்டும் என்றும் கன்யாகுமரிக்கு டிக்கெட் எடுத்துவிடும்படியாகவும் சொன்னான். எனக்கும் உறக்கம் கண்களை அழுத்திக் கொண்டிருந்தது.

கன்யாகுமரிக்கு டிக்கெட் வாங்கிக்கொண்டுவிட்டு பணத்தை நான் பையில் வைப்பதற்குள் சம்பத் உறங்கியிருந்தான். பேருந்து நகரைக் கடந்து இரவினுள் சென்று கொண்டிருந்தது. நான் எழுந்து ஆள் இல்லாத இன்னொரு சீட்டில் ஜன்னல் பக்கமாக உட்கார்ந்து கொண்டேன். பேருந்தின் வேகம் அதிகமாகத் துவங்கியது. கலங்கிய வெளிச்சத்தில் தொலைதூரத்திற்கு அப்பால் ஏதோ பெயர் தெரியாத கிராமங்களின் மீது வெளிச்சம் மினுங்கிக்கொண்டிருந்தது. புளிய மரங்கள் பின்னோக்கி ஓடிக் கொண்டிருந்தன. மனிதச் சுவடேயில்லாமல் போய்விட்டது போன்று எங்கும் வெட்டவெளி மட்டுமே விரிந்திருந்தது. நான் எப்போது தூங்கினேன் என்று எனக்கே தெரியவில்லை.

சம்பத் என்னை உலுக்கி எழுப்பிவிட்டான். நான் கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தபோது காலை வெயில் கள்ளென அடித்தது. பேருந்தில் எவருமேயில்லை. நாங்கள் கீழே இறங்கி நின்றபோது சம்பத் சிரித்துக்கொண்டே நல்ல தூக்கம் என்றான். இருவரும் பேருந்து நிலையத்தை விட்டு வெளியே வந்தபோது வெயில் மிகுந்த பிரகாசமாகயிருந்தது. கடல் எந்தப் பக்கமிருக்கிறது என்று கூட எங்களுக்குத் தெரியவில்லை. சம்பத் யாரிடமோ அதைப் பற்றி விசாரித்தான். பிறகு நாங்கள் இருவரும் கடற்கரைக்குப் போனபோது வெயில் முற்றியிருந்தது. காகங்கள் மணலில் கிடந்த செத்த மீன்களைக் கொத்திக்கொண்டு அலைந்தன. கழிப்பறை எங்கேயிருக்கிறது என்று இருவரும் தேடிக்கொண்டிருந்ததில் கடலின் நீலமோ அழகோ எங்களால் ரசிக்க முடியவில்லை. கழிப்பறைக்குள் கால் வைக்க முடியாதபடி அசிங்கமாகயிருந்தது. சம்பத் அதற்குள்ளாகவே தனது காலைக்கடன்களை முடித்துவிட்டு குளிப்பதற்குப் பதிலாக முகத்தில் தண்ணீரை வாரி அடித்துக்கொண்டுவிட்டான். கன்யாகுமரியில் நாங்கள் பார்ப்பதற்கு எதுவுமேயில்லை என்றே தோணியது.

சம்பத் என்னிடமிருந்த புத்தகக் கட்டை வாங்கிக்கொண்டு அதிலிருந்து பத்துப் புத்தகங்களை கையில் எடுத்துக்கொண்டான். என்னையும் அது போலப் பத்துப் புத்தகங்களை எடுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு புத்தகங்களைக் கட்டியிருந்த கயிறுகளைத் தூக்கி

எறிந்தான். பிறகு சீப்புகளும் மணிமாலைகளும் விற்குமிடத்தில் நின்றுகொண்டு புத்தகங்களை விற்கத் துவங்கினான். அநேகமாக ஒருவர்கூட புத்தகம் என்னவென்று கூட நின்று பார்க்கவேயில்லை. நான் மிகுந்த கூச்சத்துடன் கையில் புத்தகங்களை வைத்துக் கொண்டு சாலையோரமாக நின்றுகொண்டிருந்தேன். எங்களைக் கடந்து செல்லும் ஒவ்வொருவரையும் சம்பத் கூப்பிட்டு புத்தகங் களின் அட்டையைக் காட்டிக் கொண்டிருந்தான். ஒன்றிரண்டு பேர் அந்தப் புத்தகங்களைக் கையில் வாங்கிப்பார்த்தார்கள். அவர் களிடம் சம்பத் சலிக்காமல் தன் கையில் உள்ள புத்தகங்களைப் பற்றி ஏதேதோ பேசிக்கொண்டிருந்தான். இரண்டு மணி நேரத் திற்குப் பிறகு ஒரேயொரு புத்தகம் விற்பனையாகியிருந்தது. மீத மிருந்த புத்தகங்களைக் கட்டுவதற்காகக் கயிறுகளைத் தேடினோம். கிடைக்கவில்லை. சம்பத் அந்தப் புத்தகங்களை எங்காவது வைத்து விட்டு கடற்கரையில் கொஞ்ச தூரம் போய் வரலாம் என்று சொன் னான். அவன் பின்னாலே சென்றேன்.

சம்பத் ஒரு சர்பத் கடையில் புத்தகங்களை வைத்துவிட்டு வெற்றிலை போட்டுக் கொள்ளலாமா என்று கேட்டான். எனக்கு வேண்டாம் என்றபோதும் இந்தப் பாக்கு நல்ல துவர்ப்பாக இருக்கும் என்று சொல்லி வெற்றிலை வாங்கி மடித்துத் தந்தான். துவர்ப்பு தொண்டையை அடைக்கத் துவங்கியது. இருவரும் வெற்றிலைச் சாற்றை உமிழ்ந்தபடியே காந்தி மண்டபத்திற்குள் சென்றோம். மிகக் கவனமாக ஒவ்வொன்றையும் பார்த்துக்கொண்டிருந்த சம்பத், காந்தி மிகவும் நல்லவர் என்று சொன்னான். வெளியே வந்தபோது கடற் கரை வெயில் மிக உக்கிரமாகயிருந்தது. வெயில் தணியும்வரை எங்காவது ஒரு கிராமத்திற்குப் போய் வரலாமா என்ற கேட்டான். நான் அவனது நிழலைப் போல கூடவே அலைவது என்று முடிவு செய்தவனைப் போலச் சம்மதித்தேன்.

எந்த ஊர் என்று வழியில் முடிவு செய்துகொள்ளலாம் என்று இருவரும் ஒரு பேருந்தில் ஏறினோம். நகரப் பேருந்து புறப்பட்டு சிறிது நேரத்திற்குள் பசுமையான வயல் வரப்பிற்குள் சென்று தாமரைக் குளங்களும் ஓட்டுவீடுகளும் கொண்ட கிராமங்களைக் கடந்து போனது. ஒரு கிராமத்தின் வெளியே வயலில் மிகப் பெரிய வைக்கோல் பொம்மை பேண்ட், சர்ட் அணிந்து நின்றிருந்தது. அந்த ஊரில் இறங்கிக்கொள்ளலாம் என்றான். பேருந்தை விட்டு நாங்கள் இறங்கியபோது எங்களோடு ஒன்றிரண்டு ஆட்கள் இறங்கி ஊருக்குள் நடந்து போனார்கள். சம்பத் பேருந்து வந்த சாலையில் இருந்த தாமரைக் குளம் ஒன்றினை நோக்கி நடந்தான். இருவரும் அந்தக் குளத்தின் இடிந்த செங்கல் சுவரில் உட்கார்ந்தபடியே வயலில் காற்று அலைஅலையாக எழுப்புவதைப் பார்த்துக் கொண்டேயிருந்தோம்.

சம்பத் மிகச் சந்தோஷமாக இருந்தான். யாராவது வருகிறார் களா என்று பார்த்துக் கொள், நான் இந்தக் குளத்தில் இறங்கி

குளிக்கப் போகிறேன் என்றான். எனக்கும் குளிக்க வேண்டும் என்று ஆசையாக இருந்தது. தனது உடைகளைக் களைந்துவிட்டு நிர்வாணியாக அவன் தண்ணீருக்குள் குதித்தான். அவனது உடல் ஒரு துடுப்பைப் போலிருந்தது. வாயில் தண்ணீரை உறிஞ்சி ஆகாசத்தை நோக்கித் துப்புவதும் சிரிப்பதுமாகக் குளித்துக்கொண்டிருந்தான். பாசி படர்ந்திருந்த அந்தக் குளம் அவனால் அலையடிக்கப்பட்டு தண்ணீர் கரையேறி ததும்பத் துவங்கியிருந்தது. ஒரு தாமரைப் பூவைப் பறித்தபடியே அவன் நிர்வாணமாகக் கரையேறி நின்று சிரித்தபோது அவன் மீது பொறாமையாக இருந்தது. மிக நிதானமாக அவன் தனது வேஷ்டியால் தனலயை துடைத்துக்கொண்டு சட்டையைப் போட்டுக்கொண்டான். பிறகு ஈரத் தலையைச் சிலுப்பியபடி, நீயும் குளித்துவிடு என்றான். நான் மறுத்தபடியே வயலில் நடக்கலாம் என்றேன்.

ஏதோ எங்களுக்கே உரிமையான வயலைப் பார்ப்பது போல இருவரும் வரப்பில் நடந்துகொண்டிருந்தோம். ஈரமும் குளிர்மையும் நேற்று வரை படிந்திருந்த கசடுகளைத் துடைத்து எடுத்துவிட்டது போலிருந்தது. மதிய நேரத்தில்கூட அங்கே வெயிலே இல்லை. மேகம் மூடிக்கொண்டிருந்தது. வயல்வெளியின் நடுவில் இருந்த ஒரு பாறை ஒன்றின் மீது உட்கார்ந்துகொண்டோம். சம்பத், இப்படியொரு ஊரில் பிறந்திருந்தால் தான் படிக்கவே வந்திருக்க மாட்டேன். படிக்கத் துவங்கியதுதான் தன் வாழ்வில் தான் செய்த முதல் தவறு என்றான். வயற்காற்று எங்கள் தலையை வருடிக்கொண்டு போனது. மேகங்களுக்குள்ளிருந்து சூரியன் பீறிட்டு வெளியே வருவதும் திரும்ப ஒளிந்துகொள்வதுமாகவேயிருந்தது. சம்பத் தனது கிராமத்தில் இருந்த ஒரு பண்டாரம் பல நாட்களாக ஒரு பாடலைப் பாடிக்கொண்டு அலைவதாகவும் அதைக் கேட்டுக் கேட்டுதான் தனக்கு தமிழ் மீது ஈடுபாடு உண்டானது என்றும் சொல்லியபடியே மெல்லிய குரலில் பாடத் துவங்கினான்.

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித்தானா?
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித்தானா?.
அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தான்
நோவத்தான் ஐயோ எங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவியில்தான் பண்ணினானே.

பாட்டு முடிந்ததும் அதைப் பற்றிப் பேசத் துவங்கினான். இந்தப் பாடலைக் கேட்கும்போது நாவில் கற்கண்டை உருட்டுவது போன்று கவையாக இருக்கும். இது ராமச்சந்திரக் கவிராயர் எழுதிய தனிப்பாடல். அந்தச் சொற்கள் சிறுவயதிலிருந்து என்னைக் கொடி போல சுற்றிக்கொண்டுவிட்டன. அதிலும் பண்டாரம் பாடும்போது

.அவரது குரலின் வழியே சொற்களுக்குச் சிறகுகள் முளைத்துவிடு வது போலத் தோன்றும். சிறுவயதிலிருந்து நான் அறிந்த அந்தச் சுவைதான் என்னைத் தமிழ் படிக்க வேண்டும் என்ற ஆசையைத் தூண்டியது. எங்கள் வீட்டில் கல்லூரியில் யாரும் படித்தவர்கள் கிடையாது, என் அக்காக்கள் இருவரும்கூட ஐந்தாம் வகுப்பு வரை படித்தவர்கள்தான். ஒரேயொரு தங்கை இருந்தாள். அவளும் மகா லிங்க மலையில் சாமி கும்பிடப் போனபோது சுனையில் விழுந்து இறந்துபோய்விட்டாள் என்றான்.

பிரகாசமான வெயில் வயலின் மீது ஊர்ந்து போகத் துவங்கியது. மேற்கு நோக்கிக் கொக்குகளின் கூட்டம் ஒன்று பறந்து போய்க் கொண்டிருந்தது. பிறகு நாங்கள் பேசிக்கொள்ளவேயில்லை. நெடு நேரம் காற்றின் கரங்களில் எங்களை ஒப்படைத்தவர்களைப் போலப் படுத்துக் கிடந்தோம். பசிக்கத் துவங்கியிருந்தது. நாங்கள் எழுந்து பேருந்து நிற்கும் இடத்திற்கு வந்தபோது கைக்குழந்தையுடன் ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள். அவள் மிகவும் அழகியாக இருந்தாள். குழந்தையும் சுருள்முடியுடன் மிக அழகாகயிருந்தது. சம்பத் அந்தப் பெண்ணைப் பார்த்தபடியே இருந்தான்.

பேருந்து கன்யாகுமரிக்கு வந்தபோது சூரிய அஸ்தமனம் பார்ப்ப தற்காக நிறைய ஆட்கள் கடற்கரையில் காத்துக்கொண்டிருந்தார்கள். நாங்கள் புத்தகங்களைக் கொடுத்து வைத்திருந்த சர்பத் கடை மூடப் பட்டிருந்தது. என்ன செய்வது என்று கேட்டேன். பரவாயில்லை, அவன் விற்று பிழைத்துக்கொள்ளட்டும் என்று சொன்னான் சம்பத். கடலில் இயந்திரப் படகுகள் விரைந்து வந்துகொண்டிருந்தன. கடற் கரையில் நின்றிருந்த ஒருவனிடம், நீந்தி விவேகானந்தர் பாறைக்குப் போக முடியுமா என்று சம்பத் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் அதற்கு அனுமதியில்லை என்றதும் தெரியாமல் நீந்திப் போனால் என்ன செய்வார்கள் என்று கேட்டான். அந்த நபர் பதில் சொல்லா மல் முறைத்துவிட்டுப் போனான். கடற்கரையில் கூட்டம் அதிக மாகத் துவங்கியது.

சம்பத் ரயிலில் ஊருக்குத் திரும்பிப் போகலாமா என்று கேட்டான். என்னிடம் மீதம் நாற்பது ரூபாய் மட்டுமே இருப்பதாகச் சொன்னேன். அதைப் பற்றிச் கவலையில்லை, சமாளித்துக் கொள்ள லாம் என்றான். இருவரும் ரயில்வே நிலையத்தை விசாரித்துக் கொண்டு நடந்து சென்றோம். ரயில்வே நிலையமே வெறிச்சோடிக் கிடந்தது, இரவு பதினோரு மணிக்கு ஒரு பாசஞ்சர் ரயில் உண்டு என்று சொன்னார்கள். சம்பத் அதுவரை அங்கேயே இருக்கலாம் என்றான். பிளாட்பாரத்தின் நீண்ட வெளியில் நானும் அவனும் ஆளுக்கொரு பெஞ்சில் உட்கார்ந்துகொண்டோம்.

திடீரென அவனோடு இருப்பது மிகுந்த அலுப்பூட்டுவதாகவும், எனது சொந்த அடையாளங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து கொண்டு வருவதாகவும் உணர்ந்தேன். எதையாவது காரணம்

காட்டி அவனோடு சண்டை போட்டுவிட வேண்டும் என்று கூட தோணியது. அவன் எழுந்து பிளாட்பாரத்தின் கடைசி வரை நடந்து போகத் துவங்கினான். அவன் உருவம் மறைவது வரை அதைப் பார்த்துக்கொண்டேயிருந்தேன். எதற்காக இப்படி அவனோடு வந்து மாட்டிக்கொண்டிருக்கிறேன். சம்பத் இயல்பான மனநிலையில் தானிருக்கிறானா, இல்லை அவனுக்கு ஏதேனும் மனச்சிதைவு ஏற்பட்டிருக்கிறதா என்று ஆத்திரமாக வந்தது. பிளாட்பாரத்தில் விளக்குகள் எரியத் துவங்கின. ஆனால் இன்னமும் இருட்ட ஆரம்பிக்கவில்லை. சம்பத் நடந்து சென்ற பிளாட்பாரத்தின் தொலைவிலிருந்து அவன் திரும்பவேயில்லை. எங்கே போயிருக்கக்கூடும். சற்றே பயமாக இருந்தது. ஒருவேளை அப்படியே எங்காவது போயிருப்பானோ? அவனிடம் காசில்லையே, எங்கே போய்விட முடியும் என்பது சற்றே ஆறுதலாக இருந்தது. இருந்தாலும் மனதில் சற்றே குழப்பத்துடன் தெற்குத் திசையைப் பார்த்துக்கொண்டேயிருந்தேன்.

இருட்டுப் பூச்சிகள் சப்தமிடத் துவங்கின. பிளாட்பாரத்தில் ஈசல்கள் பறந்து அலையத் துவங்கின. நேரம் கடந்து போகத் துவங்கியதும் சம்பத் என்னை விட்டுவிட்டு எங்கோ போய்விட்டான் என்று உறுதியாகத் தெரிந்தது. ஆத்திரத்தோடு கோபமும் சேர்ந்து கொண்டது. நான் இப்போது என்ன செய்வது? கையில் இருக்கும் நாற்பது ரூபாய்க்கு டிக்கெட் எடுத்துக்கொண்டு இங்கிருந்து போய் விட்டால் போதும் என்றிருந்தது. ரயில்வே கான்ஸ்டபிள் ஒருவன் சைக்கிளை உருட்டிக்கொண்டு பிளாட்பாரத்திற்கு வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டதும நான் எழுந்து நின்றுகொண்டேன். இப்போது இருளில் தண்டவாளம்கூட மறைந்துபோயிருந்தது. ரயில் நிலையத்தின் டிக்கெட் கவுண்டர் அருகே வந்து பார்த்தேன். மூடிக் கிடந்தது. வெளியே கொஞ்ச தூரம் நடந்தும் பார்த்தேன். சம்பத்தைக் காணவில்லை. அவன் என்னை விட்டுப் போய்விட்டான் என்பது ஆத்திரம் தருவதாக இருந்தது.

நான் திரும்பி வந்து அதே பெஞ்சில் உட்கார்ந்துகொண்டேன். கையில் காசில்லாத அவமானமும் பசியும் ஒன்றாக என்னை நிலை குலையச் செய்திருந்தது. பிளாட்பாரத்திற்குள் ஒரு முஸ்லீம் குடும்பம் வந்து சேர்ந்திருந்தது. பார்த்துக்கொள்வதற்கு நாலைந்து ஆட்களின் முகமாவது இருக்கிறதே என்று சற்றே ஆறுதலாகயிருந்தது. ஆனால் அவர்களும் சில நிமிஷங்களுக்குப் பிறகு வெளியேறிப் போய்விட்டார்கள். ஒருவேளை ரயில் கிடையாதா? நான் அர்த்தமற்றுக் காத்துக் கிடக்கிறேனா என்று பயமாக இருந்தது.

தனியே இருட்டிற்குள் கிடக்கும் பெஞ்சில் இருந்து மாறி வெளிச்சம் என் மீது படும்படியாக ஒரு பெஞ்சில் உட்கார்ந்துகொண்டேன். இனி சம்பத்தைப் பற்றி நினைக்கக் கூடாது என்று தோணியது. பற்களைக் கடித்துக்கொண்டு வேறு எதையாவது பற்றி நினைக்க

வேண்டும் என்று பிரயாசைப்பட்டேன். ஆனால் சிறு சப்தம் கேட்டால் கூட சம்பத் வருகிறானோ என்று மனது தானாகத் திரும்புவதும் ஏமாறுவதுமாகவே நீண்டது. பத்து மணிக்குப் பிறகு ரயில் நிலையத்தில் பத்து இருபது பேருக்கும் மேலாக பயணிகள் வந்து காத்துக்கொண்டிருக்கத் துவங்கினார்கள். ரயில் வருவதற்கான அறிவிப்பு ஒலிக்கத் துவங்கியது.

இருட்டிற்குள்ளிருந்து சம்பத் என்னை நோக்கி வந்துகொண்டிருந்தான். அவதை கையில் இரண்டு பொட்டலங்களும் செவ்வாழைப் பழங்களுமிருந்தன. அவன் என் அருகில் வந்து சிரித்தபடியே தேடுனயா என்று கேட்டான். நான் பதில் பேசவேயில்லை. சாப்பாடு வாங்குவதற்காகப் போயிருந்தேன். நல்ல பிரியாணி. சாப்பிடு என்று ஒரு பொட்டலத்தை என் முன்னால் நீட்டினான். நான் வாங்கிக்கொள்ளவில்லை. அவனாக இரண்டையும் பிரித்து வைத்துவிட்டு சாப்பிடுரா என்றான். பிரியாணி மிகச் சுவையானதாக இருந்தது. சாப்பிட்டு முடித்த பிறகு தான் இருவருக்கும் டிக்கெட் எடுத்துவிட்டதாகவும் சொன்னான். அவனிடம் ஏது பணம் என்று நான் கேட்டுக் கொள்ளவேயில்லை.

ரயில் வரும்வரை நாங்கள் இருவரும் பேசிக்கொள்ளவேயில்லை. அன்று ரயிலில் நிறைய கூட்டம். நின்றுகொள்வதற்கே இடமில்லை. கழிப்பறையின் கதவை ஒட்டி நாங்கள் இருவரும் நின்றுகொண்டோம். சம்பத் தான் இருநூறு ரூபாய் புத்தகம் விற்ற காசு வைத்திருந்ததாகச் சொன்னான். நான் இருட்டையே பார்த்துக் கொண்டிருந்தேன். சம்பத் ரயில் ஒரு பாலத்தில் போகும்போது கடவுள் இருக்கிறார் என்று நீ நம்புகிறாயா? என்று கேட்டான். பிறகு எனது பதிலை எதிர்பாராதவன் போல அவனும் இருட்டை உற்று நோக்கத் துவங்கியிருந்தான்

கானல் காட்டில் நின்றுகொண்டிருந்த ராமதுரைக்கு மிக ஆத்திரமாக வந்தது. எந்தப் பாதையில் போவது என்று தெரியாமல் நின்றுகொண்டிருந்தான். அவன் நின்றிருந்த இடத்தோடு பாதை முடிந்து போயிருந்தது. சுற்றிலும் திரும்பிப் பார்த்தான். பழுத்து உதிர்ந்து போன இலைகள் சிதறிக் கிடந்தன. வெண்ணிறக் குமிழ் போன்று ஒரு பூ காற்றில் பறந்து வந்துகொண்டிருந்தது. பருத்து உயர்ந்திருந்த மரங்கள் அசைவில்லாமல் நின்றிருந்தன. அவனுக்கு இப்போது எந்தப் பக்கம் போக வேண்டும் என்று தெரியாது குழப்பமாக இருந்தது. வந்த பாதையில் திரும்பி நடந்து போக வேண்டியதுதான் என்று திரும்பி நடந்தபோதும் பாதைகள் இரண்டு மூன்றாகக் கிளைவிட்டிருந்தன. எந்தப் பாதையில் தான் நடந்து வந்தோம் என்று அவனால் துல்லியமாக நினைவு கொள்ள முடியவில்லை.

திரும்பவும் சப்தமாகக் கத்தி யாரையாவது கூப்பிடலாம் என்று முடிவு செய்து கத்தினான். அவனது குரல் மரங்களின் மீது மோதிச் சுழன்றது. பதில் குரல் வரவேயில்லை.

ஒருவேளை அவர்கள் வெகுதூரம் போய்விட்டார்களா? ஏதாவது ஒரு பாதையில் நடக்க வேண்டியதுதான் என்று கண்களை மூடிக்கொண்டு ஒரு பாதை வழியாக நடந்து போகத் துவங்கினான். மஞ்சள் நிற வண்ணத்துப்பூச்சி ஒன்று அவன் முன்னே கடந்து போய்க்கொண்டிருந்தது. அவன் சிறிய பாறை ஒன்றின் மீது ஏறிக் கடந்தபோது ஊதா நிறப் பூக்கள் குத்துச்செடிகளில் அடர்ந்திருந்தன. அதன் மீது நாலைந்து வண்ணத்துப்பூச்சிகள் கிறங்கிச் சுற்றிக் கொண்டிருந்தன. எங்கிருந்தோ தண்ணீர் கசிந்து ஓடி வரும் சப்தம் கேட்டது. அவன் தன் காதைக் கூர்மையாக்கிக்கொண்டு கேட்டுப் பார்த்தான். கிழக்கேயிருந்துதான் வருகிறது. என்றால் அந்தப் பக்கம் தான் தான் போக வேண்டிய பாதையும் இருக்கும் என்று தோணியது. கொஞ்ச தூரம் நடந்த போது ஒரு மனிதன் விடுவிடுவென கையில் ஒரு அறுப்பு அருவாளுடன் நடந்து வந்துகொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் ராமதுரை சந்தோஷத்துடன் அருகில் வரும்வரை காத்திராமல் முன்னோக்கிச் சென்று கானல் காட்டிற்கு எப்படிப் போவது என்று கேட்டான். அந்த மனிதன், அங்கிருக்கும் எஸ்டேட்டிற்குப் போகவேண்டுமா, இல்லை பூச்சி ஆபீசர் வீட்டுக்கா என்று கேட்டான். தான் எம்ஆர்எம் பங்களாவிற்குப் போக வேண்டும் என்றதும் அந்த ஆள் புரியாதவனாகச் செட்டி யாரா என்று திரும்பவும் கேட்டான். ராமதுரை தலையசைத்ததும் வடக்குப் பக்கத்தைக் காட்டி அந்தப் பாதை வழியாக நடந்து போனால் பத்து நிமிஷத்தில் வந்துவிடும் என்றான். அவன் கையில் வைத்திருந்த அருவாளை வாங்கிப் பார்த்த ராமதுரை இது எங்கே கிடைக்கிறது என்று விசாரித்தான். கன்னிவாடி சந்தையில் வாங்கலாம் என்றபடி அவன் கீழ்நோக்கி இறங்கத் துவங்கினான்.

ராமதுரை வடக்கு நோக்கி நடக்கும்போது அவன் பெயரைச் சொல்லி மாரியப்பன் கத்தும் குரல் கேட்டது. ராமதுரை பதில் சொல்லாமல் மேலேறி நடந்துகொண்டிருந்தான் அந்த சப்தம் திரும்பவும் கேட்டதும் தான் பதிலுக்குக் குரல் கொடுத்தான். இரண்டு குரல்களும் காற்றில் அடித்துச் செல்லப்பட்டுக் கரைந்தன. ராமதுரைக்கு திடீரென சம்பத் மீது ஆத்திரம் வரத் துவங்கியது. சாகக்கூடிய வயதா அவனுக்கு? எதற்காக இந்த நாய் இப்படி அவசர அவசரமாக எதையும் அனுபவிக்காமல் செத்துப் போனான் என்று ஆத்திரம் அதிகமாகிக்கொண்டே வந்தது. சம்பத்தைத் திட்டிக்கொண்டே நடக்கத் துவங்கினான்.

சம்பத்தின் உடலை வீட்டிற்குக் கொண்டுசெல்வதற்காக மருத்துவ மனைக்கு ராமதுரை வந்தபோது இரவு பதினோரு மணியிருக்கக் கூடும். மருத்துவமனையின் வெளியில் சப்தம் ஓய்ந்திருந்தது. இரண்டு சோடியம் விளக்குள் மங்கலாக எரிந்துகொண்டிருந்தன. கறுப்பு நிற டாக்சி ஒன்று முன்னால் நின்றுகொண்டிருந்தது. ராம துரை மருத்துவமனைக்குத் திரும்பி வரும்போது ஒரு ரோஜா மாலை வாங்கிக்கொண்டு வந்திருந்தான். அதை என்னிடம் கொடுத்து சம்பத்திற்கு போட்டுவிடச் சொன்னான். எனக்கு அந்த ரோஜாவின் சுகந்தம் சம்பத்தின் சாவை உறுதிப்படுத்துவதாக யிருந்தது. படுக்கையில் விழித்துக்கொண்டிருந்த நோயாளிகளில் சிலர் அந்த ரோஜா மாலையை பயத்தோடு பார்த்துக்கொண்டிருந் தார்கள். சம்பத்தின் மனைவி இதற்குள் மருத்துவமனைக்கு தான் கொண்டுவந்திருந்த பொருட்கள் எல்லாவற்றையும் ஒரு ஒயர் கூடை யில் அடைத்து வைத்தவளாகக் கலங்கிய கண்களுடன் நின்று கொண்டிருந்தாள். நான் ரோஜா மாலையைச் சம்பத்தின் மீது வைத் தேன். ராமதுரை அதை எடுத்து சம்பத்தின் தலையைத் தூக்கி நன்றாக மாட்டிவிட்டான். ரோஜாப் பூக்கள் படுக்கை முழுவதும் உதிரத் துவங்கின.

ராமதுரை தன் பையில் வைத்திருந்த சிறிய நோட்டைப் பிரித்து யார் யாருக்கு தகவல் சொல்ல வேண்டும் என்ற பட்டியலை வாசித்து, வேறு நண்பர்கள் யாராவது விடுபட்டுப்போயிருக்கிறார் களா என்று கேட்டான். எனக்கு பட்டியலில் இருந்தவர்களில் பாதிப் பேர் முகமே நினைவில் இல்லை. யாழினி இப்போது எங்கே இருக்கிறாள் என்று மட்டும் கேட்டேன். அவள் செகந்தராபாத்தில் இருப்பதாகவும் அவளது அப்பா இரண்டு வருடங்களுக்கு முன்பாக இறந்துபோய்விட்டார் என்றும் எப்படியும் அவளுடைய முகவரியை விசாரித்து தகவல் தெரிவித்துவிடுகிறேன் என்றும் சொன்னான் ராமதுரை. பிறகு சம்பத்தின் மனைவியிடம் அவளது வீட்டிற்குத் தகவல் தெரியப்படுத்த வேண்டுமா என்று கேட்டுக்கொண்டிருந் தான். அவள் வேண்டாம் என்று மறுத்தபடியே நின்றுகொண்டிருந் தாள். டாக்சியில் சம்பத்தின் உடலை ஏற்றி வைப்பதற்கு ஐநூறு ரூபாய் பேரம் இழுபட்டுக்கொண்டிருந்தது. நாங்களாகத் தூக்கி வைப்பதை அவர்கள் அனுமதிக்க முடியாது என்று சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். முடிவில் முந்நூறு ரூபாய்க்குச் சம்மதித்துவிட்டார்கள். டாக்சி டிரைவர் வண்டிச் சக்கரத்திற்கு வைப்பதற்காக எலுமிச்சம் பழங்களும் உதிரி சாமான்களும் வாங்க வேண்டும் என்று நூறு ரூபாய் வாங்கிக்கொண்டு போனான்.

சம்பத்தின் உடலை வண்டியில் ஏற்றி பின்சீட்டில் படுக்க வைத்துவிட்டு அவர்கள் போன பிறகு டிரைவர் மிதமான போதை யில் சிவந்த கண்களுடன் வந்து டாக்சியை எடுத்தான். சம்பத்தோடு அவனது மனைவி மட்டும் வரட்டும், நீ உன் காரில் வந்துவிடு,

நான் பைக்கில் சென்று தந்தி அடித்துவிட்டு வருகிறேன் என்றான் ராமதுரை. எதுவும் நடக்காதது போல டாக்சியின் முன்கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்துகொண்டாள் சம்பத்தின் மனைவி. நான் சம்பத்தின் உடலை ஏற்றிக்கொண்டு சென்ற காரின் பின்னாடியே செல்வது என்று தீர்மானித்தேன். டாக்சி சாலையில் மிக மெதுவாகச் சென்றுகொண்டிருந்தது.

ஜெயந்தி டாக்சியில் ஆடிக்கொண்டிருக்கும் திராட்சைக் குலைகளைப் பார்த்துக்கொண்டே வந்தாள். அது பிளாஸ்டிக்கால் ஆனவை என்பது வியப்பாக இருந்தது. டிரைவர் அவளிடம் எதையும் கேட்டுக்கொள்ளவேயில்லை. அவள் சாலையில் எரிந்துகொண்டிருக்கும் சோடியம் விளக்குகளையும், கார்களையும் பார்த்தபடியே வந்தாள். மிகப் பெரிய விளம்பரப் பலகைகள் மின்னிக்கொண்டிருந்தன. ஒரு பைக்கில் இளம் பெண் ஒருத்தி தன் இரண்டு கைகளாலும் பைக் ஓட்டும் இளைஞனைக் கட்டிக்கொண்டு அவன் முதுகில் தூங்கிக்கொண்டிருப்பவள் போலச் சாய்ந்திருந்தாள். டாக்சி ஒரு வளைவில் திரும்பியபோது சினிமா தியேட்டர் ஒன்றில் புதுப் படம் போடுவதற்காகப் போஸ்டர்கள் ஒட்டிக்கொண்டிருந்தார்கள்.

அவள் திரும்பி சம்பத்தின் உடலை ஒரு முறை பார்த்துக்கொண்டாள். துணியால் சுற்றி பொட்டலம் போலக் கட்டப்பட்டிருந்தான் சம்பத். அவள் வாழ்க்கையில் இனி சம்பத் இல்லை. ஏதோ ஒரு நாளில் அவளது வாழ்க்கைக்குள் பிரவேசித்து அற்ப சந்தோஷங்களையும் வலிகளையும் அவளுக்கு அறிமுகம் செய்த அவன் இனி அவளுடன் இருக்க மாட்டான். சம்பத் எதற்காகத் தன்னைக் கல்யாணம் செய்து கொண்டான் என்று அவள் பல முறை கேட்டிருக்கிறாள். அவன் பதில் சொல்லாமல் சிரித்துக்கொண்டிருப்பான். சம்பத்தைப் பற்றி அவளுக்குத் தெரிந்தது எல்லாம் அவன் எப்போதும் எதையாவது யோசித்து குழம்பிக்கொண்டேயிருந்தான் என்பது மட்டுமே. அவன் அடிபட்டு காயம் உலராத ஒரு மிருகம் தன் மூர்க்கம் குறையாமல் அலைந்துகொண்டிருப்பது போன்று சுற்றிக்கொண்டேயிருந்தான். அவனால் சந்தோஷத்தைக் கூட நீண்ட நேரம் அனுபவித்துக்கொண்டிருக்க முடியாது. ஏதாவது செய்து அதில் ஒரு வலியை உண்டாக்கிவிடுவான். அவளும் சம்பத்தின் வீட்டைப் பற்றியோ நண்பர்களைப் பற்றியோ எதுவும் கேட்டுக்கொண்டதே கிடையாது.

சம்பத் குழந்தைகள் பெற்றுக்கொள்வதைக் கூட விரும்பவில்லை. மிக கவனமாக அவளிடம் இதைப்பற்றி எச்சரிக்கை செய்துகொண்டிருப்பான். ஒரேயொரு முறை அவள் அதையும் மீறி கர்ப்பம் கொண்டபோதும்கூட உடனே அதைக் கலைத்துவிடுவதற்காக

அழைத்துக்கொண்டு போய்விட்டான். சூளைமேட்டில் இருந்த ஒரு மருத்துவமனையில் அவளைக் கருக்கலைப்பிற்காக அனுமதித்திருந்த இரண்டு நாட்களும் அவன் நாள் ஒன்றிற்கு நூறு சிகரெட்டிற்கும் அதிகமாகப் பிடித்திருப்பான். சிகிச்சை முடிந்து மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பி வந்த பிறகு அவளோடு இனிமேல் உடல் உறவே கொள்ளப்போவதில்லை என்று கத்தினான். சம்பத்திற்கு விருப்பமானது எது என்று எப்போது யோசித்தாலும் எதுவும் அவளுக்கு நினைவிற்கே வருவதில்லை.

சம்பத்திற்கு உண்மையில் விருப்பமாக இருந்தது செத்துப்போய் விட வேண்டும் என்பதுதான். அதைப் பற்றி சில சமயங்கள் அவளோடு விவாதம் செய்திருக்கிறான். அவள் பயத்தோடு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் கேட்டுக்கொண்டிருப்பாள். பிறகு இரண்டு நாட்களுக்குள் அதை மறந்துபோய்விட்டவனைப் போல அயிரை மீன் வாங்கி வந்து குழம்பு வைத்து சாப்பிடலாமா என்று கேட்கிறவனாகவுமிருந்தான். சம்பத்தின் மரணம் அவளுக்குத் திடீரென தான் வெட்டவெளியில் இருப்பது போல மிகுந்த சந்தோஷமானதாகவும் பயமானதாகவுமிருந்தது.

**கா**னல் காடு விரிந்து கிடந்தது. மூன்று மலைகளுக்குச் சரிவில் இருந்த அந்த அடர்ந்த காடு இப்போதும் பசுமை குறையாமல் அப்படியே இருந்தது. வெள்ளைக்காரர்களில் எவனோ அறிமுகம் செய்துவிட்டுப் போன காபித் தோட்டங்களைத் தாண்டி மலையின் மீது இன்னமும் கிராம்பு, ஏலம் போன்ற சுகந்தப் பொருட்களும் காட்டு எலுமிச்சை மரங்களும் கமலா ஆரஞ்சு, மாதுளைப் பழ மரங்களும் நிரம்பியிருந்தன. இரண்டு பக்கமிருந்தும் இரண்டு பெரிய அருவிகள் வழிந்தோடிக்கொண்டிருந்தன. காட்டருவி என்பதால் நெருங்கிப் போக முடியாதபடி பாறைகள் குத்திக்கொண்டு நிமிர்ந்திருந்தன. அருவி வழிந்து ஓடிவரும் இரண்டு மூன்று இடங்களில் படுகைகள் அமைத்திருந்தார்கள்.

கானல் காட்டில் ஆதியில் இரண்டு மூன்று குடியிருப்புகள் இருந்திருக்க வேண்டும். மெர்வின் காபித் தோட்டம் உருவானபோது அவர்கள் துரத்தப்பட்டு கீழே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இப்போது அவர்களின் குடியிருப்பு மலையின் அடிவாரத்திலிருந்தது. மலையின் மீதுள்ள ஒரே குடியிருப்பு கரடிப்பட்டி மட்டும்தான். அதுவும் உதிரியாக நாற்பது ஐம்பது வீடுகள் இருந்தன. அதைத் தவிர்த்து மலைப் பயிர்களைச் சேமித்து வைப்பதற்காகக் கட்டியிருந்த ஒன்றிரண்டு குடியிருப்புகள் ஆங்காங்கே தனித்திருந்தன.

நாங்கள் சென்று சேர்ந்த குடியிருப்பு மலையின் ஒரு சரிவில் இருந்தது. தகரம் அடிக்கப்பட்ட அந்தக் குடியிருப்பு ஒரு செட்டியா

ரின் பண்ணைக்குரியது. மிகத் தாழ்வாக அமைக்கப்பட்டிருந்த கட்டிடம் அது. உள்ளே நாலைந்து பேர் படுத்துக் கொள்ளுமளவு ஒரு அறையும், வீட்டின் பின்பக்கம் ஒரு சமையல் அறையுமிருந்தது. எம்.ஆர்எம். செட்டியாரின் மலைவாழைத் தோட்டங்களைப் பார்த்துக்கொள்வதற்காக இருந்த சன்னாசி மட்டுமே அங்கே இருந்தான். வாரம் ஒரு முறை செட்டியாரின் மருமகன் வந்து கணக்கு வழக்குகளைப் பார்த்துப் போவதாகவும் செட்டியாருக்கு இரண்டு மனைவிகள், அவர்கள் பர்மாவில் வியாபாரம் பார்த்தவர்கள் என்று சன்னாசி நாங்கள் போய்ச் சேர்ந்ததுமே சொன்னான். ராமதுரையும் மாரியப்பனும் அந்த வீட்டின் முன்னால் கிடந்த பாறையொன்றில் உட்கார்ந்தபடியே இங்கே குளிர் அதிகமாக இருக்குமா என்று விசாரித்துக்கொண்டிருந்தார்கள். சன்னாசி, அதெல்லாம் இருக்காது, அப்படி இருந்தாலும் ரம் பாட்டில் வச்சிருக்கேன், ரெண்டு மடக்கு குடிச்சிட்டு தூங்கிற வேண்டியதுதான் என்றான்.

நான் மலைச்சரிவில் வெயில் ஊர்ந்து போய்க்கொண்டிருப்பதைக் கண்டேன். திட்டுத்திட்டாக வெயில் மிதந்து போய்க் கொண்டிருந்தது. எங்கோ தொலைவில் ஒரு சினிமாப் பாடல் விட்டு விட்டுக் கேட்டுக்கொண்டிருந்தது. அந்தப் பாடல் மலையின் தென்பகுதியில் உள்ள காரையார் தோட்டத்தில் பாடுவதாகவும், வேலை செய்பவர்களின் அலுப்பு தெரியாமலிருக்க தினமும் காலையில் போட்டுவிடுவார்கள் என்றான். நான் பார்த்துக் கொண்டிருந்த வெயில் மெல்ல மங்கி திரும்பவும் மேகம் மூடிக் கொண்டது போலாகயிருந்தது. சன்னாசி தன் வீட்டிலிருந்து சரிவை நோக்கி இறங்கிச் செல்லும் பாதையில் நடந்தபடியே, குளிக்கிறதா இருந்தா வெள்ளியோடையில குளிக்கலாம் என்று சொல்லி, தான் இறங்கிக்கொண்டிருந்த வழியைக் காட்டினான். நாங்கள் எவரும் பதில் சொல்லவில்லை. ராமதுரை எழுந்து சோம்பல் முறித்துக் கொண்டவனைப் போல மாரியப்பனிடம் எத்தனை நாள் லீவு போட்டிருந்தே என்று கேட்டான். மாரியப்பன் ஒரு வார காலம் என்றான். பிறகு அவர்கள் இருவரும் ஒன்றாகச் சரிவை நோக்கிச் செல்லும் பாதையில் நடந்து போகத் துவங்கினார்கள்.

கதவுகள் திறந்து கிடந்த அந்த வீட்டின் உள்ளே சென்றேன். தரை ஜில்லென்று குளிர்ந்திருந்தது. சுவர்கள் கருங்கற்களால் கட்டப் பட்டிருந்தன. பத்துப் பதினைந்து கமலா ஆரஞ்சுப் பழங்கள் தரையில் உருண்டு கிடந்தன. ஒரு சாக்கு நிறைய தேங்காய்கள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. நாலைந்து ஸ்டூல் நாற்காலிகள் சுவரோரமாகச் சாத்தி வைக்கபட்டிருந்தன. அந்த அறையில் ஜன்னல்களே இல்லை. வாசலில் ஒரு நாய் நின்றபடியே என்னைப் பார்த்துக் கொண்டிருந்தது. நான் நாயை சூ சூ என விரட்டியபோதும் அது விலகிப் போகவேயில்லை. ஒரு கமலா ஆரஞ்சுப் பழத்தை எடுத்து நாயின் மீது எறிந்தேன். நாயின் மீது படாமல் விலகிப் போனது. இன்னொரு பழத்தை எடுப்பதற்குள் நாய் வாசலை விட்டுப் போயிருந்தது.

நான் வெளியே வந்து நின்றபோது வாசலில் வெயில் ததும்பிக் கொண்டிருந்தது. ஈரத்தலையுடன் கையில் பெரிய பப்பாளி ஒன்றைப் பறித்து எடுத்துக்கொண்டு சன்னாசி நடந்து வந்து கொண்டிருந்தான். அருகில் வந்து சிரித்தபடியே இந்த பப்பாளி நல்லா இருக்கும், சாப்பிட்டுப் பாருங்க என்று சொல்லிக்கொண்டே சமையல் அறைக்குள் நுழைந்து ஒரு கத்தியை எடுத்துக்கொண்டு வந்தான். வாசலில் உட்கார்ந்து கொண்டு பப்பாளிகளை அறுக்கத் துவங்கினான். நான் சரிவில் இறங்கத் துவங்கிய போது அவன், பாதை கொஞ்சம் தேய்ஞ்சி கிடக்குது, பாத்துப் போங்க என்று சப்தமிட்டான்.

நான் மரங்களுக்கு ஊடாக நடந்தபோது உயரமான பாறை ஒன்றில் மாரியப்பனும் ராமதுரையும் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. நான் அவர்களை விட்டு வெள்ளியோடையை நோக்கி நடக்கத் துவங்கினேன். எங்கிருந்தோ ஒரு குயிலின் சப்தம் விட்டு விட்டு கேட்டுக்கொண்டிருந்தது. கையகலம் விரிந்த ஒரு இலையைப் பறித்தபடியே நடந்து சென்றேன். சூரியன் என் கண்களில் படுவதும் மறைவதுமாக வானில் நாடகமாடிக்கொண்டிருந்தது.

மென் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுப்பதுதான் மனிதனின் வீழ்ச் சிக்கு முதல் காரணம். குகை மனிதனைப் போல எப்போதுமே மூர்க்கமாகத்தானிருக்க வேண்டும். குகை மனிதர்களுக்காவது எதை வேட்டையாட வேண்டும் என்று தெரிந்திருந்தது. தனது ஆயுதத் தைத் தானே செய்துகொள்ளும் தைரியமும் விருப்பமும் இருந்தது. நமக்கு அதுகூடத் தெரியாது. ஆனால் நாம் குகைக் காலத்தில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். சந்தர்ப்பம் கிடைத்தால் நம்மை வேட்டையாடிச் சாப்பிடுவதற்கு அடுத்த வீட்டுக்காரன் தயங்கவே மாட்டான். எல்லா மனிதர்களுக்கும் மாமிசம் கிழிக்கும் இரண்டு கோரைப்பற்கள் இருக்கின்றன. அதை மறைத்துக்கொண்டு சிரித்துக் கொண்டிருக்கிறான். லூசின் என்ற சீன எழுத்தாளரின் கதையை நீ படித்திருக்க மாட்டாய். அதில் ஒருவன் நிஜமாகவே மனிதர்கள் நரமாமிசம் சாப்பிடுவதாக நம்புகிறான். தன்னைச் சாப்பிட்டுக் கொள்ளும்படி தன் வீட்டில் உள்ளவர்களிடம் உடலை ஒப்படைத்துவிடுகிறான். இது நிஜம்தான். நம் வீட்டில் உள்ளவர்கள் நம்மை கொஞ்சம் கொஞ்சமாக பிய்த்து சாப்பிட்டுக் கொண்டிருக் கிறார்கள். உப்பு தண்ணீரில் கரைந்துபோவது போல நம் கண்ணில் படாமலே இது நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே மெல்லிய உணர்ச்சிகளுக்கு நாம் இடம் கொடுக்கவே கூடாது. பகலும் இரவும் நம் கல் ஆயுதத்தைத் தலைக்கு வைத்துக்கொண்டுதான் தூங்க வேண் டும். நம்மிடையே இருக்கும் பயம்தான் மென் உணர்ச்சிகளாகத் தன்னை மறைத்துக்கொண்டு வளர்கிறது. ஆகவே எல்லோரும்

வேட்டைத் தொழில் பழகிக்கொள்ள வேண்டும் என்று சம்பத் டெல்லியில் நடந்த ஒரு பியானோ இசைநிகழ்ச்சியைப் பார்த்து விட்டு வரும்போது என்னிடம் சொன்னான். அவனுக்குத் தலை நகரின் குளிரை விடவும் சாலையோரங்களில் பனியில் ஒடுங்கிக் கிடக்கும் ஆட்களின் சவக்களை படிந்த முகங்கள் உக்கிரமேற்றி யிருக்க வேண்டும். அவன் வந்த நாளில் இருந்து பழைய டெல்லியில் சுற்றிக்கொண்டு திரிந்தான்.

ஒரு நாள் அதிகாலை ஆறு மணிக்கு என்னை எழுப்பி ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு தன்னோடு ஒரு இடத்திற்கு வரச் சொன்னான். நானும் அவனும் டெல்லியின் பனிமூட்டமான சாலையில் சென்றுகொண்டேயிருந்தோம், எதிரே வரும் கார் தெரியாத அளவு பனிமூட்டம் படர்ந்திருந்தது. ஸ்வெட்டர்களைத் தாண்டி காதின் நுனிகளைக் குளிர் ஜில்லிடச் செய்துகொண்டி ருந்தது. எங்கே போகிறோம் என்று கேட்டதற்கு இடத்தின் பெயர் தெரியாது என்று சொல்லி, ஆனால் அந்தப் பகுதிக்கு எந்த பாதை வழியாகப் போக வேண்டும் என்று தனக்குத் தெரியும் என்றான்.

காலத்தில் மிச்சமாகயிருந்த புராதனக் கட்டிடங்கள் ஒன்றிரண்டு ஈரமேறியிருந்தன. ஒரு மணி நேரப் பயணத்தின் பின்பு நாங்கள் இருவரும் ஒரு வெட்டவெளியை அடைந்தோம். அங்கேயும் பனி மூட்டம் கலையாமலிருந்தது. அவன் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு என்னைக் கூட்டிக்கொண்டு நடந்தான். எங்காவது ஒரு டீ குடித்து விட்டு போகலாமே என்றேன். அவன் கேட்டுக்கொள்ளவேயில்லை. காலை வெளிச்சம் வானிலிருந்து பீறிடத் துவங்கியது. ஒரு பெரிய அகதி முகாம் போல எண்ணிக்கையற்று சிறுசிறு சாம்பல் நிற டெண்டுகள் போடப்பட்டிருந்தன. வெட்டவெளியில் ஆயிரக்கணக் கான ஆட்கள் நடந்து திரிந்தார்கள். சம்பத் என்னை அழைத்துக் கொண்டு அந்த வீடுகளின் குறுக்கே நடந்து திரிந்தான். ஒரு வீட்டில் ரேடியோ பாடிக்கொண்டிருந்தது. கோதுமை மாவை ஒரு பெண் பிசைந்துகொண்டிருந்தாள். இரண்டு மூன்று இடங்களில் நெருப்பை உண்டாக்கிக்கொண்டு சுற்றிலும் அமர்ந்து குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள்.

எங்கள் இருவரையும் கண்டதும் ஒருவன் ஏதாவது ஆட்கள் தேவைப்படுகிறதா என்று கேட்டான். அதெல்லாம் இல்லை என்று நான் சொன்னதும் அவன் திரும்பவும் குளிர்காயத் துவங்கி விட்டான். சம்பத் ஆத்திரத்துடன், இவர்கள் அத்தனை பேரும் தலைநகரில் நடக்கும் வெவ்வேறு கட்சி ஊர்வலங்களுக்காக அழைத்துவரப்பட்டவர்கள். இங்கேயே தங்கிவிட்டார்கள். ஆளுக்கு நூறு ரூபாய் பணம் கொடுத்தால் எந்தக் கட்சியின் ஊர்வலத்திற்கும் இவர்கள் வந்து கோஷமிடுவார்கள். இவர்களை நம்பி இவர்களது குடும்பங்களும் வந்து சேர்ந்துவிட்டிருக்கின்றன. எத்தனைப் பெண் கள், குழந்தைகள் பார்த்தாயா? வாழ்க்கை எத்தனை அற்பமானது

என்று இப்போதாவது தெரிந்துகொள்ள முடிகிறதா? இவர்களிட மிருக்கும் ஒரே பலவீனம் மென் உணர்ச்சி தான். மற்றவர்களுக்குத் தாங்கள் இடையூறு செய்யக் கூடாது, தங்களால் பிரச்சினை வரக் கூடாது என்று எண்ணுகிறார்கள். இவர்களால் இந்த நகரின் பகட்டைப் பார்த்துப் பொறாமை கொள்ளக்கூட முடியாது. பொறாமை கொள்வதுகூட அடுத்த வீட்டுக்காரன் மீது மட்டும்தான். மென் உணர்ச்சிகளை மட்டும் இவர்கள் கைவிட்டுவிட்டால் அப்புறம் இவர்களது பிரச்சினைகள் யாவும் தீர்ந்துவிடும் என்றான். நான் அதை மறுத்து வன்முறையை உருவாக்குவது எளிதானது என் றேன். அவன், சரி வன்முறையே வேண்டாம், இவர்கள் அத்தனை பேரும் இப்படி வெட்டவெளியில் கிடந்து சாக வேண்டியதுதானா என்று திருப்பிக் கேட்டான். எனது எந்தப் பதிலும் அவனைச் சாந்தப்படுத்தப்போவதில்லை என்று அறிந்துகொண்டவனைப் போல அந்தக் கூடாரங்களைப் பார்த்தபடியே நின்றுகொண்டிருந் தேன். அவன், இந்தியாவில் புனரயோடிப்போயிருக்கும் தீர்க்க முடியாத நோய் கடவுள் நம்பிக்கைதான் என்றான். நான் கேலியான குரலில் கல்லூரி நாட்களில் உனக்கிருந்த சிந்தனையாளர்கள் தொடர்பு இன்னமும் மிச்சமிருக்கிறதா என்று கேட்டேன். அவன் அதை ரசிக்காதவனைப் போல நீ வீட்டிற்குப் போ, நான் பிறகு வருகிறேன் என்று சொல்லி என்னைத் தனியே அனுப்பி வைத்தான்.

மூன்று நாட்களுக்குப் பிறகு என்னைத் தேடி வந்து குடிப்பதற்குக் கொஞ்சம் பணம் வேண்டும் என்று கேட்டான். நானே அழைத்துப் போவதாகச் சொன்னேன். நீ அழைத்துப் போகும் பார்களில் குடிப்ப தற்கான மனநிலை ஏற்படுவதில்லை. மாறாக பொய்யான நடிப்பிற்கு நானும் இடம் கொடுக்க வேண்டியிருக்கிறது. நான் நாட்டுச் சாரா யம் குடிப்பதற்காகப் போகிறேன். இஷ்டமிருந்தால் என்னுடன் வா என்றான்.

இருவரும் ஒரு முகலாயக் கல்லறைத் தோட்டம் போன்றிருந்த ஒரு பகுதிக்குச் சென்றோம். வெண்கலப் பானையில் சாராயம் வைத்து விற்றுக்கொண்டிருந்தாள் ஒரு பெண். பச்சை மிளகாயும் வெங்காய மும் ஒரு தட்டில் வாங்கிக்கொண்டு சம்பத் ஒரு மரத்தடியில் உட் கார்ந்துகொண்டு குடித்தான். பாதி குடித்துக்கொண்டிருந்தபோது என்னிடம் நானும் யாழினியும் காதலித்ததாக நீயும் நம்பிக்கொண்டி ருந்தாயா என்று கேட்டான். நான் ஆம் என்று தலையசைத்தேன். உண்மையில் அவளுக்குத் தன் மீது காதல் இருந்தது என்றும் ஆனால் பொருளாதார ரீதியாகத் தன்னால் உயர முடியாது என்று அவள் நினைத்ததாகவும் அதனால் அவனைக் காதலிக்கவில்லை என்றும் யாழினி சொன்னாள் என்றான். நான், கல்லூரி நாட்களுக்கு அப் புறம் எப்போதாவது நீ யாழினியைச் சந்தித்தாயா என்று கேட்டேன். அவள் முதுகலை படிக்கும்போது ஒன்றிரண்டு முறை சந்தித்ததாக வும் அதில் பிரயோசனம் ஒன்றுமில்லை என்றான். அப்போது சம்பத் திற்கு வயது நாற்பதை நெருங்கிக்கொண்டிருந்தது.

நான் அவன் டெல்லி வருவதற்குச் சில மாதங்களுக்கு முன்புதான் திருமணம் செய்துகொண்டிருந்தேன். சம்பத் என் திருமணத்திற்கு வரவில்லை. ஆனால் திருமண நாளின் காலையில் தான் திருமணத்தில் கலந்துகொள்ள விரும்பவில்லை என்று தந்தி கொடுத்திருந்தான். என் அப்பா அதைப் பார்த்துவிட்டுத் திட்டியதோடு இது போன்ற நண்பர்களைச் சந்திப்பதையே இனிமேல் தவிர்த்துவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஒரு இலை நிறைய பப்பாளி வெட்டிப் போட்டிருந்தான் சன்னாசி. மலை என்பதால் காலை உணவு இதுபோல ஏதாவது பழங்களைச் சாப்பிட்டுக்கொள்ள வேண்டியது தான் என்றும், மதியம் தான் சமைத்துவிடுவதாகவும் சொன்னான். ராமதுரையும் மாரியப்பனும் அப்போதும் மிக ரகசியமாக ஏதோ பேசிக்கொண்டே பப்பாளிப் பழங்களைச் சாப்பிட்டார்கள். அவர்கள் என்னை ஒதுக்குகிறார்களோ என்று தோன்றியது. நான் அதை ஏற்றுக்கொண்டவன் போல தனியே உட்கார்ந்து பப்பாளிப் பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். பப்பாளிப் பழங்களைச் சாப்பிட்டால் கர்ப்பிணிப் பெண்ணின் கர்ப்பம் கலைந்துவிடும் என்று எப்போதோ ஒரு மருத்துவக் குறிப்பு படித்திருந்தது நினைவிற்கு வந்தது. வெயில் பிரகாசமாக இருந்தது. சன்னாசி வெளியே ஆரஞ்சுத் தோல்களை ஒரு காகிதத்தில் கொட்டி உலர வைத்துக் கொண்டிருந்தான். நான் அதைக் கவனிப்பதை அறிந்தவன் போல ஆரஞ்சுத் தோல் நன்றாக உலர்ந்ததும் அதை அரைத்து வைத்துக்கொண்டு தண்ணீரில் கொஞ்சம் கொதிக்கவிட்டு வடித்துக் குடித்தால் நல்ல மணமாக யிருக்கும் என்றான்.

நான் சன்னாசிக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா என்று கேட்டேன். அவன் தன்னுடைய வயது என்னவாக இருக்கும் என்று என்னைத் திரும்பவும் கேட்டான். அவனது மெலிந்த தோற்றத்தை ஏறிட்டுப் பார்த்தபடியே முப்பது இருக்குமா என்று சொன்னேன். அவன் சிரித்துக்கொண்டே நாற்பத்திரண்டு கடந்துவிட்டது என்றான். பிறகு அவனாக, தனக்குத் திருமணம் தேவையில்லை, மலையில் அவ்வப்போது ஏதாவது பெண்கள் கிடைத்துவிடுகிறார்கள் என்றான். யார் அவர்கள் என்று கேட்டதும் வெட்கத்துடன் வாழைக்கன்று வெட்டிற்கு வரும் பெண்கள், ஒன்றிரண்டு பேர் எலுமிச்சம்பழம் பொறுக்க வருபவர்கள் என்றான். அவனுக்கு மாதச் சம்பளம் தருகிறார்களா என்று கேட்டேன். அவன் அதெல்லாம் தேவையில்லை என்றதோடு தான் வாழ்நாள் முழுவதும் சாப்பிட்டுத் தீர்த்தாலும் தீராத அளவு மலையில் பழங்கள் விளைகிறது, அது போதும்தானே என்றான்.

பிறகு சன்னாசி தான் துப்பாக்கி வைத்திருப்பதாகவும் இரவில் சென்றால் காட்டுக் கோழிகளைச் சுட்டுவரலாம் என்றான். நான் துப்பாக்கியைப் பார்க்க விரும்பினேன். அவன் வீட்டிற்குள் சென்று வேட்டைத் துப்பாக்கி ஒன்றைத் தூக்கிக்கொண்டு வந்தான். பழங் காலத்துத் துப்பாக்கியாக இருந்தது. கையில் வாங்கிய போதுதான் அதன் கனம் தெரிந்தது. துப்பாக்கி குண்டுகள் கொண்ட பெட்டி ஒன்றைத் தனியாக எடுத்துக் காட்டி, இந்த குண்டுகள் ஒவ்வொன் றிற்கும் கணக்கு கொடுக்க வேண்டும், அத்தோடு எலக்ஷன் வந்தால் துப்பாக்கியைத் தாலுகா அலுவலகத்தில் ஒப்படைத்துவிட வேண்டும் என்றான்.

என் வாழ்நாளில் முதன் முறையாக ஒரு துப்பாக்கியைத் தோளில் அழுந்தும்படியாகத் தூக்கி வைத்து அதன் கண்துளை வழியாக எதிரே நிற்பவனைப் பார்த்தேன். குண்டு போடப்படாத துப்பாக்கி என்றபோதும் பயமாகத்தானே இருக்கிறது. அவன் இந்தத் துப்பாக்கி செட்டியாருடையது என்றும் அவர் எப்போதாவது தனது நண்பர்களுடன் வேட்டைக்கு வருவார் என்றும், சொன்னான். நான் காட்டில் யானைகள் இருக்கின்றனவா என்று கேட்டேன். அவன், யானை இல்லை, ஆனால் ஒரேயொரு புலி இருக்கிறது. அது ஒரு நாள் தன் வீட்டு வாசலுக்கு வந்து அவன் அருகில் உறங்கிக் கொண்டிருந்த நாயைக் கடித்துத் தின்றுவிட்டுப் போய்விட்டது என்றான்.

நான் துப்பாக்கி வைத்துக்கொண்டு நிற்பதைக் கண்டவர்களைப் போல ராமதுரையும் மாரியப்பனும் வெளியே வந்து நின்றார்கள். ராமதுரை என்னிடமிருந்த துப்பாக்கியை வாங்கிக் கொண்டு மாரியப்பனைக் குறிபார்த்தான். மாரியப்பன் வெற்றுத்துப்பாக்கி தான் என்றபோதும் சற்றே பயம் கலந்த முகத்துடன் கைகளை முகத்திற்கு நேராக வைத்துக்கொண்டு அவனைச் சுடுடா என்று என்னைக் காட்டினான். துப்பாக்கியின் குறி இப்போது என்னை நோக்கியதாகத் திரும்பியது. நான் ராமதுரையை முறைத்தபடியே நின்றுகொண்டிருந்தேன். ராமதுரை சம்பத்தாக இருந்தால் நிச்சயம் சுட்டுவிடுவான் என்று சொன்னான். நான் உடனே யார் யார் சுடப்பட வேண்டும் என்ற பட்டியலே சம்பத் வைத்திருந்தான், அதில் நீயும் இருந்தாய் என்பதை மறந்துவிடாதே என்றேன். ராம துரை தான்கூடக் கொல்ல வேண்டியவர்களின் பட்டியல் ஒன்றை மனதிற்குள் தயாரித்துக்கொண்டுதானிருக்கிறேன், ஆனால் அந்தப் பட்டியல் முடியவேயில்லை என்றான்.

சன்னாசி ராமதுரையிடமிருந்து துப்பாக்கியை வாங்கி உறையில் போட்டு உள்ளே கொண்டுபோனான். ராமதுரை அந்தத் துப்பாக்கி யால் எத்தனை அடி தூரத்திற்குள் சுட முடியும் என்று கேட்டுக் கொண்டிருந்தான். மாரியப்பன் என்னிடம் நாம் மூன்று பேரும் இங்கே வந்ததற்குப் பதிலாக சம்பத்தின் கிராமத்திற்குப் போயிருக்க

லாம். அவனது அக்காக்கள் எவருமே சாவிற்கு வரவில்லை. நேரில் போயாவது சமாதானம் பேசியிருக்கலாம் என்றான். நான் அவனது ஊருக்கு ஒரு முறைதான் சென்றிருக்கிறேன் என்றேன். மாரியப்பன் தனக்கு நேற்றிலிருந்து மிக பயமாக இருப்பது போலவே தோன்றிக் கொண்டிருக்கிறது என்றான். நீ நன்றாக உறங்கவில்லை. கொஞ்ச நேரம் உறங்கி எழுந்தால் சரியாகிவிடும் என்றேன். மாரியப்பன் அதை ஏற்றுக்கொண்டவன் போல வீட்டின் அருகாமையில் இருந்த ஒரு மரத்தடியில் சாக்கை விரித்துப் போட்டுப் படுத்துக் கொண்டான்.

சம்பத்தின் உடலை அவன் வீட்டிற்குள் இறக்கி வைத்துவிட்டு டாக்சி வெளியேறிய பிறகு மாடியில் இருந்த வீட்டு உரிமையாள ரான பெண்மணியும் இன்னும் இரண்டு பேரும் கீழே இறங்கி வந்து பார்த்தார்கள். வீட்டுக்காரப் பெண்மணி ஜெயந்தியைக் கட்டிக் கொண்டு சப்தமாக அழுதாள். ஜெயந்தியும் லேசாக அழுவது போலிருந்தது. அருகாமை வீடுகளில் இருந்து நைட்டி அணிந்த ஒன்றிரண்டு பெண்கள் வெளியே எட்டிப் பார்த்துவிட்டு திரும்பவும் கதவை அடைத்துக்கொண்டார்கள்.

வீட்டுக்காரப் பெண்மணியின் மருமகன் இரவில் சீட்டுக் கச்சேரி வைத்துக்கொள்ளலாமா என்று கேட்டான். ராமதுரை அதற்கு தான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். ஆறு கட்டு சீட்டும் காபியும் வாங்கித் தர வேண்டும், ஒன்றிரண்டு பேருக்கு மட்டும் குடிப்பதற்குக் கையில் காசு தனியாகத் தந்துவிட வேண்டும் என்றான். ராமதுரை ஒத்துக்கொண்டு அவர்கள் எங்கே விளை யாடுவார்கள் என்று கேட்டான். தான் இப்போதே புறப்பட்டுப் போய் ஒரு சாமியானா போடுகின்றவனிடமும் பெட்ரோமாக்ஸ் காரனிடமும் சொல்லிவிட்டு வருவதாகவும் அப்படியே வரும்போது சீட்டுக் கச்சேரிக்கு ஆட்களை அழைத்து வருவதாகவும் சொன் னான். ராமதுரை தன் ஹேண்ட்பேக்கிலிருந்து ஐநூறு ரூபாயை எடுத்துக் கொடுத்தான். இன்னொரு ஐநூறு ரூபாய் தேவைப்படும் என்று சொல்லி சில்லறையாக வாங்கிக்கொண்டான் வீட்டுக்காரப் பெண்ணின் மருமகன். அடுத்த சில நிமிஷங்களுக்குப் பிறகு அவன் பைக்கை எடுத்துக்கொண்டு வெளியே புறப்படுவது கேட்டது.

வீட்டுக்காரப் பெண்மணியின் அழுகை ஐந்து நிமிஷங்களில் நின்றுபோயிருந்தது. அவள் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு ஏதாவது வேண்டும் என்றால் கேளு என்று ஆறுதல் சொல்லிய படியே திரும்பவும் மாடிக்கு ஏறிப் போய்விட்டாள். சம்பத்தின் வீட்டில் அதிகம் பொருட்களே இல்லை. ஒன்றிரண்டு பிளாஸ்டிக் குடங்கள். அழுக்கேறிய இரண்டு தலையணைகள். ஒரு பாய். பழைய

ஸ்டவ் ஒன்று. அதை தவிர அறையின் ஒரு மூலையில் நாற்பது ஐம்பது பினாயில் பாட்டில்கள் இருந்தன. ஒருவேளை பினாயிலை வீட்டிலே தயார் செய்து விற்றானோ என்னவோ?

சம்பத் தலைமாட்டில் ஒரேயொரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அவன் தலைக்கு வைத்திருந்த தலையணையில் ஒரு சேலையைச் சுற்றி வைத்திருந்தாள் அவனது மனைவி. அரை மணி நேரத்தின் பிறகு வீட்டின் வாசலில் ஒரு சாமியானா போடுவதற்காக மூன்று சக்கர சைக்கிள் வந்து நின்றது. இரண்டு மூன்று பேர் ஏறி கயிறுகளைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். அவர்களே பெட்ரோமாக்ஸ்.லைட்டும் கொண்டுவந்திருந்தார்கள். விளக்கைக் கொளுத்தி வைப்பதற்காக ஒரு மர ஸ்டூல் வேண்டும் என்று கேட்டார்கள். ஜெயந்தி தன்னிடம் ஸ்டூல் இல்லை என்றாள். இதற்குள் வீட்டுக்காரப் பெண்மணியின் மருமகன் வந்து சேர்ந்திருந்தான். அவன் தன் வீட்டிலிருந்து ஒரு மர ஸ்டூலை எடுத்து வந்து போட்டான். பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் சாவு மெல்ல ஊர்ந்து அந்த வீடு முழுவதும் நிரம்பத் துவங்கியது. வெளிச்சத்தில் சம்பத்தின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்த ஜெயந்தி சப்தமிட்டு அழத் துவங்கினாள். ராமதுரை வந்துவிட மாட்டானா என்ற தவிப்பில் நான் அந்த வீட்டின் வாசலில் நின்றுகொண்டேயிருந்தேன்.

சாமியானாவிற்குள் ஒரு பாயை விரித்து நாலைந்து பேர் சீட்டாடத் துவங்கியிருந்தார்கள். அதில் பனியனும் லுங்கியும் கட்டிக்கொண்டு வீட்டுக்கார அம்மாளின் மருமகனும் இருந்தான். எனக்கு அங்கிருந்து உடனே போய்விட வேண்டும் போலிருந்தது. சாவின் வெளிச்சம் என் மீதும் ஏறிக்கொண்டிருப்பது போலிருந்தது. நான் வாசலுக்கு வந்து எங்காவது நல்ல இருள் கிடைத்தால் அதற்குள் கொஞ்ச நேரம் நின்றுகொள்ளலாம் என்பது போல நடக்கத் துவங்கினேன். சம்பத்தின் வீடு இருந்த இடம் மிக நெரிசலான பகுதியாக இருந்தது. சாலைகளில் பள்ளம் தோண்டிப் போட்டிருந்தார்கள்.

நான் மேற்கு நோக்கி நடந்து யாருமற்ற பால் பூத் ஒன்றின் இருளுக்குள் நின்று கொண்டேன். சம்பத்தும் நானும் கன்யாகுமரிக்குப் போவதற்கு முந்திய இரவில் அலைந்து திரிந்தது நினைவிற்கு வந்தது. எவ்வளவு நேரம் அங்கேயே நின்றிருந்தேன் என்று தெரியவில்லை. ஆனால் நான் அங்கேதான் நிற்பேன் என்று அறிந்தவனைப் போல ராமதுரை பால் பூத் இருந்த இடத்தின் அருகே வந்து என் பெயரைச் சொல்லி அழைத்தான். நான் இருளில் இருந்து வெளியே வந்தேன். அவன் மாரியப்பன் வந்து சேர்ந்திருப்பதாகச் சொன்னான். நானும் ராமதுரையும் திரும்பவும் சம்பத் வீட்டிற்கு வருவதற்காக இருளுக்குள்ளாகவே வந்து நடந்துகொண்டிருந்தோம்.

மாரியப்பன் நீண்ட நாட்களுக்குப் பிறகு சென்ற வருடத்தின் நவம்பர் மாதத்தில் சம்பத்தை டவுன்ஹால் ரோட்டில் வைத்து தற்செயலாகச் சந்தித்தான். அதுவும் சாலையில் மாரியப்பன் என்று தன் பெயரை சப்தமாக ஒருவன் கூப்பிடுவதைக் கேட்டுத் திரும்பிய போதுதான் அது நடந்தது. சம்பத் நீல நிற பேண்டும் முழுக்கை வெள்ளைச் சட்டையும் போட்டு இன் பண்ணிக்கொண்டு கையில் ஒரு பெரிய சூட்கேசுடன் நின்றிருந்தான். அவனது தலைமயிர்கூட வெட்டப்பட்டிருந்தது. ஆளும் சற்றே தொப்பை விழுந்து பெருத்திருப்பது போலிருந்தது. அவன் கையைப் பிடித்துக் கொண்டு எங்கடா போயிட்டு இருக்கே என்று கேட்டான். தான் இப்போது கிட்பண்ட் ஆபீஸில் வேலை செய்வதாகவும், அதன் தலைமை அலுவலகம் கிம்மக்கல்லில் இருப்பதாகவும் மாரியப்பன் தெரிவித்தான். ஏதாவது முக்கியமான வேலையா என்று சம்பத் திரும்பவும் கேட்டான். இல்லை, மாதாந்திரக் கூட்டம் நடக்கிறது, அவ்வளவு தான் என்றதும் சம்பத் எங்காவது உட்கார்ந்துகொண்டு காபி சாப்பிடலாமா என்று கேட்டான். எங்கே போவது என்று யோசித்துக்கொண்டிருப்பதற்குள் சம்பத் அவனை அழைத்துக்கொண்டு டாக்சி ஸ்டாண்டுகளைக் கடந்து, ஒரு சந்தில் நுழைந்து ஹோட்டல் கிலோன் என்ற கடைக்குக் கூட்டிச் சென்றான்.

ஹோட்டலில் ரேடியோ பாடிக்கொண்டிருந்தது. கல்லாவில் கூட யாருமில்லை. பழைய கல் பெஞ்சுகள் போட்டிருந்த ஹோட்டல். பச்சைக் கலர் மரநாற்காலிகள். சுவரில் நிறம் அழிந்துபோன அஜந்தா ஓவியங்கள். ரசம் உதிர்ந்துபோன ஆள் உயரக் கண்ணாடி ஒன்று உள்ளே நுழையுமிடத்தில் பெரிய மரச் சட்டம் போட்டுப் பொருத்தப்பட்டிருந்தது.

சம்பத்தும் அவனும் ஒன்றாகக் கண்ணாடியில் நின்று தங்களைப் பார்த்துக்கொண்டார்கள். சம்பத் தனது தொப்பை தெரிவதைக் கண்டு வயிற்றை உள் இழுத்தபடியே இந்த சட்டை நன்றாக இருக்கிறதா என்று கேட்டான். கொஞ்சம் இறுக்கமாகத் தெரிகிறது என்றதும், இங்கேதான் ரோட்டில் வாங்கினேன், முப்பத்தைந்து ரூபாய் என்றபடி கண்ணாடியில் தெரியும் மாரியப்பனை உற்று நோக்கினான். மாரியப்பனுக்குக் காதோரம் நரைத்துப்போயிருந்தது. கன்னங்களும் ஊதிப் போயிருந்தன. சம்பத் கண்ணாடியின் அருகில் இருந்த நிறைய ஸ்விட்சுகளில் இருந்து சரியாக ஒரு மின் விசிறியைச் சுழல விட்டான். இங்கே முன்னாடி வந்திருக்கிறானா என்று கேட்டேன். அவன் தெரிந்த கடைதான் என்று சொன்னான்.

இருவரும் ஒரு பெரிய மேஜையாகப் பார்த்து அமர்ந்தோம். சம்பத் தனது சூட்கேஸை மேஜை மீது தூக்கி வைத்துவிட்டு, தான் இப்போது ஒரு ரெப்ரெசன்டேடிவ் என்று சொல்லியபடியே சூட்கேஸைத் திறந்து காட்டினான். அதன் உள்ளே நூற்றுக்கணக்கான சைசில் சிறியதும் பெரியதுமாக போல்டும் நட்டுகளுமிருந்தன.

கோல்டன் சன் என்ற கம்பெனியின் தயாரிப்புகள் இது என்று சொல்லி இரும்புக் கடைகளுக்குச் சென்று போல்ட், நட்டுகளை விற்பதற்கு ஆர்டர் வாங்கித் தர வேண்டியது தனது வேலை என்றும் இதற்காக மாதம் இரண்டாயிரம் சம்பளமும் கமிஷன் பனிரெண்டரை சதவீதமும் கிடைக்கும் என்றான். அந்த நட்டுகளை ரகம் வாரியாகப் பிரித்துச் சிறிய பிளாஸ்டிக் உறைகளுக்குள் போட்டு வைத்திருந்தான். சமையற்கட்டிலிருந்து நிழல் போல யாரோ நடந்து வருவது தெரிந்தது. சம்பத் சப்தமாக இரண்டு காபி என்று சொன்னான். உள்ளேயிருந்து பால் சூடாகவில்லை என்று மறுகுரல் வந்தது.

சம்பத் பிளாஸ்டிக் உறைகளைப் பிரித்துச் சில போல்ட், நட்டு களை மேஜையில் கொட்டினான். அதைக் கையில் தூக்கிப் பார்க் கும்படியாகச் சொன்னான். நான் கையில் தூக்கிப் பார்த்தபோது அது எடையற்றதாகயிருந்தது. சம்பத் சிரித்துக் கொண்டே இதுதான் ஜெர்மன் டெக்னாலஜி, எடையில்லாத இரும்பு என்று சொல்லிய படியே தனது நிறுவனத்தின் வளர்ச்சியைப் பற்றி விரிவாகச் சொல் லிக்கொண்டிருந்தான். நான் சம்பத்தின் முகத்தைப் பார்த்தபடியே இருந்தேன். அதில் இவ்வளவு காலம் இல்லாத கனவு விரிந்திருந்தது. நீண்ட நேரத்திற்குப் பிறகு பால் வாடை மாறாத காபி வந்தது. காபி கொண்டுவந்தவரிடம் சம்பத், சோழவந்தானில் இருந்து வரு வாரே சிங்காரம் மாஸ்டர், அவரு இல்லையா என்று கேட்டான். காபியைக் கொண்டு வந்தவன் அவர் இப்போது தல்லாகுளத்தில் உள்ள மீனாட்சி பவனில் வேலை பார்ப்பதாகச் சொன்னார். சம்பத் காபிக்கு இன்னமும் கொஞ்சம் சக்கரை அதிகமாக வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். நான் சம்பத்தின் திறந்து கிடந்த நட்டு, போல்டு பெட்டிகளைப் பார்த்துக்கொண்டேயிருந்தேன்.

காபியைக் குடித்து முடித்த பிறகு மெதுவாகச் சம்பத் சொன் னான். எனக்கு கல்யாணமாகிருச்சிடா.. ரெண்டு மூணு மாசமாச்சி. யாருக்கும் சொல்ல முடியலை. வயசு நாற்பத்தியொண்ணு ஆச் சில்லை. இனிமே சொல்லிக்கிட்டா கல்யாணம் பண்ண முடியும் என்றான். சம்பத் இந்த வேலைக்குச் சேர்ந்து எத்தனை நாட்களாகி விட்டது என்று கேட்டேன். ஆறு நாட்கள் என்று சொல்லியபடியே சிரித்தான். இருவரும் ஹோட்டலை விட்டு வெளியே வந்தோம். காபி நன்றாகவே இல்லை, வேறு எங்காவது டீ குடிக்கலாமா என்று கேட்டான். எனக்கு வேண்டாம் என்று மறுத்ததும் தன்னோடு திண்டுக்கல் வரை வர முடியுமா என்று கேட்டான். பேருந்து நிலை யத்தில் டேப் ரிக்கார்டர் இல்லாத பஸ்ஸாகப் பார்த்து ஏற வேண் டும் என்று சம்பத் நீண்ட நேரம் காத்துக்கொண்டிருந்தான். கடைசி யாக ஒரு அரசுப் பேருந்தில் ஏறி உட்கார்ந்து கொண்டதும் சிறு வனைப் போல மிகச் சந்தோஷமாக ஜன்னலின் வெளியே எட்டிப் பார்த்தபடியே வந்தான். பஸ் மிக மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது.

தனக்கு மூன்று மாவட்டங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் இந்த மாவட்டங்களில் நகரம் வாரியாக உள்ள இரும்புக் கடைகளின் பட்டியலும் கொடுக்கப்பட்டிருப்பதால் வேலை ரொம்பவும் எளி தானது என்றும், தான் கடந்த இரண்டு நாட்களில் நாற்பத்திரண்டு கடைகளைப் பார்த்துவிட்டேன், ஆர்டரே பத்தொன்பது ஆயிரத் துக்கு வாங்கியிருக்கிறேன் என்றான். சம்பத்தின் மனைவி என்ன செய்கிறாள் என்றோ, எப்படியிருப்பாள் என்றோ கேட்க வேண்டும் போலிருந்தது. அவன் உற்சாகமாக இரும்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததால் நான் எதையும் கேட்டுக்கொள்ளவில்லை. தான் எவர்கிரீன் லாட்ஜில் ரூம் போட்டிருப்பதாகவும், தினமும் மாலை யில் நான்கு மணிக்கு அறைக்குத் திரும்பி குளித்துவிட்டு பழைய புத்தகக் கடைகளில் சுற்றியலைந்து ஏதாவது புத்தகம் வாங்கிக் கொண்டு வந்து அறையில் படித்துக்கொண்டிருப்பதாகவும் சொன்னான்.

திண்டுக்கல்லிற்கு நாங்கள் வந்து சேரும்போது மணி பனி ரெண்டைத் தாண்டியிருந்தது. பஸ்ஸை விட்டு இறங்கியதும் சம்பத் தன் சூட்கேஸைத் திறந்து அதன் சைடில் போட்டு வைத்திருந்த கூலிங் கிளாசை எடுத்துப் போட்டுக்கொண்டு விடுவிடுவென நடக் கத் துவங்கினான். ஏதோ ஒரு நாடகத்திற்கு ஒப்பனை அணிந்தவன் தெருவில் நடந்து செல்வது போலிருந்தது அந்தக் காட்சி. இரும்பு வாளிகளும் பெயிண்டு டப்பாக்களும் தொங்கிக்கொண்டிருந்த கடையில் ஏறி ஒரு முக்காலியில் உட்கார்ந்தபடியே சம்பத் தனது பையில் இருந்த நட்டு போல்ட்டுகளை எடுத்துக் காட்டியதும் அவர்கள் ஏதோ விசாரித்துக்கொண்டிருந்தார்கள்.

தனது பையில் இருந்து சிறிய ரசீது புக் ஒன்றை எடுத்து அவர் களின் ஆர்டரைக் குறித்துக்கொண்டு ரசீது போட்டுக்கொடுத்து விட்டு பத்து நிமிஷத்திற்குள் அவன் கடையை விட்டுக் கீழே இறங்கி என்னைப் பார்த்து, இவ்வளவுதான் வேலை, மதுரைக்குப் போவோமா என்றான். வேறு கடைகளுக்கு அவன் போக வில்லையா என்று கேட்டதும், இன்றைக்கு இந்த ஒரு ஆர்டர் போதும், போனில் சொல்லிவிட்டால் இன்னொரு தடவை பழனிக்கு வரும்போது அப்படியே வழியில் இறங்கிப் பார்த்துக் கொள்ளலாம் என்றான். அவனது வணிகச் சாமர்த்தியத்தை நான் பாராட்ட வேண்டும் என்று எதிர்பார்த்தவன் போலச் சப்தமாகச் சிரித்துக்கொண்டிருந்தான்.

இருவரும் மதுரைக்குக் கிளம்பலாம் என்று முடிவு செய்து பேருந்து நிலையத்திற்கு வந்தபோது, உடனே மதுரைக்குப் போய் என்ன செய்யப்போகிறோம், சினிமாவிற்குப் போகலாம் என்றான். இருவரும் ஒரு திரையரங்கத்தின் வாசலில் போய் நின்றதும் சம்பத் படம் எவ்வளவு நேரம் ஓடக்கூடியது என்று விசாரித்துக்கொண்டி ருந்தான். பிறகு ஏதோ யோசித்தவன் போல நாம் மதுரைக்குப்

போய் லாட்ஜில் கொஞ்சநேரம் ஓய்வு எடுத்துக்கொண்டுவிட்டு இரவு சினிமாவிற்குப் போகலாம் என்றான். அவன் சொல்வது எதையும் மறுக்க முடியாதபடியாக ஏதோ ஒரு மந்திரம் அவனிட மிருந்தது.

இருவரும் எவர்கிரீன் லாட்ஜிற்குத் திரும்பியபோது மணி மூன்றாகியிருந்தது. மாடிப்படி ஏறும்போது அவன் நாராயணன் இருந்தா மேல வரச் சொல்லுங்க என்று மேனேஜரிடம் சொல்லிய படியே ஏறினான். நாங்கள் அறைக்குப் போன போது பதினைந்து வயதுப் பையன் ஒருவன் புன்சிரிப்போடு அதுக்குள்ளே வந்துட்டீங்க என்று சம்பத்திடம் கேட்டான். சம்பத் தலையாட்டிவிட்டு நீ சாப் பிட்டியா என்று கேட்டான். அந்தப் பையன் இல்லை என்று தலை யாட்டியதும் நல்ல பிரியாணியா பாத்து வாங்கிக்கோ, அப்புறம் வெற்றிலை பாக்கு, பழம், உனக்கு என்ன வேணுமோ வாங்கிட்டு சொடக்கு போடுறதுக்குள்ளே வரணும் என்று இரண்டு நூறு ரூபாயைக் கொடுத்தான்.

சம்பத்தின் அறையில் பெரிய குடிகூரா பவுடர் டப்பா இருந்தது. டர்க்கி டவல் கூடப் புதிதாக வாங்கியிருக்கிறான் போலிருந்தது. கட்டிலில் நாலைந்து புத்தகங்கள் கிடந்தன. சம்பத் பேனைப் போட்டுவிட்டுப் படுக்கையில் சாய்ந்து படுத்துக் கொண்டான். நான் எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டேன். சம்பத் விட் டத்தைப் பார்த்தபடியே சொன்னான். கல்யாணம் பண்ணிக் கிட்டது கொஞ்சம் சௌகரியமாகத்தான் இருக்கு. நல்லா வேலைக்கு சாப்பாடு. உடம்பு சுகம். வேலை பாக்கிறது ஒண்ணும் பெரிசில்லை ... இந்தா பாரு ... மனக வச்சதும் கிடைச்சிருச்சி ... இப்படியே வாழ்க்கையை ஓட்டிர வேண்டியதுதான். நான் சுவரில் இருந்து உதிரும் சுண்ணாம்பை விரல் நகத்தால் பிய்த்துக் கொண்டே இருந்தேன்.

சாப்பாடு வந்து சேர்ந்தது. ஆனால் சம்பத் சொல்லாமலே அந்தச் சிறுவன் இரண்டு பீர் புட்டிகள் வாங்கிக்கொண்டு வந்திருந் தான். அதை எடுத்து மேஜை மீது வைத்ததும் சம்பத் சிரித்துக் கொண்டே இது எதுக்குடா என்று கேட்டான். நாராயணன் தானும் சிரித்துக்கொண்டு, கூலா இருந்துச்சி ... அதான் வாங்கிட்டு வந் தேன். விருந்தாளி வந்திருக்காரு ... ஒரு பீரு கூட வாங்கிக் குடுக்காம இருந்தா எப்படி? என்றான். இதுக்கு காசு என்று சம்பத் எழுந்து சட்டையை எடுக்க முயன்றபோது நாராயணன், அது என் கணக்கில எழுதியிருப்பான். பிறகு செட்டில் பண்ணலாம். முதல்ல பீரைக் குடிங்க என்றான். சம்பத் தன் பல்லால் கடித்து இரண்டு பீர் பாட்டில்களையும் திறந்தான். பிறகு ஒன்றை என்னிடம் தந்துவிட்டு உனக்கு என்று நாராயணனிடம் கேட்டான். நாராயணன் தன் டவுசர் பையில் இருந்து ஒரு சிறிய பீர் பாட்டிலை எடுத்து ஆட்டிக் காட்டினான். நாராயணனும் சம்பத்தும் நீண்ட கால நண்பர்களைப்

போலச் சிரித்துக்கொண்டார்கள்.

நாராயணன் சொன்னது போலவே மிகக் குளிர்ச்சியாக இருந்தது பீர். சம்பத் ஒரே மூச்சில் குடித்து முடித்துவிட்டு பாட்டிலைக் கீழே வைத்தான். சிறுவன் பீரைப் போயி இப்படி குடிக்கிறீங்க என்று கேலி செய்தான். சம்பத் தனக்குப் பசிக்கிறது என்று சொல்லியபடியே பிரியாணியைப் பிரித்து வேகவேகமாகச் சாப்பிட்டான். பாதி சாப்பாட்டில் எழுந்து போய் வாந்தியெடுத்தான். சிறுவன் பதட்டத்துடன் உடம்புக்கு முடியலையாண்ணே என்று கேட்டான். சம்பத் மறுத்தபடியே வெறும் வயிற்றிலே பீரை குடிச்சது ஒத்துக் கிடலை என்றான். சம்பத்தின் முகம் இப்போது வெளிறிப் போயிருந்தது. நான் பாதி பாட்டிலைக் கீழே வைத்துவிட்டு சாப்பிடத் துவங்கினேன்.

சம்பத் பெருமூச்சிட்டபடியே படுக்கையில் கிடந்தான். யாரோ நாராயணனைக் கூப்பிட்டார்கள். அவன் வெளியே போனதும் நான் சற்றே கோபமான குரலில் எதுக்குடா உடம்பை கெடுத்துக் கிடுறே என்று கேட்டேன். அவன் பதில் சொல்லவில்லை. அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக மூச்சிரைப்பு ஏற்படத் துவங்கியது. கைகளை இடுப்போடு சேர்த்து பிடித்துக்கொண்டு ஹாவ் ஹாவ் என்று சப்தமிடத் துவங்கினான். பிறகு படுக்கையிலே வாந்தி எடுக்க ஆரம்பித்தான். எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. நாராயணனைக் கூப்பிடலாம் என்று நினைத்து சப்தமிட்டேன். அந்தக் குரல் அறைக்குள்ளாகவே சுற்றிக்கொண்டிருந்தது.

சம்பத்தின் கண்கள் புடைத்துக்கொண்டு கசிந்தன. அவன் தன் உதட்டைத் தானே கடித்துக்கொண்டிருந்தான். நான் அவசரமாக அறையை விட்டு வெளியே ஓடி வந்து நாராயணா என்று சப்தமிட்டேன். அந்தப் பையன் மாடிப்படிகளில் ஏறி ஓடி வருவது தெரிந்தது. நாங்கள் ஒரு ரிக்ஷாவில் சம்பத்தை உட்கார வைத்து சிம்மக்கல்லில் இருக்கும் ஒரு மருத்துவமனைக்குக் கூட்டிப் போனபோது அவன் முகம் கறுத்துப்போயிருந்தது. மருத்துவமனையில் டாக்டர் இல்லை என்றும் அவர் நான்கு மணிக்கு வருவார் என்றும் காத்திருக்கச் சொன்னார்கள். நாராயணன் வேறு ஒரு மருத்துவரிடம் போகலாம் என்று சொன்னான். நான் மறுத்துவிட்டு பிளாஸ்டிக் நாற்காலி ஒன்றில் சம்பத்தை உட்காரச் சொன்னேன். அவன் பயந்த சிறுவனைப் போல என் கைகளை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டான்.

டாக்டர் சம்பத்திடம் அதிகம் கேள்விகள் கேட்கவில்லை. அவன் எப்போது குடித்தான் என்று மட்டுமே கேட்டார். நான் மூன்று மணியிருக்கும் என்றேன். ஒரு ஊசியும் சில மாத்திரைகளும் வாங்கிக் கொண்டு வரும்படி சொன்னார். நாராயணன் எதிரில் இருந்த கடையில் இருந்து வாங்கிக்கொண்டு வந்தான். திரும்பவும் நாங்கள் லாட்ஜிற்கு வந்ததும் நாராயணன் முப்பத்திரண்டாம் அறையின் சாவியை எடுத்துக்கொண்டு வந்து அதில் சம்பத்தைப் படுக்க

வைத்தான். அன்று மாலை வரை சம்பத் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

நான் ஒரு ஸ்டூலைப் போட்டுக்கொண்டு மூன்றாவது மாடியின் உயரத்திலிருந்து நகரின் இயக்கங்களை ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். சம்பத்தை இப்படி நட்டு, போல்டு விற்பனை செய்பவனாகப் பார்ப்பது மனதிற்கு என்னவோ செய்தது. சாலையில் வெயில் பாதசாரிகளின் கால்களில் மிதிபட்டுக்கொண்டிருந்தது. அப்போது டாக்சி ஸ்டாண்ட் அருகில் இருந்த ஒரு மரத்தைப் பார்த்தேன். அது மரம் என்பதற்கான சிறிய அடையாளம்கூட இன்றி சுற்றிலும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டு புழுதி படிந்து போயிருந்தது. ஏதோ நாடக மேடையில் அலங்காரத்திற்காகச் செய்து வைக்கப்பட்ட அட்டை மரத்தைப் போல அது அசைவற்று நின்றிருந்தது. இலைகள் கூட புழுதி படிந்த நிறத்திலிருந்தன. மரத்தின் அடியில் ஒரு தண்ணீர்ப் பானை வைக்கப்பட்டிருந்தது. மரத்தில் பெரிய ஆணியடித்து அதில் ஒரு செயினில் டம்ளரை மாட்டியிருந்தார்கள். சிறு வியாபாரிகளில் ஒருவன் சாலையில் விதவிதமான நிறங்களில் கத்தும் தவளை பொம்மைகளைப் போட்டு விற்றுக்கொண்டிருந்தான். யாரும் நின்று பார்க்காத போதும் அவன் ரப்பர் தவளைகளைத் தன் கையால் இழுப்பதும் கத்த வைப்பதும் வேதனை தருவதாகவே இருந்தது.

எறும்புகள் புற்றிலிருந்து வெளியே வருவதைப் போலப் பேருந்து நிலையத்திலிருந்து ஆட்கள் வெளியேறிக்கொண்டேயிருந்தார்கள். இன்னமும் திறக்கப்படாத ஒரு சிலை சாக்குகளால் மூடப்பட்டு நான்குசாலைச் சந்திப்பின் நடுவில் நின்று கொண்டிருந்தது. மாலையின் மஞ்சள் வெளிச்சமும் மறைந்த பிறகு நாராயணன் ஒரு டீ வாங்கிக்கொண்டு வந்து என்னிடம் நீட்டியபடியே சம்பத் சார் எழுந்துவிட்டாரா என்று கேட்டான். நான் இல்லை என்றதும் நீங்க அவர் பிரண்டா என்று திரும்பவும் கேட்டான். அவரோடு படித்தவன் என்று சொன்னதும் நல்லவரு சார். நான் தான் பீரு வாங்கிக் கொண்டு வந்து குடுத்து அவரை இப்படிப் பண்ணிட்டேன் என்று வருத்தம் கலந்த குரலில் சொன்னான். பிறகு கதவைத் தள்ளி உறங்கும் சம்பத்தை ஒரு முறை பார்த்துவிட்டு கதவைச் சாத்திவிட்டு வேறு ஏதாவது வேணுமா என்று கேட்டான். சம்பத் வாந்தி எடுத்திருந்த அறையைச் சுத்தம் செய்வதற்காக இரண்டு பணிப்பெண்கள் கையில் விளக்குமாறும் பிளாஸ்டிக் வாளியுமாக நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

ஏழு மணிக்கு நான் வீட்டிற்கு ஒரு போன் செய்துவிட்டு வரலாம் என்று கீழே இறங்கிச் சென்றேன். என் மனைவியும் குழந்தைகளும் மதுரையில் இருந்து வாங்கிக்கொண்டு வர வேண்டிய பொருட்களை நினைவுபடுத்தினார்கள். நான் வருவதற்கு நேரமாகும் என்று சொல்லிவிட்டு ஒரு மாலைப் பேப்பரையும் கையில் வாங்கிக்

கொண்டு மாடியேறி வந்தபோது சம்பத் எழுந்து குளித்துவிட்டு ஈரத் தலையோடு சிரித்தபடியே நின்றுகொண்டிருந்தான். என்னைக் கண்டதும் அவனின் அந்தச் சிரிப்பு அதிகமானது. பயந்துட்டே யாடா . . . பீரு ஓத்துக்கிடலை வேற ஒண்ணும் இல்லை. நாராயணன் கூட வந்தானா என்று கேட்டான். நான் பதில் பேசாமல் நாற்காலி யில் அமர்ந்தபடியே மாலைப் பேப்பரைப் படிக்கத் துவங்கினேன். சம்பத் விடுவிடுவென படியில் இறங்கி கீழே சென்றான். அவன் திரும்பி வரும்போது சவரம் செய்து கொண்டிருந்தான் என்பது தெரிந்தது.

இரவு நான் ஊருக்குப் புறப்படுவதாகச் சொன்னேன். இன்னும் ஒரேயொரு உதவி மட்டும் நான் செய்ய முடியுமா என்று தணிவான குரலில் கேட்டான். சொல்லு என்றதும் அவன் தனது கிராமத்திற் குக் காலையில் போவதாகவும் சில வருடமாகவே வீட்டில் பிரச் சினைகள் ஏற்பட்டு யாருடனும் பேச்சுவார்த்தை அற்றுப் போய் விட்டதால் தான் திரும்பிப் போய் பார்க்கக் கூச்சமாக இருக்கிறது. நீயும் வந்தால் போனதும் திரும்பி வந்துவிடலாம் என்றான். இப் போது ஊரில் யார் இருக்கிறார்கள் என்று கேட்டேன். பெரிய அக்கா, மாமா, அவர்கள் பிள்ளைகள் இருப்பதாகவும், சின்ன அக்கா திருத்தங்கலில் இருப்பதாகவும் சொன்னான்.

நான் சம்பத்தின் வீட்டிற்கு நாலைந்து தடவைகள் போயிருக் கிறேன். சிறிய விவசாயக் குடும்பம். அவர்களுக்கு என்று ஒரு இறவைக் கிணறும் நாலைந்து ஏக்கர் நிலமும் இருந்தது. அருகாமை யில் கொஞ்சம் நிலத்தைக் குத்தகைக்கும் எடுத்திருந்தார்கள். அன் றிரவு சம்பத் கட்டிலில் படுத்துக்கொண்டான். நான் கீழே படுத் திருந்தேன். அவன், அறை விளக்குகளை அணைக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டு அவன் உறங்கிவிட்டால்கூட விளக்கு எரிந்து கொண்டே இருக்கட்டும் என்றான்.

பிறகு நெடுநேரம் படுக்கையில் கிடந்து புரண்டுகொண்டே இருந் தான். ஒரு சிகரெட்டை எடுத்துக்கொண்டு வெளியே போய் பற்ற வைத்து பிடித்துக் கொண்டிருந்தான். பாதி சிகரெட்டோடு அறைக் கதவைத் தட்டி தூங்கிவிட்டாயா என்று கேட்டான். நான் இல்லை என்றதும் இன்றைய இரவில் எண்ணிக்கையற்ற நட்சத்திரங்கள் இருக்கின்றன . . . வெளியே வந்து பார் என்றான். நான் வெளியே வந்து நின்றபோது ஆகாசம் தெரியாத அளவு நட்சத்திரங்கள் கொட்டிக் கிடந்தன. எனது ஊர் கடற்கரையில் இருப்பதால் சில நாட்களில் இதுபோல மிதமிஞ்சிய நட்சத்திரங்கள் பெருகிய இரவைக் கண்டிருக்கிறேன். ஆனால் இன்று ஒரு நகரத்தின் மீது இத்தனை மினுக்கம் இருப்பதைக் காணும்போது மனது பரவசம் கொள்ளவே செய்தது.

சம்பத் தனது சிகரெட்டை மிக மெதுவாகப் புகைத்தபடியே ஆகாசத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு நான்

உன்னைக் கஷ்டப்படுத்துகிறேனா என்று கேட்டான். இல்லை என்று தலையசைத்ததும் என்னால் எவரையும் நிம்மதியாக வைத்துக் கொள்ள முடியாது. என் சுபாவமே அப்படித்தான். நான் ரொம்பவும் சுயநலமானவன். நீங்களாவது கொஞ்சம் விட்டுக்கொடுக்கிறீர்கள். என்னால் அப்படியிருக்க முடியாது. எனது சுயநலத்திற்காக நான் பலரோடும் சண்டையிட்டு இருக்கிறேன். இதை சுயநலம் என்றுகூட சொல்ல முடியாது. ஒரு பயம். பயம் தானே சுயநலமாகத் தன்னை மாற்றிக்கொள்கிறது. எனக்கு ஒரு பயமிருக்கிறது. அந்த பயம் இன்று நேற்று ஏற்பட்டதில்லை. எனது பனிரெண்டு வயதிலிருந்து என்னைத் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறது. என்னை எல்லோரும் கைவிட்டுவிடுவார்கள் என்று பயந்துகொண்டிருக்கிறேன். எதற்கு என்று காரணம் தெரியவில்லை. ஆனால் அந்த பயம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்துகொண்டேயிருந்து இன்று முழு உருவம் எடுத்துவிட்டது. ஒரு கற்றாழைச் செடியைப் போல யாருமே அணைத்துக்கொள்ள முடியாத ஆளாக இருக்கிறேன். என்னை அணைத்துக்கொண்டு எவரும் சாந்தப்படுத்திவிட முடியவே யில்லை. ஒருவேளை சாந்தப்படுத்திவிடக் கூடாது என்று விருப்பப் படுகிறேனோ என்னவோ தெரியவில்லை. நண்பர்களும் ஆசிரியர் களும் நான் அறிந்த பெண்களும் அந்நியர்களும் எல்லோரும் என்னைச் சேர்த்து அமுக்கினாலும் நான் ஒருபோதும் தண்ணீரில் மூழ்காத தக்கையாகத்தானிருக்கிறேன். வாழ்வு என்னைத் தனக்குள் மூழ்கிடச் செய்ய முடியவில்லை. நான் ஒரு தக்கை. கிணற்றில், ஆற்றில், கடலில் என்று எவ்வளவு தண்ணீரில் தூக்கிப் போட்டா லும் மிதக்கும் தக்கை என்றான். நான் சம்பத்திற்கு என்ன பதில் பேசுவது என்று தெரியாமல் நின்று கொண்டிருந்தேன். சம்பத் இன்னொரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான். சிகரெட் புகை என்னைச் சுற்றிவரத் துவங்கியது. சம்பத் நட்சத்திரங் களைப் பார்த்தபடியே தனது பால்ய கால நிகழ்வு ஒன்றைப் பற்றிச் சொல்லத் துவங்கினான்.

அப்போது எனக்குப் பதினாலு வயதிருக்கும். எங்கள் ஊருக்கு அருகாமையில் மகாலிங்க மலை என்று ஒரு மலையிருக்கிறது. அங்கே மாசி மாதத்தின் அமாவாசையில் சாமி கும்பிடுவதற்காக கிராமம் கிராமமாகப் புறப்பட்டுப் போவார்கள். ஒவ்வொரு வீட்டி லிருந்தும் ஒரு ஆட்டுக்கிடாவை சாமிக்குப் பலி கொடுப்பதற்காகக் கொண்டு போவார்கள். நாங்களும் ஒரு ஆட்டுக்கிடாவைக் கோவி லுக்காக வளர்த்துக் கொண்டிருந்தோம். அந்த வருசம் மகாலிங்க சாமி கும்பிடுவதற்காக ஊரே புறபட்ட போது நாங்களும் குடும்பத் தோடு ஒரு மாட்டுவண்டியில் புறப்பட்டோம்.

எங்கள் வீட்டில் நான் பிறந்து ஆறு வருடங்களுக்குப் பிறகு பிறந்தவள் சித்ரா. அவளுக்கு சிறுவயதிலிருந்தே ஆம்பளைப் பையன்களுடைய டவுசர், சட்டையைப் போட்டுக் கொள்வதில்தான் ரொம்பவும் ஆசை. இதற்காக அவள் உடலுக்குப் பொருந்தாத என்னுடைய சட்டைகளை எடுத்து மாட்டிக்கொண்டு திரிவாள். அய்யா எப்போதாவது அவளைத் திட்டினால்கூட அதைக் கழட்ட மாட்டாள். அன்றைக்கு மகாலிங்க மலைக்குப் போகும் போதுகூட என்னது ஊதா டவுசரையும், கோடு போட்ட பச்சை சட்டையையும் அணிந்து கொண்டுதான் வந்தாள். டவுசர் இடுப்பில் நிற்கவில்லை என்பதற்காக அம்மாவிடமிருந்து இரண்டு ஊக்குகள் வாங்கி மாட்டியிருந்தாள். அவளை மாட்டுவண்டியில் கேலி பேசியபடியே வந்தோம். அவளுக்கு ரொம்பவும் கோபம் வந்திருக்க வேண்டும், வழியில் யாருடனும் பேசிக்கொள்ளவேயில்லை.

மகாலிங்க மலை போவதற்கான சாலையில் வரிசை வரிசையாக மாட்டுவண்டிகள் போய்க்கொண்டிருந்தன. இரவெல்லாம் மாடுகள் நடந்துகொண்டேயிருந்தன. புளிய மரங்கள் அடர்ந்த பாதை. புளியின் வாசனை மிகவும் அடர்ந்தது. இருட்டிற்குள் மாடுகள் தலையசைத்தபடியே நடந்தன. அம்மாவும் அக்காக்களும் தூங்கியிருந்தார்கள். நான் தூங்காமல் ஆகாசத்தைப் பார்த்தபடியே வந்தேன். அமாவாசைக்கு முந்திய இரவு என்பதால் இருள் பிசுபிசுவெனத் தேனைப் போல இருந்தது. மலை எந்தப் பக்கம் இருக்கிறது என்றுகூடத் தெரியவில்லை. மாடுகள் திணறுவதை வைத்து மலைப்பாதை வந்துவிட்டது என்று மட்டும் தெரிந்துகொள்ள முடிந்தது. மாடுகள் மலைப்பாதையில் ஏற முடியாமல் தரதரவென கழிந்தன. தார்க்குச்சியால் அதன் புட்டத்தைக் குத்தியபடியே அய்யா வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தார்.

மானூத்து என்ற இடத்திற்கு நாங்கள் வந்து சேர்ந்தபோது அங்கே தீப்பந்தங்கள் எரிந்துகொண்டிருந்தன. ஒன்றிரண்டு ஆட்கள் தரையில் துண்டை விரித்து உறங்கிக் கிடந்தார்கள். எங்கள் வண்டியை வாகான ஒரு இடத்தைப் பார்த்து நிறுத்திவிட்டு நாங்களும் ஒரு பாறையை ஒட்டிப் படுத்துக்கொள்வதற்காக இடம் பிடித்தோம். அந்த இரவில் ஆயிரக்கணக்கானவர்கள் மலையின் வேறுவேறு பாறைகளில், மரத்தடிகளில் தீப்பந்தங்களுக்கடியில் உறங்கிக்கொண்டிருந்தார்கள். வெட்டவெளியில் படுத்திருப்பது மிகுந்த சந்தோஷம் தருவதாகயிருந்தது. அய்யா உறக்கம் வராமல் மறுநாள் சமையலுக்குத் தேவையான வெங்காயத்தை இருட்டிற்குள்ளாக உட்கார்ந்தபடியே உரித்துப் போட்டுக்கொண்டிருந்தார்.

நான் கண்விழித்தபோது மலையின் பிரம்மாண்டம் முகத்தில் அறைவது போலிருந்தது. என் வாழ்க்கையில் நான் அவ்வளவு பெரிய பாறையை அப்போதுதான் பார்த்தேன். யானையின் தொங்கும் அடிவயிற்றைப் போல அந்தப் பாறை இன்னொரு பாறையோடு

சேர்ந்து தொங்கிக்கொண்டிருந்தது. நாங்கள் அதனடியில்தான் உறங்கிக்கொண்டிருந்தோம் என்பது வியப்பாக இருந்தது. பாறைகள் இரண்டு மூன்று என ஒன்றோடு ஒன்று பிணைந்தபடி கண்ணுக்கு எட்டியவரை கிடந்தன. மலையின் மீது நடந்து செல்வதற்கான பாதையொன்று நீண்டு உள்ளே போய்க்கொண்டிருந்தது. நாங்கள் படுத்திருந்த இடத்திற்கு அருகில் இரண்டு கடம்ப மரங்கள் நின்று கொண்டிருந்தன. விடிகாலையிலே ஆடுகள் வெட்டப்பட்டு இறைச்சி சமைக்கப்படும் மணம் காற்றில் பரவிக்கொண்டிருந்தது. நாங்கள் கொண்டுவந்திருந்த ஆடும்கூட மஞ்சள் தண்ணீர் ஊற்றிக் குளிக்க வைத்து கழுத்தில் மாலையணிவிக்கப்பட்டுத் தயாராக நின்றது. ஆட்டை வெட்டுவதற்காக அய்யா கையில் பிடித்துக் கொண்டு நடந்தார்.

மகாலிங்க சாமி கோவிலின் வாசலில் எங்கும் ரத்தம் பீச்சி யடிக்கப்பட்டு பிசுபிசுத்தது. நான் பார்த்துக்கொண்டிருந்தபோது பூசாரி ஒரே வெட்டில் ஒரு ஆட்டின் தலையை இரண்டு துண்டாக் கினார். அதன் ரத்தம் பீச்சி எதிரில் இருந்த மரத்தில் அடித்தது. பூசாரி அதன் குருதியைக் கையில் அள்ளிக் குடித்தான். நான் அங் கிருந்து ஓடிவிடலாமா என்று நினைத்தேன். அய்யா எங்கள் ஆட்டைப் பூசாரியின் கையில் கொடுத்தார். அவன் உதிரம் குடித்த உதடுகளுடன் ரௌத்திரமான கண்களை உருட்டிக்கொண்டு ஆட்டின் தலையைப் பிடித்துக்கொள்ளச் சொன்னான். ஆட்டுத் தலை பாதி வெட்டப்பட்டு மீதி அப்படியே தொங்கியது. ரத்தம் அருகில் நின்ற என் மீது பீச்சியடித்தது. நான் நடுங்கிக்கொண்டிருந் தேன். ஆனால் என் அருகில் நின்ற சித்ரா ஆட்டு ரத்தத்தை ஒரு தூக்குவாளியில் பிடித்துக்கொண்டிருந்தாள்.

அய்யா பூஜை சாமான்களைத் தந்ததும் பூசாரி வாங்கி உள்ளே போட்டுவிட்டு எல்லோரது நெற்றியிலும் திருநீறு பூசிவிட்டார். பிறகு கறி சமைத்துச் சாப்பிடும்வரை விளையாடிக்கொண்டிருக் கும்படியாகச் சொன்னார். நான் சித்ராவிடம் ஒரு டம்ளர் எடுத்து வரும்படியாகச் சொல்லிவிட்டு பாறையின் மீதேறி நின்றுகொண்டி ருந்தேன். அவள் கீழே இறங்கி ஓடி ஒரு டம்ளரை எடுத்து வந்தாள். நானும் அவளுமாகக் குளிப்பதற்கு ஒரு சுனையைத் தேடி நடந்து கொண்டிருந்தோம்.

இரண்டு பெரிய பாறைகளுக்கு நடுவேயிருந்தது அந்த சுனை. நான் குனிந்து டம்ளரில் மோந்து மோந்து குளித்தேன். சித்ரா வழியில் பறித்திருந்த காந்தள் பூக்களைக் கையில் வைத்து முகர்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள். குளித்து முடித்ததும் சித்ரா போட்டுக் கொண்டிருந்த என் சட்டை, டவுசரை அவளிடமிருந்து பிடுங்கிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. என் சட்டையைக் கழட்டிக் கொடுடி என்று அவளிடம் கேட்டேன். அவள் அதெல்லாம் முடி யாது என்று மறுத்தாள். நான் வலுக்கட்டாயமாக அவளது

சட்டையைப் பிடுங்க முயற்சித்தேன். அவள் என்னிடமிருந்து தப்பி ஓடினாள்.

நான் வேகமாக ஓடி அவள் சட்டையைப் பின்னாடியிருந்து பிடித்து இழுத்தேன். தொப் என்று பாறையில் விழுந்ததில் அவள் கை முழுவதும் சிராய்ப்பு ஏற்பட்டு ரத்தம் கசிந்தது. அவள் அழுத படியே நின்றுகொண்டிருந்தாள். அவளிடமிருந்து சட்டை, டவுசரைப் பிடுங்கிக்கொண்டு நான் அணிந்தபடியே என்னுடைய ஈரச் சட்டையும் டவுசரையும் துவைத்துப் போட்டுக்கொள் என்று சொல்லியபடியே அவளைப் பார்த்துச் சிரித்தேன். அவள் நிர்வாண மான தன் உடலைக் கைகளால் மறைக்கக்கூட விருப்பமற்ற கோபத் துடன் போடா சம்பத்து நாயி என்று திட்டினாள். நான் சுனையை விட்டு இறங்கும்போது அவள் சுனையை நோக்கி நடந்து போவது தெரிந்தது.

வழி முழுவதும் இறைச்சி சமைத்துக்கொண்டிருந்தார்கள். ஒரு வாழை இலையில் வைத்து எனக்குக்கூட இறைச்சி கொடுத்தார்கள். நான் கறியைத் தின்றபடியே பாறைகளில் ஏறி சுற்றிக்கொண்டிருந் தேன். பாறையில் ஒரு வண்ணத்துப்பூச்சி வந்து ஒட்டுவதும் பறப்பது மாக இருந்தது. அதை எப்படியாவது பிடித்துவிடலாம் என்பது போல பின்னாடியே போய்க்கொண்டிருந்தேன். என் விரல்களுக் குள் மாட்டி தப்பித்துப் போய்விட்டது அந்த வண்ணத்துப்பூச்சி. அப்பா, அம்மா, அக்கா யாவரும் கறிச்சோறு சாப்பிட்டுவிட்டு உறங்கிக்கொண்டிருந்தார்கள். ஒரு நாய் இலையில் வைத்த கறியை முகர்ந்துவிட்டு சாப்பிடாமல் ஏகத்தாளமாக நடந்து போய்க்கொண் டிருந்தது. அம்மாவின் அருகில் போய் நான் படுத்துக்கொண்டேன்.

மாலையில் திரும்பவும் மிச்சமிருந்த கறிகளை நாங்கள் சாப்பிடும் போது அம்மா என்னிடம், டேய் சம்பத், சித்ரா எங்கடா என்று கேட்டாள். நான் தெரியவில்லை என்றேன். அம்மா அய்யாவிடம் சித்ராவைக் காணவில்லை என்று சொன்னதும் அவர் எங்காவது விளையாடிக்கொண்டிருப்பாள் என்றார். அம்மாவும் அக்காவும் தெரிந்தவர்களிடம் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சின்ன அக்கா என்னிடம், அவ சட்டையை நீ போட்டிருக்கயே, உன் சட்டை எங்கடா சம்பத் என்று கேட்டாள். நான் அது ஈரமாக இருந்ததால் அவளை உலரவைத்துப் போட்டுக்கொள்ளும்படி சொன்னேன் என்றேன். சின்ன அக்கா உடனே சுனையை நோக்கி ஓடினாள்.

மகாலிங்க மலைக்கு வந்தவர்களில் பாதிக் கூட்டம் அந்தச் சுனையை சுற்றிலும் நின்றிருந்தது. நான் கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தேன். இரண்டு பேர் சுனையில் குதித்து தேடிக்கொண்டிருந்தார்கள். தண்ணீருக்குள்ளிருந்து தலை மயிரைப் பிடித்து ஒருவன் சித்ராவை இழுத்துக்கொண்டு மேலே வந்து போட்டான். வயிறு ஊதிப்போயிருந்தது. அவள் சட்டை போடாமல் நிர்வாணமாகவே இருந்தாள். எனது ஈர டிராயரும்

சட்டையும் நான் சுருட்டி வைத்த இடத்தில் அப்படியே இருந்தது. சின்ன அக்கா என் முதுகில் ஓங்கி ஒரு அறை போட்டாள். நான் அழுதேன். குளிக்கச் சென்ற சிறுமி தண்ணீரில் விழுந்து இறந்து போய்விட்டாள் என்று சொல்லி சித்ராவின் உடலை அங்கேயே புதைத்துவிட்டுச் செல்லும்படியாகச் சொன்னார்கள். அய்யா நெஞ்சில் அடித்துக்கொண்டு அழுதார். மாலை வெயில் இறங்கிக் கொண்டிருந்தது. சித்ராவை மலையடிவாரத்திற்குக் கொண்டுபோய் புதைத்து வந்தார்கள். மகாலிங்க மலைக்கு வந்த வண்டிகள் வீடு திரும்பத் துவங்கியிருந்தன. அய்யா துக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு எங்களை வண்டியில் ஏற்றினார். யாரும் பேசிக்கொள்ள வேயில்லை. நான் போட்டிருந்த சட்டையைப் பார்க்கும் போதெல் லாம் சின்ன அக்கா ரகசியமாக என் தொடையில் கிள்ளிக் கொண்டே வந்தாள். வலியைத் தாங்கிக்கொண்டு அமைதியாக வந்தேன்.

ஊர் வந்து சேர்ந்த பிறகு அய்யா இரண்டு நாட்கள் எழுந்திருக்க வேயில்லை. துக்கம் கேட்பதற்காக ஆட்கள் வந்தபடியே இருந்தார் கள். பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் நானும் வீட்டிலே இருந்தேன். யாரும் என்னுடன் பேசவேயில்லை. பேசாமல் நானும் செத்து விடலாமா என்றுகூடத் தோணியது. நான்கு நாட்களுக்குப் பிறகு அம்மா எழுந்து வந்து நான் போட்டுக் கழட்டியிருந்த அந்த கோடு போட்ட பச்சை சட்டையைத் தீ வைத்து எரித்துவிட்டுத் தினப்படி வேலைகளைப் பார்க்கத் துவங்கினாள். வீடு தன் இயல்பிற்குத் திரும்பி வர ஒரு மாசமானது.

ஆனாலும் பள்ளிக்கூடம் விட்டுத் தனியே நடந்து வரும்போது சித்ரா சட்டை போடாத வெற்று மேலோடு என் கூடவே நடந்து வருவது போலிருக்கும். கண்களை மூடிக்கொண்டு பனைகளுக்கு இடையில் ஓடி வருவேன். இந்த பயத்தை வீட்டில் சொன்னால் அடிப்பார்களே என்று நான் வாயைத் திறந்து சொல்லவும் மாட் டேன்; ஆனால் என் தனிமையில் இந்த பயம் எப்போதும் நெளிந்து கொண்டுதானிருந்தது. இதற்காகவே என்னை மூர்க்கமானவனாக உருமாற்றிக்கொள்ள விரும்பினேன். எவரையும் அடிப்பதற்கும் திட்டுவதற்கும் தயக்கமற்றவனாக என்னை மாற்றிக் கொண்டேன். நிஜத்தில் நான் ரொம்பவும் பயந்தவன். எனது பயம் எண்ணிக்கை யற்றது.

சம்பத் பேசி முடித்தபோது மணி இரண்டைத் தாண்டியிருந்தது. சாலையில் இப்போது யாருமில்லை. சம்பத் என்னைப் படுத்துக் கொள்ளும்படியாகச் சொல்லிவிட்டு லாட்ஜை விட்டுக் கீழே இறங்கிப் போனான். அவன் என்னை எழுப்பும்போது மணி காலை எட்டரை ஆகியிருந்தது.

சம்பத்தின் ஊருக்குப் போவதற்கு நேரிடையாகப் பஸ் கிடையாது. ஒரு விலக்கில் இறங்கி உள்ளே நடந்து போக வேண்டும். அந்த விலக்குப் பாதையில் ஒற்றைப் புளியமரமிருந்தது. அருகாமையில் ஊர் இருப்பதற்கான அறிகுறியே இல்லை. சம்பத் தயங்கித் தயங்கி நடந்துகொண்டிருந்தான். பாதை ஒரு மேடேறியது. அதைக் கடந்தபோது கருவேல மரங்கள் அடர்ந்த ஒரு கண்மாய் இருந்தது. கண்மாயில் தண்ணீர் இல்லை. வெடித்துப் பாளம்பாளமாகப் பிளந்து கிடந்தது கண்மாய். கருவேல மரங்களில் எதற்கோ சிவப்புத் துணிகள் கட்டித் தொங்க விட்டிருந்தார்கள். கண்மாய்க் கரையின் மீது ஏறி நின்றபோது ஊர் தொலைவில் சரிந்து கிடந்தது. கண் மாய்க்குள் இறங்கி நடக்கத் துவங்கினோம்.

சம்பத் தனது அக்காவின் மகளுக்காக வாங்கிய சிறுவர் சைக் கிளைச் சுமந்து கொண்டு என் முன்னால் நடந்து போய்க்கொண்டி ருந்தான். ஒரு டிராக்டர் எங்களைக் கடந்து சென்றது. சம்பத் அதைக் கவனிக்காதவன் போல நடந்து போய்க் கொண்டிருந்தான். அந்த ஊரில் நூற்றுக்கும் குறைவான வீடுகளே இருந்தன. சம்பத்தின் அக்கா வாசலில் பாத்திரம் விளக்கிக்கொண்டிருந்தாள். அவள் சம்பத்தைப் பார்த்ததும் முகத்தைத் தூக்கிக் கொண்டு வீட்டினுள் போய்விட்டாள். வாசலில் ஒரு லேடீஸ் சைக்கிள் நின்று கொண்டிருந்தது.

சம்பத் என்னை வீட்டினுள் அழைத்தான். ரோஸ் நிற தாவணி யும் பாவாடையும் அணிந்தபடி முன்அறையில் உட்கார்ந்து டிவி பார்த்தபடியே சாப்பிட்டுக்கொண்டிருந்த அக்காவின் மகள் தங்கம் அவனைப் பார்த்து வியப்புடன் மாமா என்றாள். சம்பத் உட்காரு வதற்காக சேரைத் தேடிக்கொண்டிருந்தான். வீட்டில் நாலைந்து பூனை குட்டிகள் அலைந்துகொண்டிருந்தன. ஹாலில் ஒரேயொரு கடிகாரம் மாட்டியிருந்தார்கள். பகலிலும் இருட்டடைந்தே போயிருந்தது அந்த அறை.

மாட்டுத் தொழுவத்திலிருந்து ஒரு பூனைக்குட்டியைக் கையில் பிடித்தபடியே வீட்டிற்குள் ஓடி வந்தாள் பத்து வயதுடைய ஒரு சிறுமி. என்னைப் பார்த்ததும் சற்றே கூச்சத்துடன் எங்கே சம்பத் என்று தேடிப் பார்த்தாள். சம்பத் உள் அறையிலிருந்து ஒரு பாயை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். அந்தச் சிறுமி அருகில் போய் நின்றபடியே மாமோவ் என்றாள். சம்பத் அவள் தலையைத் தடவி விட்டுக்கொண்டு சித்ரா எப்படியிருக்கே. மாமாவை மறந்துட்டியா என்று கேட்டபடியே தான் வாங்கிக் கொண்டு வந்திருந்த புது சைக்கிளை அவளிடம் காட்டினான். அவள், மாமா நீங்க இப்போ மெட்ராசிலதானே இருக்கீங்க என்று கேட்டாள். அவன் தலை யாட்டினான். தங்கம் இல்லேனு சொல்றா என்று சொல்லியபடி தனது சைக்கிளைத் தள்ளிக்கொண்டு தெருவில் ஓட்டிப் பார்ப்ப தற்காக முயற்சித்தாள்.

சம்பத் வீட்டில் அடர்ந்திருந்த இறுக்கத்தை உணர்ந்தவன் போல உங்க அப்பா எங்கே என்று தங்கத்திடம் கேட்டான். தங்கம் டிவி யிலிருந்து கண்ணை எடுக்காமலே டீசல் வாங்கப் போயிருக்கு என்றாள். சம்பத் சமையற்கட்டிற்குள் போய் நின்று கொண்டான். அவனது அக்கா திட்டுவது கேட்டது. சம்பத் பதில் பேசாமல் கேட்டுக்கொண்டேயிருந்தான். டிவியை அணைத்துவிட்டு தங்கம் எழுந்து வெளியே போய்விட்டாள். பூனைக்குட்டிகள் என் கால் களை உரசிக்கொண்டிருந்தன. பெரிய டீசல் கேனுடன் சம்பத்தின் மாமா வந்தபோது மணி பனிரெண்டாகியிருந்தது. அவர் சம்பத் தைப் பார்த்தும் கையை பிடித்துக்கொண்டு எப்போ வந்தே மாப்ளே என்று மிக அக்கறையாக விசாரித்துக்கொண்டிருந்தார்.

இருவரும் மாட்டுத் தொழுவத்தின் அருகில் போய் பேசிக் கொண்டிருந்தார்கள். சம்பத்தின் மாமா தலையாட்டியபடியே கேட்டுக்கொண்டிருந்தார். பிறகு தங்களது கிணற்றில் இப்போது மோட்டார் பொருத்தப்பட்டுள்ளதால் அதற்கு டீசல் வாங்குவ தற்காகப் போயிருந்ததாகச் சொல்லியபடியே சாப்பிட்டியா மாப்ளே என்றார். சம்பத் பதில் பேசவில்லை. அவர் உள்ளே போய் சம்பத்தின் அக்காவைத் திட்டிக் கொண்டிருந்தார். பிறகு என்னிடம் வந்து உங்களைப் பார்த்திருக்கேன். முன்னாடி வந்திருக்கீங்களே என்று சிரித்தார். நானும் சம்பத்தும் அவனது மாமாவும் டீசலைத் தூக்கிக்கொண்டு கிணற்றை நோக்கி நடக்கத் துவங்கினோம்.

ஊரை விட்டு விலகிய பனையடிப்பாதையில் நடந்தபோது வெயில் மங்கியிருந்தது. நிறைய மஞ்சளத்திச் செடிகள் அடர்ந்திருந் தன. சம்பத் தனது கிணற்றின் மீதிருந்து உள்ளே எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தான். தண்ணீரின் மீது ஊர்ந்துகொண்டிருந்தது சூரியன். பாதிக் கிணறு அளவிற்குத் தண்ணீர் இருந்தது. சம்பத்தின் மாமா இயந்திரத்திற்கு டீசல் ஊற்றிக்கொண்டிருந்தார். தொலை வில் மிகப் பெரிய வேம்பு ஒன்று நிலத்தின் நடுவில் தனித்திருந்தது. நானும் சம்பத்தும் அதை நோக்கி நடந்து வேம்பின் நிழலில் உட் கார்ந்துகொண்டோம். என்ஜின் ஓடும் சப்தம் கேட்கத் துவங்கியது. தண்ணீர் பீச்சியடித்துக்கொண்டு பாய்ந்தது. சம்பத், தானும் மாமா வைப் போல இப்படியே வாழ்ந்திருந்திருக்கலாம் என்று சொன்னான்.

சம்பத்தின் நிலத்தைச் சுற்றிலும் தொலைவு வரை ஆள் நட மாட்டமேயில்லை. அவர்களது என்ஜின் ஓடும் சப்தம் மட்டும் தனியே குதுப் குதுப் என கேட்டுக் கொண்டிருந்தது. வெயில் மங்கிய பகலில் நானும் அவனும் மரத்தடியில் அமர்ந்திருந்தோம். பறவை களின் ஒலியே இல்லாத வெற்றுவெளியாக இருந்தது. சம்பத் எழுந்து மேற்கே நடந்து செல்லத் துவங்கினான். சம்பத்தின் அக்கா மகள் சித்ரா தொலைவில் இருந்து வந்துகொண்டிருப்பது தெரிந்தது. அவள் மிக மெதுவாக நடந்து வந்துகொண்டிருந்தாள். சம்பத் ஒரு புள்ளி போல தொலைவில் தெரிந்து கொண்டிருந்தான். சம்பத்தின்

அக்கா மகள் கிணற்றடிக்கு வந்து நின்று வழிந்தோடும் தண்ணீரில் முகம் கழுவிக்கொண்டவளாக சம்பத் எங்கே என்று தேடினாள். நான் அவளை நோக்கி நடந்து வரத் துவங்கினேன்.

சித்ரா ஓடும் தண்ணீருக்குள் காலை விட்டபடியே கையில் வைத்திருந்த மஞ்சனத்திப் பழங்களைத் தின்றுகொண்டிருந்தாள். அருகில் போனதும் உங்களுக்கு நீச்சல் தெரியுமா என்று கேட்டாள். நான் தெரியும் என்றதும் நான்கூட நல்லா நீச்ச அடிப்பேன், அய்யா கத்துக்குடுத்திருக்காரு என்றாள். சம்பத் திரும்பி வந்துகொண்டிருந் தான். அவன் அருகில் வரும்வரை நாங்கள் இருவரும் நீச்சலைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தோம். சம்பத் தண்ணீரை முகத்தில் வாரி அடித்துக்கொண்டான். பிறகு சித்ராவிடம் சைக்கிள் ஓட்டி முடிச்சிட்டயா என்று கேட்டான். அவள் கீழே விழுந்துட்டேன் என்று காலைத் தூக்கிக் காட்டினாள். முட்டியில் சிராய்ப்பு இருந் தது. சம்பத்திடம் அவள் அம்மா சாப்பிடக் கூப்பிடுவதாகச் சொன் னாள். நாங்கள் வீடு திரும்பிப் போகும்போது வழியில் இருந்த ஒரு கருவேல மரத்திலிருந்து சித்ரா பிசினைப் பிய்த்து எடுத்துக்கொண்ட படியே நோட்டுக்கு ஒட்டணும் என்று சொன்னாள்.

வீட்டில் கத்தரிக்காய் போட்டு குழம்பு வைத்திருந்தார்கள். சம்பத்தும் நானும் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். அக்கா புகையும் அடுப்பின் முன்னால் உட்கார்ந்தபடியே அப்பளம் பொரித்துக் கொண்டிருந்தாள். சம்பத் அவசர அவசரமாக சாப்பிட்டுக்கொண் டிருந்தான். வாசலில் தலைச்சுமையாக மஞ்சனத்தி விறகுகளைக் கொண்டுவந்து போட்டுவிட்டு சம்பத்தின் அய்யா துண்டை உதறுவது தெரிந்தது. அவர் வீட்டினுள் நுழையும்போதே இரண்டு ஜோடி செருப்புகள் புதிதாகக் கிடப்பதைக் கண்டவரைப் போல தயக்கத்துடன் உள்ளே நுழைந்தார். வெயிலில் இருந்து வந்ததால் அவருக்கு ஆள் நிதானம் தெரியவில்லை. கண்களைக் கசக்கிக் கொண்டு அவர் உற்றுப் பார்த்தார். சம்பத் கையில் வைத்திருந்த சாப்பாட்டை வாயில் போடாமல் அவரையே பார்த்துக்கொண்டி ருந்தான். அவனைப் பார்த்ததும் வந்த வேகத்தில் அவர் வெளியே போனார்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு பெரிய மஞ்சனத்தி விறகு ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு விடுவிடுவென உள்ளே வந்த அவர் சாப்பிட்டுக்கொண்டிருந்த சம்பத்தின் முகத்தோடு சேர்த்து ஒரு அடி அடித்தார். சம்பத்தின் கையில் இருந்த சாதம் தெறித்துச் சிதறியது. அவன் சுதாரித்துக்கொள்வதற்குள் இன்னொரு அடி விழுந்து அவனது மூக்கில் இருந்து ரத்தம் கொட்டத் துவங்கியது. சம்பத் அவரிடமிருந்த மஞ்சனத்தி விறகைப் பிடுங்கி எறிந்தான். ரத்தம் அவனது தாடையில் வழிந்து கொண்டிருந்தது.

சம்பத்தின் அக்கா பதட்டத்துடன் வந்து, விடுங்கய்யா என்று அய்யாவைப் பிடித்துத் தள்ளிக்கொண்டிருந்தாள். தாயோளி, என்ன

மயித்துக்குடா இங்கே வந்தே. உன்னாலே நாங்க என்ன அவமான மெல்லாம் பட வேண்டியதாகிப் போச்சி. செத்து தொலைய வேண்டியதுதானடா... உன்னாலே ஆருக்காவது பிரயோசன மிருந்துச்சாடா... சொல்லுடா... எம்புட்டுக் காசைப் போட்டுப் படிக்க வச்சேன். அதை ஓடு கவித்திட்டு வந்தே. அப்பவே காலை ஒடிச்சி உன்னை மூலையில போட்டிருக்கணும். விட்டது என் தப்பு. எத்தனை பேருகிட்டே உனக்காகக் கை கட்டி நின்னுருப்பேன் தெரியுமா... கள்ள தாயோளி... உன் சங்கை அறுத்து நானே கொன்னு புடுறேன். அப்பவாவது என்னைப் பிடிச்ச பீடை ஒழியட்டும் என்று கத்திக்கொண்டிருந்தார்.

சம்பத்தின் அக்காவால் அவரைச் சமாதானம் செய்ய முடியவில்லை. ரத்தம் அவனது சட்டையெல்லாம் ஒழுகிக்கொண்டிருந்தது. அவர் திமிறிக்கொண்டு கீழே கிடந்த விறனக எடுத்து அவனைத் திரும்ப அடிக்க முயற்சித்தார். சம்பத் அதைத் தடுத்ததோடு சோற்றுக் கையாலே அவரை ஓங்கி ஒரு அறை கொடுத்தான். அவரது காதோடு அறை விழுந்தது. அவர் தன் னகயிலிருந்த விறகை அவன் முகத்தில் வீசி அடித்தார். அவன் தன் புறங்கையால் அதைத் தடுத்துக்கொண்டு அவரை அடிப்பதற்காக முயன்றான். நான் சம்பத்தின் சட்டைனயப் பிடித்து இழுத்தேன். சம்பத்தின் அய்யா கூக்குரலிட்டபடியே வெளியே ஓடினார். சம்பத் னகயில் மஞ்சனத்தி விறகை எடுத்துக்கொண்டு துரத்தினான்.

நாங்கள் பின்னால் வருவதற்குள் சம்பத்தின் அய்யா தெருவில் ஓடிக்கொண்டிருந்தார். சம்பத் கையில் விறகோடு அவரைத் துரத்தி ஓடிக்கொண்டிருந்தான். சம்பத்தின் அக்கா வாசலில் நின்றபடி மாரில் அடித்துக்கொண்டு அழத் துவங்கினாள். வீட்டுத் திண்ணைகளில் தீப்பெட்டி ஒட்டிக்கொண்டிருந்த பெண்கள் பயத்தோடு சம்பத் ஓடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சம்பத் காட்டு விலங்கின் மூர்க்கத்தோடு ஓடிக்கொண்டிருந்தான். சம்பத்தின் அய்யா அய்யோ கொல்றானே...என்று அலறியபடியே ஒரு சந்திற்குள் ஓடினார். நானும் அவர்கள் பின்னாடியே ஓடினேன்.

குறுகலான தெரு ஒன்றில் விழுந்து கிடந்தார் சம்பத்தின் அய்யா. அவரது தலைமாட்டில் பெரிய கல் உரல் தரையோடு பதிந்து போயிருந்தது. ஓட முடியாமல் சிக்கிக்கொண்ட எலியை அடிப்பது போலச் சம்பத் அவரைத் தனது கையில் இருந்த மஞ்சனத்தி விறகால் மாறி மாறி அடித்துக்கொண்டிருந்தான். கிழக்கிலிருந்து ஓடி வந்த இரண்டு ஆட்கள் சம்பத்தைத் தள்ளிவிட்டு அவன் கையிலிருந்த விறகைப் பறித்தார்கள். ஒரு ஆள் சம்பத்தின் முகத்தோடு ரெண்டு அறை விட்டான். அடிபட்டுக் கீழே விழுந்து கிடந்த சம்பத்தின் அய்யா ரத்தக் காயத்துடன் சப்தமாக அழத் துவங்கினார்

அவரது நிலையைக் கண்டதும் சம்பத்தின் அக்கா புழுதினய வாரித் தூற்றிக்கொண்டு டேய் சம்பத்து நீ... உருப்படாம போயிரு

வடா... என்று கத்திக்கொண்டே அய்யா அய்யா என்று அவரைப் பார்த்து கண்ணீர் விட்டாள். சம்பத்தின் அய்யா பேச்சு வராமல் மூக மூக என்று கத்தி அழுதுகொண்டிருந்தார். சம்பத்தின் மாமா ஆவேசத்துடன் ஒரு ஊனுகம்பை எடுத்துக்கொண்டு தெருவில் வருவதைக் கண்டதும் சம்பத் மேற்கு நோக்கி ஓடத் துவங்கினான். அவன் ஓடுவதை அறிந்தவரைப் போல அவர் வேகமாகக் கையில் இருந்த ஊனுகம்பை அவன் மீது வீசி எறிந்தார். சம்பத் ஒரு சந்திற்குள் ஓடி மறைந்தான்.

சம்பத்தின் அய்யா மாரில் அடித்துக்கொண்டு அழுதுகொண்டிருந்தார். சம்பத்தின் மாமாவும் சந்திற்குள் துரத்திக்கொண்டு ஓடினார் தெருப்பெண்களில் ஒருத்தி ஒரு சொம்புத் தண்ணீர் கொண்டுவந்து குடிக்கும்படி சொன்னாள். அய்யா அதை வாங்கி முகத்தில் அடித்துக்கொண்டார். ரத்தம் ஆங்காங்கே சிந்திக் கிடந்தது. எனக்கு என்ன செய்வது என்று தெரியாமல் நின்றுகொண்டிருந்தேன். சம்பத்தின் மாமா திரும்பி வந்து, ஒக்காலி ஓடிப் போயிட்டான். தைரியமான ஆம்பளைன்னா என்னை அடிச்சிப் பாக்கணும் என்று கத்திக்கொண்டிருந்தார்.

சம்பத் அய்யாவிற்கு நெற்றியில் ஆழமான காயம் ஏற்பட்டிருந்தது. ஒரு பெண் காபிப் பவுடரை ஒரு தூக்குவாளி மூடியில் கொண்டுவந்து தந்தாள். அதைக் கையில் அள்ளி காயத்தில் அப்பினாள் சம்பத்தின் அக்கா. அவர்கள் யாவரும் சம்பத்தின் வீட்டை நோக்கிப் போகத் துவங்கினார்கள். நான் என்ன செய்வது என்று தெரியாமல் தெருவிலே நின்றுகொண்டிருந்தேன். சம்பத்தின் வீட்டு வாசலில் செருப்பைக் கழட்டிப் போட்டிருந்தது நினைவிற்கு வந்தது. அதை எடுக்க வேண்டாம் என்று முடிவு செய்தபடியே நானும் சம்பத் ஓடிய சந்தின் வழியாக நடந்து கண்மாய்ப் பாதையை நோக்கி நடக்கத் துவங்கினேன்.

சம்பத் அவனது அப்பாவை இப்படிப் போட்டு அடித்தது மனதை என்னவோ செய்துகொண்டிருந்தது. மதுரைக்குத் திரும்பி வந்து சம்பத்தின் அறையில் இருந்த எனது கைப்பையை எடுத்துக் கொண்டு ஊருக்குப் புறப்படலாம் என்று கிளம்பினேன். சம்பத் எங்கே போயிருப்பான் என்று தெரியவில்லை. திரும்பவும் சம்பத்தைச் சந்திக்கக் கூடாது என்று நினைத்தபடியே இரவுப் பேருந்தில் ஏறி உட்கார்ந்தபோது என் சட்டையிலும் ரத்தக் கறைகள் படிந்திருப்பதை அப்போதுதான் கவனித்தேன். அந்த ரத்தக் கறை உலர்ந்துபோயிருந்தது. பேருந்து இருளுக்குள் செல்லத் துவங்கியது. ஜன்னலுக்கு வெளியே எதுவும் தெரியவில்லை. கண்களை மூடிக் கொண்டேன். வழி முழுவதும் தூங்க முடியாமல் சம்பத்தின் மூக்கு உடைந்து ரத்தம் கொட்டியது நினைவில் வந்தபடியே இருந்தது. ஏனோ சம்பத்தின் மீது மிக வருத்தமாக இருந்தது.

காலைல் காட்டில் மாலை எப்போது அடங்கியது என்றே தெரியாத படி பார்த்துக்கொண்டிருந்தபோதே வெயில் வீழ்ந்துவிட்டிருந்தது. சன்னாசி அவர்களிடம் காட்டு குரங்குக் கறி சாப்பிடுவார்களா என்று கேட்டுக்கொண்டிருந்தான். மலையின் மீது நிறைய காட்டுக் குரங்குகள் இருப்பதாகவும் அதன் இறைச்சி உடம்புக்கு நல்லது, நாட்டு வைத்தியர்கள் கருங்குரங்கு சாப்பிடச் சொல்வார்கள் என்று சொன்னான். வெளிச்சமும் இல்லாத, இருட்டும் இல்லாத மென்னொளி ஒன்று எங்கும் படர்ந்து கொண்டிருந்தது. மூவரும் ஆளுக்கொரு யோசனையில் இருந்தோம்.

ராமதுரை தன்னிடமிருந்த கணக்கு வழக்குகளை ஒரு சிகரெட் அட்டையில் எழுதிக்கொண்டிருந்தான்; மாரியப்பன் சோளக்கதிர் ஒன்றைத் தின்றுகொண்டிருந்தான். நான் சன்னாசியிடம் மின்சாரம் இல்லாமல் எப்படி இரவைக் கழிக்கிறான் என்று கேட்டுக்கொண்டிருந்தேன். அது பழக்கமாகிப் போச்சு சார். ஆனா இப்போ மலையோட அந்தப் பக்கம் எல்லாம் கரண்டு வந்திருச்சி. ஏன் பூச்சி ஆபீசர் தோட்டத்துக்குப் போன்கூட வந்திருச்சி. நீங்க நாளைக்கு காலையில என்னோட வந்தீங்கன்னா, பேய்ப்பாறையைக் காட்டுறேன். அந்தப் பாறை மேல இதுவரை மழை பெஞ்சதேயில்லை. அடைமழையிலகூட அந்தப் பாறை நனையவே நனையாது. இதுவரைக்கும் அந்தப் பாறை மேல யாரும் ஏறினதேயில்லை. இந்த மலைக்கு சன்னாசி எந்த வயதில் வந்தான் என்று கேட்டேன். அவன் சிரிப்போடு அதெல்லாம் சின்னபுள்ளையிலேயே வந்துட்டேன். கரெக்டாச் சொல்லத் தெரியலை என்றான்.

காட்டிற்குள் தனியாக இருப்பது பயமாக இல்லையா என்று கேட்டேன். அவன் அதுக்குதான் ரம் பாட்டில் வச்சிருக்கேன். குடிச்சிட்டா, புலியே வந்தாலும் பயப்பட மாட்டேன். மழை பெஞ்சா தான் ரொம்ப பயமா இருக்கும், மழை பெஞ்ச பின்னாடி வர்ற இருட்டைப் பாத்துருக்கீங்களா சார்? அது நெளுநெளுனு பாம்பு நெளிஞ்சி போற மாதிரியிருக்கும். ஒண்ணுக்கு இருக்கிறதுக்காக ஒரு நாள் இருட்டில வெளியே எந்திருச்சி வந்தா அகலமான ரெண்டு கை முதுகில அடிச்ச மாதிரி இருந்துச்சி. ஆளு யாருமே இல்லை. நின்ன இடத்தில மூத்திரம் போயிட்டது. இருட்டு அடிச்சது தான் அப்படியிருந்திருக்கு.

காடு நாம நினைக்கிற மாதிரி வெறும் மரம், செடி, கொடி மட்டுமில்லை சார். இது ஒரு சுழி. எங்கே நம்மளைக் கவித்துப் போடும்னு தெரியாது. மலையில ஒரு ஆள் ரெண்டு வருசம் இருந்துட்டான்னா . . . அப்புறம் தரையில போயி இருக்கவே பிடிக்காது. சில நேரம் வெயில் இலையில ஊர்ந்து போறதைப் பார்த்துக்கிட்டே நின்னுக்கிட்டு இருக்கலாம்னு தோணும். மலைக்கு ஒரு முகம் இல்லை. அது நாளுக்கு ஒரு முகம், வேளைக்கு ஒரு முகம் கொண்டிருக்கு. அதுக்கும் கைகால் இருக்கு . . . சதா நடந்துக்கிட்டே

தான் இருக்கு. ராத்திரி நீங்க கவனிச்சிக் கேட்டீங்கன்னா தெரியும். மலை அங்கிட்டும் இங்கிட்டும் நடந்துக்கிட்டு இருக்கும். சொன்னா சிரிப்பீங்க. ஆம்பளையும் பொம்பளையும் கூடுறது மாதிரி ரெண்டு மலையும் கட்டிப்பிடிச்சி உருள்றதும் பொரள்றதும்கூட நடக்கிற துண்டு. நாம அதெல்லாம் தெரிஞ்சிக்கிட முடியாது சார். இந்த மலையில எத்தனையோ செடி கொடி இருக்கு. இதுல எத்தனைக்கு நமக்குப் பேரு தெரியுது. அப்பிடித்தான் இதோட குணமும். அதுக் காக நீங்க பயந்திராதீங்க... மலை நம்மளை எதுவும் செய்யாது என்று சொல்லிச் சிரித்துவிட்டு ராவுல வேட்டைக்குப் போய் கருங் குரங்கை அடித்துக் கொண்டுவரலாம் என்றபடி எழுந்து நடந்தான்.

ராமதுரை தான் போட்டுக்கொண்டிருந்த கணக்கு வழக்குகளை முடித்துவிட்டு என்னிடம் அந்த கிட்டையைக் காட்டியபடி மொத் தம் பனிரெண்டாயிரம் செலவாகியிருக்குதுடா... சம்பத் பொண் டாட்டிகிட்டே ரெண்டாயிரம் வரும்போது குடுத்திட்டு வந்ததை யும் சேர்த்தா பதினாலு ஆயிரம் ஆகுது. கணக்கைப் பாத்துக்கோ என்றான். நான் சற்றே எரிச்சலுடன், இப்போ உன்கிட்டே யாருடா கணக்கு கேட்டா. ஏண்டா சம்பத் செத்தது உனக்கு கொஞ்சம்கூட வருத்தமேயில்லையா என்று கேட்டேன்.

`அவன், வருத்தப்படுறதுக்கு என்னடா இருக்கு. சம்பத் செத்துட் டான். அவ்வளவு தானே? சம்பத் மாதிரி நாளைக்கு நீ செத்துப் போவே, அப்புறம் நான் செத்துப் போவேன். சாகுறதுக்கு எதுக்குடா பயப்படணும்? காக்கா குருவி செத்தா நீ கவலையா படுறே? இல்லையே. பின்னே என்னடா பதறுறே... இருக்கிறவரைக்கும் சம்பத்தை எத்தனை தடவைடா நீ வந்து பாத்துருக்கே. இல்லை அவன் எப்பவாவது உன் கிட்டே வந்து கையை ஏந்திக்கிட்டு நின் னானா? நான் அப்பிடியில்லைடா. சம்பத் என்கூட இருந்திருக்கான். என் கூட சாப்பிட்டு இருக்கான். என் மேல வாந்தி எடுத்திருக்கிறான். ஒரே பொம்பளைகிட்டே ரெண்டு பேரும் போயிருக்கோம். அவன் செத்தது நல்லதுக்குதாண்டா. இன்னும் ரொம்ப வருசம் உயிரோட இருந்தா அது இவனை மாதிரி ஆட்களை எல்லாக் கேவலத்திலயும் கொண்டுபோயி விட்டுரும் என்றான். நான் பதில் பேசவில்லை. ராமதுரை தனது கணக்கு நோட்டைத் தன் சட்டைப் பாக்கெட்டில் வைத்துவிட்டு சிகரெட் இருக்கிறதா என்று கேட்டான். நான் உள்ளே தலையணை அடியில் வைத்திருப்பதாகச் சொன்னேன். அவன் ஒரு சிகரெட்டைத் தேடி உள்ளே போய்விட்டு அதைப் பற்றவைத்தபடியே வெளியே வந்து சொன்னான்.

அழகரு... உன்னை கோவிச்சிக்கிடுறதுக்காகச் சொல்லலை. சம்பத் செத்தது பெரிசில்லைடா...எதுக்காகடா செத்தான்? அதைப் பத்தி நாம பேசணும்டா... உங்க கூட இங்கே வர்றதுக்கு நான் ஒத்துக்கிட்டதே அதைப்பத்தி நாம பேசுறதுக்குதான். எதுக் குடா அவனுக்கு மட்டும் எதுவுமே சரியா அமையாமப்

போயிருச்சி... எங்கடா அவன் தப்பு பண்ணினான்? நம்ம செட்டில ரொம்ப படிச்ச ஆளு நீதானேவ... சொல்லுடா... சம்பத்துக்கு என்னடா பிரச்சனை?

ராமதுரையின் கையில் வைத்திருந்த சிகரெட்டை வாங்கி நான் புகைக்கத் துவங்கினேன். எங்களின் பேச்சுச் சப்தம் கேட்டு அருகில் வந்த மாரியப்பன் பலாமரம் ஒன்றில் ஒரு காலை ஊன்றியபடி நின்றுகொண்டு எங்களையே பார்த்துக் கொண்டிருந்தான். ராம துரையின் கோபம் இப்போது மாரியப்பன் பக்கம் திரும்பியது போலிருந்தது.

இந்த மயிரு... சம்பத்துக்கு ஒரு லெட்டர் போட்டிருந்தான். இனிமே இவனை பாக்க வரக் கூடாது. கடிதத் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது. அதுவும் பெத்த தகப்பனை அடிக்கும் அளவுக்கு மிருகமாகிப்போன ஒரு ஆளோடு இனி சகவாசமே வைத்துக் கொள்ளக் கூடாதுனு முடிவு செய்துட்டாராம். அந்த லெட்டரை சம்பத் ரெண்டு மாசம் பாக்கெட்லயே வச்சிக்கிட்டு அலைஞ்சான் தெரியுமாடா.

மாரியப்பனுக்கும் ஆத்திரமாக வந்தது. அவன் முகத்தைக் கடு கடுவென வைத்துக் கொண்டு, சம்பத் ஒண்ணும் யோக்கிய மயிரில்லை. அவனுக்கா நீ பேச வந்துட்டே... நீ பாத்தயாடா? நான் என் கண்ணாலே அவன் அவங்க அப்பாவைப் போட்டு அடிக் கிறதைப் பாத்தேன். எவ்வளவு ஆவேசம்... வெறி... விட்டிருந்தா கொன்னுருப்பான்... இவனை வளர்க்கிறதுக்கு அவரு எம்புட்டு பாடுபட்டிருப்பார். இவரு மசிரு... கண்டதையும் படிச்சிட்டு அவரைக் கையை ஓங்குவான். நாங்க அதைப் பத்தி லெட்டர் போடக் கூடாதாக்கும்.

ராமதுரை தன் ஆத்திரம் தணியாமல் சொன்னான். அவன் செத்த துக்கு நாம தான் காரணம். உன் லெட்டர்கூட ஒரு காரணம்தான். நாம அவனைக் கொஞ்சம் சகிச்சிக்கிட்டுப் போயிருந்தா பிழைச் சிருப்பாண்டா... நமக்கு ரோஷம், தன்மானம், அகம்பாவம் இருக் கில்லே... அது லேசில விடுமா? நாம சம்பத்தைப் பாத்து இதுபோல நாமும் ஆகிறக் கூடாதுனு பயந்துக்கிட்டு இருந்தோம். அதே நேரம் அவன் மேல நமக்குப் பொறாமையும் இருந்துச்சி. அவனை மாதிரி நினைச்சதைச் செய்ய முடியலையேனு அவனைப் பாத்து ரகசியமா பொறாமைப்பட்டிருக்கோம்; இதுக்காக ஒரு நாள், ரெண்டு நாள் அவனைக் கூட வச்சிக்கிட்டு அந்த ஆசைகளை நாம நிறைவேற்றிக் கிட்டோம்... நாமெல்லாம் பிராடுடா... சம்பத்துதாண்டா நிஜமா வாழ்ந்தவன் என்றான்.

ராமதுரையின் குரல் உடைவது போலிருந்தது. மாரியப்பன் ஆவேசமாக, என்னைய ரெண்டு அடி வேணும்னா அடிடா. ஆனா... நான் தப்பு பண்ணிட்டேன்னு மட்டும் சொல்லாதே என்றான். நான், மாரியப்பன் தேவையில்லாமல் ஆத்திரப்படுகிறான்

என்றேன். அவன் போடா, மசிரு... பெரிய உத்யோகத்துக்குப் போயிட்டா நீ சொல்ற மசிரை மட்டும் நாங்க கேட்டுக்கிட்டு இருக்க ணுமாக்கும். உனக்கு எப்பவுமே நீ ரொம்ப பெரிய ஆளுனு நினைப்புடா... நானும் உன்னை ஹாஸ்டல்ல இருந்து பாத்துக்கிட்டே இருக்கேன். நீ எவனையும் மதிச்சதேயில்லைடா... உங்க அப்பா கட்சியிலே இருந்தா அது உன் மட்டும். நாங்க எல்லாம் அதுக்கு உருவி விடணும்னு அவசியமில்லை.

எனக்கும் ஆத்திரமாக வந்தது. மாரியப்பனோடு பேசினால் தேவையற்ற வாக்குவாதம் வந்துவிடும் என்று தோணியது. நான் எழுந்து சன்னாசியைத் தேடிக்கொண்டு போனேன். அன்று இரவு நெடுநேரம் மாரியப்பனும் ராமதுரையும் இருட்டிற்குள்ளாகவே பேசிக்கொண்டிருந்தார்கள். சன்னாசி மிக ரகசியமாக என்னிடம் கேட்டான். சம்பத்துங்கிறது யாரு சார், உங்க பிரண்டா? நான் தலையாட்டினேன். உங்க பிரண்டு இருட்டுக்குள்ளே அழுதுகிட்டு இருந்தாரு. கவனிச்சீங்களா என்று கேட்டான்; நான் பதில் பேசாமல் இருளைப் பார்த்தபடி இருந்தேன். சன்னாசி அவர்கள் இருவருக்குமான சாப்பாட்டை எடுத்து வைத்துவிட்டு சமையல் அறையிலே சுருண்டு படுத்துக்கொண்டான்.

சன்னாசி விவரித்தது போலவே மலை இருள் மெழுகைப் போலிருந்தது. மாரியப்பனும் ராமதுரையும் இருட்டிற்குள் கரைந்து போயிருந்தார்கள். நான் ஒரு பாயை விரித்துப் படுத்துக்கொண்டேன். ராமதுரை சொன்னது போல சம்பத்தின் மரணத்திற்கு நானும் ஒரு காரணம் என்றுதான் தோணியது. சம்பத்தின் அழுக்கேறிய வேஷ்டியும் களைப்படைந்த முகமும் நினைவில் வந்தபடியிருந்தது. கல்லூரி நாட்களில் சம்பத் எவ்வளவு அழகாகயிருந்தான். அதுவும் ஆரம்ப நாட்களில் அவன் முகத்தில் இருந்த அந்தப் பிரகாசமும் சிரிப்பும் பார்த்துக்கொண்டிருந்தபோதே எப்படி ஓடி மறைந்துவிட்டது. சம்பத் மரணத்தினால் அழிக்க முடியாதவன் போல நினைவில் ததும்பிக்கொண்டேயிருந்தான்.

இருளுக்குள் ராமதுரைக்கு மாரியப்பனின் முகம் தெரியவில்லை. ஆனால் அவன் தான் பேசுவது அத்தனையும் உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருக்கிறான் என்பது மட்டும் தெரிந்தது. மாரியப்பன் மிகுந்த களைப்படைந்தவன் போல சம்பத்தைப் பற்றி ரெண்டு நாளைக்குப் பேசாம இருப்போம். இல்லாவிட்டால் தனக்கு தலையே வெடித்துவிடும் போலிருக்கிறது என்றான். அதற்கு ராமதுரை, இல்லைடா மாரியப்பா, மனசில இருக்கிறதை பேசித் தீர்த்துடு, இல்லாட்டி மனச்சிக்கல் ஆரம்பிச்சிரும் என்றான். மாரியப்பன், இல்லைடா மூச்சு முட்டுது, நாம போயி குளிச்சிட்டு

வருவமா என்று கேட்டான். இருவரும் இருளுக்குள்ளாகவே பாறையில் இறங்கி நடந்து போனார்கள். சருகுகளில் அவர்கள் நடக்கும் ஓசை கேட்டு பறவைகள் சிறகடித்துக் கொண்டன. பாதை தெரியாதபடி இருள் படர்ந்திருந்தது. மாரியப்பன் விடுவிடுவென கீழே இறங்கிக்கொண்டிருந்தான்.

இருவரும் ஒரு பாறையைத் தாண்டும்போது தண்ணீர் ஓடும் சப்தம் கேட்டது. அருகில் தான் காலையில் குளித்த அந்தப் படுகை யிருக்கிறது என்றான் ராமதுரை. மாரியப்பன் தனது உடைகளைக் களைந்துவிட்டு இருட்டிற்குள்ளாகவே தண்ணீரில் இறங்கி நின் றான். குளிர் உடல் எங்கும் கூச்சத்தைத் தந்தது. ராமதுரை ஒரு கல்லில் உட்கார்ந்துகொண்டான். மாரியப்பனுக்குத் தண்ணீருக்குள் மூழ்கி எழுந்தபோது காடு தங்களை உற்றுப் பார்த்துக்கொண்டி ருப்பது போல தோணியது. அவன் ஈர உடலைக் கூட துவட்டிக் கொள்ளாமல் உடையை அணிந்துகொண்டான். அவர்கள் இரு வரும் திரும்பியபோது அழகிரி தூங்கியிருந்தான்.

ஒரேயொரு சிம்னி விளக்கு சமையல் அறையில் எரிந்து கொண்டிருந்தது. ராமதுரை தங்களுக்காக எடுத்து வைக்கப் பட்டிருந்த சாப்பாட்டைப் பார்த்தான். பிறகு சாப்பிட மனதில் லாமல் ஒரு துண்டை விரித்துப் படுத்துக்கொண்டான். அவனது கனவில் சம்பத் தண்ணீரின் மீது ஒரு பைக்கை மிக வேகமாக ஓட்டிக்கொண்டு போய்க் கொண்டேயிருந்தான். பைக்கின் வேகம் நிமிஷத்துக்கு நிமிஷம் கூடிக்கொண்டேயிருந்தது. தண்ணீர் மீது அவன் வெகுதூரம் சென்றுகொண்டேயிருந்தான். ஒரு பெரிய அலை ஒன்று அவனை உள்இழுத்துக்கொண்டது. ஆனால் சம்பத் அலையின் மீது பைக்கில் ஏறி அந்தப் பக்கம் போய்க்கொண்டிருந் தான். அப்போது அவனது சிரிப்பும் கேலியும் மிக உக்கிரமாக யிருந்தது.

சம்பத்தின் உடலுக்கு முன் உட்கார்ந்திருந்த ஜெயந்திக்கு தூக்கக் கலக்கமாக இருந்தது. எழுந்து போய் முகத்தைக் கழுவிக்கொண்டு வரலாமா என்று நினைத்தாள். சம்பத்தின் மீதிருந்த ரோஜாப்பூ மாலைகளின் சுகந்தம் வயிற்றைப் புரட்டுவதாகயிருக்கவே, எழுந்து கொஞ்ச நேரம் வெளியே போய்விட்டு வரலாமா என்று யோசனை செய்தபடி மடித்து உட்கார்ந்திருந்த காலை நீட்டிக்கொண்டாள். சம்பத்தின் உடலைத் தவிர அருகில் வேறு யாருமேயில்லை. வெளியே பிரகாசமாக பெட்ரோமாக்ஸ் விளக்கு எரிந்துகொண்டி ருந்தது. அதனடியில் நால்வர் சீட்டு விளையாடிக்கொண்டிருந் தார்கள். வாசலில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு சம்பத் தின் நண்பர்களில் ஒருவரான மாரியப்பன் வாயில் கையைப்

பொத்தியபடியே அழுதுகொண்டிருந்தான்.

அவன் சாலையில் இருந்தே துக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டே வந்திருக்க வேண்டும். வீட்டின் உள்ளே நுழைந்து சம்பத்தின் உடலைப் பார்த்ததும் அவன் அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. அவன் பெண்கள் அழுவதைப்போல மூசுமூசு என்று அழுதான். அவனைச் சமாதானப்படுத்துவதற்குக்கூட அங்கே யாருமில்லை. சம்பத்தின் மற்ற இரண்டு நண்பர்களும் எங்கே போய் விட்டார்கள் என்று தெரியவில்லை. அவன் செய்வதறியாமல் உட்கார்ந்திருந்தான். தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொண்டவனைப்போல மாரியப்பன் அழுகையைப் புறங்கையால் துடைத்தபடியே வாசலில் கிடந்த நாற்காலியில் போய் உட்கார்ந்து கொண்டான்.

சீட்டு விளையாடிக்கொண்டிருப்பவர்களுக்கு குடிப்பதற்காகக் கடுங்காப்பி போட்டு ஒருவன் பெரிய தூக்குவாளியில் கொண்டு வந்திருந்தான். அவன் மாரியப்பன் உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் வறக்காப்பி குடிக்கிறீங்களா என்று கேட்டபடியே ஒரு டம்ளரில் ஊற்றினான். மாரியப்பன் அதை வாங்கித் தரையில் வைத்துவிட்டு தலை கவிழ்ந்தபடியே உட்கார்ந்திருந்தான். அழகரும் ராமதுரையும் எங்கே போயிருப்பார்கள் என்று அவனது கண்கள் தேடிக் கொண்டிருந்தன.

சிட்பண்ட் ஆபீசில் மாரியப்பன் தினசரிக் கணக்குப் பதிவேட்டினைப் பூர்த்தி செய்து கொண்டிருந்த போது அருகாமை இருக்கையில் இருந்த ஹேமா என்ற பெண் அவனுக்குச் சென்னையில் இருந்து போன் வந்ததாகவும் யாரோ சம்பத் என்பவர் இறந்துபோய்விட்டாராம் என்றபடி தனது ஹேண்ட்பேக்கில் இருந்து தலைவலித் தைலத்தை எடுத்து நெற்றியில் தடவியபடியே சொன்னாள். மாரியப்பன் எப்போது போன் வந்தது என்று சற்றே பதட்டத்துடன் கேட்டான். நீங்கள் மேனேஜரோடு பேசிக்கொண்டிருந்தபோது வந்தது என்றாள். மாரியப்பன் கையில் இருந்த பேரேடு நோட்டை மூடி வைத்துவிட்டு கேஷியர் வீட்டுக்குப் போயிட்டாரா என்று கேட்டான். அந்த பெண் வெளியே டீ சாப்பிடப் போயிருப்பதாகச் சொன்னாள். மாரியப்பன் கேஷியரிடமிருந்து இரண்டாயிரம் பணத்தை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்தபோது பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பியிருந்தார்கள்.

அவன் பேருந்து நிலையத்திற்கு வந்தபோது சம்பத் எந்த முகவரியில் இருக்கிறான் என்று சந்தேகமாக வந்தது. அவனிடமிருந்த சம்பத்தின் முகவரி சரிதானா என்ற யோசனையுடன் ராமதுரைக்கு போன் செய்து விசாரித்துக்கொள்ளலாம் என்று தோணியது. ராமதுரையை செல்போனில் அழைத்தபோது அவன் சம்பத்தின் மரணத்தை உறுதிப்படுத்தியதோடு எப்போது புறப்பட்டு வருகிறான் என்றும் கேட்டான். சம்பத்தின் வீடு எங்கேயிருக்கிறது என்று கேட்ட

நும் அவன், வழி சொன்னா உன்னாலே கண்டுபிடிக்க முடியாது, நீ மெட்ராசுக்கு வந்து இறங்கிட்டு எனக்கு போன் பண்ணு, சொல்றேன் என்று சொன்னான்; மாரியப்பன் பேருந்தில் ஏறிக்கொண்ட போது அவனது கண்கள் கலங்கியிருந்தன. யாராவது தன்னைக் கவனிக்கிறார்களா என்று பார்த்தபடியே கண்களைத் துடைத்துக் கொண்டு கடைசிச் சீட்டாகப்பார்த்து உட்கார்ந்துகொண்டான். மனம் ஒரு பக்கம் சம்பத்தின் சாவைப் பற்றியும், மறு பக்கம் அங்கே பழைய நண்பர்கள் யாரெல்லாம் வருவார்கள் என்பதைப் பற்றியும் மாறி மாறி நினைத்துக்கொண்டு வந்தது.

இரண்டு மணி நேரப் பயணத்தின் பிறகு தான் ஒரு சாவு வீட்டிற்குச் செல்கிறோம் என்ற பிரக்ஞை மெல்ல வடிந்து, மெதுவாக தொலைவில் எரியும் பிரகாசமான விளக்குகளையும் சிறு நகரங்களையும் பார்த்தபடியே வந்தான். கொஞ்ச நேரம் உறங்கி விட வேண்டும் என்று உள்மனது சொல்லிக்கொண்டேயிருந்தது. ஆனால் கண்களை மூடிக்கொண்டால் தூக்கம் கூடவேயில்லை. ஒரு சாலையோர உணவகத்தில் பேருந்து நின்றபோது சுருள் பூரிகள் விற்றுக் கொண்டிருந்தார்கள். தனது மூத்த மகனுக்கு சுருள் பூரி என்றால் ரொம்ப பிடிக்கும் என்று தோன்றியது. அவன்கூட சிறுவயதில் சாப்பிட்டிருக்கிறான். இளநீர் விற்பவனின் குரல் தனித்துக் கேட்டுக் கொண்டேயிருந்தது. இளநீர் குடிக்கலாம் என்று அருகில் சென்று வாங்கினான்.

சுவையே இல்லாத இளநீராக இருந்தது. எல்லாப் பேருந்துகளும் ஒன்றுபோல இருந்தன. எது தன்னுடைய பேருந்து என்று கண்டு பிடிக்க சற்றே குழப்பமாக இருந்தது. தன் பேருந்தின் முன் சீட்டில் ஒரு கனத்த பெண்மணி உட்கார்ந்திருப்பது நினைவிற்கு வந்தது போல ஒவ்வொரு பேருந்தாக ஏறிப் பார்த்தான். கனத்த பெண்மணி ஒரு இலையில் வைத்து தோசை சாப்பிட்டுக்கொண்டிருந்தாள். அவளைத சீட்டிற்குத் திரும்பியபோது சம்பத்தின் மரணம் பற்றிய எண்ணங்கள் முற்றாக வடிந்துபோயிருந்தன. பின்இருக்கையில் உட்கார்ந்து வருவது வசதியற்றது போல இருந்தது. முன்னால் ஏதாவது சீட் காலியாக இருந்தால் உட்கார்ந்துகொள்ளலாம் என்று நினைத்தான்.

பேருந்து புறப்பட்டபோது இரண்டு சீட் தள்ளி ஒரு நபர் மட்டுமே உட்கார்ந்திருந்தது தெரிந்தது. எழுந்து அந்த சீட்டிற்கு மாறிக்கொண்டு கண்களை மூடிக்கொண்டான். அலுவலகத்தில் மறுநாள் நடக்க இருந்த ஏலச்சீட்டு, அதற்குத் தேவையான கணக்குப் பதிவேடுகள் நினைவில் வரத் துவங்கின. ஏலம் இந்த மாதம் எவ்வளவு தொகை தள்ளிப்போகப் போகிறது என்று யோசித்துக் கொண்டிருந்தான். அத்தோடு இந்த இரண்டாயிரம் ரூபாய்க்குப் புதிதாக தான் நாலு பார்ட்டிகளை ஒரு லட்ச ரூபாய் சீட்டில் சேர்த்துவிட வேண்டும் என்றும் மனது சொல்லிக்கொண்டிருந்தது.

குளுமையான காற்று ஜன்னலில் இருந்து முகத்தில் அடித்துக் கொண்டிருந்தது. யோசனைகளைக் களைந்து பிறகு மாரியப்பன் பஸ்ஸில் நன்றாக உறங்கத் துவங்கினான்.

சீட்டாடிக்கொண்டிருந்தவர்களும் கலைந்து போயிருந்தார்கள். வாசலில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு சம்பத்தின் நண்பர்கள் மிக மெதுவான குரலில் பேசிக்கொண்டிருப்பதை ஜெயந்தி கேட்டுக்கொண்டிருந்தாள். இப்போது எத்தனை மணியா கிறது என்று தெரியவில்லை. உறக்கம் கண்களிலிருந்து வழிந்து கொண்டிருந்தது. தான் சிறிது நேரம் உறங்கலாமா என்று யோசித் தாள். அவள் அறியாமல் கண்கள் சொருகிக்கொள்வதும் கைகள் தரையில் நழுவிப் போவதுமாக இருந்தாள். இப்போதும் மருத்துவ மனையில் இருப்பது போன்றே நினைவுகள் வந்துகொண்டிருந்தன. எழுந்து மூத்திரம் பெய்யப் போக வேண்டும் போலிருந்தது. வாசலைக் கடந்துதான் போக வேண்டும். சம்பத்தின் நண்பர்கள் வெளியே உட்கார்ந்து இருந்தார்கள். அவர்களைக் கடந்து போனால் தன்னைப் பற்றி ஏதாவது நினைப்பார்களா என்று சந்தேகமாகவும் வந்தது. ஆனால் நீண்ட நேரமாக மூத்திரம் பெய்யாமல் அடிவயிற் றில் வலி அதிகமாசிக் கொண்டேயிருந்தது.

அவள் எழுந்து வாசலைப் பார்த்தாள். அவர்கள் மூவரும்கூட பேச்சற்று நாற்காலியில் சாய்ந்திருந்தார்கள். பெட்ரோமாக்ஸ் லைட் மட்டும் பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது. மெதுவாக நடந்து வந்து படியில் சப்தமின்றி இறங்கி அவர்களைக் கடந்து நடந்து போனாள். அவர்கள் அவளைக் கவனித்தது போலவே தெரிய வில்லை. பாத்ரூம் கதவைச் சாத்தும்போது சம்பத்தின் நண்பர்களில் ஒருவன் திரும்பிப் பார்ப்பது போலிருந்தது. அவள் தண்ணீரைக் கோரி ஊற்றிக்கொண்டுவிட்டு பதட்டத்துடன் வெளியே வந்தாள். வேகமாகக் கடந்து போய்விட வேண்டும் போலிருந்தது. அவசர அவசரமாக நடந்து வந்ததில் ஒரு மடக்கு நாற்காலியைத் தள்ளி விட்டாள். சப்தம் கேட்டு மூவரும் திரும்பிப் பார்த்தனர். ராமதுரை மட்டும் அவள் கொஞ்ச நேரம் தூங்கிவிடும்படியாகச் சொன்னான். அவள் தலையாட்டிக்கொண்டாள். சில அடிகள் நடந்தபிறகு அவள் டீ குடிக்கிறாளா என்று கேட்டார்கள். அவள் பதில் சொல்லாமல் வீட்டின் உள்ளே போய்விட்டாள். மணி எவ்வளவு ஆகிறது என்று கேட்க வேண்டும் போலிருந்தது. அதற்குள் அவர்கள் மூவரும் வெளியே கிளம்பிப் போய்விட்டிருந்தார்கள்.

சம்பத்திற்குக் கடிகாரம் கட்டும் பழக்கம் கிடையாது. வீட்டில் மாட்டுவதற்கு சுவர் கடிகாரம் வாங்க வேண்டும் என்ற சொன்ன போதுகூட அவன் மறுத்துவிட்டு, மணி பார்த்து நமக்கு என்ன

ஆகப்போகிறது? கடிகாரமோ காலண்டர்களோ தனக்குத் தேவை யானதில்லை. அதெல்லாம் ஆபீஸ் போகின்றவர்களுக்குதான் என்றான். இதனால் காலை நேரங்களில் அவள் சில நாட்களில் எட்டு மணி வரைகூட உறங்கிக் கிடந்திருக்கிறாள். கண்விழித்துக் கதவைத் திறக்கும்போது வாசலில் பிரகாசமான வெளிச்சம் படர்ந் திருப்பதைக் கண்டு வெட்கமாக இருக்கும். சம்பத் எல்லா நாளும் பத்து மணிக்கு மேல்தான் எழுந்துகொள்வான். ஆனால் அவன் உறங்குவதற்கு இரவு இரண்டு மணிக்கு மேலாகிவிடும். இருந்தும் சம்பத்தை அவளுக்குப் பிடித்திருந்தது.

சில வேளைகளில் அவள் யோசித்துப் பார்ப்பாள். சம்பத்தை ஏன் தன்னால் கோபித்துக்கொள்ளவே முடியவில்லை என்று. சம்பத் ஏதோ ஒரு விதமான அன்பைச் செலுத்துகிறான் என்று தோணும். சில நாட்களில் சிறு குழந்தைகளைக் கொஞ்சுவதைப் போல அவளுக்கு முத்தம் கொடுத்துக்கொண்டேயிருப்பான். அப்போது மிக வெட்கமாக இருக்கும். அதுவும் கன்னத்தில், கை களில், கால்விரல்களில் என்று அவன் முத்தமிடும் போது இனம் புரியாத சந்தோஷமாக இருக்கும். சம்பத் அவளை அடித்ததே யில்லை. ஆனால் கோபம் வந்தபோது கத்துவான். எதையாவது தூக்கிப் போட்டு உடைப்பான். ஆனால் அடிக்க மாட்டான்.

சம்பத் அப்போது லாட்டரிச் சீட்டு வாங்குவதில் மிக மும்முர மாக இருந்தான். நாமக்கல்லில் உள்ள ஒரு லாட்டரி ஏஜென்சியில் சீட்டு வாங்கினால் முதல் பரிசு விழுகிறது என்பதற்காக அவன் தன் ஊரில் இருந்து கிளம்பி நாமக்கல் வந்து ஒரு லாட்ஜில் அறை எடுத்துக்கொண்டு ஒரு வாரம் தினமும் ஒரு மாநில லாட்டரிச் சீட்டுகளாக வாங்கிப் பார்ப்பான். அவனுக்கு என்றே அவன் சொல் லும் நம்பர்களைத் தனியாக எடுத்து வைத்திருப்பார்கள். அப்போது சம்பத் என்ன வேலை செய்தான் என்று அவளுக்குத் தெரியாது.

ஆனால் சம்பத் தங்கியிருந்த ஒரு லாட்ஜின் கீழே உள்ள எஸ்டிடி பூத்தில் ஜெயந்தி வேலை செய்துகொண்டிருந்தாள். அந்த பூத்தை நடத்துபவர் ஒரு கோழி வியாபாரி. அவரிடம் ஆயிரக்கணக்கில் கோழிகள் இருந்தன. ஒரு நாள் டெலிபோன் பூத்தின் தினசரிக் கணக்கு வழக்கை ஒப்படைப்பதற்காக அவள் கோழிப் பண்ணைக் குப் போயிருந்த போது ஆயிரக்கணக்கில் கோழி முட்டைகள் இருப் பதைக் கண்டாள். அந்த முட்டைகள் யாவும் ஏதோ ஒரு மிஷினில் செய்யப்பட்டது போல வியப்பாக இருந்தது. முட்டைகளை ரகவாரி யாகப் பிரித்துக்கொண்டிருந்தார்கள். அவள் பணத்தையும் மொத்த ரசீதுகளையும் கொடுத்துவிட்டுத் திரும்பும்போது ஒரு இரும்பு வாளி யில் இருந்த முட்டைகளைக் காட்டி அதில் வேண்டியதை அவள் எடுத்துக்கொண்டு போகும்படியாகச் சொன்னார். அவள் பத்து முட்டைகளுக்கும் மேலாக வீட்டிற்குக் கொண்டுபோனாள்.

அவளது அப்பா ஒரு லாரி பார்வேடிங் ஏஜென்சியில் வேலை

செய்துகொண்டிருந்தார். அவளது அம்மா இறந்துபோன பிறகு அவர்கள் இருவர் மட்டுமே இருந்தார்கள். அவளது அப்பாவும் தனக்குக் கிடைக்கும் பணத்தில் பாதிக்கும் மேலாக லாட்டரிச் சீட்டு வாங்குகின்றவராக இருந்தார். சிறுவயதிலிருந்தே அவள் அப்பா கிழித்துப் போடுவதற்காக வைத்திருந்த லாட்டரிச் சீட்டுகளை பத்திரமாக எடுத்து சேகரித்துக்கொண்டு வந்தாள். ஆனால் பரிசு விழாத லாட்டரிச் சீட்டுகளைச் சேர்த்து வைத்தால் அதிர்ஷ்டம் தன்னைத் தேடி வராமல் போய்விடும் என்று அப்பா ஒரு இரவில் அவள் சேர்த்து வைத்த ஆயிரக்கணக்கான லாட்டரிச் சீட்டுகளையும் தீ வைத்து எரித்துவிட்டார்.

அவள் பத்து வயதில் இருந்து வீட்டு வேலைக்குப் போய்க் கொண்டிருந்தாள். அதுவும் ஒரு டாக்டர் வீடு, கணவன் மனைவி இருவருமே மருத்துவர்கள் என்பதால் வீட்டு வேலைகளைச் செய்வதற்காக அவளை வைத்திருந்தார்கள். அவளைத் தவிர ஒரு சமையற்காரரும் டாக்டரின் வயதான அம்மாவும் மட்டுமே வீட்டிலிருந்தார்கள். மதியம் இரண்டு மணிக்கு அவர்கள் சாப்பிடுவதற்காக வருவார்கள். பிறகு உறங்கி விடுவார்கள். ஜெயந்திக்கு மதியம் வரைதான் வேலை. சாப்பாடும் கொடுத்துவிடுவார்கள். அவள் சில நாட்கள் மதியம் வீட்டிற்குத் திரும்பி வராமல் சினிமா பார்ப்பதற்குப் போய்விடுவாள்.

ஒரு நாள் டாக்டருக்கும் அவரது மனைவிக்கும் ஏகச் சண்டையாக இருந்தது. டாக்டரின் மனைவி அவரது நடத்தையைப் பற்றி மிக மோசமாகத் திட்டிக்கொண்டிருந்தாள். டாக்டர், தான் பெண்கள் விஷயத்தில் அப்படித்தான் நடந்து கொள்வேன் என்றும் அவளால் தனக்கு எந்த சுகமும் கிடைக்கவில்லை என்றார். டாக்டரின் மனைவி, அதுக்காக இப்படி மருத்துவமனையில் வேலைப்பார்க்கும் பெண்களிடம் நடந்துகொள்வதா என்று கத்தினாள். டாக்டர், சும்மா ஒண்ணும் அவர்கள் வரவில்லை, தான் பணம் கொடுத்து தான் வந்ததாகச் சொன்னார். டாக்டரின் மனைவி, இந்த புத்தி தாமே வீட்லயும் இருக்கும், நாளைக்கு நம்ம வீட்டு வேலைக்காரி கிட்டே கூட இப்படித்தானே நடந்துக்கிடுவீங்க என்றதும் அவள் அச்சத்துடன் மருத்துவரைப் பார்த்துக்கொண்டிருந்தாள். டாக்டர் ஆவேசத்துடன் யாரா இருந்தா உனக்கு என்னடி....? நீ அதைப் பத்தி கேட்காதே என்று சொல்லிவிட்டுத் தனது அறைக்குச் சென்று விட்டார். டாக்டர் மனைவி உடனடியாக சமையற்காரரையும் அவளையும் அழைத்து வேலைக்கு இனிமேல் தேவையில்லை என்று பாதி மாதச் சம்பளம் கொடுத்து அனுப்பிவைத்தாள்.

அவள் வீட்டிற்குத் திரும்பி வராமல் ஹோட்டலில் சாப்பிடலாம் என்று போய் முழுச் சாப்பாடு சாப்பிட்டாள். அன்று மதியக் காட்சியும் மாலைக் காட்சியுமாக இரண்டு சினிமாக்களைப் பார்த்தாள். அப்போது இதுபோல ஏதாவது சினிமா தியேட்டரில் சுத்தம்

செய்யும் வேலை கிடைத்தால்கூடப் போதும் என்று தோணியது. இரவு வீடு திரும்பி வந்து அவளது அப்பாவிடம் மீதமிருந்த பணத்தைக் கொடுத்துவிட்டு, டாக்டர் வீட்டில் வேலைக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டதாகத் தெரிவித்தாள். அவர் கோழிப் பண்ணைக்கு வேலைக்குப் போகிறாளா என்று கேட்டார். அவள் தான் ஒயர் கூடை பின்னி விற்கப் போவதாகச் சொன்னாள். ஆனால் அதன் பிறகு அவளுக்கு ஒரு ஒயர் கூடையைப் பின்னுவதற்குப் பத்து நாட்களாகிப் போனது. மாதம் முழுவதும் பின்னினால்கூட மூன்று கூடைதான் பின்ன முடியும் என்று தெரிந்துபோனதால் திரும்பவும் வீட்டு வேலைக்கே போகத் துவங்கினாள்.

இரண்டு வருஷங்களுக்கு முன்பு அப்பா கேரளாவிற்குப் போய் விட்டுத் திரும்பும்போது இருபத்தைந்து வயது முடியாத பத்மஜா என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு நாமக்கல்லுக்குக் கூட்டி வந்துவிட்டார். அந்தப் பெண்ணிற்கு ஏற்கனவே திருமணம் நடந்து கணவன் வீட்டில் ஏற்பட்ட பிரச்சினையால் தனித்து வாழ்ந்துகொண்டிருக்கிறாள். அவளுக்கு இரண்டு வயதில் குழந்தையுமிருந்தது. ஜெயந்திக்கு அவர்கள் இருவரையும் பார்த்தபோது மிக ஆத்திரமாக வந்தது. அந்தப் பெண், அது தன்னுடைய தவறில்லை என்றும் தன்னிடம் மனைவி இறந்துபோய் தான் தனியாக வசிப்பதாகச் சொல்லி ஏமாற்றிவிட்டார் என்றாள். ஜெயந்திக்கு அந்தப் பெண்ணை என்ன செய்வது என்று தெரியவில்லை. ஜெயந்தி திருமணம் செய்து கொண்டு போய்விட்டால் தான் என்ன செய்வது என்றுதான் பத்மஜாவைத் திருமணம் செய்து வந்ததாக அப்பா சொல்லிவிட்டு அவள் தங்களோடுதானிருப்பாள் என்றார்.

அந்தப் பெண் வந்த பிறகு அப்பா வேலைக்குப் போவது குறைந்துபோனது. அவர் வீட்டிலே இருந்தார். சில நாட்கள் ஜெயந்தி வீட்டு வேலைகளை முடித்து விட்டு தன் வீட்டிற்குத் திரும்பியபோது கதவு மூடப்பட்டிருக்கும். அவர்கள் இருவரும் பகல் புணர்ச்சியில் ஈடுபட்டிருப்பார்கள். அந்தப் பெண் வலியால் கத்துவது கேட்கும். ஜெயந்தி கதவைத் தட்டாமல் நின்றுகொண்டேயிருப்பாள். பிறகு எங்கே போவது என்று தெரியாமல் சாலையில் இறங்கி பேருந்து நிலையம் வரை நடந்து போய்விட்டு வீடு திரும்பி வருவாள். பகலில் மட்டுமல்லாது இரவிலும் அவளுக்கு மிகப் பிரச்சினையாக இருந்தது அப்பாவின் காமம்தான். உடல்கள் ஒன்றையொன்று கவ்வி உண்ணும் அந்த விசித்திர வேட்கையைப் அவள் பாதி இருளில் கவனித்துக்கொண்டிருப்பாள். அவளை அறியாமல் அவளது உடலிலும் காமம் துளிர்க்கத் துவங்கி இரவு தூக்கம் வராமல் போய்விடும்.

இந்தக் காட்சிகளில் இருந்து தப்பிப்பதற்காகவே டெலிபோன் பூத்தில் வேலை செய்வதற்கு சம்மதிக்கிறாளா என்று சரோஜினி கேட்டதுமே அவள் ஒத்துக்கொண்டுவிட்டாள். அந்த வேலை

காலை எட்டரை மணிக்குத் துவங்கி இரவு ஒன்பது மணி வரை தொடர்ந்து இருக்க வேண்டியது. அதனால் பகலில் வீட்டிற்குத் திரும்பிப் போய் வெளியே நிற்க வேண்டிய அவசியம் வராது. அது மட்டுமல்லாமல் சாப்பாடும் இரண்டு வேளை டீயும் தந்து விடுவார்கள் என்பதால் அவள் உடனே வேலைக்குச் சேர்ந்து விட்டாள்.

சம்பத் ஒரு நாள் காலை கடை திறந்தவுடன் போன் செய்வதற் காக வந்திருந்தான். அன்று அவள் இளம் சிவப்பு நிற பூப்போட்ட சேலை கட்டிக்கொண்டு போயிருந்தாள். அவன் அவளைக் கவனிக்க வேயில்லை. யாருக்கோ எஸ்டிடி பேசிக்கொண்டிருந்துவிட்டு எழுந்து போகும்போது தனது சிறிய டயரி ஒன்றை டெலிபோன் அடியில் விட்டுவிட்டுப் போய்விட்டான். அவள் அதை எடுத்து வைத்திருந்து மதியச் சாப்பாட்டிற்குப் போகும்போது கவனமாகத் திருப்பிக் கொடுத்தாள். அவன் அலட்சியமாக அதைப் புரட்டியபடி அவள் புரட்டிப் பார்த்தாளா என்று கேட்டான். அவள் இல்லை என்றதும் அப்படியானால் புரட்டிப் பாரு, சாயங்காலம் வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு அவள் முன்னிருந்த மேஜை யின் மீது வைத்துவிட்டுப் போய்விட்டான்.

அவளுக்குக் கூச்சமாக இருந்தது. இதன் முன்னர் எவரும் இப்படி நேரடியாக அவளிடம் பேசியதேயில்லை. சிலர் துண்டுக் காகிதங் களை மறந்துவிட்டுகூடக் கத்திக் கூப்பாடு போட்டிருக்கிறார்கள். அவள் சம்பத்தின் டெலிபோன் எண்கள் எழுதப்பட்ட டயரியைப் படித்துப் புரட்டிப் பார்த்தாள். அதில் பாதி அவசர போலீஸின் எண்கள், தீயணைப்புத் துறை எண்கள். என ஏதேதோ நம்பர்கள் இருந்தன. சில பக்கங்களில் அக்பர், பாபர், ஒளரங்கசீப், ஷேக்ஸ் பியர், தொல்காப்பியர், சிவவாக்கியர், அருணகிரிநாதர் என்று சிவப்பு மையில் ஏதேதோ பெயர்கள் டைரி முழுவதும் எழுதப் பட்டிருந்தன. அவர்களின் தொலைபேசி எண்களாக விசித்திரமான இலக்கங்கள் இடம்பெற்றிருந்தன. ஒரு சிறிய முருகன் படம் ஒன்றிருந் தது. அவருக்குக் கீழ் கூட முருகனின் தொலைபேசி எண்களாகச் சில எண்கள் எழுதபட்டிருந்தன. அவளுக்குச் சிரிப்பாக இருந்தது. எதற்காக இப்படி இல்லாத எண்களாக எழுதி நிரப்பிவைத்திருக் கிறார். என்று நினைத்து நினைத்துச் சிரித்துக்கொண்டாள்.

மாலை சம்பத் திரும்பி வந்தபோது அவனிடம் அந்த டயரியைக் கொடுத்தபோது அதைக் கிழித்து எறிந்துவிடும்படியாகச் சொல்லி விட்டுச் சென்றான். இது நடந்து இரண்டு நாட்களுக்குப் பிறகு சம்பத் வெளியே போகும்போதும் உள்ளே வரும்போதும் அவளைக் கவனித்துக்கொண்டேயிருக்கத் துவங்கினான். சம்பத் நிறைய லாட்டரி டிக்கெட்டுகள் வாங்குவதையும் ரிசல்ட் பார்த்துவிட்டு அவற்றைத் தூக்கி எறிவதையும் கண்ணாடிக்கு அப்பால் இருந்து பார்த்தாள்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை நேரத்தில் சம்பத் போன் செய்வதற்காக வந்தவன் அதிர்ஷ்டத்தில் அவளுக்கு நம்பிக்கையிருக்கிறதா என்று கேட்டான். அவள் தனக்கு இதுவரை அதிர்ஷ்டம் அடித்ததேயில்லை என்றாள். சம்பத் அவள் ஐந்து ரூபாய் தருவதாக இருந்தால் இருவரும் சேர்ந்து கூட்டாக லாட்டரி சீட்டு வாங்கலாம் என்றான். ஜெயந்தி அதுவரை லாட்டரிச் சீட்டு எதுவும் வாங்கியதேயில்லை. அவள் மேஜை மீதிருந்த சில்லறையில் இருந்து ஐந்து ஒரு ரூபாய் நாணயங்களை எடுத்து அவனிடம் நீட்டினாள். சம்பத் தானும் முதல் முறையாகக் கூட்டாகச் சீட்டு வாங்கப் போவதாகச் சொல்லியபடி அவசர அவசரமாகக் கிளம்பிச் சென்றான்.

பதினோரு மணியளவில் திரும்பி வந்து அவளிடம் ஒரு லாட்டரிச் சீட்டைக் கொடுத்து அதன் பின்னாடி கையெழுத்து போடச் சொன்னான். அவள் தன் பெயரைக் கூச்சத்துடன் கையெழுத்து போட்டாள். அவன் அதற்குக் கீழாகத் தன் பெயரையும் கையெழுத்து போட்டுவிட்டு அவளிடம் அந்தச் சீட்டை பத்திரமாக வைத்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு அறைக்குத் திரும்பிச் சென்றான். அன்றிரவு ஜெயந்தி அந்த சீட்டில் தனக்குப் பத்து லட்சம் பரிசு விழுந்தால் என்ன செய்வது என்பதைப் பற்றி கனவு கண்டுகொண்டிருந்தாள். பட்டணத்தில் பூதம் படத்தில் கே.ஆர். விஜயா குளிப்பது போன்று கவர்ச்சியான நீச்சல் உடையணிந்துகொண்டு அவள் குளிப்பது போன்றும், சம்பத் அதை பார்த்துக்கொண்டிருப்பது போலவும் கூட கனவில் வந்தது.

மறுநாள் காலை கடை திறந்ததும் சம்பத் அவளிடமிருந்த லாட்டரிச் சீட்டை வாங்கிக்கொண்டு சென்றான். பதினோரு மணியளவில் மிகச் சந்தோஷத்துடன் திரும்பி வந்து அவர்கள் வாங்கிய சீட்டிற்கு நூறு ரூபாய் விழுந்திருக்கிறது என்றான். அவளால் நம்ப முடியவில்லை. சம்பத்தும் தனக்கு இதுவரை பரிசு எதுவுமே விழுந்ததில்லை. தான் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்கள் அத்தனையிலும் பரிசுச் சீட்டுகள் வாங்கியிருப்பதாகச் சொன்னான். பிறகு தன் சட்டைப் பையில் இருந்து புதிய நோட்டுகளாகப் பத்துத் தாள்களை எடுத்து அவளிடம் நீட்டி அதை முகர்ந்து பார்க்கும்படியாகச் சொன்னான். அவள் அந்தப் பணத்தை முகர்ந்தபோது மிகவும் வாசனையாக இருந்தது.

ஆளுக்கு ஐம்பது ரூபாய் என்று பிரித்து எடுத்துக் கொடுத்தான். பிறகு அதில் இருந்து நாற்பது ரூபாய் தந்தால் திரும்பவும் சீட்டு வாங்கலாம் என்றான். ஜெயந்தி தன் கையில் இருந்த பணத்தில் நாற்பதை அவனிடம் தந்தாள். சம்பத் லாட்டரிச் சீட்டு வாங்க அவளும் வருகிறாளா என்று கேட்டான். அவள் சம்மதித்ததும் இருவரும் நடந்து பேருந்து நிலையத்தின் வாசலில் இருந்த லாட்டரிச் சீட்டுக் கடைக்குப் போய் நின்றார்கள். கடை தெரியாத அளவு கூட்டம் ததும்பிக்கொண்டிருந்தது. மைக்கில் ஒருவன் பத்து லட்சம்

இன்றே கடைசி . . . பத்து லட்சம் என வாய் ஓயாமல் கூவிக் கொண்டேயிருந்தான்.

சம்பத்தை அங்கிருந்தவர்கள் அத்தனை பேருக்கும் தெரிந் திருந்தது. சம்பத் ஒரு கட்டு லாட்டரிச் சீட்டுகளை வாங்கி அதில் ஏதோ சில எண்களைத் தேர்ந்து எடுத்து அவளிடம் காட்டி அதை எடுத்துக்கொள்ளலாமா என்று கேட்டான். அவள் சிரித்தாள். அவர்கள் பரிசுச் சீட்டுகள் வாங்கிக்கொண்டு திரும்பியபோது தான் கடந்த இரண்டு வருடங்களாக எப்படியும் ஒரு இருபதாயிரம் ரூபாய்க்குப் பரிசுச் சீட்டு வாங்கியிருப்பதாக சம்பத் சொன்னான். அவன் என்ன வேலை செய்கிறான் என்று கேட்க வேண்டும் போலி ருந்தது. ஆனால் அவளுக்குத் தயக்கமாக இருந்தது. அன்று லாட்டரி டிக்கெட்டுகளில் சம்பத் கையெழுத்து வாங்கவில்லை. லாட்ஜ் அருகில் வந்தபோது, தான் எப்படியும் ஒரு நாள் லாட்டரியில் பத்து லட்சம் அதிர்ஷ்டம் அடித்துவிடுவேன், அதற்குச் சரியான கூட்டணி கிடைத்துவிட்டது என்றான்.

அவளுக்குத் தன்னை சம்பத் புகழ்வது கூச்சமாக இருந்தது. சம்பத் அதன் பிறகு இரண்டு நாட்கள் டெலிபோன் பூத்திற்கு வரவே யில்லை. அவன் அறைக்குப் போய் இருக்கிறானா என்று பார்க்க வேண்டும் போலிருந்தது. ஆனால் கூச்சமாக இருந்தது. அந்த ஞாயிற்றுக் கிழமை அன்று சம்பத்தை ஒரு திரையரங்கத்தில் வைத்துப் பார்த்தாள். அவன் படம் பார்க்காமல் ஒரு மரப் பெஞ் சில் படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். படம் துவங்கும்போதி லிருந்து முடியும்வரை அப்படியே உறங்கிக்கொண்டுதானிருந்தான்.

மறுநாள் அவனாக டெலிபோன் பூத்திற்கு வந்தான். தாங்கள் வாங்கிய லாட்டரிச் சீட்டுகளுக்கு பரிசு விழவில்லை என்றும், மனது ரொம்பவும் வேதனையாக இருந்ததால் ரூமை விட்டு வர வில்லை என்றும் சொல்லியபடி பத்து ரூபாய் அவளிடம் கடன் கேட்டான். அவள் பத்து ரூபாய் எடுத்துத் தந்துவிட்டு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தியேட்டரில் படம் பார்க்காமல் ஏதற்கு தூங்கிக்கொண்டிருந்தான் என்று கேட்டாள். அவன் லாட்ஜில் தூங்கித் தூங்கி அலுத்துவிட்டது என்றும் அதற்காக சில நாட்கள் இப்படி சினிமா தியேட்டருக்குப் போவது உண்டு என்றபடி அவள் தன்னைக் கவனித்தாளா என்று கேட்டான். ஜெயந்தி தலை யாட்டினாள்.

சம்பத் அதன் பிறகு டெலிபோன் பூத்திற்கு வரவேயில்லை. அவன் தன் ஊருக்குப் போயிருக்கக்கூடும் போலிருந்தது. ஜெயந்தி சில பகல்வேளைகளில் சம்பத்தைப் பற்றி நினைத்துப் பார்ப்பாள். ஆனால் நாலைந்து வாரங்களில் சம்பத்தின் முகம் மெல்ல மறந்துபோகத் துவங்கியிருந்தது.

ஆனால் திடீரென ஒரு நாள் அவன் புது வேஷ்டி, சட்டையுடன் அதே லாட்ஜின் படிக்கட்டுகளில் இறங்கி வந்துகொண்டிருப்பதைக்

கண்டாள். சம்பத் அவளைப் பார்த்து சல்யூட் அடித்துவிட்டுச் சென்றான். அன்று மதியம் டெலிபோன் பூத்திற்கு சம்பத் வந்த போது வெற்றிலை போட்டு சிவந்த உதட்டுடன் இருந்தான். அவன் மிகச் சந்தோஷமாக இருக்கிறான் என்பது முகத்திலே தெரிந்தது. மேகாலயா லாட்டரியில் தனக்கு பத்தாயிரம் அடித்ததாக அவளிடம் சொன்னான். அவளால் நம்ப முடியவில்லை. சம்பத் அவளிடம் கடன் வாங்கிய பத்து ரூபாயைத் திருப்பித் தந்துவிட்டு அவள் சாப்பிடுவதற்காக தான் பிரியாணி வாங்கி வந்துள்ளதாக ஒரு பொட்டலத்தைக் கொடுத்துவிட்டு அறைக்குச் சென்றான். அவள் நமட்டுச் சிரிப்புடன் வாங்கிக் கொண்டாள். சம்பத் சீட்டியடித்த படியே லாட்ஜ் படிக்கட்டுகளில் நடந்து சென்றான்.

நான்கு மணியிருக்கும்போது அவன் கீழே வந்து ஒரு மாலைப் பேப்பரை வாங்கிக் கையில் சுருட்டி வைத்தபடியே அவள் அருகில் வந்து உட்கார்ந்துகொண்டு ஒரு சிகரெட் பிடித்தான். ஜெயந்திக்கு அவனது செய்கைகளைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது. சிகரெட்டைப் புகைத்தபடியே அவளுக்குத் திருமணம் ஆகிவிட்டதா என்று விசாரித்தான். ஜெயந்தி இல்லை என்று சொன்னாள். அவளுக்கு எத்தனை வயதாகிறது என்று கேட்டான். அவள் முப்பத்திரண்டு என்றதும் அவள் தன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள முடியுமா என்று கேட்டான். அவளுக்கு என்ன பதில் சொல்வது என்று புரிய வில்லை. அவன் ஏதோ கேட்கணும்னு தோணிச்சி, யோசிச்சிக்கூட பதில் சொல்லு என்று சொல்லிவிட்டு தன் அறைக்குப் போய் விட்டான்.

அவள் பகல் முழுவதும் யோசித்தாள். எதற்காகத் தன்னிடம் அப்படி கேட்டான்? தன் அழகில் மயங்கிவிட்டானா? இல்லை தன்னை ஏமாற்றி எங்காவது கொண்டு போய்விடப் போகிறானா? அவன் திருமணம் ஆனவனா, ஆகாதவனா? பணக்காரனாக இருப் பானா? இப்படி அவள் குழம்பிக்கொண்டேயிருந்தாள். சம்பத் அன்று மாலை டீ குடிக்கக்கூட கீழே வரவேயில்லை. இரவு அவள் டெலிபோன் பூத்தை மூடிவிட்டுக் கிளம்பும்போதுகூட அவன் தன்னைத் தேடி வரக்கூடும் என்று நினைத்துக் கொண்டிருந்தாள். அன்றிரவு தூக்கத்தில் புரண்டுகொண்டே கிடந்தாள். உடலில் காமம் நெருஞ்சிப்பூ போல எண்ணிக்கையற்று பூக்கத் துவங்கி யிருந்தது. அவள் மறுநாள் காலை கடையைத் திறந்து வைத்ததும் அவன் அறைக்குப் போய் தனக்குச் சம்மதம் என்று சொன்னாள்.

சம்பத் அப்போது சிறிய மரக்கட்டிலில் படுத்தபடியே பேப்பர் படித்துக்கொண்டிருந்தான். அவனது காலை உணவு மேஜை மீது இருந்தது. பருத்த அவனது தொப்பை முழுவதும் ரோமங்கள் அடர்ந்துபோயிருந்தன. நெஞ்சில் இருந்த ரோமங்கள் கூட நரைத் துப்போயிருந்தன. சட்டையில்லாத அவன் உடம்பு தர்பூசணிப் பழத்தை நினைவுபடுத்தியது. அவள் தன்னைக் கவனிக்கிறாள் என்று

தெரிந்ததும் அவனாக உடம்பு விட்டுப் போச்சு என்றான். அவள் சிரித்தாள்.

சம்பத் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டு மதியமே திருமணம் செய்து கொண்டுவிடலாமா என்று கேட்டான். அவளுக்கு அது எப்படி சாத்தியமாகும் என்று புரியவில்லை. லாட்ஜில் ரூம் பாயாக உள்ள விநாயகம் என்ற பையனை அழைத்து மதியம் ஒரு முழுச்சாப்பாடு வாங்கிக்கொண்டு, ரெண்டு மாலை வாங்கிக் கொண்டு வரும்படி சொன்னான். பிறகு அவளிடம் நீ கீழே இரு, கூப்பிடுறேன் என்றபடி படுக்கையில் இருந்து எழுந்துகொண்டான். மதியம் இரண்டு மணிக்கு அவன் கீழே இறங்கி வந்து அவளைச் சாப்பிடுவதற்காகக் கூப்பிட்டான். அவள் படியேறி மேலே போகும் போது லாட்ஜ் மேனேஜர் ஒரு நமட்டுச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

ரெண்டு ரோஜாப்பூ மாலைகள் கட்டிலில் கிடந்தன. ஒரு தின சரிப் பேப்பரில் மஞ்சக்கயிறு ஒன்று விரித்து வைக்கப்பட்டிருந்தது. அவளிடம் சாப்பிடும்படியாகச் சொன்னான். அவளும் சம்பத்தும் கேரியரைப் பிரித்துச் சாப்பிட்டார்கள். பிறகு அவன் ரூம் பாய் விநாயகத்தை வரச் சொல்லி, இதுவரைக்கும் உங்க லாட்ஜ்ல ஏதர்வது கல்யாணம் நடந்திருக்காடா என்று கேட்டான். அவன் இல்லை என்றதும் புன்சிரிப்புடன் நீதாண்டா எங்க கல்யாணத்துக்கு சாட்சி என்று அவளிடம் ஒரு மாலையைக் கொடுத்தான். அவன் ஒரு மாலையை வாங்கி அவள் கழுத்தில் போட்டுவிட்டு மஞ்சள் கயிற்றை எடுத்துக் கட்டினான். கல்யாணம் என்பது இவ்வளவு தானா என்று ஜெயந்திக்குத் தோணியது. சம்பத் தன் கழுத்தில் கிடந்த மாலையோடு கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண் டான். பிறகு கீழே போயி சொல்லிட்டு வருவமா என்று கேட்டான். அவள் பயத்துடன் தலையசைத்தாள்.

இருவரும் கீழே வந்தபோது லாட்ஜ் மேனேஜர் சற்றே அதிர்ச்சி யான முகத்துடன், சம்பத் சார் என்ன இது என்றார். சம்பத் அவளைத் திருமணம் செய்துகொண்டுவிட்டதாகச் சொல்லிக் கைகுலுக்குவதற்குக் கையை நீட்டினான். திருட்டுக் கல்யாணம் பண்றதுக்கு இதுதான் இடமா? இது டீசண்ட் லாட்ஜ் சார் என்று கத்தத் துவங்கினார். சம்பத் என்ன பெரிய மசிரு... டீசண்ட். இங்க எத்தனை பேரை நானே கூட்டிட்டு வந்திருக்கேன், போடா... வெங்காயம் என்றான். மேனேஜர் அறையை உடனே காலி செய்யும் படியாகச் சொன்னார். அவளைக் கீழே போய் இருக்கச் சொல்லி விட்டுத் தனது சட்டை மற்றும் இரண்டு வேஷ்டித் துண்டுகளை மடித்து எடுத்துக்கொண்டு அட்வான்ஸ் தந்த பணத்தில் மீதத்தைக் கையில் வாங்கியபடி சம்பத் கீழே இறங்கியிருந்தான். அப்போதும் அவள் நடந்ததெல்லாம் நிஜம்தானா, இல்லை கனவா என்று தெரியாதபடி நின்றிருந்தாள்.

சம்பத் அவளை வாரமுடிவிட்டு கூட்டிக்கொண்டு வருவதாகச் சொன்னான். இருவரும் தெருவில் கூழ்த்தில் மாலைகளோடு நடந்து போய்க்கொண்டிருப்பதை அருகில் இருந்த மெடிக்கல்ஸ் உரிமையாளரும் பேக்கரிகாரனும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சம்பத் அவள் எவ்வளவு பணம் வைத்திருக்கிறாள் என்று கேட்டான். பூத்தில் கலெக்ஷன் ஆன இருநூற்றிப் பத்து ரூபாய் இருப்பதாகச் சொன்னாள். சம்பத்தும் அவளும் ஒரு டவுன் பஸ்ஸில் ஏறிக்கொண்டார்கள். சம்பத் வெளியே பார்த்துக்கொண்டே வந்தான். டவுன் பஸ் நகரை விட்டு விலகிக் கிராமப் பாதைக்குள் போய்க்கொண்டேயிருந்தது.

அருகில் கிராமமே தெரியாத ஒரு பாதையில் அவர்கள் இருவரும் இறங்கிக்கொண்டார்கள். தொலைவில் ஒரேயொரு கிணறும் தென்னை மரமும் தெரிந்தது. அவர்கள் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தபோது சுற்றிலும் கண்ணுக்கு எட்டிய வரை ஆள் யாருமேயில்லை. சம்பத் அவள் புடவையை அவிழ்த்து விரிக்கும்படியாகச் சொன்னான். அவர்கள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் புரண்டு முயங்கி உடல் ஆசைகளைத் தீர்த்துக்கொண்டபோது தந்திக் கம்பங்களில் நின்றிருந்த குருவிகளைத் தவிர வேறு சப்தம் எதுவுமே கேட்கவேயில்லை. அவள் கண்களைக் கைகளால் மூடிக்கொண்டு சிறிது நேரம் படுத்துக் கிடந்தாள். பிறகு தன் புடவையை எடுத்து மண்ணை உதறிக்கொண்டு கையால் தொடைகளில் புகுந்திருந்த மண்ணைத் துடைத்தபடியே சம்பத்திடம் யாரோ தொலைவில் வருவதாகச் சொன்னாள். சம்பத் எழுந்து நின்றபோது ஒரு வயதான ஆள் தனியே நடந்து வந்துகொண்டிருந்தார். சம்பத்தும் அவளும் சாலையை நோக்கி நடக்கத் துவங்கினார்கள். அவள் தன் வீட்டில் போய் சொல்லிக்கொண்டு வர வேண்டுமா என்று சம்பத் கேட்டான். அவள் தேவையில்லை என்று தலையாட்டியதும் சம்பத் அன்றிரவே அவர்கள் இருவரும் சிவகாசிக்குப் போய்விடலாம் என்றான்.

பேருந்தில் வழி முழுவதும் சம்பத் பேசிக்கொண்டே வந்தான். அவன் சிவகாசியில் உள்ள ஜெசிந்தா அச்சகம் என்பதில் வேலை செய்வதாகவும், அங்கே கிறிஸ்துவப் பிரச்சாரப் புத்தகங்கள் அச்சடிக்கப்படுவதாகவும், அதன் ஓனரான வில்லியம்ஸ் தன்னை நம்பி அச்சகத்தையே விட்டுச்சென்றிருப்பதாகவும் சொன்னான்.

அவர்கள் இருவரும் திருத்தங்கல் என்ற இடத்திற்குப் போய் இறங்கியபோது விடிகாலையாக இருந்தது. எங்கிருந்தோ ஒரு மயில் கூவும் சப்தம் கேட்டுக்கொண்டிருந்தது. அவர்கள் சாக்கடைகள் ஓடிக்கொண்டிருந்த தெருவின் ஊடாக நடந்து போன போது அதிகாலையிலே சிறுமிகள் வீட்டின் திண்ணைகளில் உட்கார்ந்தபடியே தீப்பெட்டி ஒட்டிக்கொண்டிருந்தார்கள். அவளை அழைத்துக்கொண்டு போய் சந்தன வில்லைகள் தயாரிக்கும் நண்பரின்

வீட்டில் சம்பத் தங்க வைத்தான். அந்த வீடு முழுவதும் [illegible] எச்சம் படிந்துபோயிருந்தது. சம்பத் இரவு வரும்வரை அவள் தீப்பெட்டி ஒட்டும் சிறுமிகளின் விரல்கள் இயந்திரம் போலச் சீராக வேலை செய்வதை வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தாள்.

சம்பத் அவர்கள் தங்குவதற்காக ஒரு வீடு பிடித்திருப்பதாகச் சொல்லி அவளை அழைத்துக்கொண்டு போனான். அந்த வீடு ஒரு குன்றின் பின்புறத்திலிருந்தது. வீட்டின் பின்வாசலில் வந்து நின்றால் பெரிய குன்று தெரிவதாக இருந்தது. குன்றின் மீது ஏதோ கோவிலிருந்தது. அவள் ஒரு சமையற்கட்டும் சிறிய அறையும் உள்ள அந்த ஓட்டுவீட்டை ஆச்சரியத்துடன் பார்த்தாள். அருகாமையில் அது போலவே நாலைந்து வீடுகளிருந்தன. அவன், ரெண்டு மாசம் அங்கே சமாளித்துவிட்டால் பிறகு வேறு வீடு பார்த்துப் போய் விடலாம் என்றான். வீட்டில் ஒரேயொரு குண்டு பல்ப் மட்டும் எரிந்துகொண்டிருந்தது.

சம்பத்தும் அவளும் அந்த வீட்டின் வெறும் தரையில் படுத்துக் கொண்டார்கள். அன்றிரவு யானை நிலம் அதிர நடந்து செல்வது போல அவள் உடலின் மீது இயங்கிக்கொண்டிருந்தான் சம்பத். அவளுக்குத் திடீரென குருதிப்பெருக்கு ஏற்பட்டது. அவளது பாவாடை மற்றும் புடவையில்கூட ரத்தம் படிந்துபோனது. அவள் தொடைகளுக்கு நடுவில் வழியும் ரத்தப் பிசுபிசுப்போடு படுத்துக் கிடந்தாள். அன்று ஜெயந்திக்கு இரவு முழுவதும் உறக்கம் கூடவேயில்லை.

அந்த நகரில் வெயில் எப்போதும் ஊற்றிலிருந்து பொங்கி வழிவது போலச் சுரந்து கொண்டேயிருந்தது. அவளால் அந்த வெயிலின் கசகசப்பைத் தாங்க முடியவேயில்லை. சம்பத் சில நாட்கள் வேலைக்குப் போகாமல் முழு நாளும் உறங்கிக்கொண்டே யிருப்பான். அப்போது அவனது முதுகிலிருந்து வியர்வை கசிந்து தரை முழுவதும் உப்பேறியிருக்கும். இரவிலும்கூட வெளிச்சம் கண்ணை விட்டு அகலாமல் இருந்தது. அவளுக்கு அந்த ஊரில் தூக்கம் பிடிக்கவேயில்லை. பகலும் இரவும் அண்டை வீட்டுப் பெண்கள் தீப்பெட்டி ஒட்டிக்கொண்டேயிருந்தார்கள். அதைப் பார்க்கவே வேதனையாக இருந்தது. சில நாட்கள் பகல் முழுவதும் காரணமில்லாமல் அழுதுகொண்டேயிருந்தாள்.

ஒரு நாளின் மாலை நேரத்தில் சம்பத் கைகளில் வீடு வந்து சேர்ந்தபோது அவனது உதடு கிழிபட்டு சட்டை முழுவதும் புழுதி யாகியிருந்தது. கன்னத்தில் கூட ரத்தக்கீறல் வழிந்துகொண்டிருந்தது. அவன் தனக்கும் அச்சக ஓனருக்கும் வாய்வார்த்தை முற்றி அடிதடி யாகிவிட்டது என்றும், தான் அச்சகப் பணத்தில் முப்பதாயிரம் வரை எடுத்து செலவு செய்துவிட்டதாகச் சொன்னான். அவளுக்குப் பயமாக இருந்தது. சம்பத் அந்த பணத்தை தான் புரட்டிக் கட்டிவிட முடியும் என்றபடி ஒரேயொரு நாள் எங்காவது ஒளிந்துகொண்டு

விட்டால் போதும், புறப்படு என்றான். அவர்கள் இருவரும் வெயில் படிந்துகொண்டிருந்த பாறைகளைக் கடந்து சைக்கிளில் வடக்கு நோக்கி போய்க்கொண்டிருந்தார்கள். ஊரின் வெட்டவெளிக்கு வந்தபோது வேலிக் கருவேலிகளைத் தவிர வேறு எதுவுமே கண்ணில் படவில்லை. ஒரேயொரு சுண்ணாம்புக் காளவாசல் மட்டும் தனித்திருந்தது. சம்பத் வேகவேகமாக சைக்கிளை ஓட்டிக்கொண்டிருந்தான். மண்பாதையில் அவர்கள் போய்க்கொண்டிருந்தார்கள்.

சம்பத்தும் அவளும் அதன் பிறகு நான்கு நாட்கள் பழைய காகித குடோன் ஒன்றில் ஒளிந்து கிடந்தார்கள். அந்த நான்கு நாட்களும் சம்பத் மிக ஆவேசத்துடனும், வெறி கொண்டது போலவும் அவளோடு உடல் உறவு கொண்டபடியிருந்தான். பல வேளைகளில் அவள் தன்னை மறந்து உடலைத் திறந்து கிடந்தாள். பழுத்த காகிதங்களின் வாடை அறையெங்கும் அப்பியிருந்தது. சம்பத் அடிபட்டு வீங்கியிருந்த தனது காயங்களுக்கு குப்பைமேனிச் செடியைக் கசக்கி சாறு பிழிந்து விட்டுக்கொண்டான். சம்பத்தைத் தங்க வைத்திருந்த நண்பன் பணமோசடி விஷயம் போலீஸ் ஸ்டேஷனில் போய் நிற்கிறது என்றும் அவர்கள் கேரளாவிற்குப் போனால் தப்பிவிடலாம் என்றான். அப்படிப் போவதற்குத் தன்னிடம் பணமில்லை என்றபடி இருநூறு ரூபாய் அவன் ஏற்பாடு பண்ணிக் கொடுத்தால் சென்னைக்குப் போய்விடுவதாக சம்பத் சொன்னான். அவன் தனக்கு முடிந்தவரை ஏற்பாடு பண்ணித் தருவதாகச் சொல்லி விட்டுக் கிளம்பினான். சம்பத் அன்றைய பகல் முழுவதும் தனக்கு லாட்டரிச் சீட்டில் ஏற்பட்ட வெறியை பற்றி அவளிடம் பேசிக் கொண்டிருந்தான். அவள் தங்களை போலீஸ் பிடித்துக் கொண்டு போய்விடுமோ என்ற பயத்துடன் தான் நாமக்கல்லுக்கே போய் விடட்டுமா என்று கேட்டாள். சம்பத் மறுத்தபடியே இது ஒன்றும் பெரிய விஷயமில்லை என்றான்.

சென்னை ரயிலுக்காக அவர்கள் இருவரும் விருதுநகர் ரயில் நிலையத்தில் வந்து காத்திருந்தார்கள். சம்பத் எதுவும் நடக்காதது போல கையில் ஒரு மாலைப் பேப்பரை வாங்கிப் படித்துக் கொண்டிருந்தான். ரயிலில் அவர்கள் டிக்கெட் எடுக்கவில்லை என்பதை விடிகாலை சென்னையில் வந்து இறங்கியபோதுதான் சம்பத் சொன்னான். அவளுக்கு ஏனோ அதைக் கேட்டதும் சிரிப்பாக வந்தது. சம்பத் தனக்கு நிறைய நண்பர்கள் இருப்பதாகவும் இனி பிரச்சினை தீர்ந்துவிடும் என்றபடி அவளை அழைத்துக் கொண்டு டெலிபோன் செய்வதற்காகச் சென்றான். அவள் அந்த பூத்தில் இருந்த பெண்ணைப் பார்த்தாள். அவளும் தன்னைப் போலவே வெளிறிய நிறத்தில் புடவை கட்டிக்கொண்டிருந்தது தெரிந்தது. அந்தப் பெண் நெற்றியில் பெரிதாக திருநீறு பூசியிருந்தாள். சம்பத் தனது நண்பன் பரங்கிமலை ரயில் நிலையத்திற்கு வந்துவிடச் சொன்னதாக அவளை அழைத்துக்கொண்டு கிளம்பினான்.

ஜெயந்தி முதன்முதலாக அன்றுதான் மின்சார ரயிலில் ஏறினாள். ரயிலின் வேகத்தில் அவளது தலைமயிர் காற்றில் பறந்து கொண்டிருந்தது. பின்னோக்கி ஓடிக்கொண்டிருக்கும் வீடுகளைப் பார்த்தபடியே வந்தாள். நகரம் மிகப் பெரியதாகயிருந்தது. இருவரும் பரங்கிமலை ரயில் நிலையத்திற்கு வந்தபோது சம்பத்தின் நண்பன் அங்கே வந்து நின்றிருந்தான். சம்பத் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தான். பிறகு அவளிடம் இவன் என்னோட படிச்சவன், பேரு ராமதுரை என்று அறிமுகப்படுத்தினான். அவள் வணக்கம் தெரிவித்தாள். ராமதுரை அவர்களை ஒரு ஆட்டோவில் கூட்டிக்கொண்டு போய்க்கொண்டிருந்தபோது அவர்கள் தலைக்கு மேலே ஒரு விமானம் பறந்துகொண்டிருந்தது. ஜெயந்தி ஒரு குழந்தையைப் போல வியப்போடு எட்டிப் பார்த்தபடி வந்தாள். அவளுக்கு நகரம் எண்ணிக்கையற்ற வியப்புகளால் நிரம்பியிருப்பதாகயிருந்தது.

ராமதுரை வெளியே வந்தபோது அழகர் மட்டும் வாசலில் ஒரு சேரைப் போட்டு எதிரில் இருந்த பப்பாளி மரத்தைப் பார்த்தபடியிருந்தான். ராமதுரைக்கு அழகரைப் பார்க்கும்போது சற்றே பொறாமையாக இருந்தது. அழகர் தங்களோடு தமிழ் இலக்கியம் படித்து முடித்துவிட்டு சட்டக் கல்லூரியில் சேர்ந்துவிட்டிருந்தான். சட்டக் கல்லூரி முடித்ததும் அவனது வீட்டில் இருந்தவர்களின் அரசியல் செல்வாக்கு காரணமாக மத்திய செய்தி மற்றும் தகவல் துறையில் அவனுக்கு வேலை கிடைத்து விட்டிருந்தது. வேலையின் காரணமாக அவன் சில வருடங்கள் டெல்லியில் பணியாற்றினான். ஆனால் அந்த வேலையை விடவும் அதிக சம்பளமும் அதிகாரமும் கிடைக்கும் பணிக்காக அவன் தன் வேலையை விடுவித்துக் கொரிய கம்பெனி ஒன்றில் சேர்ந்துவிட்டிருந்தான். அழகரின் மனைவி சேட்டுப் பெண்களைப் போல அழகானவள். அவனது உறவுக்காரப் பெண் என்பதோடு அவளது அப்பா ஒரு உயர் அதிகாரியாகவும் இருந்தார். அந்தப் பெண் நுனி நாக்கில் ஆங்கிலம் பேசுகின்றவளாகயிருந்தாள். அழகர் நன்றாக ஹிந்தி பேசக் கற்றுக்கொண்டிருந்தான்.

தமிழ்த் துறையில் படித்தவர்களில் ஹிந்தி பேசத் தெரிந்தவன் அவனுக்குத் தெரிந்து அழகர் மட்டும்தான். அவனது குழந்தைகள் இப்போதே பிரெஞ்ச் படிக்கத் துவங்கிவிட்டார்கள். அவர்கள் படிக்கும் பள்ளி முழுவதும் குளிர்சாதனம் செய்யப்பட்டிருப்பதாகவும், அங்கே தமிழ் பேசினால் தண்டனையும் அபராதமும் விதிப்பார்கள் என்றும் ஒரு நாள் அழகர் மிகப் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருந்தான். ராமதுரையின் குழந்தைகளும் ஆங்கிலப் பள்ளியில்தான் படிக்கிறார்கள். ஆனால் அந்தப் பள்ளியில் கற்றுத் தரப்படும் ஆங்கிலம் கிட்டத்தட்ட தமிழ் போன்றுதான் இருந்தது.

ராமதுரையும் கல்லூரி நாட்களின்போது விவேகானந்தரின் பொன்மொழிகளை வாசித்துக்கொண்டு யோகா, ஆன்மீக மார்க்கம் என்றுதான் இருந்தான். இதற்காக எங்காவது தபோவனத்தில் நடை பெறும் ஆழ்நிலை தியான வகுப்புகளுக்குக்கூடச் சென்று வருவதாக யிருந்தான். அவனுக்குத் தமிழ் படிக்க வேண்டும் என்ற விருப்ப மில்லை. ஆனால் அவன் படிக்க விரும்பிய வணிகவியல் படிப்பிற்கு சீட் கிடைக்காததால் தமிழ் படிக்க ஒத்துக்கொண்டுவிட்டான். வகுப்பு துவங்கி சில நாட்களுக்கு அவனுக்கு தான் காலத்தின் பின் னால் போய்க்கொண்டிருப்பது போலவே இருக்கும். தொல்காப்பிய மும் சங்கக் கவிதைகளும் சிலப்பதிகாரமும் வாசித்துப் பார்க்கும் போது கண்களைக் கட்டிக்கொண்டு வரும்.

தனக்கு இவ்வளவு காலமாகத் தமிழ் தெரியும் என்று நினைத்துக் கொண்டிருந்தது எத்தனை அறியாமை என்றுகூடத் தோன்றும். அதிலும் சில பேராசிரியர்கள் வகுப்பு எடுக்கும்போது பேசும் தமிழ்ச் சொற்களையும், அதன் எதுகை மோனைகளையும் கேட்கும் போது வியப்பாக இருக்கும். ஆனால் சம்பத்தான் அதை முதலில் கலைத்தவன். சம்பத் தமிழ் பாடல்களை எப்படிப் படிப்பது என்று பதம் பிரித்துக் காட்டுவான். சில நேரம் அவன் பாடல்களைத் தன் இயல்பில் பாடவும் கூடும். பரிட்சை எழுதுவதற்காகப் படிக்கா விட்டாலும் இத்தனை நூற்றாண்டுகளைக் கடந்து இன்றும் பசுமை யாக இருக்கும் அதன் கவித்துவத்திற்காகப் படிகக வேண்டும் என்று கட்டாயப்படுத்துவான்.

சம்பத் அவனது அறைக்கு வரத் துவங்கிய பிறகு தனது ஆன்மீகத் தேடுதல்களைக் கடுமையாகக் கேலி செய்யத் துவங்கினான். நீ சாமியார் ஆவதால் மற்றவர்களுக்கு எந்த நலனும் ஆகப்போவ தில்லை. அந்த நன்மை உனக்கு மட்டும்தான் கிடைக்கும். ஒரு சாமி யார் ஆவதை விடவும் விளையாட்டு வீரன் ஆவதையே நான் விரும்புவேன் என்பது போல ஏதேதோ பேசினான். சம்பத் பேசும் போது அவனை மறுக்கவே தோணாது. அப்படி ஏதோவொரு மந்திரம் அவனிடமிருந்தது. சம்பத் திடீரென கடவுள் மறுப்பு இயக் கத்தில் தீவிரமானபோது ராமதுரைதான் அதை முதலில் எதிர்த் தான். சம்பத் எதிலும் முழுமையாக மூழ்கிவிட மாட்டான் என்ற நம்பிக்கை அப்போதே இருந்தது. ஆனாலும் அவன் மிக ஆவேச மாகத் துறைத்தலைவருடன் சண்டையிடுவதையும் கடவுள் மறுப்புக் கொள்கைகளுக்காக வகுப்பறையில் வாதம் புரிவதையும் காணும் போது அவன் ஒரு கலகக்காரன் என்றே தோன்றும்.

குறிப்பாக ஒரு வார காலம் சம்பத்தைக் கல்லூரியில் இருந்து நீக்கிய நாட்களில் சம்பத் தினமும் வகுப்பறையின் வெளியே இருந்த வேப்ப மரத்தடியில் கூட்டங்கள் நடத்தத் துவங்கினான். ஒரு நாள் அப்படி மரத்தடியில் நடந்த வகுப்பில் சம்பத் கடவுள் என்பது என்ன என்பது குறித்துப் பேசப் பேச கொஞ்சம் கொஞ்சமாக

அவனது மனதில் இருந்த நம்பிக்கைகள் பொடிபடத் துவங்கின. அவன் தான் இந்தப் பேச்சு முழுவதையும் கேட்டால் சம்பத்தைப் போல மாறிவிடுவோம் என்று கூட நம்பினான். ஆனாலும் அந்த இடத்தை விட்டுப் போக முடியவில்லை. சம்பத் ஒரு மணி நேரம் பேசியிருக்கக்கூடும். மெதுவாக துறையில் இருந்த பேராசிரியர்கள் சிலர்கூட சம்பத்தை ஆதரிக்கத் துவங்கினார்கள்.

சம்பத் தற்காலிக நீக்கம் செய்யப்பட்ட ஒரு வாரமும் அவன் தினமும் யாழினியின் வீட்டிற்குப் போவதும் அவளோடு மாலை நேரங்களைச் செலவிடுவதுமாகவே இருந்தான். யாழினி ஒரு நாள் சம்பத்தைப் பார்ப்பதற்காகப் பகலில் கல்லூரியின் விடுதிக்கே வந்து சேர்ந்தாள். இருவரும் நெடுநேரம் ஒரு சைக்கிளில் சாய்ந்து நின்று கொண்டு பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் காதலிக்கிறார் களோ என்று அவனுக்குத் தோன்றியது. சம்பத் அடுத்த வாரம் வகுப்பிற்கு வந்தபோது துறையில் இருந்து அவனை ஆண்டுதோறும் சென்னையில் நடைபெறும் கம்பராமாயண சொற்பொழிவிற்குப் பேச அனுப்புவது என்று முடிவு செய்திருந்தார்கள். சம்பத்தோடு அந்தச் சொற்பொழிவிற்கு ஈஸ்வரபாண்டியன் என்ற மாணவனை யும் தேர்ந்து எடுத்திருந்தார்கள். இது நடந்த மறுநாள் யாழினியின் அப்பா அவன் அதுபோன்ற கம்பராமாயண விழாக்களில் கலந்து கொள்வது கொள்கைக்கு மிக எதிரானது என்று விரிவாகப் பேசி னார். சம்பத், தான் கம்பராமாயணத்திற்கு எதிரான கருத்துகளைத் தான் பேசப்போவதாகவும் அதில் தவறு ஒன்றுமில்லை என்றும் வாதிட்டான். யாழினி அவளது அப்பா சொல்வதுதான் சரி, அவன் ராமாயணச் சொற்பொழிவில் கலந்துக் கொள்ளக் கூடாது என்றாள்.

சம்பத்தும் ஈஸ்வரபாண்டியனும் சென்னைக்குக் கிளம்பிய நாளில் ராமதுரை அவர்களை வழியனுப்பப் போயிருந்தான். மறு நாள் தற்கால இலக்கியம் வகுப்பு நடந்துகொண்டிருந்தபோது தில்லைநாயகம் என்ற பேராசிரியர் உள்ளே எட்டிப் பார்த்து சம்பத் சென்னையில் நடந்த விழாவில் கம்பராமாயணத்தைத் தீ வைத்துக் கொளுத்திவிட்டதாகவும், அதனால் அவன் மீது போலீஸ் வழக்கு பதிவு செய்திருக்கிறது என்றும் தெரிவித்தார்.

சம்பத் எங்களுக்கு வரலாற்றுப் புத்தகங்களில் படித்திருந்த வீர சாகச நிகழ்ச்சிகளின் கதாநாயகர்களைப் போலத் தெரிந்தான். சம்பத்தைப் பற்றியே அன்று வகுப்பறை முழுவதும் பேச்சாக இருந் தது. துறைத்தலைவர் இதைப் பற்றி விவாதிப்பதற்காக முதல்வரிடம் சென்றிருந்தார். மூன்று நாட்களுக்குப் பிறகு கல்லூரிக்குத் திரும்பிய ஈஸ்வரபாண்டியன் சம்பத் அன்று மிக ஆவேசமாக மேடையில் பேசியதாகவும் பேசிக்கொண்டிருக்கும்போதே தன் கையில் கொண்டுபோயிருந்த ஒரு கம்ப ராமாயணப் பிரதியை ஒரு தீக் குச்சியை எடுத்து உரசிப் பற்றவைத்ததாகவும் புத்தகத்தில் தீ

பற்றவில்லை என்பதால் அதில் இருந்து ஒரு பேப்பரைக் கிழித்து அதற்கு தீ வைத்ததாகவும் இந்தச் சம்பவம் நடைபெறும்போது அந்த ஹால் முழுவதும் ஏகப்பட்ட கண்டனக் குரல்கள் எழுந்துகொண்டிருந்தன என்றும் சொன்னான். சம்பத் நாலைந்து காகிதங்களை எரிப்பதற்குள் அவனைக் காவல்துறை கைது செய்து அழைத்துப் போய்விட்டார்கள் என்று சொன்னான். யாழினி தாங்கள் நினைத்ததை விடவும் சம்பத் பெரிய போராட்டக்காரனாக இருக்கிறான் என்று புகழ்ந்து சொன்னாள்.

சம்பத் பத்து நாட்களுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டான். அதுவும் அழகரின் மாமா ஒருவரின் அரசியல் செல்வாக்கினால் வெளியே விடப்பட்டதாகவும் அவன் மீது வழக்கு தொடர்ந்து நடக்கும் என்றும் அறிந்துகொண்டான். சம்பத் கல்லூரி திரும்பிய நாளில் அவனைத் துறைத்தலைவர் அழைத்து முதல்வரைப் பார்த்து விட்டு வரும்படியாகக் கேட்டுக்கொண்டார். முதல்வர் அவனைப் பெற்றோருடன் வந்து சந்திக்கும்படியாகச் சொல்லிவிட்டு அதுவரை வகுப்பிற்குச் செல்ல முடியாது என்று அறிவித்தார். தான் எந்தத் தப்பும் செய்யவில்லை என்பதோடு தன் பெற்றோர்கள் தான் அழைத்தால் வர மாட்டார்கள் என்றும் சம்பத் சொன்னான். ஆனால் முதல்வர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. சம்பத் கல்லூரிக்கு வருவதை அப்போதே நிறுத்திக் கொண்டுவிட்டான். ஆனால் அவனை மேடையில் பேசுவதற்காக ஊர்ஊராகக் கூப்பிடத் துவங்கினார்கள். சம்பத் மாவட்டம் முழுவதும் பேசுவதற்காகச் சென்று கொண்டிருந்தான்.

ஒரு நாள் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றில் சம்பத் பேசுவதாக நகரம் எங்கும் பெரிய விளம்பரங்கள் இருந்தன. சம்பத் அன்று ஒரு மணி நேரம் மிக ஆவேசமாகவும் நரம்புகள் புடைத்து முறுக்கேறும்படியும் பேசினான். அவனும் அழகரும் ஒரு ரோஜாப்பூ மாலை வாங்கிக்கொண்டு போய் சம்பத்தைப் பாராட்டிப் போட்டு விட்டார்கள். கூட்டம் முடிந்ததும் அவர்களைத் தன்னோடு ஒரு லாட்ஜிற்கு வரச் சொன்னான் சம்பத். அவர்கள் லாட்ஜிற்குப் போனபோது சம்பத்தைப் பார்ப்பதற்காக இரண்டு நபர்கள் நின்றிருந்தார்கள். சம்பத் அவர்களிடம் நிச்சயம் கூட்டத்திற்குத் தேதி கொடுப்பதாகச் சொல்லி அதற்கான முன்பணத்தை வாங்கிக் கொண்டு அப்படியே நாலு பீர்கள் வாங்கிவந்து தந்துவிட்டுப் போகும்படியாகச் சொல்லி அனுப்பினான். அழகர் அன்று சம்பத்தின் மேடைப் பேச்சை மிகவும் புகழ்ந்துகொண்டிருந்தான். இது போலத் தொடர்ந்து பேசினால் அரசியலில் நிச்சயம் பெரிய எதிர்காலம் இருக்கும் என்றும் இப்படிதான் தனது பெரியப்பாகூட அரசியலில் ஈடுபாடு கொண்டார் என்றும் சொல்லிக் கொண்டிருந்தான்.

சம்பத் பீர் வரும்வரை எல்லா மாலை நாளிதழ்களையும் வாசித்துக்கொண்டிருந்தான். பிறகு அவன் பீரைக் குடித்துவிட்டு அன்றி

ரவே தனது வழக்கு விசாரணை தொடர்பாக சென்னை செல்வ தாகக் கூறினான். அதன் பிறகு அவர்கள் படித்து முடிக்கும்வரை சம்பத் கல்லூரிக்கு வரவேயில்லை. அவனது வழக்கு விசாரணை முடிந்து அவன் மீது குற்றம் உறுதிசெய்யப்பட்டுவிட்டதாகவும் அதற்காக அவன் மேல்முறையீடு செய்திருப்பதாகவும் ஒரு நாள் யாழினி சொன்னாள். நாங்கள் கல்லூரியை விட்டு வெளியேறும் நாளில் சம்பத் எங்களோடு இல்லை என்பதைப் பெரிய குறையாக உணர்ந்தோம். அதன் பிறகு சில வருடங்கள் சம்பத்தைக் காணவே யில்லை. எப்போதாவது கவரொட்டிகளில் சம்பத்தின் பெயர் எழுதப்பட்டிருப்பதைக் காணும்போது அவனுக்குச் சம்பத்தைக் காண வேண்டும் போலிருக்கும். ஆனால் பொதுக் கூட்டங்களுக்குப் போக விருப்பமிருக்காது.

சம்பத்தை மருத்துவமனையில் அனுமதித்திருந்த ஆரம்ப நாட்களில் நாள் முழுவதும் மருத்துவமனையிலே இருப்பது ஜெயந்திக்கு எரிச்ச லாக .இருக்கும். அதுவும் தன்னைச் சுற்றிலும் நோயாளிகளாக இருப்பதைக் காணும்போது தானும். இதுபோல நோயுற்று விடு வோமோ என்று அச்சம் பீறிடும். அவள் பெரும்பான்மை நேரங்கள் வாசலில் இருந்த மரத்தடிக்கு வந்து நின்றுகொள்வாள். மருத்துவ மனைக்கு வந்து போகும் ஆட்களைப் பார்த்துக்கொண்டேயிருப் பாள். எப்போதாவது சம்பத் அவளைக் கூப்பிடும் போது அரு காமைப் படுக்கையில் இருந்த நோயாளியோடு வந்திருந்த கிழவி வெளியே வந்து அவளைக் கூப்பிடுவாள்.

தினமும் காலையில் மருத்துவர் வந்து பரிசோதித்த பிறகு சம்பத் மாத்திரைகளை விழுங்கிவிட்டு உறங்கத் துவங்கிவிடுவான். உடனே ஜெயந்தி பஸ் பிடித்து வீட்டிற்கு வருவதற்காகக் கிளம்பிவிடுவாள். பேருந்து நிலையத்தில் வந்து நிற்கும்போது சாலையின் பரபரப்பும், கடந்து போகும் வாகனங்களின் அழகும் வியப்பாக இருக்கும். பேருந்து நிறுத்தத்தின் அருகில் இருந்த ஒரு கடையில் காலையில் இருந்து இரவு வரை எப்போதுமே பூரி போட்டு அடுக்கி வைத்துக் கொண்டேயிருப்பார்கள். அவள் அதை வெறித்துப் .பார்த்தபடி நிற்பாள். பேருந்தில் வீட்டை நோக்கிப் போகும்போது திடீரென சம்பத் இறந்துபோய்விடுவது போலவும், இந்தத் தகவலைச் சொல்வ தற்காக அவளை மருத்துவமனையில் தேடுவதைப் போலவும் தோன் றும். வீட்டிற்குப் போனதும் அவள் அவசர அவசரமாகக் குளித்து விட்டு சமைக்கத் துவங்குவாள். என்ன சமையல் செய்கிறோம் என்பதுகூட நினைவில்லாமல் சம்பத்தைப் பற்றி விசித்திரமான நினைப்புகள் வந்தபடியிருக்கும். சமைத்ததைக் கையில் எடுத்துக் கொண்டு வீட்டைப் பூட்டிக்கொண்டு பேருந்தில் மருத்துவ

மனைக்கு வந்து சேரும்போது சலனமில்லாமல் சம்பத் உறங்கிக் கொண்டிருப்பான். அவன் மூக்கின் அருகில் அவள் கை வைத்து மூச்சு வருகிறதா என்று அறிந்துகொள்வாள். பிறகு கொஞ்ச நேரம் அவன் கட்டிலின் கீழே உட்கார்ந்து கொண்டு ஜன்னலுக்கு வெளியே தெரியும் வேம்பின் கிளைகளைப் பார்த்தபடியிருப்பாள்.

ஆனால் நாள் ஆகத் துவங்கியதும் சம்பத் இறந்துபோய் விடுவானோ என்ற படபடப்பு மனறயத் துவங்கி நாக்கு நல்ல சாப்பாட்டிற்கும், கண்கள் உறக்கத்திற்கும், ஏங்கத் துவங்கின. வீட்டிற்குப் போனதும் குளிப்பதற்குப் பதிலாகக் கொஞ்ச நேரம் தூங்குவாள். பிறகு சாவகாசமாக சமையல் செய்வாள். எவ்வளவு சாப்பிட முடியுமோ அவ்வளவு சாப்பிட்டுவிட வேண்டும் என்று தோன்றும். பிறகு சில நாட்கள் வழியில் உள்ள கடையில் வாழைப்பழங்கள்கூட வாங்கிக்கொண்டு மருத்துவமனனக்குச் செல்வாள். அவர்கள் மருத்துவமனையில் நாற்பது நாட்களுக்கும் மேலாக இருந்தார்கள். சம்பத்தின் கண்கள் நாளுக்கு நாள் வெறிச்சி அடைந்துகொண்டே வந்தன. அவன் குழந்தைகள் சாப்பிடுவதைப் போல சாப்பிடத் துவங்கினான். அவள் சம்பத்தின் உடனல ஈரத் துணியால் துடைத்து விட்டு சம்பத்தைத் தன் இரு கைகளாலும் தூக்கும்போது அவனது எடை முற்றிலும் கரைந்துகொண்டு வருவதை உணர முடிந்தது.

மருத்துவமனையில் பகலை விடவும் இரவு மிக நீண்டதாகத் தோன்றும். ஏழு மணிக்கெல்லாம் சப்தம் ஓய்ந்துவிடும். இரும்பு கேட்டை இழுத்துப் பூட்டிவிடுவார்கள். அவள் வெறும் தனரயில் படுத்தபடியே மின்விளக்கைப் பார்த்துக்கொண்டிருப்பாள். கடந்த நாட்களின் நினைவுகள் சில வேளை பீறிடும். சில வேளை அவள் அறியாமல் உடம்பில் காமம் மெல்ல நெளியத் துவங்கும். அவள் அதுபோன்ற நேரங்களில் எழுந்து சென்று ஈரத் துணியை நனைத்துக் கொண்டுவந்து அவன் கட்டிலின் கீழ்ப் பகுதியைத் துடைத்து அழுக்கு அகற்றத் துவங்கிவிடுவாள். வேலை மெல்ல உடலின் இச்சையைத் துண்டித்துவிடும். நாட்கள் நீளத் துவங்கியதும் சம்பத் யாரோ ஒரு மனிதனைப் போலத் தோன்றத் துவங்கினான்.

சில இரவுகளில் அவள் எழுந்து பார்க்கும்போது இந்த நகரத்தில் தங்களுக்கு வேறு யாருமே இல்லை என்பது வேதனை தருவதாக இருக்கும். எத்தனையோ லட்சம் பேர்கள் இந்த நகரத்தில் வசிக்கிறார்கள். ஆனால் அவளுக்கு உறவு என்று சொல்ல இங்கே யாருமே யில்லை. அவள் சில நாட்கள் கந்த சஷ்டி கவசம் புத்தகத்தை வைத்துக்கொண்டு மனதிற்குள்ளாகவே வாசித்துக்கொண்டிருப்பாள். சில வேளைகளில் வீட்டிலிருந்து கிளம்பி வரும்போது விநாயகர் கோவிலில் பூஜை செய்து திருநீறு கொண்டுவருவாள். அவளுக்கு மெல்ல தன்னனப் பிடிக்காமல் போகத் துவங்கியது. தான் எதற்காக இத்தனையும் செய்துகொண்டிருக்கிறோம் என்று எரிச்சலாக வரும். விழித்துக்கொண்டே தான் தூங்கிக்கொண்டிருப்பது போன்றும்

சில வேளைகளில் தோன்றும். இந்த நெருக்கடிக்குள் மருத்துவமனை யில் சம்பத் எதுவும் அறியாமல் உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தான்.

மாரியப்பன் உறங்கிக்கொண்டிருந்தான். முந்தைய நாளில் பார்த்த நிறத்திலிருந்து மாறியிருந்தது காடு. சன்னாசி ஒரு காட்டுக் கோழியைச் சமைப்பதற்காக ரோமம் நீக்கி சுத்தம் செய்துகொண்டிருந்தான்.

நானும் ராமதுரையும் சருகுகளுக்குள் நடந்து காட்டு அருவியை நோக்கி நடந்து கொண்டிருந்தோம். ராமதுரைக்கு சம்பத்தின் மனைவியை முன்னாடியிருந்தே பழக்கமிருக்கிறதா என்று கேட்டுக் கொண்டு வந்தேன். ராமதுரை அவர்கள் சென்னைக்கு வந்த நாளில் அவன்தான் ரயில் நிலையத்திலிருந்து அழைத்து வந்ததாகச் சொன்னான். நான் கீழே கிடந்த ஒரு பறவையின் மஞ்சள் நிற இறகைக் கையில் எடுத்து சுழற்றியபடியே அந்தப் பெண் எப்படி, நல்லவள் தானா என்று கேட்டேன். ராமதுரைக்கு லேசான எரிச்சல் ஏற் பட்டது. அதை மறைத்துக்கொண்டு, அழகர் உன் பொண்டாட்டி எவ்வளவு நல்லவளோ அவ்வளவு நல்லவள் என்றான்.

எனக்கும் எரிச்சல் வந்தது. அதைக் காட்டாமல் இல்லை. நீ அவளோட பேசுறதைப் பாக்கும்போது சம்பத்கூட இவ்வளவு நெருக்கமாகப் பேசியிருப்பானோனு சந்தேகமா இருந்துச்சி என்றேன். ராமதுரை முகத்தை இறுக்கமாக்கிக்கொண்டு ஏண்டா அழகர் உனக்குப் பொறாமையா இருக்கா? உன் பொண்டாட்டி அலுத்துப்போயிட்டாளா என்று கேட்டான். சட்டென்று நான் காய்ந்து கிடந்த மரக்கிளை ஒன்றை எடுத்து ராமதுரையின் முகத் தோடு சேர்த்து வீசினேன். அது ராமதுரையின் முகத்தில் படாமல் விழுந்தது. ராமதுரையும் ஆவேசத்துடன், நீதானடா மசிரு கேட்டே. பதில் சொன்னா, பேச்சு பேச்சோட இருக்கணும். அடிக்க வர்றே என்று தானும் ஒரு மரக்கிளையை எடுத்துக்கொண்டான்.

அவன் கையில் வைத்திருந்த மரக்கிளையைக் கண்டதும் ஆத் திரத்தை அடக்கிக் கொண்டு, உங்ககூட எல்லாம் பழகினது தப்புடா. எல்லாம் இந்த சம்பத்தால் வந்த வினை. அவன் பொண் டாட்டி உன்கூட படுத்தா எனக்கு என்னடா... நிம்மதியா டெல்லி யில் இருந்தேன். எப்போ மெட்ராஸ் வந்தனோ அப்போ இருந்தே இந்த எழவுதான் என்றேன். ராமதுரை தன் கையில் இருந்த மரக் கிளையை உயர்த்தியபடியே, டேய் பேசிக்கிட்டே போனே... உன்னை அடிச்சே கொன்னுருவேன். ஏண்டா... சம்பத் உன்னை என்னடா செஞ்சான்? அவன் வாழ்ந்து பாத்துட்டுதாண்டா செத்துப் போனான். உன்னை மாதிரி கள்ளத்தனம் பண்ணலே. பேச்சை நிறுத்திக்கோ ... இல்லை நான் என்ன செய்வேன்னு

தெரியாது என்றான்.

நான் கையில் இருந்த கிளையைக் கீழே போட்டுவிட்டு விடுவிடு வென தெற்கே நடந்து போகத் துவங்கினேன். கோவித்துக்கொண்டு போனால் தனக்கு என்ன, மசிரே போகட்டும் என்று ராமதுரையும் தனித்துப் போகத் துவங்கினான். காட்டுப் பறவையின் ஊம் ஊம் என்ற சப்தம் பாதையின் ஊடாக விட்டு விட்டுக் கேட்டுக்கொண் டிருந்தது. வேண்டும் என்றே நான் அவனோடு ஒரு வலுச் சண்டையை உருவாக்க முயற்சிப்பது போன்று அவன் நினைத்திருக் கக்கூடும். ராமதுரை மரங்களுக்கு இடையில் தனியே நடந்து வந்தான். நான் வழியில் நின்றிருந்த ஒரு நெல்லிமரத்தை உலுக்கி காய்களை அள்ளி எடுத்து கடித்துக்கொண்டு நடந்தேன். பாறைகள் சிறியதும் பெரியதுமாக உருண்டு கிடந்தன. ராமதுரை தண்ணீரின் சப்தத்தைக் கேட்டபடியே நடந்து வந்துகொண்டிருந்தான். பாதை யின் நடுவே இருந்த மரங்களில் மிளகுக் கொடி சுற்றி ஏறிக் கிடந்தது.

நான் ஒரு உயர்ந்த பாறையொன்றின் மீதேறி நின்று பார்த்த போது இரண்டு பாறைகளுக்கு நடுவில் காட்டு அருவி விழுந்து கொண்டிருந்தது. அதன் சாரல் தெறித்து பாறைகள் ஈரத்தில் மினுங்கிக்கொண்டிருந்தன. நான் ஈரம் படிந்த பாறைகளில் மிகக் கவனமாக நடந்து போனபோது வெளிறிய ஆகாசமும் ஒரேயொரு துண்டு மேகமும் தெரிந்தது. காட்டு அருவி விழும் இடத்தில் பெரிய பள்ளம் போன்றிருந்தது. என் உடைகளைக் கழட்டி வைத்துவிட்டு பாறையிலிருந்து தாவி அருவியின் அருகாமைக்குப் போனபோது சில்லிப்பு உடல் முழுவதும் கூச்சத்தை ஏற்படுத்தியது. மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. சிரித்தபடியே தனியே குளிக்கத் துவங்கினேன். காட்டு அருவி முதுகில் பளார் பளார் என்று அறைவது போல விழுந்துகொண்டிருந்தது.

வானிலிருந்து வெயில் பீறிட்டு தண்ணீரின் மீது ஒரு வான வில்லை உருவாக்கியது. நான் ஈரத் தலையும் வாய் நிறையத் தண்ணீருமாக வெளியே வந்தபோது ஒரு பாறையில் நிர்வாணமாக ராமதுரை நிற்பதைப் பார்த்தேன். அவன் எதுவும் நடக்காதவன் போல பாறையில் அலைந்தபடியே மெதுவாக உள் இறங்கி அருவியை நோக்கி நடந்து வரத் துவங்கினான். பின்பு அவனும் அருவிக்குள் நின்றபடியே சிரிக்கத் துவங்கினான். நாங்கள் இருவரும் நெடுநேரம் அருவிக்குள்ளாக நின்றுகொண்டிருந்தோம். ராமதுரை ஈர உடலோடு ஒரு பாறையில் சாய்ந்துகொண்டு, சாரிடா, மாப் பிள்ளை. உன்னைத் தேவையில்லாம திட்டிட்டேன். சம்பத் செத்துப் போனதில் இருந்து மனசில என்னமோ தோணிக்கிட்டே இருக்குதுடா . . . குழப்பமா இருக்குடா என்றான்.

நானும் அவன் செத்ததில் இருந்து மனசு நிலை கொள்ள மாட் டேங்குதுடா . . . உனக்குத் தெரியாதுடா என்றேன் ராமதுரை தண்ணீரைக் கையில் அள்ளி ஒழுக விட்டபடியே . . . நீ கிட்டே

இருந்து பாக்கலை. நான் அவனை ஆறு மாசமா பாத்துக்கிட்டே இருந்தேன். கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துப்போனான்டா. எல்லா வேதனையும் அழுகையும் கரைச்சிட்டுத்தாண்டா சம்பத் செத்துப்போனான். அவன் பொண்டாட்டி ரொம்பப் பாவம்டா... அவளாலே எதையும் வெளியே சொல்லக்கூட முடியாதுடா. இப்போ கூடப் பாரு. அவ எங்கடா போவா...? அவ அப்பா தனியா இன்னொரு பொம்பளை கூட வாழுறார். ஊருக்கும் போக முடியாது. இங்கே அவ தனியா இருந்தா... தினம் ஒருத்தன் வீட்டுக் கதவைத் தட்டுவான். உள்ளுக்குள்ளே அவ பயந்துபோய் இருக்கா. அதை எப்படி சமாதானம் செய்றதுனு தெரியலை. உன் வீட்லயும் என் வீட்லயும் இருக்கிற பொம்பளைகளுக்கு சம்பத் பொண்டாட்டி மாதிரி ஆளைப் பாத்தாலே பிடிக்காது. இவளுக எல்லாம் வெள்ளைத் தோலுக... அதுவும் படிச்சவளுக. சம்பத் பொண் டாட்டிகிட்டே பேசடினு சொன்னா என் பொண்டாட்டி அது ஒண்ணும் என் வேலையில்லைங்கிறா... அதனாலே என்ன செய்ற துனு தெரியாமதான் நானே பேசிக்கிட்டு இருக்கிறேன். உனக்கு ஏதாவது வழி தெரிஞ்சா சொல்லுடா என்றான். நான் என்ன செய்வது என்று தெரியாமல் யோசித்துக்கொண்டிருந்தேன்.

இருவரும் ஈரத் தலையுடன் வெளியே வந்தோம். தண்ணீரில் ஒரு இலை ஓடிக்கொண்டிருந்தது. நான் ராமதுரையிடம் சம்பத் இதைப் பத்தி உன்கிட்டே ஏதாவது பேசியிருக்கானாடா என்று கேட்டேன். ராமதுரை, ஆறு மாதத்துக்கு முன்னாடியே சம்பத் அவளை ஊருக்குப் போகச் சொல்லிட்டான். அவதான் போக மாட்டேன்னு கூடவே இருந்தா... ஆஸ்பத்திரியில ஒரு ஆம்பளை யைப் படுக்க வச்சிட்டு கையில காசு இல்லாம தனியா சமாளிச் சாடா. நமக்கெல்லாம் அந்த நிலைமை ஒரு நாள் வந்தா ஓடிப் போயிருவோம். ரொம்ப அழுத்தமான பொண்ணுடா... நாம ஏதா வது வேலை வாங்கிக் குடுத்தா அதை வச்சி பிழைச்சிக்கிடும் என் றான். எனக்கும் அது சரியென்றே தோணியது. இருவரும் காட்டு வழியில் திரும்பி நடந்து வந்து கொண்டிருந்தபோது எனக்கு அந்தப் பெண்ணின் முகம் நினைவில் வந்தது. அது பாறையில் வரையப் பட்ட சித்திரம் போல சலனமற்றிருந்தது.

மா ரியப்பன் கடுங்காப்பியைக் குடித்தபடியே வெயிலைப் பார்த்துக் கொண்டிருந்தான். சிட்பண்டில் நேற்றே ஏலம் முடிந்திருக்கக்கூடும் என்று தோணியது. ஊரிலிருந்த மனைவியும் குழந்தைகளும் நினை விற்கு வந்தார்கள். அவனுக்குக் காலையில் எழுந்ததில் இருந்தே மனச்சோர்வாக இருந்தது. நிறைய அழுதுவிட்டான் என்றுகூட நினைத்தான். சம்பத்தின் இறப்பை விடவும் கடந்த காலத்தின் வேதனைகள்தான் அவனை அதிகமும் அழ வைத்தன.

சில நேரங்களில் தான் இறந்துபோனால்கூட இதுபோலத்தானே நடக்கும் என்ற பயமும் ஏற்பட்டது. மாரியப்பன் சிறுவயதிலிருந்து சாவைப் பற்றி அதிகம் யோசித்தவனேயில்லை. அவனோடு ஆறாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த கனகசபை என்ற பையன் அவர்கள் விளையாட்டு மைதானத்தில் பந்தாடிக்கொண்டிருந்த போது கத்திக்கொண்டே ஓடி வருவதைப் பார்த்தான்.

கனகசபை தன்னைத் தேள் கடித்துவிட்டது என்று கையை உதறிக்கொண்டே ஓடிக்கொண்டிருந்தான். வகுப்பறையில் இருந்த பையைக்கூட எடுக்கவில்லை. அவர்கள் பள்ளிக்கூடம் விட்டு வீடு திரும்பும்போது கனகசபையின் பையை தானே எடுத்துக் கொண்டு அவன் வீட்டில் கொண்டுபோய் கொடுக்க நின்றபோது வீட்டில் அழுகைச் சப்தம் மேலோங்கியிருந்தது. கனகசபை இறந்துபோயிருந் தான். அவனது பையை யாரிடம் கொடுப்பது என்று தெரியாமல் நின்றுகொண்டேயிருந்தான். பெண்கள் கூக்குரலோடு மாரில் அடித்து அழுதுகொண்டிருந்தார்கள். மறுநாள் பள்ளியில் இருந்து ஊர்வலமாக மாணவர்கள் கனகசபை வீடு வரை மௌனமாக அஞ்சலி செலுத்த வந்தபோது அவனுக்கு வேடிக்கையாகத்தான் இருந்தது. சாவின் வலி அப்போது புரியவில்லை.

ஆனால் கல்லூரி முடிந்து வீடு திரும்பிய நாட்களில் அவன் மனது கசப்பும் வன்மமும் கொண்டதோடு சாவைப் பற்றி அதிகம் யோசித்துக்கொண்டிருந்தது. உலகத்தின் மீது ஆத்திரமாக வந்தது. யாரையாவது கொன்றுவிடலாமா என்றுகூட யோசித்துக் கொண்டிருந்தான்.

கல்லூரியில் அவன் தமிழ் இலக்கியப் படிப்பை முடிக்கவில்லை. இரண்டு பாடங்களில் தேர்ச்சியடையவில்லை என்பதால் அடுத்த அக்டோபரில் எழுதி முடித்துக்கொள்ளலாம் என்று நினைத்தான். ஆனால் அவனது அய்யாவிடம் உண்மையைச் சொல்ல வேண் டாம் என்று எண்ணி டிகிரி முடித்துவிட்டதாகச் சொன்னான்.

மாரியப்பனின் அய்யா கருவாடு விற்பவராகயிருந்தார். அவர் விடிகாலையில் கிளம்பிப் போனால் வருவதற்கு இரவாகிவிடும். தனது கருவாட்டுக் கூடையை இறக்கி வைத்துவிட்டு அவர் தராசுத் தட்டுகளைக் கழட்டிப் போட்டு சாம்பலை வைத்து அவரே நன்றாகக் கழுவித் துடைத்து வைத்துவிட்டுத்தான் சாப்பிட உட்காருவார். அய்யாவிற்கு தமிழ் இலக்கியம் பற்றியோ, கல்லூரிப் படிப்பைப் பற்றியோ எதுவுமே தெரியாது.

அவர்கள் அப்போது தெக்கரை என்ற கடற்கரை கிராமத்திலிருந் தார்கள். அவர் வழக்கமாகக் கருவாடு கொள்முதல் செய்யும் அபு சாலியின் வீட்டையும், தெக்கரையிலிருந்து நாற்பது மைல் சுற்றள வில் உள்ள கிராமங்களையும் தவிர அய்யாவிற்கு வேறு உலகம் தெரியாது. அவர் கருவாட்டுக் கூடைக்குள் கிடக்கும் ஒரு பீடிக்கட் டும் வீடு திரும்பும்போது குடிக்கும் கள்ளும்தான் அவரது விருப்ப

மான பொருட்கள். வீட்டில் அவனோடு பிறந்தவர்கள் ஏழு பேர். அதில் ஐவர் ஆண்கள். மாரியப்பனுக்கு முன்னாடியும் பின்னாடியும் இருவர் இருந்தார்கள். அவர்கள் மீன்பிடிப்பிற்கும் வலை பின்னும் வேலைக்கும் போயிருந்தார்கள். மாரியப்பனின் சகோதரி செல்வி மட்டும் ஆசிரியைப் பயிற்சிக்காகப் படித்துக்கொண்டிருந்தாள்.

அவன் கடலின் சீற்றத்தைச் சிறு வயதில் இருந்தே பார்த்துக் கொண்டிருக்கிறான். அது ஆவேசத்துடன் கரையைத் தின்றுவிடப் போகும் வெறியோடு அடித்துக் கொண்டிருந்தது. கல்லூரியில் தமிழ் இலக்கியம் கற்றுக்கொள்ளத் துவங்கிய சில வாரங்களில் ஊருக்குத் திரும்பியபோது கடலின் மீது மிகுந்த ஈர்ப்பு ஏற்பட்டது. கடல் மிக அழகானது என்று தோணியது. கடற்கரையில் நடந்து திரிந்தபடியே கரையொதுங்கும் சிப்பிகளையும் சங்குகளையும் கடற்காகங்களையும் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு என்ன படிக்க வேண்டும் என்ற முடிவு பள்ளியின் இறுதியாண்டில்கூட ஏற்படவில்லை.

அவனோடு படித்துக்கொண்டிருந்த இருதயம் கல்லூரியில் வேதியியல் எடுத்து படித்து முடித்துவிட்டால் ஸ்பிக்கில் வேலைக்குச் சேர்ந்துவிடலாம். பிறகு ஆயுளுக்கும் கவலை இல்லை என்றதோடு அது கிடைக்காமல் போய்விட்டால்கூட மருந்துகள் தயாரிக்கும் கம்பெனிகளில் வேலை கிடைக்கும். அழகான டை கட்டிக் கொண்டு வேலைக்குப் போய்வரலாம் என்றான். அவன் தூத்துக்குடியில் புனித அன்னாள் மருத்துவமனைக்கு ஒருமுறை வயிற்றுப் போக்கிற்கு ஊசி போடுவதற்காகப் போனபோது அதுபோன்ற ஒருவரைக் கண்டிருக்கிறான். அவர் ஊதா நிற டை கட்டிக் கொண்டு, சிறிய தோல்பையை எடுத்துக்கொண்டு வந்து மருத்துவரிடம் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருந்தார். டாக்டர் அவர் சொல்வதைக் கவனமாக கேட்டுக்கொண்டு அந்த மருந்துகளை தான் சிபாரிசு செய்வதாகச் சொன்னதும் போய்விட்டார். அவனுக்கு டாக்டரே இவரிடம் கேட்டுதான் மருந்து கொடுக்கிறாரோ என்று தோணியது.

இருதயம் இந்த யோசனையைச் சொன்னதும் அவன் வேதியியல் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கனவு காணத் துவங்கினான். கல்லூரிப் படிப்பிற்காக அவன் விண்ணப்பம் வாங்க பணம் கேட்டு அய்யாவிடம் நின்றபோது அவர் இதற்குப் பதிலாக டிரைவிங் லைசன்ஸ் எடுத்துகொண்டுவிட்டால் உப்பளத்திலே டிரைவர் வேலை கிடைக்கும். நாளைக்கு அவனே சொந்தமாக ஒரு லாரிகூட வாங்கிவிடலாம் என்றார். அவனுக்கு ஆத்திரமாக வந்தது. அவன், வேதியியல் படித்தால் மாசம் பத்தாயிரம் சம்பளம் கிடைக்கும் என்று சொன்னான். அய்யாவால் அதை நம்ப முடியவில்லை. அவர் சீயோனிடம் உப்பள வேலைக்குச் சொல்லி வைத்திருப்பதாகவும் அவரைப் பார்த்துவிட்டு வரும்படியும் சொல்லிவிட்டு கருவாடு விற்பதற்குக் கிளம்பிப் போய்விட்டார்.

அவன் சீயோனைப் போய் பார்க்கவில்லை. பெரிய அண்ணன் தங்கபாண்டி அவனுக்கு இருநூறு ரூபாய் கொடுத்து கல்லூரியில் விண்ணப்பம் போடும்படியாகச் சொல்லி அனுப்பி வைத்தான். கல்லூரியில் விண்ணப்பப் படிவம் வாங்கப் போனபோது அங்கிருந்த கட்டிடங்களையும் பெரிய மைதானத்தையும் மிகுந்த வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தான். அவன் முன்னால் ஒரு பெண் அவளது அப்பாவோடு வேதியியல் படிப்பிற்கு விண்ணப்பப் படிவம் வாங்கிக்கொண்டிருந்தாள். கிளிப் போட்டும் பறந்து கொண்டிருந்த அவளது தலைமயிர் அவனுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. அவள் தன்னோடு படிக்கப்போகிறாள் என்பதே அவனுக்குச் சந்தோஷமாக இருந்தது. அவன் ஐந்தாம் வகுப்பில் இருந்தே ஆண்கள் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தான். அவர்கள் பள்ளியில் வேலை செய்த டீச்சர்களும்கூட ஐம்பது வயதைக் கடந்தவர்களாகயிருந்தார்கள்.

அவன் எஸ்எஸ்எல்சி படிக்கும்போது முதன்முறையாக தீக்குச்சி டான்ஸ் பார்ப்பதற்காக அவனை ஸ்டீபன் அழைத்துப் போயிருந்தான். வேதக்கோவில் பண்டிகை நடக்கும் நாளில் ரகசியமாகத் தீக்குச்சி டான்ஸிற்கு ஏற்பாடு செய்வார்கள். அவனிடம் ஸ்டீபன் சில நாட்களுக்கு முன்பாகவே ஐந்து ரூபாய் ஏற்பாடு பண்ணிக் கொள்ளச் சொன்னான். வேதக்கோவில் கொடியேற்றிய தினத்திலிருந்தே இதற்காக அவன் வீட்டில் இருந்த ஒவ்வொருவரிடமும் ஆளுக்கு ஒரு ரூபாய் என்று ஐந்து ரூபாய் சேகரித்திருந்தான்.

வேதக்கோவில் திருவிழா அன்று காலையில் இருந்தே அவனும் ஸ்டீபனும் எங்கே தீக்குச்சி டான்ஸ் நடத்தப்போகிறார்கள் என்று விசாரித்துக்கொண்டிருந்தார்கள். உப்பளத்தைத் தாண்டிய ஒரு வீட்டில் நடக்க இருக்கிறது என்று தெரிந்ததும் மாலையில் இருந்தே அவர்கள் அந்த வீட்டின் முன்னால் நின்றுகொண்டிருந்தார்கள்.

நல்ல இருட்டு கவியத் துவங்கிய பிறகு ஒரு ஆள் காடாவிளக்கு ஒன்றை எரிய விட்டு எல்லோரும் வரிசையில் நிற்க வேண்டும் என்று சொன்னான். இருட்டுக்குள் இளவட்டங்கள் நூறு பேருக்கும் மேலாக வரிசையாக நின்றிருந்தார்கள். காடாவிளக்கின் முன்பாக ஒவ்வொருவரும் வந்து நின்றபோது பருத்த வயிறு வைத்திருந்த ஒருவன் அவர்களது சட்டைப் பை, டவுசர் பை, காதோரம் என்ற எல்லா இடங்களிலும் கை விட்டுத் தேடிவிட்டு முடிவில் அஞ்சு ரூபாயை வாங்கிக்கொண்டு கையில் ஒரு தீக்குச்சியும் ஒரு தீப்பெட்டியும் கொடுத்து உள்ளே போகச் சொன்னான். மாரியப்பன் கையில் தீக்குச்சியை வாங்கும்போது உள்ளே என்ன நடக்கப் போகிறது என்று ஆவலாக இருந்தது.

சிறிய அறையாக இருந்தது. உள்ளே உப்பைப் போலப் பிசுபிசுத்தது இருள். மாரியப்பன் ஆசையோடு தீக்குச்சியை உரசினான். மஞ்சள் வெளிச்சத்தில் அறைக்குள் யாரோ ஒரு ஆள் நின்று

கொண்டிருப்பது தெரிந்தது. தீக்குச்சியை அருகில் கொண்டுபோன போது ஒரு இருபது வயதுப் பெண் நிர்வாணமாக நின்றுகொண்டிருந்தாள். அவளது உடலில் தீக்குச்சியின் வெளிச்சம் ஊர்ந்து நகர்ந்து கொண்டிருந்தது. ஆச்சரியத்தோடு தீக்குச்சி அணைந்துவிடப் போகிறதே என்ற பதட்டத்தில் அவள் உடலை மேலிருந்து கீழாகப் பார்த்துவிட வேண்டும் என்பதைப் போல அவன் வேகமாக அசைத்தபோது அந்தப் பெண் கண்சிமிட்டியபடியே தன் உதட்டால் ஊதி அந்தத் தீக்குச்சியை அணைத்துவிட்டாள். தொட்டுப் பார்க்க முயற்சிப்பதற்குள் ஒரு ஆள் அவனை வெளியே இழுத்துப் போட்டு, போகச் சொன்னான். உடம்பில் தீப்பிடித்து திகுதிகுவென எரிவது போலிருந்தது.

வெளியே நின்றிருந்த ஸ்டீபன் என்னடா ஆச்சு என்று கேட்டான். தீக்குச்சியை அணைச்சிட்டாடா என்றதும் ஸ்டீபன் ஏமாற்றத்துடன் என் தீக்குச்சி பற்றவைத்ததும் அணைஞ்சு போச்சுடா என்றான். மாரியப்பன் திரும்பிப் போய் வரிசையில் நிப்பமா என்று கேட்டான். அதுக்கு இன்னொரு ஐந்து ரூபாய் யார் வைத்திருக்கிறார்கள் என்று ஸ்டீபன் சலித்துக்கொண்டான். இருவரும் ஆழ்ந்த கவலையோடு உப்பளத்தில் உட்கார்ந்திருந்தார்கள். சில நிமிஷங்கள் கழித்து ஸ்டீபன் ஒரு யோசனை செய்தவனைப் போல அவன் காதில் ஏதோ சொன்னான். இருவரும் இருட்டிற்குள் நின்றபடியே போலீசு போலீசு என்று கத்தினார்கள். சில நிமிடங்களில் அந்த வீட்டில் இருந்த காடாவிளக்கு அணைக்கப் பட்டது. வரிசையில் நின்றவர்கள் தெறித்து ஓடினார்கள். அறையில் இருந்த பெண் தன் சேலைகளைக் கையில் அள்ளி எடுத்தபடியே உப்பளத்திற்குள் ஓடிக்கொண்டிருந்தாள். ஸ்டீபனும் அவனும் அதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

அன்றிரவு மாதாகோவிலில் நடைபெற்ற நாடகத்தைப் பார்க்க அவர்கள் போகவில்லை. கடற்கரையின் இருளில் கிடந்த நாட்டுப் படகில் ஏறிப் படுத்தபடியே இருவரும் தாங்கள் கல்யாணம் பண்ணப்போகும் பெண்களைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தார்கள். அவன் தனக்கு ஸ்பிக்கில் வேலை கிடைத்துவிடும் என்றும் வேலை கிடைத்த மறுமாசமே கல்யாணம் என்றான். ஸ்டீபன், தான் ஒரு பெண்ணைக் காதலிப்பதாகவும் அவள் பெயரை இப்போது சொல்ல மாட்டேன் என்றும் அவளைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தான். அன்றிரவு அவர்கள் இருவரும் கடற்கரை மணலில் படுத்துக் கிடந்தார்கள்.

பின்னிரவில் ஸ்டீபன் அவன் அருகில் வந்து படுத்துக்கொண்டு அவனை முத்தமிடத் துவங்கினான். அவன் விலக்கும் முன்பாக ஸ்டீபன் அவன் மீது மாறி மாறி முத்திக் கொண்டிருந்தான். அவனுக்கும் முத்தமிட வேண்டும் போலிருந்தது. கடல் அலை மணலை உள்ளிழுத்துக்கொண்டு போவது போல இருவரும்

கூாமத்தினுள் இழுத்துக்கொண்டு போகப்பட்டார்கள். நீண்ட நேரத்தின் பிறகு ஸ்டீபன் எழுந்து கடலில் மூத்திரம் பெய்து கொண்டிருந்தான். நட்சத்திரங்களைப் பார்த்தபடி படுத்துக் கிடந்த அவன் மனதில் தீக்குச்சி டான்சில் பார்த்த பெண் உடல் தோன்றி மறைந்துகொண்டேயிருந்தது.

வாழ்வில் முதன்முறையாகப் பெண்களுடன் சேர்ந்து படிக்கப் போகிறோம் என்பதே அவனுக்கு மிகச் சந்தோஷமாகவும் ஆர்வ மூட்டுவதாகவுமிருந்தது. ஆனால் கல்லூரி துவங்கி நான்கு நாட்கள் ஆனபோதும்கூட அவனுக்கு வேதியியல் படிக்க அனுமதி கிடைக்க வில்லை. வேதக்கோவிலின் பாதிரியார் மைக்கேலைப் பிடித்து சிபாரிசு செய்யச் சொன்னால் அனுமதி கிடைக்கக்கூடும் என்று சொன்னார்கள். இதற்காக அய்யாவும் அவனுமாக வேதக்கோவி லுக்குப் போனபோது அவர் பிரார்த்தனையை நடத்திக்கொண்டி ருந்தார். அவர்கள் இருவரும் வெளியே இருந்த மகிழ மரத்தடியில் நின்றுகொண்டிருந்தார்கள். உள்ளிருந்து சங்கீதம் பாடுவது கேட்டது. அவனுக்குக் கூட அந்த சங்கீதம் மனப்பாடமாகியிருந்தது. மைக்கேல் பாதிரி வெளியே வந்தபோது அவரை அய்யா தோத்திரம் சொன் னார். இருவரும் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். கடைசியில் மைக்கேல் பாதிரியார் தானும் அவர்களோடு வருவதாகவும் டயோசிசில் இருந்து ஒரு கடிதம் வாங்கிக்கொள்ளலாம் என்றார்.

வீட்டிற்குப் போன பிறகு அய்யா நெய்மீன் துண்டுகளாகப் பார்த்து ஒரு பொட்டலம் கட்டி பாதிரி வீட்டில் கொடுத்து வரச் சொன்னார். அவன் அதைக் கொண்டு போய் கொடுக்கும்போது மருத்துவக் கல்லூரியில் படிக்கும் பாதிரியின் மகள் பிலோமினா எந்தக் கல்லூரியில் சேரப்போகிறான் என்பதைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தாள். அவனுக்குப் பிலோமினாவை முகத்துக்கு நேரா கப் பார்த்துப் பேசுவது கூச்சமாக இருந்தது. அவளும் வேதியியல் படிப்பது நல்லது என்று சிபாரிசு செய்தாள். மைக்கேல் பாதிரி யாரைக் கூட்டிக்கொண்டு கல்லூரிக்குப் போன போதும் கூட அவனுக்கு வேதியியலில் இடம் கிடைக்கவில்லை. கல்லூரி முதல்வர் தமிழ் இலக்கியம் படிப்பதாக இருந்தால் அதற்கு அனுமதி தர முடியும் என்றார். அவனுக்கு வருத்தமாக இருந்தது. ஏதாவது ஒரு இளங்கலை படிக்கச் சேராவிட்டால் உப்பளத்தில் டிரைவராக வேலை பார்க்க வேண்டுமே என்ற அச்சத்தில் தமிழ் படிக்க ஒத்துக் கொள்வதாகச் சொன்னான்.

பாதிரியார் தமிழ் படித்து முடித்துவிட்டு ஆசிரியர் பயிற்சியும் படித்தால் தங்களது வேதபாடசாலையில் ஆசிரியப் பணியாற்றும் வாய்ப்புகூட ஏற்படும் என்றார். அய்யா அதை ஏற்றுக்கொண்ட வரைப் போல தலையாட்டிக்கொண்டார். அவன் ஏமாற்றத்துடன் ஊர் திரும்பிய இரவில் நெடுநேரம் கடலைப் பார்த்துக் கொண்டி ருந்தான். வாழ்வில் தான் விரும்பியது எதுவுமே கிடைக்காது என்று

தோணியது. பின்னிரவில் அவன் வீடு வந்தபோது பாதிரியார் வீட்டில் நட்சத்திரம் ஒன்று ஒளிர்ந்துகொண்டிருந்தது. அவன் தலை குனிந்தபடியே வீட்டிற்கு வந்து சேர்ந்தான். வீட்டின் வாசலில் நிரம்பியிருந்த மணலில் படுத்துக்கொள்ளலாம் போல தோணியது. அய்யாவின் சைக்கிள் தனியே சாய்ந்து கிடந்தது. மீன்வலைகளும், கூடைகளும் ஒரு ஓரமாகக் கிடந்தன. படுத்துக் கொண்டபோது தான் மருத்துவப் பிரதிநிதிகளைப் போல டை கட்டிக்கொண்டு கம்பீரமாக இனி போக முடியாது என்று தோணியது. அவன் தனது வீட்டை, தனது அப்பாவை, வறுமையை எல்லாவற்றையும் வெறுக்கத் துவங்கியிருந்தான்.

கல்லூரியில் சேர்ந்த முதல் நாளே தமிழ் இலக்கிய வகுப்பில் பெண்கள் எவருமில்லை என்பது அவனுக்கு முகத்தில் அறைவது போலிருந்தது. திரும்பவும் ஆண்கள் மட்டுமே உள்ள வகுப் பறையைக் கண்டதும் வேறு ஏதாவது பாடப்பிரிவிற்கு மாறிப் போய் விடலாமா என்றுகூட நினைத்தான். ஆனால் அதற்குத் தனியாகத் தொகை கட்ட வேண்டும் என்பதால் அதுவும் சாத்தியமற்றுப் போனது. அவனுக்கு விடுதி மட்டும்தான் ஆறுதல் தருவதாக யிருந்தது. வீட்டுச் சாப்பாட்டைவிடவும் விடுதியின் சாப்பாடு, குறிப்பாக பரோட்டாவும் கறியும் அவனுக்கு ரொம்பவும் பிடித்துப் போயின. எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிட்டுக்கொள்ளலாம். மாதம் சராசரியாகப் பகிர்ந்துதான் பில் போடுவார்கள் என்று தெரிந்த பிறகு சாதாரணமாக இருபத்திரண்டு பரோட்டாக்கள் வரை சாப்பிடத் துவங்கினான்.

அவர்கள் விடுதியில் இருந்து கூப்பிடும் தொலைவில்தான் பெண்கள் விடுதியும் இருந்தது. அதில் இரவில் விளக்கு எரிந்து கொண்டிருப்பதைச் சில நேரம் மொட்டை மாடியில் நின்றபடி பார்த்துக்கொண்டிருப்பார்கள். எப்போதாவது அதிசயமாக ஒரு பெண் விடுதியின் வாசலில் நின்றபடி பேசிக்கொண்டிருக்கக்கூடும். அவர்களது விடுதியாவது பத்து மணிக்குதான் கேட்டை மூடுவார் கள். பெண்கள் விடுதியில் எட்டு மணிக்கே மூடிவிடுவார்கள். அவனும் நண்பர்களும் மழை நாட்களைத் தவிர மற்ற நாட்களில் மொட்டை மாடியில்தான் படுத்து உறங்குவார்கள். வேறுவேறு துறையைச் சார்ந்த நண்பர்கள் தங்கள் வகுப்பறை நிகழ்வுகளைப் பகிர்ந்துகொள்ளும் போது ஆசையோடு அவன் கேட்டுக்கொண்டி ருப்பான். மாதம் ஒரு முறை விருந்தினர்கள் வந்து பார்க்கலாம் என்று அனுமதித்த நாளில்கூட அவனைப் பார்ப்பதற்கு யாரும் வருவதேயில்லை.

ஒரு நாள் கேரளாவில் இருந்து வந்து விலங்கியல் துறையில் படித்துக்கொண்டிருந்த ஷோபனா என்ற பெண் அவனிடம் பாரதியார் கவிதைகள் இருக்கின்றதா என்று கேட்டாள். அவன் நூலகத்தில் இருந்து எடுத்து வந்து தருவதாகச் சொன்னான். அந்தப்

பெண், தான் கல்லூரி மலரில் பாரதியாரைப் பற்றி ஒரு கட்டுரை எழுத நினைத்திருப்பதாகச் சொன்னாள். அவன் பாரதியார் கவிதை களை அன்றே எடுத்துக் கொண்டு அவளைத் தேடிப் போய் வகுப் பறையிலே கொடுத்துவிட்டு வந்தான். அதன் பிறகு அவனாகவே ஷோபனா அவனுடைய ஆள் என்று கற்பனை செய்து கொள்ளத் துவங்கினான். சில வேளைகளில் ஷோபனாவைத் தன் கிராமத் திற்கு அழைத்துக் கொண்டு போவது போலவும் அவள் கடற் கரையில் ஓடுவது போன்றும் கற்பனை செய்துகொள்வான். ஷோபனா கட்டுரை எழுதுகிறாள் என்பதற்காகவே தானும் பாரதி யாரைப் பற்றி ஒரு கவிதை எழுத வேண்டும் என்று முயற்சித்து, தாயின் மணிக்கொடி பாரீர் என்று கல்லூரி மலருக்கு தமிழ்த் தென்றல் என்ற பெயரில் கவிதை எழுதித் தந்தான். ஆனால் அது அந்த ஆண்டு மலரில் வெளியாகவேயில்லை.

தனது படிப்பு தன்னைக் காப்பாற்றப்போவதில்லை என்பது இரண்டாம் ஆண்டிலே அவனுக்குத் தெரிந்துவிட்டது. அதன் பிறகு பரிட்சை எழுதுவற்குக்கூட விருப்பமற்றவனாக இருந்தான். சில வேளைகளில் அவன் பேசாமல் ஊருக்குப் போய் டிரைவர் வேலைக்கே போய்விடலாமோ என்றுகூடத் தோணும். ஆனால் அப்படி திரும்பிப் போனால் அய்யாவோடு பிரச்சினையாகிவிடும். அத்தோடு செலவு செய்த பணத்தைப் பற்றி வீட்டில் சொல்லிக் காட்டிக்கொண்டேயிருப்பார்கள் என்றும் தோணியது. இரண்டாம் வருடத்தில்தான் அவன் சம்பத்தோடு மிகவும் நெருக்கமாகத் துவங்கி னான். சம்பத் மற்ற மாணவர்களைப் போல் இல்லாமல் எதையும் வித்தியாசமாக யோசிக்கின்றவனாகயிருந்தான். அத்தோடு யாழினி யின் வருகை அவன் மனதில் அதுவரை அடங்கிக் கிடந்த காதலின் சுனைகளைத் திறந்துவிட்டது.

ஒரு நாள் சம்பத் அவனிடம் மனிதன் கண்டுபிடித்ததிலே மிக மோசமானது எது என்று கேட்டான். அவனுக்குப் பதில் தெரிய வில்லை. சம்பத் தானாகவே சுவர்கள் என்றபடி சுவர்களை எழுப்பி கட்டிடங்கள், வீடுகள், விடுதிகள் என்று பிரித்து வைத்துவிட்டார் கள். சுவர்கள் இல்லாத காலத்தில் வசித்தது போல வெட்ட வெளியில் வாழ்ந்தால் நன்றாகத்தானே இருக்கும் என்றான். அந்த ஒரு நிமிஷம் சம்பத் மீது மிக நெருக்கமான ஒரு உணர்வு உண்டானது. தான் பல இரவுகளில் யோசித்துக் கொண்டிருந்ததை சம்பத் பேசிக்கொண்டிருப்பது போலிருந்தது. இந்த சுவர்கள் மட்டும் இல்லாமல் இருந்தால் எத்தனை சௌகரியமாக இருந் திருக்கும். நாம் கண்ணுக்குத் தெரிந்ததும் தெரியாததுமான எத் தனையோ சுவர்களால் பிரிக்கப்பட்டிருக்கிறோம் என்பது எத்தனை வேதனைக்குரியது என்று தோன்றியது. சம்பத் ஒரு வார காலம் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டிருந்த நாட்களில் அவன் அதற்காக உள்ளூர வேதனையடைந்தான். தானும் சம்பத்தைப் போல மேடை யில் பேசவும் சிந்திக்கவும் பழகிக்கொள்ள வேண்டும் என்றும் ஒரு

ரகசிய ஆசை ஏற்பட்டது.

மூன்றாம் ஆண்டு பிரிவுஉபசார விழாவின்போது யாழினியோடு அவர்கள் ஒன்றாகப் புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். அந்த விழாவில் சம்பத்தைப் பற்றி யாழினி பேசினாள். அவன் இளை ஞர்கள் குறள் நெறியில் வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி சில வார்த்தைகள் பேசினான். அனை வரும் கைதட்டினார்கள். விடுதியில் இருந்த தனது சாமான்களை எடுத்துக் கொண்டு ஊரில் போய் இறங்கியபோது வீட்டில் அவனை வரவேற்பதற்கோ, இணக்கமாகப் பேசுவதற்கோ எவருமே முன் வரவில்லை .

இந்த மூன்று ஆண்டுகளுக்குள் வீடு எத்தனையோ சிடுக்குகள் நிரம்பிப் போனதாகயிருந்தது. அவனது அண்ணன்களில் இருவர் தனியே தூத்துக்குடியில் வீடு எடுத்துப் போய்விட்டிருந்தனர். தங்கை உள்ளூர் பள்ளியில் வேலை செய்து கொண்டிருந்தாள். அவன் கடற்கரையில் கிடந்த ஒரு உடைந்த படகில் உட்கார்ந்து கொண்டு என்ன செய்வது என்று யோசித்தான். கல்லூரி வாழ்க்கையில் சில அவமானங்களும் அற்ப சந்தோஷங்களும் தவிர வேறு எதுவும் சாத்தியமாகவேயில்லை. இந்த அரியர்ஸ் அத்தனை யும் முடிக்கும்வரை ஏதாவது வேலை செய்யலாம் என்று கூட தோணியது. அவனுடைய அய்யா தனது சைக்களில் கருவாட்டுக் கூடைகளோடு கிளம்பும்போது அவன், தான் தூத்துக்குடியில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து வருவதாகச் சொல்லி அதற்குப் பத்து ரூபாய் பணம் கேட்டான். அவர் பணம் தராததோடு மிக மோசமான வசையைப் பொழிந்தபடியே கடந்து போனார்.

பகல் நேரங்களில் வீட்டில் இருப்பதைப் போன்று வலி தரக் கூடியது எதுவுமில்லை என்று தோணியது. அவனது அம்மாவும் இன்னொரு பெண்ணும் வாசலில் உட்கார்ந்து தேங்காய் நாரை உறித்தபடியே அவனைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு நாள் பாதிரியார் அவனிடம், வரும் ஞாயிற்றுக்கிழமை தூத்துக்குடி யில் போலீஸ் வேலைக்கு ஆள் எடுப்பதாகவும் அதற்கு அவன் போகலாமே என்றார். இதைக் கேட்டதுமே அவனுக்கு ஆத்திரமாக வந்தது. ஆனாலும் அவரிடம் காட்டிக்கொள்ளாமல் அவரது பள்ளி யில் ஏதாவது ஆசிரியப் பணி கிடைக்குமா என்று கேட்டான். அவர் பள்ளி இப்போது மெட்ரிக் அந்தஸ்து பெற்றுவிட்டது என்றும், அதில் தமிழ் படித்தவனுக்கு எந்த உத்தியோகம் தர முடியும் என்றும் சலித்துக்கொண்டு போய்விட்டார். இரண்டு நாட்களுக்குப் பிறகு உப்பளத்தில் வேலை செய்யும் சேவியரின் தம்பி தாவீது அவனிடம் தான் போலீஸ் தேர்வுக்குப் போய்ப் பார்க்கலாமே என்று சொன் னான். அதற்கு தான் என்ன செய்வது என்று கேட்டான். இரண்டு நாட்கள் ஓடிப் பயிற்சி செய்தால் போதும் என்றான்.

இருவரும் ஒரு நாள் காலை கடற்கரையில் மூச்சிரைக்க ஓடினார்கள். அவன் நீண்ட நாட்களாக வகுப்பறையில் உட்கார்ந்தே இருந்ததில் உடம்பு தளர்ந்து போய்விட்டிருந்ததை உணர்ந்தான். தொடைகளில் வலி ஏறியது. தேர்வு நாள் அன்று காலை தாவீதும் அவனும் தூத்துக்குடி பேருந்து நிலையத்தில் வந்து இறங்கி அங்கேயிருந்த பெட்டிக்கடையில் ஆளுக்குப் பத்து வாழைப்பழங்கள் வாங்கி சாப்பிட்டுக்கொண்டார்கள். அவர்கள் போனபோது ஆயுதப்படை மைதானத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் முன்னதாகவே காத்துக்கொண்டிருந்தார்கள். அவன் ஓட்டத்தின் போதே தோற்றுப் போய்விட்டான். ஆனால் தாவீது உயரம் தாண்டுதல் வரை போய் தோற்றுத் திரும்பினான். அங்கே வந்திருந்த தாவீதின் நண்பன், எதற்காகத் தமிழ் படித்துவிட்டு அவன் போலீஸ் வேலைக்குச் சேர விரும்புகிறான் என்று கேட்டான். அவன் ஆத்திரத்தோடு, கோபத்தை அடக்கி வைக்க முடியலை, இந்த வேலைக்குப் போனா நாலு பேரைச் சாத்தலாம் இல்லையா என்றான். தாவீதுக்குச் சிரிப்பாக வந்தது.

அவர்கள் மதியம் சினிமாவிற்குப் போய்விட்டு இரவு ஊர் திரும்பும்போது அவனது வீட்டின் வாசலில் அய்யா உட்கார்ந்து பீடி குடித்துக்கொண்டிருந்தார். அவன் நிழலைக் கண்டதும் அவர் எழுந்து நின்றபடியே நாளையில் இருந்து அவன் உப்பளத்தில் வேலைக்குப் போக வேண்டும் என்றும் இதற்காக ஏஜெண்டிடம் சொல்லியிருப்பதாகவும் சொன்னார். அவன் தலையாட்டிக் கொண்டான். உப்பள வேலை அவனுக்குப் பழக்கமற்றதாகயிருந்தது. உடல் வலியை விடவும் அவனுக்கு மனச்சோர்வு நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டேயிருந்தது. பல நேரங்களில் அவனுக்கு வீட்டில் சாப்பிடுவதற்குக்கூட கூச்சமாக இருக்கும். கடற்கரையில் திரியும் காகம் மணலில் கிடப்பதை எல்லாம் கொத்தியலைவது போல தானும் ஆகிவிட்டோமோ என்று தோன்றும். சில நேரங்களில் எங்காவது ஓடிப்போய்விடலாமா என்று யோசித்துக் கொண்டிருப்பான்.

ஒரு நாள் அவன் தன்னிடமிருந்த பாடப்புத்தகங்கள் அத்தனையும் எடுத்துக் கொண்டு போய் பழைய புத்தகக் கடைக்காரனிடம் விற்றான். மொத்தம் முப்பத்தைந்து ரூபாய் கிடைத்தது. எங்காவது பஸ் ஏறிப் போய்விட வேண்டியதுதான் என்று கிளம்பினான். எங்கே போவது என்று தெரியாமல் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தான். தென்காசி பஸ் வந்தது. அதில் ஏறி உட்கார்ந்து கொண்டான். பஸ் தென்காசி வந்து சேர்ந்தபோது குற்றாலச் சாரல் அடித்துக்கொண்டிருந்தது. குற்றாலம் வரை நடந்தே சென்றான். அருவியில் குளித்துவிட்டுத் திரும்பி வரும் போது குற்றால குறவஞ்சி பாடிய இடம் என்று மனதில் தோன்றியது. ஆத்திரத்துடன் அதை மனதில் இருந்து அழித்துவிட்டு வளையல் கடைகளுக்கு நடுவில் இருந்த ஒரு ஹோட்டலில் ஏதாவது வேலை கிடைக்குமா

என்று கேட்டான்.

மஞ்சள் பல்பு எரிந்துகொண்டிருந்த கடையில் இருந்த ஆள் அவனை உற்றுப் பார்த்துவிட்டு சமைக்கத் தெரியுமா என்று கேட்டான். அவன் தெரியாது என்றதும் பின்னாடி போ என்றான். பெரிய இட்லிக் கொப்பரை ஒன்றிற்குள் நாற்பது ஐம்பது டம்ளர்கள், தட்டுகள் கிடந்தன. நாலைந்து பெரிய அலுமினியப் பானைகள் வேறு கழுவப்படாமல் இருந்தன. அங்கே இருந்த ஒரு பெண் அவனிடம் சாம்பலை அள்ளி வைத்துக்கொண்டு பாத்திரங்களைக் கழுவிப்போடச் சொல்லிவிட்டுப் போனாள். அவன் பசித்த வயிறோடு பாத்திரங்களைக் கழுவிப் போடத் துவங்கினான். அவன் கண்பார்வையில் செண்பகக்குழல்வாய்மொழியம்மன் கோவிலும் அருவியும் தெரிந்தது. அவன் நிமிர்ந்து பார்க்காமல் கழுவிக் கொண்டிருந்தான். பாதி இருட்டும் சாரலுமாக இருந்தது. பாத்திரங் களைக் கழுவி முடித்து அவன் எழுந்துகொண்டபோது ஹோட்டல் அடைக்கப்பட்டிருந்தது. அவனுக்காக ஒரு தட்டில் மீதமிருந்த உணவைக் குவித்து வைத்திருந்தார்கள்.

சாப்பிட்டு முடித்ததும் கடைக்காரப் பெண் ஒரு கதர்த் துண்டை அவனிடம் கொடுத்து கோவில் பிரகாரத்தில் போய் படுத்துக்கொள் ளும்படியாகச் சொன்னாள். அவன் பதில் பேசாமல் அதை வாங்கிக் கொண்டு சென்றான். பிரகாரத்தில் சாரல் தெறிந்து தரை ஈரமேறிப் போயிருந்தது. தூண்களில்கூட கை வைக்க முடியவில்லை. துண்டை விரித்துப் படுத்துக்கொண்டான். குளிர் உடலைத் துளைப் பதாக இருந்தது. அவனால் உறக்கம் கொள்ள முடியவில்லை. பின்னிரவில் எழுந்து உட்கார்ந்துகொண்டு வாயைக் கைகளால் பொத்திக்கொண்டு அழுதான். பொங்கி விழும் அருவியும் அந்தக் கோவிலும் ஈரம் வழியும் பாதைகளும் அவன் வேதனையை அதிகப் படுத்துவதாகவே இருந்தன. இப்படியே ஊருக்கு ஓடிவிடலாமா என்றுகூட நினைத்தான். ஆனால் அது இன்னமும் வேதனை தருவதாக அமைந்துவிடுமே என்று தோன்றியது.

இரண்டு நாட்கள் அந்தக் கடையில் அவன் பாத்திரம் கழுவு கின்றவனாக இருந்தான். மூன்றாம் நாளின்போது அவளது அண்ணி யின் வகையில் உறவினராக இருந்த முத்து அண்ணாச்சி அவனைப் பார்த்தவராக தனியே கூட்டிக்கொண்டு போய் எதுக்குடா இப்படி ஆகிட்டே என்று வருத்தபட்டு அவனைத் தன்னோடு கூட்டிக் கொண்டு போவதாகக் கடைக்காரரிடம் சொன்னார். அவன் மறுத்தபோதும் விடாமல் அவனை அங்கிருந்து திசையன்விளைக்குக் கூட்டிக்கொண்டு போனார்.

இரண்டு வாரம் அவரது ஊரில் இருந்தான், பிறகு அவன் தெக் கரைக்கே திரும்பி வந்தான். அவனது அய்யா எதுவும் கேட்டுக் கொள்ளவில்லை. அம்மா மட்டும் பயந்துபோனவள் போல, பேசாமல் வீட்டிலே கிடந்தா போதும்டா. நான் உழைச்சி உனக்கு

கஞ்சி ஊத்துறேன் என்றாள். தான் படித்திருக்கக் கூடாது என்று அவனுக்குத் தோணியது. அதன் பிறகு அவனுக்குப் பாதிரியார்தான் சிட்பண்ட் வேலைக்கு ஏற்பாடு பண்ணித் தந்தார். அவன் இனிமேல் தனது உலகம் இதுதான் என்பது போல அதற்குள்ளாகவே மூழ்கத் துவங்கினான்.

எப்போதாவது சாலையோரங்களில் உள்ள பழைய புத்தகக் கடைகளைக் கடக்கும் போது மட்டும்தான் தமிழ் இலக்கியம் படித்தது நினைவிற்கு வரும். மற்ற நேரங்களில் அவன் ஏலச்சீட்டில் எவ்வளவு சம்பாதிக்க முடியும் என்பதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். இரண்டு மூன்று வருடங்களில் அதன் சூட்சுமங் களை அறிந்து கொண்டான். அம்மாவே அவனுக்காகக் கொற்கை யில் இருந்து பெண் பார்த்து வந்தாள். அவன் பெண் பார்க்கப் போகவேயில்லை. திருமண நாளின் இரவில் கூட உடலில் எந்தக் கிளர்ச்சியோ, காம உணர்வுகளோ இல்லாமல் வெறும் சடங்கு போலவே அவளோடு உறவு கொள்வதாக அமைந்தது. சில நாட்களில் உடலுறவு என்பது வெறும் ஒரு பழக்கம் என்பது போல அவனுக்கு அமைந்துபோய்விட்டிருந்தது.

இன்றும் அவன் கடந்த காலத்தை நினைவுபடுத்தும் ஒரே அம்சமாக சம்பத் மட்டுமே இருந்தான். எப்போதாவது சம்பத்திடம் இருந்து வரும் கடிதங்களும் அவனது சந்திப்புகளையும் தவிர்த்து அவன் மற்ற எல்லோரிடமிருந்தும் தன்னைத் துண்டித்துக்கொண்டி ருந்தான். இதற்காகவே உவரியில் வீடு பார்த்துத் தங்கிக்கொண் டான். சம்பத்தின் மரணம் திடீரென அவனுக்குத் தானும் அவனைப் போலவே தோற்றுப் போய்விட்டதைப் பரிகசிப்பது போலவேயிருந்தது. அவன் சம்பத் உடலை மின்சார தகனத்திற்கு எடுத்துச் செல்லும் வழியெல்லாம் இதைப் பற்றியே யோசித்துக் கொண்டு வந்தான். வருத்தமாகவும் பயமாகவும் இருந்தது.

**யா**ழினி சம்பத் இறந்துபோன இரண்டாம் நாளின் காலையில் வந்து சேர்ந்தாள். கல்லூரியில் பார்த்த யாழினியின் தோற்றம் முற்றி லும் கலைந்துபோயிருந்தது. இப்போது நாங்கள் மூவரும் பார்த்துக் கொண்டிருந்த யாழினி பருத்துப்போனவளாக மிகப் பெரிய மூக்குக் கண்ணாடி அணிந்துகொண்டிருந்தாள். தனது பிள்ளைகள் மூவரை யும் ஊரில் விட்டு வந்திருப்பதாகச் சொன்னாள். அவளது பேச்சு கூட மாறிப்போயிருந்தது. தனக்கு இரண்டு வருடங்களுக்கு முன் பாக உடல்நலக் கோளாறு ஏற்பட்டு அதற்கு மாத்திரைகள் சாப் பிடத் துவங்கியதிலிருந்து இப்படி உடம்பு ஊதிவிட்டதாகவும் சொன்னாள். ராமதுரை, அவளுக்கு சம்பத் ஏதாவது கடிதம் எழுதி யிருந்தானா என்று கேட்டான்.

அவள் தன் கைப்பையில் இருந்து பாதி மடித்து வைக்கப் பட்டிருந்த ஒரு நாலைந்து காகிதங்களை விரித்து அதில் இருந்த தேதியை வாசித்து இரண்டு வருடங்களுக்கு முன்பாக அவன் அதை எழுதியிருந்ததாகவும், அந்தக் கடிதம் எந்த ஊரிலிருந்து எழுதப் பட்டது என்ற விபரங்கள் அதில் குறிப்பிடப்படவில்லை என்றாள். பிறகு தான் ரயிலில் உறங்க முடியவில்லை என்றும் அதனால் கொஞ்ச நேரம் தனது லாட்ஜில் சென்று தூங்கிவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டு சம்பத்தின் மனைவியிடம் ஏதோ பேசிக்கொண்டிருக்கத் துவங்கினாள்.

மாரியப்பன் நீண்ட நாட்களுக்குப் பிறகு யாழினியைக் கண்ட போதும் கண்களில் வெளிப்படுத்த முடியாத ஒரு ஆசையும் வலியுமாக அவளைப் பார்த்தபடியே இருந்தான். நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தபோதே யாழினி, தான் சம்பத்தின் மனைவியைத் தன்னோடு அழைத்துக்கொண்டு போவதாகவும் இருவரும் மதியம் வந்துவிடுவதாகவும் சொன்னாள். நாங்கள் தலையாட்டிக்கொண்டு யாழினிக்கு வேறு ஏதாவது உதவிகள் தேவைப்படுகின்றதா என்று கேட்டோம். அவள் சம்பத்தின் புகைப்படம் ஏதாவது இருந்தால் தனக்காக ஒரு பிரதி எடுத்துத் தர முடியுமா என்று மட்டும் கேட்டாள். தனக்கு தெரிந்து சம்பத் போட்டோ எடுத்தது போல நினைவில்லை என்றும் கல்லூரி நாட்களில் எடுத்த புகைப்படம் ஏதாவது வீட்டில் இருந்தால் பிரதி எடுத்துத் தருவதாகவும் ராமதுரை சொன்னான்.

யாழினி எழுந்துகொண்டு சம்பத்தின் மனைவியோடு தெருவில் நடந்து செல்லத் துவங்கினாள். நாங்கள் மூவரும் யாழினியை பற்றிய கடந்த கால மயக்கம் தெளியாமல் அவளைப் பற்றிய நினைவுகளை பகிர்ந்துகொள்வதற்காக சம்பத்தின் வீட்டைப் பூட்டிவிட்டு அருகாமையில் இருந்த கார்ப்பரேஷன் மைதானத்தில் போய் அமர்ந்து கொண்டோம். மாரியப்பனுக்கு மட்டும் யாழினியோடு கொஞ்ச நேரம் தனியாக பேசிக்கொண்டிருந்தால் நன்றாக இருக்கும் என்று தோணியது. அத்தோடு நீண்ட நாட்களுக்குப் பிறகு திடீரென உடலில் காமம் நெளிந்துகொண்டிருப்பது போலிருந்தது. அவன் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

ஜெயந்திக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. சம்பத் எப்போது ரொம்பவும் சந்தோஷமாக இருந்தான் என்று நினைவிருக்கிறதா என்று யாழினி திரும்பவும் கேட்டுக்கொண்டிருந்தாள். சில நேரங்களில் யோசிக்கும்போது சம்பத் எப்போதுமே சந்தோஷமாக இருந்தது போலத்தான் அவளுக்குத் தோன்றும். சில

நேரங்களில் அவன் உறக்கத்தில்கூட சந்தோஷமாக இல்லை. இறுக்கம் படிந்த முகத்தோடு சப்தமின்றி எதையோ புலம்பிக்கொண்டிருக்கும் உதடுகளுடன்தான் உறங்கிக் கொண்டிருந்தான் என்று தோன்றும்.

சம்பத்தும் அவளும் சென்னைக்கு வந்து இறங்கிய நாளில் ராமதுரை அவர்களுக்காகத் தாமஸ் மவுண்டில் சிறிய வீடு பார்த்துக் கொடுத்தான். சிறிய ஓடு போட்ட வீடு அது. ஒரேயொரு அறையிருந்தது. அந்த அறையின் மூலையில் சமைத்துக்கொள்வதற்கு ஒரு மேடையிருந்தது. சம்பத் முதல் இரண்டு நாட்கள் வெளியே போகவேயில்லை. வீட்டின் கதவையும் பூட்டிக்கொண்டு வெறும் தரையில் படுத்தே கிடந்தான். அந்த வீட்டில் கிழக்கு பார்த்து ஒரேயொரு ஜன்னல் இருந்தது. அந்த ஜன்னலையும் சம்பத் திறக்க விட மாட்டான். இருட்டிற்குள்ளாகவே பகலிலும் அவள் ஏதாவது சமைப்பதும் அவர்கள் சாப்பிடுவதுமாகயிருந்தார்கள். சம்பத் என்ன யோசனை செய்கிறான் என்று அவள் கேட்டதேயில்லை மாறாக அவன் எப்போதாவது அவளிடம் என்னைப் பார்த்தால் உனக்கு பயமாக இருக்கிறதா என்று கேட்பான். அவள் இல்லை என்று தலையாட்டுவாள். சம்பத் திரும்பவும் யோசனையில் மூழ்கிப்போய் விடத் துவங்குவான்.

எப்போது பகல், எப்போது இரவு என்று பேதம் பிரிக்க முடியாதபடி அவர்கள் வீட்டிற்குள்ளாகவே அடைந்து கிடந்தார்கள். சில நேரங்களில் அவள் கிணற்றடியில் நடமாடும் சப்தத்தை வைத்து நேரத்தை அறிந்துகொள்வாள். அவளிடம் ஒரேயொரு ஸ்டவ் அடுப்பு மட்டுமே இருந்தது. ராமதுரை வீட்டைப் பிடித்துக் கொடுத்த கையோடு கொஞ்சம் சாமான்களும் வாங்கித் தந்து போயிருந்தான். ஜெயந்தி உருளைக்கிழங்கும் சாதமும் ஒன்றாக வேக வைப்பாள். ஊறுகாயைப் போட்டுக்கொண்டு அதை வேகவேகமாகச் சாப்பிட்டார்கள்.

நான்கு நாட்களுக்கு அப்புறம் ராமதுரை வந்து கதவைத் தட்டும் போது அவள் கதவைத் திறந்தாள். எதற்காகப் பகலிலும் இப்படி வீட்டின் ஜன்னலைப் பூட்டி வைத்துள்ளார்கள் என்று கேட்டபடியே சம்பத்தைத் திட்டினான். பிறகு இருவரும் வெளியே புறப்பட்டுப் போனார்கள்.

சம்பத் அன்றிரவு திரும்பி வந்து தான் ஒரு புலனாய்வு வார இதழில் பிழை திருத்தம் செய்யும் வேலைக்குப்போகப் போவதாகச் சொன்னான். அவளுக்குப் பிழை திருத்தம் என்ன செய்வது என்றால் என்று தெரியாமலே தலையாட்டிக் கொண்டாள். பிறகு ராமதுரை வாங்கித் தந்ததாக இரண்டு ஜிப்பாவும் வேஷ்டிகளையும் அவளிடம் கொடுத்தான். அவர்கள் இருந்த இடத்தில் பத்துக் குடியிருப்புகள் ஒன்றாக இருந்தன. அத்தனை பேரும் குளிப்பதற்காகப் பொதுவான ஒரு கிணறு இருந்தது. அதில் தண்ணீர் இறைத்து அங்கேயே

நின்றுதான் குளிக்க வேண்டும். கழிப்பறையும் ஒரேயொரு கழிப் பறை மட்டுமே இருந்தது. ஜெயந்தி இதற்காகவே எழுந்துகொண்டு பின்னிரவில் கழிப்பறைக்குச் செல்லத் துவங்கினாள். அதுவும் சில வேளைகளில் எவராவது தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் களோ என்று பயமாக இருக்கும்.

சம்பத் ஜிப்பாவும் வேஷ்டியும் அணிந்துகொண்டு நின்றபோது அவளுக்கு அவன் மிக அழகாக இருப்பது போலவே இருந்தது. சம்பத்தின் தலையை அவளே வாறி விட்டாள். அப்போதும் சம்பத் தின் முகத்தில் ஒரு சோர்வு படிந்தேயிருந்தது. அவன் வேலைக்குச் சென்றுவிட்ட பகலில் அவள் வீட்டில் தனித்தே இருந்தாள். தானும் எங்காவது வேலைக்குப் போய்வரலாமா என்று தோன்றும். சில நேரங்களில் தனக்கு ஒரு வேலை கிடைத்துவிட்டால் போதும், சம்பத்தை வேலைக்குப் போக வேண்டாம் என்று சொல்லி வீட்டிலேகூட இருக்கச் சொல்லிவிடலாமே என்றும் நினைப்பாள்.

ஒரு வாரம் சம்பத் வேலைக்குச் சென்றிருந்தான். எட்டாம் நாளின் காலையில் அவன் ஒன்பது மணியாகியும் வேலைக்குப் புறப்படவில்லை. அவள் உடல்நலமில்லையா என்று கேட்டதும் எரிச்சல் அடைந்தவனைப் போல அந்தப் பத்திரிக்கையில் தான் இரண்டு மாதங்கள் வேலை செய்தால் உலகத்தில் உள்ள எல்லாக் குற்றங்களையும் தானே செய்யக்கூடும் என்றான். அவளுக்குப் புரிய வில்லை. அவன் ஆத்திரத்துடன் அந்தப் பத்திரிக்கை முழுவதும் கற்பழிப்பு, கொலை, போலீஸ் அத்துமீறல் என்ற செய்திகளே நிரம்பி யிருக்கின்றன. தான் வாசிக்கும் கட்டுரைகள் அத்தனையும் பல்வேறு விதங்களில் கொலை செய்வதைப் பற்றியும் அதன் ருசிகரமான பின்னணி பற்றியுமே உள்ளது. வாசித்துப் பிழை திருத்தம் செய்யும் போது கொலைகாரர்களை அவன் இவன் என்று ஒருமையில் எழுதுவதா, இல்லை அவர் இவர் என்று பன்மையில் எழுதுவதா என்ற குழப்பம் வருவதோடு அதுபோலத் தானும் ஏதாவது கொலை செய்ய முயற்சிக்கலாமா என்றுகூடத் தோன்றுகிறது என்றான்.

அவள் சம்பத்தின் முகத்தைப் பார்த்தபோது அது சிவந்து போயிருந்தது. அவன் அன்றைக்கு வேலைக்குக் கிளம்பவில்லை. அவளுக்கு எதற்காக இப்படி நடக்காத விஷயங்களைப் பற்றிக் கற்பனை செய்துகொள்கிறான் என்று பட்டது. அவன் ஜெயந்தியின் கையைப் பிடித்துக்கொண்டு தன் கைகளில் ரத்தக் கறை படிந்திருப் பது போன்று அத்தனை அசூயையாக இருக்கிறது. இரண்டு நாட் களுக்கு முன்பாக சில புகைப்படங்களைப் பார்த்தேன். ஒரு பெண் மருத்துவரை அவரது உறவுக்காரப் பையன் வெட்டிக் கொன்றிருக் கிறான். கொலைக்கான காரணம் வேறு எதுவுமில்லை. இருநூறு ரூபாய் கேட்டு மிரட்டியிருக்கிறான் இல்லை என்றதும் மருத்து வரைக் கொன்றுவிட்டான். கொன்ற பிறகு அவளோடு உடல் உறவு கொள்ளலாம் என்று அவனுக்குத் தோன்றியிருக்கிறது. அவளது

பாவாடையை இரண்டாகக் கிழித்துவிட்டு அவள் மீது இயங்கியிருக்கிறான். அந்த மருத்துவரின் நிர்வாண உடலில் வெட்டுக் காயங்கள் பிளந்திருந்தன.

கொலையை விடவும் அந்தப் பையனின் காமத்தை நினைத்தால் பயமாக இருக்கிறது. ஒரு சவத்தைப் புணரும் அளவு அந்தப் பையன் காமத்தால் அலைக்கழிக்கப்பட்டிருக்கிறான். எல்லாக் குற்றங்களுக்கும் பின்னாலும் தீராத மனவேதனை உள்ளது போலும். தினசரி பிழை திருத்துவதற்காக அந்தக் கட்டுரைகளை வாசிக்க வாசிக்க ஊர்கள், பெயர்கள் மாறிக்கொண்டேயிருக்கின்றதே அன்றி மனிதன் மிகக் கொடூரமானவன் என்ற எண்ணம் வலுப்பெற்றுக்கொண்டேயிருக்கிறது. என் அலுவலகத்தில் வேலை செய்பவர்கள்கூட இப்படிப்பட்டவர்களாக நடந்துகொள்ளக் கூடும் அல்லவா? புகைப் படங்கள் நிஜத்தை அதீதப்படுத்துகின்றன. நீ அந்த வெட்டுப்பட்ட உடல்களைப் பார்த்திருக்க வேண்டும். அவை ஏதோ விசித்திரப் பொருட்கள் போலிருந்தன. என்னால் அங்கே வேலை செய்ய முடியவில்லை. மூச்சுத் திணறத் துவங்கிவிட்டது என்றான்

ஜெயந்தி இனி என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தாள். சம்பத் அன்றைய பகலில் இரண்டு முறை குளித்தான். பிறகு அவளையும் கூட்டிக்கொண்டு நடந்தே அருகாமையில் இருந்த ரயில் நிலையம் வரை சென்றான். அவள் இனி என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியாத குழப்பத்தில் அவனோடு நடந்து போய்க்கொண்டிருந்தாள். மின்சார ரயில் நிலையத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு அவன், நேற்று இரவு தான் ஒரு கட்டுரையைப் பிழை திருத்தம் செய்ததாகவும் அதில் ஏழு வயதுச் சிறுமியை மூன்று ஆசிரியர்கள் ஒன்றுசேர்த்து பலாத்காரம் செய்த நிகழ்ச்சி புகைப் படத்துடன் மிக சுவாரஸ்யமாக விவரிக்கப்பட்டிருந்தாகவும் அந்தச் சிறுமியின் முகத்தைப் பார்க்கும்போது இறந்துபோன அவனது தங்கையைப் போல இருந்ததாகவும் சொன்னான்

ஜெயந்தி அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். சம்பத் அவள் கைகளைப் பிடித்துக்கொண்டு தான் எவரையாவது கொன்று விடுவேனா என்று கேட்டான். அவளுக்கு அழுகை வருவது போலிருந்தது. சம்பத் திரும்பத் திரும்ப அதையே கேட்டுக்கொண்டிருந்தான். அவள் மின்சார ரயில்கள் போவதையும் வருவதையும் பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு சம்பத்திடம் நம் வீட்டிற்குப் போகலாம் என்றாள். அவன் வர மறுத்ததோடு நகரத்தில் இருந்தால் நிச்சயம் தான் யாரையாவது கொன்றுவிடுவேன் என்று கத்தத் துவங்கினான். ரயில் நிலையத்தில் நின்றுகொண்டிருந்த சிலர் அவர்களைத் திரும்பிப் பார்த்தபடியே போய்க்கொண்டிருந்தார்கள்.

அவள் ராமதுரைக்குப் போன் பண்ணி வரச் சொல்லலாமா என்று நினைத்தாள். ஆனால் அவளிடம் கையில் பணமில்லை. சம்பத்தை பேசிச் சமாளித்து வீட்டிற்குக் கூட்டிவந்தபோது

இரவாகியிருந்தது. சம்பத் அன்றிரவு முழுவதும் உறங்கவேயில்லை. அவன் குத்துக்காலிட்டு உட்கார்ந்தபடியே இருந்தான். அவளுக்கு உறக்கம் கண்ணைக் கட்டிக்கொண்டு வந்தபோதும் தன்னை மீறி சில நேரம் உறங்குவதும் பிறகு எழுந்து அவனைப் படுக்க வைப்பது மாக இருந்தாள்.

சம்பத் அதன் பிறகான மூன்று நாட்கள் உறங்கவேயில்லை. உறக்கமற்ற அவனது முகத்தைப் பார்ப்பதற்கு அவளுக்கு பயமாக இருந்தது. சம்பத் பற்களைக் கடித்துக் கொண்டேயிருந்தான். ராம துரையை எங்கே போய் பார்ப்பது என்று தெரியாமல் அவள் சம்பத் தின் அருகிலே உட்கார்ந்து அவனைப் பார்த்துக்கொண்டேயிருந் தாள். சம்பத் சாப்பிடவும் இல்லை. அவன் தனக்குத் தானே சில நேரங்களில் பேசிக் கொண்டிருந்தான். அவள் பதட்டத்துடன் அருகாமை வீட்டில் இருந்தவர்களை அழைத்தாள். அவர்கள் பொது மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லலாம் என்று சொன் னார்கள். அவள் சிந்தாமணி என்ற அடுத்த வீட்டுப் பெண்ணிடம் இருந்து ஐம்பது ரூபாய் கடன் வாங்கிக்கொண்டாள். ராமதுரைக்குப் போன் செய்தபோது அவன் மனைவி எரிச்சலுடன் அவளைத் திட்டிவிட்டு ராமதுரை வீட்டில் இல்லை என்று போனை வைத்து விட்டாள்.

சம்பத்தை அழைத்துக்கொண்டு பொது மருத்துவமனைக்குப் போகலாம் என்று அவளாகவே ரயில் நிலையத்துக்கு அழைத்துப் போனாள். சம்பத் ரயில் ஏற மறுத்துவிட்டான். அவனை எப்படி சமாதானம் செய்வது என்று அவளுக்குத் தெரியவில்லை. இருவரும் ஒரு இரும்புப் பெஞ்சில் நெடுநேரம் உட்கார்ந்து இருந்தார்கள். ஒரு வயதான கன்யாஸ்திரி பிளாஸ்டிக் கூடையுடன் தாம்பரம் போகும் ரயிலுக்காக உட்கார்ந்துகொண்டிருந்தாள். சம்பத் விடுவிடுவென எழுந்து போய் அந்தக் கன்யாஸ்திரியின் கால்களைப் பிடித்துக் கொண்டு சிஸ்டர், என்னை மன்னித்துவிடுங்கள். சிஸ்டர் நான் தப்பு செய்துவிட்டேன். நான் அழ வேண்டும் சிஸ்டர். கொஞ்சமே கொஞ்ச நேரம் உங்கள் மடியில் தலையை வைத்துக்கொண்டு அழுது முடித்துவிடுகிறேன் என்று கத்தினான். அந்தப் பெண் பயந்து போனவளாக எழுந்துகொண்டாள். சம்பத் அவள் கால்களைப் பிடித்துக்கொண்டு விடாமல் சிஸ்டர் சிஸ்டர் என்று கதறினான். ஜெயந்தி அவனைப் பிடித்து இழுத்தபோதும் அவன் அந்தப் பெண்ணின் முன்னிருந்து வர மறுத்தான்.

கன்யாஸ்திரி, தான் அவனுக்காகப் பிரார்த்தனை செய்வதாகச் சொல்லி அவனை உடனே மருத்துவமனையில் சேர்க்கும்படியாகச் சொன்னாள். ரயில்வே ஸ்டேஷனில் இருந்த இரண்டு பேர்கள் அவனைப் பிடித்து இழுத்து கன்யாஸ்திரியை விடுவித்தார்கள். அவள் ராயப்பேட்டையில் இருந்த அரசு பொது மருத்துவமனையில் அவனைச் சிகிச்சைக்காகச் சேர்த்தாள். சம்பத் அங்கிருந்த ஒரு வார


காலமும் உறங்கிக் கொண்டேயிருந்தான். சில நேரங்களில் அவன் உறங்குவதைப் பார்க்கும்போது அவன் இறந்துபோய்விட்டது போன்றேயிருக்கும். ராமதுரை தினமும் மருத்துவமனைக்கு வந்து அவளிடம் விசாரித்துக்கொண்டிருப்பான். சம்பத்திற்குத் தேவை அமைதியான சூழ்நிலை என்றும் அவனைப் பேசாமல் உங்கள் ஊருக்கே கூட்டிக்கொண்டு போய்விடுங்கள் என்றான். அவளும் அப்படித்தான் நினைத்துக்கொண்டிருந்தாள்.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு சம்பத் மருத்துவமனையில் இருந்து திரும்பி வந்தபோது அவனது கன்னங்கள் ஊதிப்போயிருந்தன. அவன் மிகுந்த பசி கொண்டவனாகயிருந்தான். அவளிடம் சதா சாப்பிடுவதற்கு ஏதாவது வேண்டும் என்று கேட்டுக்கொண்டேயிருந்தான். ராமதுரை ஐநூறு ரூபாய் பணம் தந்து அவர்களை ஊருக்கு அனுப்பிவைத்தான்.

அவள் நாமக்கல்லுக்குப் போய் இறங்கியதுமே பதட்டம் தணிந்து தன் இயல்பு கொண்டவளைப் போலிருந்தாள். அவர்கள் வீட்டிற்குப் போனபோது அந்த மலையாளப் பெண் தன் குழந்தையோடு உறங்கிக்கொண்டிருந்தாள். அவள் பயத்துடன் அந்த ஆளுக்கு என்ன செய்கிறது, எதற்காக அவனது கண்கள் இப்படி பிதுங்கிக் கொண்டிருக்கின்றன என்று விசாரித்தாள். ஜெயந்தி அவளது அப்பா எங்கே என்று விசாரித்தபோது அவர் செங்கனூர் வரை லாரியில் போயிருப்பதாகச் சொன்னாள். ஜெயந்தி, தான் முன்பு வேலை பார்த்த டாக்டர் வீட்டில் போய் திரும்பவும் வேலை கேட்டாள். டாக்டரின் மனைவி மறுநாளிலிருந்து வரும்படியாகச் சொல்லி விட்டு ஐநூறு ரூபாய் பணம் தந்தாள்.

இரண்டு மாத காலத்தின் பிறகே சம்பத் இயல்பாகத் தூங்கவும் சிரிக்கவும் ஆரம்பித்தான். சில நேரங்களில் அவளிடம் தான் ரொம்பவும் அவளை சிரமப்படுத்திவிட்டதாகச் சொல்வான். அவள் இல்லை என்பது போலத் தலையாட்டத் துவங்கினாள். தினமும் ஒரு நண்பனுக்குக் கடிதம் எழுதி தபால் பெட்டியில் போட்டுவிட்டு வரும்படியாகச் சொல்வான். யாராவது பதில் எழுதும் நாட்களில் அந்தக் கடிதங்களைப் பகல் முழுவதும் படித்துக்கொண்டிருப்பான்.

ஒரு நாள் அவனுக்கு வந்த கடிதத்தோடு ஐயாயிரம் ரூபாய் பணத்திற்கான காசோலை ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தது. அவன் அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு தான் ஏதாவது தொழில் செய்யப்போவதாகச் சொன்னான். சம்பத்தால் என்ன செய்ய முடியும் என்று அவளுக்கு யோசனையாக இருந்தது. சம்பத் அருகாமையில் உள்ள ஏதாவது கிராமத்திற்கு அவர்கள் குடிபோய்விட்டால் நர்சரிச் செடிகள் வளர்த்து விற்கலாம் என்றான். அவள் அதற்குச் சம்மதித்தாள். நாமக்கல்லில் இருந்து பத்து கிலோமீட்டர் தூரத்திலிருந்த அந்த கிராமத்தில் ஒரு வீடு பிடித்தாள். நர்சரிச் செடிகள் வளர்ப்பதற்காக அவள் எங்கிருந்தோ பிளாஸ்டிக்




நவீன வாழ்க்கை முறை உருவாக்கும் ஒவ்வொரு மனிதச் சித்திரத்தின் மீதும் கசப்பின் வண்ணங்கள் நிறைந்த ஒரு கோப்பை எப்போதும் கைதவறி கவிழ்ந்து விடுகிறது. இப்போது அந்தச் சித்திரத்திற்கு அர்த்தமோ வடிவமோ இல்லை. சம்பத்தையோ சம்பத் போன்ற எண்ணற்ற சிதைந்த சித்திரங்களையோ மனிதனைப் பற்றிய எந்த சட்டகத்திலும் மாட்ட இயலாது. எஸ்.ராமகிருஷ்ணனின் இந்த நாவல் முழுக்க முழுக்க உலர்ந்த சொற்களால் சொல்லப்படுகிறது. வேர்களும் அடையாளங்களும் அழிந்த வறண்ட மனித பிம்பம் நம்மை நிம்மதி இழக்க வைக்கிறது.

ISBN 81-88641-70-7
00001
9788188641703

உயிர்மை
பதிப்பகம்